# உலகத் தமிழ்

பதிப்பாசிரியர்கள்

தமிழண்ணல் இராம. பெரியகருப்பன்
சு. குழந்தைநாதன்

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
1981

Jan. 1981

First Edition

| | | |
|---|---|---|
| Editors | : | **Dr. RM. Periakaruppan** *(Tamizhannal)* |
| | | **Thiru S. Kulanthainathan** |
| Publisher | : | Publications Division<br>Madurai Kamaraj University |
| Title | : | Ulagathamizh (World Tamil Studies) |
| Language | : | Tamil |
| Paper | : | D. Crown10.9 kg. |
| Point | : | 10, 12 points |
| Copies | : | 5,000 |
| Price | : | Rs 5 |

*Madurai Kamaraj University Co-op. Printing Press, Mdu. 21*

# பதிப்புரை

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடக்கும் இந் நல்வேளையில், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் சார்பில், பண்டுதொட்டு இன்றுவரை தமிழும் தமிழாய்வும் வளர்ந்துவந்த வரலாற்றை எழுதி வெளியிடுவதெனத் துணைவேந்தர் **வ. சுப. மாணிக்கம்** அவர்கள் முடிவெடுத்தார்கள். அதன்படி வெளிநாட்டிலும் வெளி மாநிலங்களிலும் தமிழகத்திலும் உள்ள தமிழ் ஆய்வு நடைபெறும் பல்கலைக்கழகங்கள் பெரும்பான்மையானவற்றுக்கு மடல்கள் வரைந்து, ஆங்காங்கு நடைபெறும் தமிழ்க் கல்வி, தமிழாய்வு வரலாற்றைத் தொகுக்க முயன்றும், அதற்கு ஒரு சிலரிடமிருந்தே முழுமையான கட்டுரைகள் கிடைத்தன. பிறர் சில குறிப்புக்கள் மட்டும் எழுதியனுப்பியுதவினர். யாவற்றையும் ஒரு நிகராக ஆக்கி வெளியிடுதல் கருதிச் சிற்சில மாற்றங்கள் செய்துள்ளோம். விவரங்கள் அனுப்ப இயலாதுபோன இடங்களுக்கு நாங்களே குறிப்புக்கள் சேர்த்து அமைக்க நேர்ந்தது.

இந்நூல் முதற் பாகம் தமிழ்மொழியின் பொதுவான வளர்ச்சியைக் காட்டுகிறது; இரண்டாம் பாகம் இந்தியாவிலும் உலக நாடுகளிலும் தமிழ் எவ்வாறு இடம்பெற்று ஆய்வுத் துறையில் வளர்ச்சிபெற்று வருகிறது என்ற விவரம் தரப்பட்டுள்ளது.

இந்நூல் உருவாதற்கு உறுதுணையாகப் பல்வேறு அறிஞர் பெருமக்கள் கட்டுரைகள் எழுதி உதவியமைக்கு நன்றி கூற விழைகிறோம். குறிப்புக்களாக அனுப்பியவர்களுக்கும் எம் நன்றி உரியது.

இந்நூல் உருவாகுங்கால் உடனிருந்து, இரவும் பகலும் அச்சுப் படி திருத்தி, உறுதுணையாய் ஒத்துழைத்த, மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் டாக்டர் மு. மணிவேல், திரு. ம. திருமலை ஆகிய இருவரும் பாராட்டுக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்கும் உரியவராவர்.

விரைந்து அச்சிட்டு, ஒரு வாரத்திற்குள் நூல் உருவாதற்கு ஒத்துழைப்பு நல்கிய மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கூட்டுறவு அச்சகத்தார்க்கு எம் நன்றி உரியது.

பதிப்பாளர்கள்

# முன்னுரை

மொழிக்கு ஓர் உலக மாநாடு கொண்டாடும் வரலாற்றைத் தொடங்கியவர் தமிழ் மக்களாவர். உலக மொழிகளுள் தமிழ் தொன்மையானது மட்டுமன்று; இந்திய மண்ணில் தோன்றி வாழும் மொழிகளுள் தமிழே தொன்மையானது. நூல் வளமும் கலைவளமும் சான்றது; புதுமையுரம் வாய்ந்தது. மரபு போற்றியும் காலத்திற்கேற்ப வளைந்து கொடுத்தும் வளரும் பெற்றியது.

இந்தியவரசு வரையறுத்த தேசியமொழிகளில் உலகம் பரவிய ஞாலமொழி என்ற பாரதப் பெருமைக்குரியது தமிழ்மொழி ஒன்றேயாம் என்று உணர்க. காரணம் தமிழ்மக்கள் உலகப் பன்னாடுகளில் உரிமைக் குடிஞர்களாக வாழ்ந்து வதிந்து வருப. தமிழ் மொழி வேறுவேறு நாடுகளில் ஆட்சிமொழிகளாகவும் திகழ்கின்றது.

தமிழ்ச் செல்வங்களோ எனின், அம்மம்ம, நிலத்தினும் பெரியன, வானினும் உயர்ந்தன, கடலினும் ஆழமாயின. இயற்கையழிவுக்குப் பின்னும், செயற்கையழிப்புக்குப் பின்னரும், இலக்கிய இலக்கண வரலாற்றுக் கலைச் செல்வங்கள் என்றுமுள உலகச் செல்வங்களாக நிலை பெற்றிருக்கின்றன; புதுப்புது வளங்கள் கொழிக்கின்றன.

தூய்மை, தொன்மை, புதுமை, அகலம், ஆழம், உரமை, நிலைமை என்ற அனைத்துத்திறன்களும் இயல்பாக ஒருங்கு பெற்று இடையூறு எதிர்ப்பெல்லாம் கடந்து வாழ்ந்தியங்கும் நம் தமிழ் மொழி தொடர்ந்து ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு கொண்டாடும் வெற்றிக்குப் புகழ் பூத்துக் குலுங்குகின்றது. ஆதலின் எடுத்த பிறப்பைத் தமிழ்ப் பிறப்பாக எடுத்த நாம் 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்பதனை ஒத்துக்கொள்ள முடியுங்கொல்? தாய்மொழி நமக்குத் தமிழாக இருத்தலின் பிறப்பின் மொழிக் கருவிலேயே திருவுடையோம் என்று இறுமாப்பின்றிப் பெருமிதம் கொள்கின்றோம்.

பிறப்பிற் சிறப்புப் பெற்ற நாம் அச்சிறப்பினைக் காத்துக் கொள்ள வேண்டாமா? தமிழ் கற்கவில்லை, தமிழிலக்கியச் செல்

வத்தை அறியவில்லை, தமிழைக் கால மொழியாக வளர்க்கவில்லை என்ற பழிகட்கு இடங்கொடுக்கலாமா? தமிழ் நன்கு கற்றபின்னரே தான் நம் குழவிகள் எம்மொழியையும் கற்கும் வழியைக் கடைப் பிடிக்க வேண்டும். ஆங்கிலம், பிரெஞ்சு, செருமனி, உருசியம் போலக் கன்னித் தமிழையும் அறிவியல் அன்னையாகப் புதுப்பிக்க வேண்டும். உலகத்தமிழ் என்ற புகழ் உண்மைப் புகழென ஞாலம் மதிக்கவேண்டும்.

உங்கள் அங்கையில் நெல்லிக்கனிபோல் விளங்கும் 'உலகத் தமிழ்' என்ற இக்குறுநூல் ஒரு தமிழ் வழிகாட்டி. விரிந்த தமிழ் வரலாறு எழுதப்புகின் எத்தனைத் தொகுதிகள் ஓடுமோ? தொல் காப்பியம் ஒன்றிற்கே தொகுதி பல செல்லுமே.

ஒரு சோற்றுப்பதம் போல் ஒரு சிறு தமிழ்ப் பதத்தினை இந்நூல் வழங்குகின்றது. தமிழகத்திலும் இந்தியப் பிற மாநிலங் களிலும் உலகத்தும் தமிழ் தோன்று முதல் இன்று வரை வளர்ந்து பரவிய வரலாற்றினைக் குறிப்பளவில் இப்பதிப்பு அளிக்கின்றது.

இது கையடக்கப் பதிப்பாதலின் விரிவஞ்சிச் சில பகுதிகளைச் சுருக்கியும் தொட்டும் விடுத்தும் செய்திருக்கின்றோம் என்பது தவிரத் தமிழின் பரந்த பொதுவரலாறு குறையவில்லை. மறுபதிப்பு வரின் விட்டகுறை தொட்டகுறை இரா.

கட்டுரை வழங்கியும் மொழி பெயர்த்தும் பதிப்புப் பார்த்தும் காலத்தினால் உதவி செய்த தமிழறிஞர்கட்கெல்லாம் நன்றியம்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் ஆய்வுக் கருத்தரங்குகள் மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பெருவளாகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இப்புத்துணர்வு நாளில் 'உலகத் தமிழ்' என்ற இலக்கிய வரலாற்று நூலை எம் பல்கலைக்கழகம் விழாக் காணிக் கையாக வெளியிடுகின்றது.

'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற தொண்டுள்ளம் பல்கலைக்கழகத்திற்கும் பொருந்துமன்றோ!

பல்கலைநகர்
4-1-1981

**டாக்டர் வ. சுப. மாணிக்கம்**
துணைவேந்தர்

# உள்ளுறை

## பகுதி ஒன்று : தமிழகத்தில்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தொல்காப்பியமும் சங்க இலக்கியமும்<br>க. வெள்ளைவாரணன் | .... | 1 |
| 2. | நீதி நூல்கள்<br>டாக்டர் தி முருகரத்தனம் | .... | 13 |
| 3. | காப்பியங்கள்<br>ச. தண்டபாணி தேசிகர் | .... | 28 |
| 4. | தெய்வ இசைப்பனுவல்கள்<br>க. வெள்ளைவாரணன் | .... | 50 |
| 5. | இலக்கண நூல்கள்<br>மு. சண்முகம் பிள்ளை | .... | 60 |
| 6. | உரையாசிரியர்கள்<br>மு. சண்முகம் பிள்ளை | .... | 68 |
| 7. | சிற்றிலக்கியங்கள்<br>மு. சண்முகம் பிள்ளை | .... | 77 |
| 8. | கவிதையும் உரைநடையும்<br>டாக்டர் நா. செயராமன் | .... | 85 |
| 9. | நாடகமும் புனைகதையும்<br>டாக்டர் சு. வேங்கடராமன் | .... | 101 |
| 10. | துறைதோறும் வளரும் தமிழ்<br>'தமிழண்ணல்' | .... | 124 |
| 11. | அறிவியலும் கலையியலும்<br>சு. குழந்தைநாதன் | .... | 130 |

## பகுதி இரண்டு : இந்தியாவில்


1. புதுவை மாநிலத்தில்
   டாக்டர் அ. பாண்டுரங்கன் .... 147

2. கேரள மாநிலத்தில் .. 153

3. கருநாடக மாநிலத்தில் .. 155

4. ஆந்திர மாநிலத்தில் ... 156

5. மேற்கு வங்கத்தில்
   டாக்டர் டி.பி. சித்தலிங்கய்யா ... 158

6. தில்லியில்
   டாக்டர் சாலை இளந்திரையன் .... 162

7. பிற மாநிலங்களில் ... 169

8. திருமடங்களும் தமிழ் மன்றங்களும் ... 173


## பகுதி மூன்று : உலகத்தில்


1. இலங்கையில்
   டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை .... 176

2. மலேசியாவில்
   டாக்டர் இரா. தண்டாயுதம் .... 190

3. சிங்கப்பூரில்
   ஏ. மணி .... 208

4. இந்தோனேசியாவில்
   டாக்டர் செ. வை. சண்முகம் ... 215

5. மோரீசில்
   அ. புட்பரதம் ... 218

6. சப்பானில் .... 225

7. கீழ்த்திசைப் பிற நாடுகளில் .... 228

8. சோவியத் யூனியனில் ... 232

9. செனகாலில்
டாக்டர் தாயம்மாள் அறவாணன் ... 236

10. பிரான்சில்
டாக்டர் எப். குரோ ... 237

11. இங்கிலாந்தில்
டாக்டர் ஆர் இ. ஆஷர் .... 243

12. மேற்கு ஜெர்மனியில்
டாக்டர் அ. தாமோதரன் .... 248

13. இத்தாலியில்
அந்தோனியோ சொரண்டினோ .... 258

14. போலந்தில்
டாக்டர் இராம. சுந்தரம் .... 263

15. வாஷிங்டனில்
ஹரால்டு ஷிப்மன் ... 270

16. கனடாவில்
டாக்டர் திருமதி பிரெண்டா பெக் .... 272

# 1. தொல்காப்பியமும் சங்க இலக்கியமும்

## அ. தொல்காப்பியம்

தமிழகம் வடக்கே வேங்கடமலைத் தொடரும் தெற்கே குமரியாறும் மேற்கும் கிழக்கும் கடலும் ஆகிய இந்நான்கெல்லையின் கண்ணே விரிந்து பரவிய பெருநிலப்பரப்புடன் விளங்கியது. இத்தொன்மைக் காலத்தே தோன்றித் தமிழ் மொழியின் வழக்கும் செய்யுளும் ஆகிய இருவகை வழக்கிற்கும் உரிய இலக்கணங்களைத் தொகுத்துக் கூறும் இயல்நூல் தொல்காப்பியம். இந்நூல் என்றும் நின்று நிலவும் பெருமை வாய்ந்தது. ஆசிரியர் தொல்காப்பியனாரால் இயற்றப்பெற்றது நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்தில் அதங்கோட்டாசான் முன்னிலையிலே அரங்கேறிய தொல்காப்பியம் என்னும் இயற்றமிழிலக்கண நூலாகும்.

'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' எனப்படும் தமிழ்நாட்டில் வழங்கும் செந்தமிழ் மொழியின் உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் அடிப்படையாகக் கொண்டு முன்னைத் தமிழ்த் தொன்னூல்களையும் நோக்கி எழுத்து, சொல், பொருள் ஆகிய மூவகை யிலக்கணங்களையும் முறைப்பட ஆராய்ந்து ஆசிரியர் தொல்காப்பியனார் இந்நூலை யியற்றியுள்ளார். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று

---

எழுதியவர் பேராசிரியர் க. வெள்ளைவாரணன்

அதிகாரங்களையுடையது. ஒவ்வோரதிகாரத்திற்கும் ஒன்பது ஒன்பது இயல்களாக இருபத்தேழியல்களால் இயன்றது. இந் நூலிலுள்ள சூத்திரங்களை 1595 ஆக இளம்பூரணரும், 1161 ஆக நச்சினார்க்கினியரும் பகுத்து உரை வரைந்துள்ளார்கள்.

## தொன்மையும் பகுப்பும்

தொல்காப்பியம் இடைச்சங்கத் தொடக்கக் காலத்தே இயற்றப்பட்ட இலக்கண நூலாகும். இடைச்சங்கமிருந்தார் தொல்காப்பியனார் எனவும், இடைச்சங்கத்தார்க்கும் கடைச் சங்கத்தார்க்கும் இலக்கண நூலாய் விளங்கியது தொல்காப் பியம் எனவும், கி. பி. எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற இறையனார் களவியலுரை கூறும். எனவே சங்கவிலக்கியத் திற்கு நெடுங்காலம் முற்பட்டது தொல்காப்பியம் என்பது நன்கு தெளியப்படும். இவ்வுண்மையினைத் தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், பேராசிரியர், நச்சி னார்க்கினியர் முதலியோரும் சிலப்பதிகாரவுரையாசிரியர் அடி யார்க்கு நல்லாரும் வழிமொழிந்து வலியுறுத்தியுள்ளார்கள்.

இவ்வுலகிலுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றாகப் பகுத்து அவற்றை அகம், புறம் என இருவகையாக வகுத்து விளக்குதல் பண்டைத்தமிழர் கண்டுணர்த்திய பொருளிலக்கண மரபாகும். முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிய ஆசிரியர் தொல்காப் பியனாரும் முன்னைத் தமிழிலக்கண நூலோர் கூறிய முறையே அகமும் புறமுமாகிய பொருட்பகுதிகளைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் விரித்துக் கூறுகின்றார்.

நிலமும் காலமும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைப் பொருள்கள். எனவே அவை முதற்பொருள் என வழங்கப்பெற்றன. நிலம், நீர், தீ, வளி, விசும்பு என ஐம் பூதங்களும் கலந்த திரட்சியே இவ்வுலகமாதலின் நிலமாகிய இடமும், பருவ காலங்களாகிய பொழுதும் இருவகை முதற்

பொருள்களும் நிலைக்களமாக அவற்றின்கண் கருக்கொண்டு தோற்றும் புல் முதல் மக்களீறாகவுள்ள உயிர்த் தொகுதிகளும் உயிரல்லாத பிறபொருள்களும் கருப்பொருள்கள் ஆகும். இப் பொருள்களைத் துணையாகக் கொண்டு அறஞ்செய்தலும், பொருளீட்டலும், இன்பம் நுகர்தலும் ஆக மக்களினத்தார்க்கே யுரிமையுடைய ஒழுகலாறுகள் உரிப்பொருள் எனப்படும். ஒத்த அன்பினராகிய ஒருவனும் ஒருத்தியும் அன்பினாற் கலந்து வாழும் இன்ப ஒழுகத்தினை அகம் எனவும், இவ்வாறு பல்லா யிரங் குடும்பங்கள் பகையின்றி ஒத்து வாழ்வதற்கு அரண் செய்யும் அரசியல் சமுதாய வாழ்வினைப் புறமென்றும் கூறு தல் தமிழ்ப்பொருளிலக்கண மரபாகும். அகமாவது ஒருவனும் ஒருத்தியும் அன்பினாற் கூடி நுகரும் இன்ப நுகர்ச்சியாதலின் அதனாலாய பயன் நுகர்ந்த அவ்விருவர் உள்ளத்திற்கே புல னாதலின் அகம் எனப்பட்டது. புறப்பொருளாவது நாடு காத் தற்குப் போர் புரிதலும் மக்கட் சமுதாயம் வாழ அறஞ் செய்தலு மாதலின் அவற்றாலாய பயன் புறத்தார்க்குப் புலனாதலின் புறம் எனப்பட்டது.

தொல்காப்பியத்தில் விரித்துரைக்கப்படும் அகமும் புறமு மாகிய இலக்கணங்களை வரம்பாகக் கொண்டு கடைச்சங்கப் புலவர்களால் அகத்திணைச் செய்யுட்களும் புறத்திணைச் செய்யுட்களும் பாடப்பெற்றன. இச்செய்தி, ''இடைச்சங்கத் தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்று (இலக்கணமா யிற்று) தொல்காப்பியம்'' எனவரும் முன்னோர் உரையால் நன்கு துணியப்படும். எனவே, புறநானூறு முதலிய சங்கச் செய்யுட்களுக்குத் தொல்காப்பியத்தை அடியொற்றியே துறை கூறுதல் வேண்டும் என்பது தெளிவு.

## ஆ. சங்க இலக்கியம்

பண்டைத் தமிழ் மக்களது குடும்ப வாழ்வாகிய அகத் திணை யொழுகலாறுகளையும், அரசியல் சமுதாய வாழ்வு களாகிய புறத்திணை யொழுகலாறுகளையும் நுவல் பொருள் களாகக் கொண்டு இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டு களுக்கு முன் பாடப்பெற்ற பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகிய செந்தமிழ்ப் பனுவல்களே சங்கவிலக்கியம் என்ற பெய ரால் இக்காலத்து வழங்கப்பெற்று வருவதனைப் பலரும் உணர்வர்.

### பத்துப்பாட்டு

சங்கவிலக்கியத்துள் திருமுருகாற்றுப்படை முதல் மலை படுகடாம் என வழங்கும் கூத்தராற்றுப்படை ஈறாகவுள்ள பத் துப்பாடல்களின் தொகுப்பு பத்துப்பாட்டு என வழங்கப் பெறு கின்றது. இதன்கண் பாடாண்திணையைச் சார்ந்த ஆற்றுப் படை என்னுந் துறையில் அமைந்த திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற் றுப்படை, மலைபடுகடாம் ஆகிய ஆற்றுப்படைகள் ஐந்தும், காஞ்சித் திணையைச் சேர்ந்த மதுரைக் காஞ்சியும் ஆகப் புறத் திணைப் பாட்டுக்கள் ஆறாகும். முல்லைப்பாட்டு, நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்னும் அகத் திணைப் பாட்டுக்கள் நான்காம்.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்

எனப் புறத்திணையியலிற் பாடாண்திணைத் துறைகளுள் ஒன்றாகக் குறிப்பிடுவர் தொல்காப்பியனார். ஆடுதற்றொழி லில் வல்ல கூத்தரும், பண்ணொடு பாடி யாழ் இசைத்தலில் வல்ல பாணரும், ஒருவரைப் போன்று நடித்தற்றொழிலில் வல்ல பொருநரும், தனது உள்ளக்குறிப்பு மெய்க்கண் புலப்பட

ஆடுதற்றொழிலில் வல்ல விறலியும் ஆகிய கலைஞர்கள், தம்மை ஆதரிக்கும் வள்ளல்பால் தாம் பெற்றுள்ள செல்வப் பொலிவும் தம்மை எதிர்ப்பட்ட தம்மினத்தவராகிய பரிசிலரது வறுமைத் தோற்றமும், ஒன்றோடொன்று மாறுபட்டுத்தோன்ற வழியிடையே சந்தித்தபோது, தமக்கு இத்தகைய பெருஞ் செல்வத்தை வழங்கிய வள்ளல் இன்னார் எனவும், அவரை யணுகிப் பரிசில் பெறுதற்குரிய வழி துறைகள் இவையெனவும் தம்மை எதிர்ப்பட்ட பரிசிலர்க்கு எடுத்துரைத்து, அவர்கள் தாம் கூறியே வழியே சென்று பரிசில் பெற்று மகிழும் வண்ணம் வழி கூறிவிடுத்தல் ஆற்றுப்படை யென்னுந் துறையின் பாற்படும் என்பது மேற்குறித்த தொல்காப்பியத் தொடரின் பொருளாம்.

பத்துப்பாட்டின் முதற்கண் அமைந்த திருமுருகாற்றுப் படை, பெரும்பெயர்க் கடவுளாகிய முருகப்பெருமான்பால் பெறலரும் பரிசிலாகிய வீடுபேற்றினைப் பெற்றான் ஒருவன், அதனைப் பெறவேண்டும் என விரும்பிய இரவலனை அம்முதல் வன்பால் ஆற்றுப்படுத்துவதாக நக்கீரனாராற் பாடப்பெற்ற தாகும். இது 317 அடிகளையுடைய ஆசிரியப்பாவாகும். இது புலவராற்றுப்படை யெனவும் வழங்கும். இதனைச் சிவநெறிச் செல்வராகிய முன்னையோர் சைவத் திருமுறைகள் பன்னி ரண்டனுள் பதினொராந் திருமுறையிற் சேர்த்துள்ளனர்.

சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பாட்டுடைத் தலை வனாகக் கொண்டு முடத்தாமக் கண்ணியாராற் பாடப்பெற்றது பொருநராற்றுப்படை. இது வஞ்சியடிகள் விரவப்பெற்று 248 அடிகளால் இயன்ற ஆசிரியப்பாவாகும்.

ஓய்மானாட்டு நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலை வனாகக் கொண்டு அவன்பால் பாணர்களை ஆற்றுப்படுத்தும் முறையில் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாராற் பாடப் பெற்றது *சிறுபாணாற்றுப்படையாகும்.* ஆசிரியப்பாவாகிய இது 269 அடிகளையுடையதாகும்.

தொண்டைமான் இளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது பெரும்பாணாற்றுப்படையாகும். இப்பாடல் 500 அடிகளால் இயன்ற ஆசிரியப்பாவாகும்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவ்வேந்தனது தலைநகராகிய தமிழ் நிலைபெற்ற மதுரைநகர மாந்தர் செல்வ வாழ்க்கையொடு புணர்த்து நில்லாதவற்றால் நிலையுடையனவற்றை யெய்தும் காஞ்சித்திணையாகிய ஒழுகலாற்றையுணர்த்தும் நோக்குடன் மாங்குடி மருதனாராற் பாடப்பெற்றது மதுரைக் காஞ்சி. ஆசிரிய நடையினதாகிய இப்பாடல், பெரும்பான்மையும் வஞ்சியடிகள் பயின்று 782 அடிகளால் இயன்றமையின் இதனை வஞ்சிப்பாவின் மிக்க அடியளவுக்கு எல்லையாகக் காட்டுவர் நச்சினார்க்கினியர்.

தலைவன் பகைவரைப் போரில் வென்றடக்குதலாகிய வினையினை மேற்கொண்டு பிரியக் கருதியதனை அவனது குறிப்பினால் உணர்ந்து ஆற்றாளாகிய தலைவியின் வருத்த நிலைமை கண்டு, தலைவன் வற்புறுத்தவும் உடம்படாதவளைப் பெருமுதுபெண்டிர் 'தலைவன் வினைமுடித்து விரைவில் வருதல் உறுதி, நீ வருத்தம் தவிர்வாயாக' என ஆறுதல் மொழி கூற, அது கேட்டுத் தலைமகள் ஆற்றியிருந்த பொழுது பிரிந்த தலைவன் வினைமுடித்து மீண்டுவந்த செய்தியைக் கண்டு தோழி முதலிய வாயில்கள் தம்முட் கூறியதாக நப்பூதனாராற் பாடப்பெற்றது முல்லைப்பாட்டு. இது, கணவன் கடமை கருதிப் பிரிய அவன் வருமளவும் மனைவி இல்லின் கண் ஆற்றியிருத்தலாகிய முல்லை சான்ற கற்பாகிய ஒழுகலாற்றினை விரித்துரைத்தலின் முல்லைப்பாட்டு என வழங்கப்பெற்றது.

பகைவர்களை வென்று அடக்குதற்குச் சென்ற தலைவன், கூதிர்ப் பருவத்திற் போகத்தில் மனமின்றிப் பாசறைக்கண்

தங்கியிருந்தானாக, அவனைப் பிரிந்து வாடைக்காற்று நலிய மனைக்கண் இருந்து ஆற்றாளாய் வருந்திய தலைவிக்கு அவளது வருத்தம் தீரும்படி அவள் தலைவன் பகையை வென்று விரைவில் வருவானாக என வெற்றியளிக்கும் கொற்றவையைப் பரவுவாள் கூறியதாக நக்கீரர் பாடியது நெடுநல் வாடை என்னும் பாடலாகும். தலைவனைப் பிரிந்திருந்து வருந்தும் தலைவிக்கு ஒருகணம் ஒரூழிபோல நெடிதாகிய வாடையாகவும், போக நுகர்ச்சியிற் கருத்தின்றிப் பாசறைக் கண் தங்கியிருக்கின்ற தலைவனுக்கு நல்லதாகிய வாடை யாகவும் அமைந்த திறத்தினை விரித்துரைத்தலின் இப்பாடல் நெடுநல்வாடை என்னும் பெயருடையதாயிற்று.

ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழியல் வழக்கமாகிய களவொழுக்கத்தின் இயல்பினை அறிவுறுத்தற் பொருட்டுக் கபிலராற் பாடப்பெற்றது குறிஞ்சிப்பாட்டு. 261 அடிகளால் இயன்ற இப்பாடல், தலைமகளது வாட்டத்தினையுணர்ந்து வருந்தி அதற்குரிய காரணம் வினவக் கருதிய செவிலிக்குத் தோழி, 'தலைவனுக்கும் தலைவிக்கும் உண்டாகிய தொடர்பு மாசற்ற அறத்தின் வழியமைந்தது' என்பதனை எடுத்துரைக்கும் அறத்தொடுநிற்றல் என்னுந் துறையில் இயற்றப் பெற்றதாகும்.

பட்டினப்பாலை என்பது, சோழன் கரிகாற் பெருவளத் தானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவனது தலைநகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தினைச் சிறப்பிக்கும் முறையில் பிரிதல் நிமித்தமாகிய பாலைத்திணையைப் பொருளாகக் கொண்டு கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர் பெருமானாற் பாடப்பெற்றதாகும்.

தலைவியைப் பிரிந்து வேற்றுநாடு செல்லக் கருதிய தலைவன், யான் செல்ல எண்ணிய காட்டு நெறிகள் சோழன் பகைவர்மேற் செலுத்தும் வேலினும் வெம்மையுடையன. என் மனைக்கிழத்தியாகிய இவள் தோள்களோ அவ்வேந்தனது

செங்கோலைவிட மிகவும் குளிர்ச்சியையுடையன. ஆகவே நின்னொடு வரின் 'முட்டாச் சிறப்பிற் பட்டினமே எனக்குக் கிடைத்தாலும் நெஞ்சே நின்னோடு வரமாட்டேன்' எனப் பொருள்தேட முந்தும் தன்னெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்தது வஞ்சி நெடும்பாட்டாகிய பட்டினப்பாலையாகும்.

இப்பாடலைப் பாடிய உருத்திரங்கண்ணனார்க்குக் கரிகால்வளவன் பதினாறு நூறாயிரம் பொன்னைப் பரிசாக வழங்கிய செய்தியைக் கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார் தாம் பாடிய கலிங்கத்துப் பரணியிற் சிறப்பித்துப் போற்றியுள்ளார்,

எட்டுத்தொகை

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத்தொகை நூல்களாகும். இவற்றுள் அகத்திணை யொழுகலாற்றினைப் பொருளாகக் கொண்ட பாடல்களின் தொகுப்பு அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்னும் ஐந்துமாகும் இவற்றுள் கலித்தொகை என்பது பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் ஐந்திணைகளையும் பொருளாகக் கொண்டு முறையே சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ, கபிலர், மருதனிளநாகனார், சோழன் நல்லுருத்திரன், நல்லந்துவனார் ஆகிய புலவர்கள் ஐவரும் பாடிய நூற்றைம்பது கலிப்பாக்களின் தொகுப்பாகும். முற்குறித்த நான்கு தொகை நூல்களும் அகத்திணையைப் பொருளாகக் கொண்ட ஆசிரியப்பாக்களாதலின் அவையனைத்தும் ஒரே தொகுதியாக அடங்குமாயினும், அப்பாக்களிலமைந்த அடியளவின் மிகுதி குறைவு கருதியும், தொகுதி தொகுதியாக அமைந்த திணைப்பகுப்புப் பற்றியும் அவை நால்வேறு தொகுதிகளாகத் தொகுக்கப்பெற்றன. அகனைந்திணையினைப் பொருளாகக் கொண்டு பதின்மூன்றடி முதல் முப்பத்தேழடி வரை பாடப்பெற்ற அகவற்பாக்கள் நானூறும் நெடுந்

தொகை நானூறு. இஃது அகநானூறு எனவும் வழங்கப்படும். ஒன்பதடி முதல் பன்னிரண்டடி வரையுள்ள அகவற்பாக்கள் நானூறும் நற்றிணை நானூறு எனப்படும். நாலடி முதல் எட்டடி வரையுள்ள அகவற்பாக்கள் நானூறும் குறுந்தொகை நானூறு எனப்படும். மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் ஐந்திணைகளிலும் திணைக்கு நூறு பாடல்களாக ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் என்னும் புலவர்கள் ஐவரும் முறையே நூறு நூறு பாடல்களாகப் பாடிய ஐந்து நூறுகளின் தொகுதி ஐங்குறு நூறு ஆகும். ஐந்திணை பற்றிய இப்பாடல்கள், மூன்றடிச் சிறுமையும் ஆறடிப் பெருமையும் வாய்ந்த சிறு சிறு அகவற்பாக்களாதலின், இத்தொகுதி ஐங்குறுநூறு என்னும் பெயருடையதாயிற்று. புறத்திணைகளைப் பொருளாகக் கொண்டு பாடப் பெற்ற நானூறு பாடல்களின் தொகுப்பு புறநானூறு ஆகும். சேரமன்னர் பதின்மரைப் பற்றித் தனித்தனியே புலவர் பதின்மர் பத்துப் பத்துப் பாடல்களாகப் பாடிய பத்துப் பத்துக்களின் தொகுப்பு பதிற்றுப்பத்து ஆகும். இவ்விரு தொகைகளும் புறத்திணையைச் சார்ந்தனவாகும்.

நல்லறிவுடைய புலமைச் செல்வர் பலரும் உரையினாலும் பாட்டினாலும் உயர்த்துப் புகழும் வண்ணம் அமரர்களாகிய வீரர்கள் நிகழ்த்தும் ஆற்றல் மிக்க போர்த்துறைகளிலும் ஒத்த அன்பினராய் ஒருவனும் ஒருத்தியும் நிகழ்த்தும் மனைவாழ்க்கையினும் புகழ் புரிந்து வாழும் நன்மக்களது பண்புடைமையாகிய ஒழுகலாறே புலவர்களாற் போற்றிப் பாடப்பெறும் பாடாண்திணை எனப்படும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் வகைப்படுத்துணர்த்திய பாடாண்திணைக்குரிய இலக்கியமாகத் திகழ்வது, எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தாகும். இத்தொகைநூல் உதியஞ் சேரலாதன் முதலாகவுள்ள சேரமன்னர் பதின்மரையும் பத்துப் பத்துப் பாடல்களாற் பரவிப் போற்றிய பத்துப்

பத்துக்களைத் தன்னகத்தே கொண்டமையால் பதிற்றுப்பத்து என்னும் பெயருடையதாயிற்று. இதன்கண் முதற்பத்தும் பத்தாம் பத்தும் சிதைந்து மறைந்த நிலையில், இரண்டாம் பத்து முதல் ஒன்பதாம் பத்து முடியவுள்ள எட்டுப் பத்துக்களே (எண்பது பாடல்களே) இப்பொழுது கிடைத்துள்ளன. இவற்றி லுள்ள பாடல்கள் யாவும் ஆசிரியப்பா, வஞ்சிப்பா என்னும் இவ்விருவகை யாப்பின்பால் அடங்குவன. இவை தொல் காப்பியத்திற் கூறப்படும் புறத்திணை ஏழனுள் இறுதிக் கண்ணதாகிய பாடாண்திணையினைப் பொருளாகக் கொண்டு பாடப்பெற்றனவாகும். இதன்கண் ஒவ்வொரு பாடலின் கீழும் அப்பாடலிலமைந்த துறை, வண்ணம், தூக்கு இவையென வும் அப்பாடலுக்குரிய பெயர் இதுவெனவும் குறிக்கப்பெற் றுள்ளன.

பரிபாடல் எனப்பெற்ற தொகுதி, திருமால், செவ்வேள், காடுகிழாள் (கொற்றவை) ஆகிய தெய்வங்களையும், தமிழ் நிலைபெற்ற மதுரை நகரத்தையும் புலவர் நாவிற் பொருந்திய புகழ்சான்ற வையையாற்றினையும் இன்னிசைத் திறத்தாற் போற்றிப் பரவிய எழுபது பரிபாடல்களால் இயன்றதாகும். இதன்கண் உள்ள பாடல்கள் கடவுள் வாழ்த்தும், அன்பின் ஐந்திணைக் காமமும் எனப் புறமும் அகமுமாகிய இருவகை யொழுகலாறுகளையும் நுவல் பொருளாகக் கொண்டு பாடப் பெற்றனவாதலின் இத்தொகுதி அகம் புறம் என்னும் இரு வகையொழுகலாற்றுக்கும் பொதுப்பட அமைந்ததாகும். இசை வல்லாராற் பண் வகுக்கப்பெற்ற பண் சுமந்த பாடல்களாகிய எழுபது பரிபாடல்களில் சிதைந்தன போக இப்பொழுது கிடைத்துள்ள பாடல்கள் இருபத்திரண்டேயாகும். பண்ண-மைக்கப்பெற்ற இசைப்பாடல்களின் தொகுதியாகிய இது, இயற்றமிழ்த் திறமும், இசைத்தமிழ்த் திறமும் ஒருங்கமைந்த சிறப்பினதாகும். இத்தொகுதியிலுள்ள பரிபாடல்களை அவற் றுக்கு வகுக்கப்பெற்றுள்ள பண் முறைப்படி இசையுடன்

பாடும் மரபினை மீண்டும் உயிர்ப்பித்து நாட்டில் வழங்கச் செய்தல் இயலிசைத் திறத்தில் வல்ல நல்லறிஞர்களின் கடமையாகும்.

மேற்குறித்த பாட்டுந் தொகையுமாகிய சங்கச் செய்யுட்களைப் பாடிய புலவர்களாக நானூற்றெழுபத்து மூவர் குறிக்கப்பெற்றுள்ளனர். அவர்களாற் பாடப்பெற்ற செய்யுட்கள் 2279 ஆகும். பெயர் காணாத புலவர்கள் பாடியனவாக 102 பாடல்கள் உள்ளன. இவற்றைச் சேர்த்துச் சங்கச் செய்யுட்களின் பாடற்றொகை 2381 ஆகும் இவற்றைப் பாடிய புலவர் குழுவில் உழவர், வணிகர் முதலிய பலவகைத் தொழிலாளர்களும் நாடாள் வேந்தரும் நல்லிசைப் புலமை மெல்லியலாரும் இடம்பெற்றுள்ளமை, கடைச்சங்க காலத்தில் அரசியலிலும் பொது வாழ்விலும் தமிழ் மொழிக்கு அமைந்த பெருஞ்சிறப்பினையும் தமிழ் மொழியின்பால் தமிழ் மக்கள் கொண்டிருந்த பேரார்வத்தினையும் பெரும் புலமையினையும் நன்கு புலப்படுத்துவதாகும்.

## தொல்காப்பியமும் சங்க இலக்கியமும்

தொல்காப்பியத்திற் கூறப்படும் அகம் புறம் என்னும் பொருட் பாகுபாடும் திணை துறை அமைப்புக்களும் மெய்ப் பொருளுண்மைகளும் சங்க இலக்கியங்களில் அவ்வாறே இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியத் தொடர்களும் சொற்பொருள்களும் அவ்வாறே எடுத்தாளப்பெற்ற இடங்களும் பலவுள்ளன.

தொல்காப்பியத்திற்கு நெடுங்காலம் பிற்பட்டுத் தோன்றியவை கடைச்சங்க நூல்களாதலின் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் காலந்தோறும் நேர்ந்த மாற்றங்களால் தொல்காப்பிய விதிகளைக் கடந்த சொல் வழக்குகள் சிலவும் தொல்காப்பியத்திற் காணப்படாத புது வழக்குகளும் சமய விகற்பங்களும் வழிபாட்டு முறைகளும் சங்கவிலக்கியத்தில் இடம் பெற்றுள்ளமை காணலாம்.

உலக வழக்கும் செய்யுள் வழக்கும் எனத் தமிழ் மொழியின் இருவகை வழக்கிற்கும் இலக்கணம் கூறுவது தொல்காப்பியம். அதுபோலவே சங்கவிலக்கியமும் அவ்விருவகை வழக்கிற்கும் இலக்கியமாக அமைந்துள்ளமை இங்குக் கருதத்தகுவதாகும். சங்கச் செய்யுட்களாகிய பாடற்பகுதி செய்யுள் வழக்கிற்கும், அகமும் புறமுமாகிய அச்செய்யுட்களின்கீழ் வரையப்பெற்றுள்ள உரைத்தொடர்கள் உலக வழக்கிற்கும் இலக்கியங்களாகக் கொள்ளத்தக்கனவாகும்.

இயற்றமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் பொருள் நுட்பங்களையும் அதன்வழி இயற்றப்பட்ட சங்கச் செய்யுட்களின் சுவை நலன்களையும் உள்ளவாறு உணர்வதற்கு இலக்கணமும் இலக்கியமுமாகிய இவற்றின் பயிற்சி மிகவும் இன்றியமையாததாகும்.

# 2. நீதி நூல்கள்

### 0. முன்னுரை

உணர்வுக்கும் கற்பனைக்கும் முதலிடம் தந்து அமைவன இலக்கியங்கள். சிந்தனைக்கும் அறிவுக்கும் முதலிடம் தந்து அமைவன நீதி நூல்களும் அறிவியற் நூல்களும். சமூகத்தில் வாழும் மாந்தனுக்குரிய சமுதாய ஒழுகலாறுகளையும் தனி மனித ஒழுகலாறுகளையும் விரித்தும் விளக்கியும் வகுத்தும் தொகுத்தும் கூறுவனவே நீதிநூல்கள் அல்லது அறநூல்கள் என வழங்கப்படுகின்றன. இந்நீதிநூல்கள் சான்றோர் சிந்தையாலும் தோன்றலாம்; சமூகத்தின் நன்மைக்கெனத் தோன்றிய பழக்கவழக்கங்களின் உருவமாகவும் அமையலாம். இப்பழக்க வழக்கங்கள் ஏதாவது ஒரு வகையில் வாய்மொழியாகவும் வழங்கிவரலாம். அந்நிலையில் அவை பழமொழிகள் எனவோ முதுரைகள் எனவோ மக்களிடையே வழங்கலாம். இவைகள் இலக்கியவளம் பெற்ற காலத்தில் நீதிநூல்களாக யாக்கப்படுகின்றன. இதுவே ஒவ்வொரு சமூகமும் நாடும் காட்டும் வரலாறாகும்.

## 1. அகம்புற மரபில் அறம்

பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் பொருள்களாக அகம் புறம் என்னும் இருபொருள்களையே பண்டை அறிஞர் பேசுகின்றனர். அகம் என்னும் பொருள் அன்பின் ஐந்திணையாகித் தலைவன் தலைவியரிடைத் திருமணத்திற்கு முன்னும் பின்னும் நடைபெறும் காதல் வாழ்வு பற்றிப் பேசுவது. புறப்

பொருள், அரசியல், வீரம், புகழ் பற்றிப் பேசுவது. இலக்கியங்கள் எல்லாம் அன்று இப்பொருள் பற்றியே எழுந்தன. அதனால் அறநூல்கள் எனத் தனியே நூல்கள் எழவில்லை. ஆனால் அறக்கருத்துக்கள் நிறைய உண்டு. தமிழர்கட்கு அறம் பற்றிய கோட்பாடு எத்துறையிலும் அடிப்படையாக இருந்தது.

**அறநெறி** இதுவெனத் தெளிந்த (ஐங்குறு. 375)

**அறங்**கடைப்படா வாழ்க்கை (அகம். 155)

**அறக்**கழி வுடையன பொருட்பயன் படவரின்
(தொல்., பொருள். 218)

**அறனு**மன்றே; ஆக்கமும் தேயும் (நற். 68)

என்னும் கருத்துக்கள் தமிழர் வாழ்வில் அறம் பெற்றிருந்த பரந்த இடத்தை எடுத்துக்காட்டுகின்றன.

**அறந்**துஞ்சு செங்கோலையே (புறம். 20)

**அறம்**புரி செங்கோல் மன்னன் (ஐங்குறு. 290)

**அறனொடு** புணர்ந்த திறனறி செங்கோல்
(பொருந. 230)

என்னும் தொடர்கள் தமிழகத்து அரசியலுக்கும் அறம் அடிப்படையாக விளங்கியது என்பதைக் காட்டுகின்றன.

மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
**அறங்**கெட அறியா தாங்கு (நற். 400)

**அறங்**கெழு நல்லவை உறந்தை (அகம் 93)

என்னும் தொடர்கள் முறை (நீதி) வழங்குவதிலும் அன்று அறம் அடிப்படையாக வழங்கியதை விளக்குகின்றன.

அருளுறச் செய்யின் நமக்கு **அறனு**மாரதுவே
(கலி. 140)

**அறனோடி** விலங்கின்று அவராள் வினைத்திறத்தே
(கலி. 16)

என்னும் தொடர்கள் காதல் வாழ்விலும் அறம் பெற்ற இடத்தைக் காட்டுகின்றன.

பண்டைத்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் ஏராளமான அறக்கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. புறநானூற்றில் மட்டும் அறமுரைக்கும் பாடல்களாக ஏறத்தாழ 120 பாடல்களைக் குறிப்பிடமுடிகிறது. அகம் புறம் என்னும் பெரும் பாகுபாட்டில் இவ்வறங்கூறுங் கருத்துக்களைத் தமிழ்த் தொல் லிலக்கண ஆசிரியர்கள் புறப்பொருளில் வகுத்துத் தொகுத்த னர். தொல்காப்பியம் குறிப்பிடும் ஏழு புறத்திணைகளுள் காஞ்சி, பாடாண் என்னும் திணைகள் நீதிகளையே போதிக் கின்றன எனலாம். காஞ்சித்திணை நிலையாமையைச் சுட்டிக் காட்டி அறத்தினை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

பாங்கருஞ் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே (தொல், பொருள். 78)

என்னும் தொல்காப்பிய நூற்பா இதனைக் குறிப்பிடுகிறது. முதுகாஞ்சி, முதுமொழிக்காஞ்சி, பெருங்காஞ்சி, பொருண் மொழிக்காஞ்சி, செவியறுவுறூஉ, வாயுறை வாழ்த்து என்னும் புறப்பொருள் துறைகள் எல்லாம் அறமே எடுத்துரைப்பன.

கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்
(தொல், பொருள். 79.)

என்பது முதுகாஞ்சி.

மலையோங்கிய மாநிலத்து
நிலையாமை நெறியுரைத்தன்று (புற, வெ. மா. 270)

என்பது பெருங்காஞ்சியாகும்.

செவியுறை தானே
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே
(தொல், பொருள். 426)

என்பது செவியறிவுறூஉக்கு இலக்கணமாகும்.

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்

தாங்குதல் இன்றி வழிநன் பயக்குமென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தன்றே
(தொல்., பொருள். 424)

என்பது வாயுறைவாழ்த்திற்குத் தொல்காப்பியனார் வழங்கும் விளக்கமாகும்.

இன்றைத் தமிழர்கள் பெருமையோடு உலகிற்கு எடுத்து வழங்கிவரும் "யாதும்ஊரே யாவருங் கேளிர்" என்னும் உலகப் பொதுநோக்கு அறம் தமிழ்ப்புறநானூற்றின் முதுமொழிக் காஞ்சி என்னும் துறையைச் சார்ந்ததாகும். அறம் நிறைந்த அப் புறப்பாடல் இதுவாகும்:

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னாது என்றலும் இலமே; மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொறாது இரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே! (புறம். 192)

இத்தகைய ஆழ்ந்த அறக்கருத்துக்களைச் சங்க இலக்கியங்களில் பரக்கக் காணலாம். ஆனால் சங்க காலத்தில் இவ் அறக்கருத்துக்கள் வகுக்கப்பெற்றும் தொகுக்கப்பெற்றும் தனிநூல்களாக அமைக்கப்பெறவில்லை. அது அன்றைய தமிழ்ப் பண்பாட்டின் போக்கு எனக் கொள்ளலாம்.

## 2. முப்பாற் பாகுபாடு

சங்க இலக்கியங்களிலேயே அகம் புறமல்லாது வேறொரு பொருட்பாகுபாடு பற்றிய கருத்தும் காணக்கிடக்கின்றது. இதுவே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் கருத்தாகும்.

**அறம் பொருள் இன்ப**மென்று அம்மூன்றின் (கலி. 141)

**அறனும் பொருளும் இன்பமும்** மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம் (புறம். 28)

என்னும் பல வழக்குகள் முப்பாலின் ஆட்சியினைப் புலப் படுத்துகின்றன. திருக்குறளும் இம்முப்பால் பற்றிப் பல விடங்களில் பேசுகின்றது.

**அறன்**ஈனும் **இன்ப**மும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த **பொருள்** (குறள். 754)

என்னும் பா முப்பாலையும் ஓரிடத்தில் சுட்டிப்பேசுகிறது. இம்முப்பொருள்களையும் பண்டைத்தமிழர் அடிப்படைப் பொருள்களாகக் கருதியிருந்தனர். தொல்காப்பியர்,

அந்நிலை மருங்கின் அறன்முத லாகிய
**மும்முதற் பொருட்கும்** உரிய என்ப
(தொல்., பொருள்., செய். 411)

என்ற நூற்பாவின் வழி இம்முப்பாலை மும்முதற்பொருள் என எடுத்துப் போற்றுகின்றார். பின்வந்த சான்றோரும்கூட தொல்காப்பியர் தந்த இக்கருத்தினை வழிமொழிகின்றனர்.

ஆன்ற சிறப்பின் **அறம்பொருள் இன்பம்**என
மூவகை நுதலியது உலகம்

என்கின்றது பன்னிருபடலம். முதற்பொருள் என்பது அடிப் படைப் பொருள் எனப் பொருள்படும். வாழ்க்கைக்கு அடிப் படையாக அமையவேண்டிய பொருள்களே அறம் பொருள் இன்பம் என்னும் கருத்து இதனால் பெறப்படுகிறது. ஒருகால் அகமும் புறமும் இலக்கியப் பாகுபாடாக அமைய, அறம் பொருள் இன்பம் வாழ்க்கைப் பாகுபாடாகக் கொள்ளப்பட்டி ருக்கலாம். ஆதலால் அகம்புறத்துள் அறம் பொருள் இன்பம் அடங்குதல் வேண்டும். இதனையே தொல்காப்பியர்,

**இன்பமும் பொருளும் அறனும்** என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை
(தொல்., பொருள்., 92)

என அமைத்துக் காட்டுகிறார். அல்லது இப்பாகுபாடு பண்டைத் தமிழரின் புதுவாழ்வில் மலர்ந்த புதுநோக்காகவும் இருக்கலாம். மேல் புறப்பொருளில் அறக்கருத்துக்கள் அடக்கப்பட்டதைக் கண்டோம். அறம் பொருள் இன்பம் என்னும் பாகுபாட்டில் அறத்திற்குச் சிறந்ததோர் தனியிடம் வழங்கப் பட்டிருப்பதைக் காணுகின்றோம். இம்மூன்று பொருள்களையும் பின்னைச் சான்றோர் ஊதியம் எனவும் உறுதி எனவும் குறிப்பிட்டனர். புறநானூற்றின் பண்டை உரையாசிரியர் 'ஊதியம் என்பது அறம் பொருள் இன்பங்களை' என எழுதுகிறார். பரிமேலழகர் போன்றோர் இவற்றை உறுதிப் பொருள்கள் எனக் குறித்தனர்.

இம்முப்பாலுள்ளும் அறப்பாலுக்குத் தமிழர் ஒரு முதன்மை தந்திருக்கின்றனர்.

> சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
> அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல (புறம். 31)

என்னும் புறநானூற்றுப்பாட்டு பொருளுக்கும் இன்பத்தும் அறம் வழிகாட்டுகிறது என்பதைச் சுட்டிப்பேசுகிறது. இங்கே குறிக்கத்தக்க கருத்துக்கள் சில உண்டு. அறம் பொருள் இன்பம் என்ற மூன்றும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய முதற் பொருள்களாகும். இவ்வுலக வாழ்க்கையை நன்முறையில் வாழ்ந்து தீர்க்கச் சான்றோர் அமைத்த கொள்கைகள் இவை. இம்மூன்றும் போற்றத்தக்க கொள்கைகளே. இவற்றில் ஒன்றைப் பற்றி ஒன்றை விடுதல் என்பது இல்லை. இன்பம் அக வாழ்வின் தேவை பற்றிப் பேசுகிறது. பொருள், அரசியல் சமுதாயத் தேவை பற்றிப் பேசுகிறது. தனிமனிதன் பற்றிப் பேசும் அறம் பொருளின்பங்களும் ஏற்புடைத்தாகின்றன. காரணம் அத்தனிமனிதனே பொருள் வாழ்விலும் இன்ப வாழ்விலும் இடம்பெறுகின்றான். வேறுவகையில் அறத்திற்குச் சிறப்பிடம் இல்லை. அறம் பொருள் இன்பம் என்னும் வைப்பு முறையில் சிறப்புடைய காரணத்தால் அறம் முன்வைக்கப் பட்டது என்று தமிழர் கருதவில்லை போலும். 'இன்பமும்

பொருளும் அறனும் என்றாங்கு' என்ற வைப்புமுறையையும் அவர்கள் போற்றுகின்றனர். இருப்பினும் அகமும் புறமும் பண்டைத் தமிழர்களை ஆட்கொண்டது போன்று அறம் பொருள் இன்பம் ஆட்கொள்ளவில்லை போலும். சங்க காலத்தை அடுத்து உறுதிப்பொருள் கருத்துக்கள் மிகமிக ஆட்சிபெற்று வந்ததால் இது புலனாகிறது.

## 3. நாற்பால் மரபு

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பால் மரபு சமய ஆட்சி மிக்க இடைக்காலத்தில் மிகுதியாகப் பேசப்படுகிறது. இந்நாற்பால் கருத்துக்கள் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, இரட்டைக் காப்பியங்கள் ஆகிய இலக்கியங்களில் பேசப்படவில்லை. ஆனால் இவ்விலக்கியங்களில் எல்லாம் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் கருத்தே பரவலாகப் பேசப்படுகின்றது. ஆதலால் நாற்பால் பாகுபாடு பின்னர்த் தோன்றியது எனக் கருதலாம். தேவார திவ்யபிரபந்தங்கள் ஆகிய பக்தி இலக்கியங்களில் இந்நாற்பாற் கருத்துக்கள் பரவலாகப் பேசப்படுகின்றன.

> ..... .............. ...... ஆலதன்கீழ்
> நால்வர்க்கு **அறம் பொருள் வீடின்பம்** ஆறங்கவேதம்
> தெரித்தானை (தேவாரம், 6905)

என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

> . . . . . . . . . . .....அம்மறைதான்
> மன்னும் **அறம் பொருள் இன்பவீடு** என்றுலகில்
> நன்னெறிமேம் பட்டன நான்கன்றே (நாலாயிரம், 2764)

என்பது திருமங்கையாழ்வார் பாசுரம். இக்காலத்தில் இந்நான்கையும் அடைதல் நூலின் பயனாகக் கருதப்பட்டது.

அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயன் என்பது நன்னூல் பதிப்புக்களின் முன்னுரையில் காணப்படும் நூற்பாக்களுள் ஒன்று. தண்டியலங்காரம் இந்நாற்பாற் கருத்துக்

களைக் காப்பியங்களின் குறிக்கோளாக வகுத்தளித்துள்ளது. இக்கருத்துக்கள் எல்லாம், நாற்பாற் கருத்துக்களை வைதீக சமயத்தார் வழக்குக்குக் கொண்டுவந்து போற்றினர் என்பதைக் காட்டுகின்றன.

அறநூல்கள் பற்றிய ஆராய்ச்சியில் இம்முதற்பொருள்கள் பற்றிய வரலாறு கருத்தில் கொள்ளவேண்டியதாகும். காரணம் அறம் முப்பாலில் ஒரு பாலாகவோ நாற்பாலில் ஒரு பாலாகவோ கொள்ளப்பட்டிருப்பதைக் காணுகின்றோம். முப்பால் பாகுபாட்டில் பொருள் இன்பங்களைப் போன்று அறத்திற்கும் சிறப்பிடம் உண்டு. இம்மூன்றுமே இவ்வுலக வாழ்வு பற்றியன; இவ்வுலக வாழ்வை வற்புறுத்திப் பேசுவன. ஆனால் நாற்பால் கோட்பாட்டில் இத்தகைய நோக்கம் இல்லை. நாற்பால் கோட்பாட்டை வற்புறுத்தும் வைதீகசமயத்தினர் வீட்டினைக் குறிக்கோளாக்கி அறம் பொருள் இன்பங்களைக் கருவியாக்கி உள்ளனர். 'இவற்றுள் அறம் இம்மைப் பயன், மறுமைப்பயன், வீடு என்னும் மூன்றையும், பொருள் இம்மைப்பயன், மறுமைப்பயன் என்ற இரண்டையும், இன்பம் இம்மைப்பயன் ஒன்றையும் தருவதாம்' எனவும், 'அறம் பொருள் இன்பங்கள் கருவி, வீடு, குறிக்கோள்' எனவும், வைதீக சமயம் வற்புறுத்திப் பேசுகிறது. ஆதலால் முப்பாற் கோட்பாட்டில் அறம் பெற்றிருந்த சிறப்பிடம் நாற்பாற்கோட்பாட்டில் சிறிய அளவினதாகிய கருவியாகக் குறைந்துவிட்டது. தொல்காப்பியரால் வாழ்க்கையின் அடிப்படைப் பொருள்கள் எனப் போற்றப்பட்ட இம்முதற் பொருள்கள் வாழ்க்கையில் புறக்கணிக்கத்தக்க பொருள்களாக வைதீக சமயத்தாரால் கருதப்பட்டது. இடைக்காலத்தில் அறநூல்கள் பல வழங்கிய அவ்வை மூதாட்டி அறத்திற்குத் தந்த சிற்றிடத்தைச் சற்றே எண்ணிப்பார்க்கவேண்டும்.

ஈதலறம்; தீவினைவிட் டீட்டல்பொருள்; எஞ்ஞான்றுங்
காதல் இருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம்; பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு

'அறத்தை விட்டதே வீடு' என்பது அறத்தைச் சிறுமைப்படுத் தலைச் சுட்டிக்காட்டுகின்றது. வைதீக சமயத்தார்க்கு உல கத்திற்குப் புறம்பான தெய்வம் உண்டு. அத்தெய்வத்தை அடைதலே அவர்கள் வீடு எனக் கருதினர். அதுவே அவர்கள் வாழ்க்கையின் குறிக்கோள். ஆதலால் வைதீக சமயத்தினர் அறம் பற்றி இவ்வாறு கருதுதலில் வியப்பில்லை.

சங்ககாலத்தை அறம் பெற்றிருந்த இடத்தையும் அறக் கருத்துக்கள் வழங்கிய பாங்கையும் முன்னர்க் கண்டோம். சங்ககாலத்தை அடுத்து அறக்கருத்துக்கள் தமிழர் வாழ்வில் புதிய இடத்தையும் புதிய கோலத்தையும் பெற்றன. இவற் றைப் பதினெண்கீழ்க்கணக்கு என்னும் தொகை நூல்களில் காணுகின்றோம். தமிழ் இலக்கிய வரலாற்றில் அறநூல்கள் அல்லது நீதி நூல்கள் எனக் கருதுகின்றபோது இப்பதினெண் கீழ்க்கணக்கு நூல்களே சிறப்பாகக் கருதத்தக்கனவாய் இருக் கின்றன.

## 4. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

பண்டைத்தமிழ் நூல்கள் எல்லாம் பதினெண்மேற்கணக்கு, பதினெண்கீழ்க்கணக்கு என இரு தொகைகளாகத் தொகுக்கப் பட்டன. அகம் புறம் பற்றியனவெல்லாம் மேற்கணக்கு நூல் களாயின. நீதி நூல்கள் எல்லாம் கீழ்க்கணக்கு நூல்களாயின. இங்கு மேல் கீழ் என்பன காலம் குறித்தனவா இயல்பு குறித் தனவா என்பது தெளிவாகவில்லை. பதினெண்மேற்கணக்கு நூல்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் காலத்தாலும் முற்பட்டன; அளவாலும் பெரியன. கீழ்க்கணக்கு நூல்கள் காலத்தாலும் பிற்பட்டன; அளவாலும் சிறியன. இவற்றின் பாகுபாட்டிற்குத் தொல்காப்பியத்தில் இலக்கணம் இல்லை. பின்னர்த் தோன்றிய பாட்டியல் நூல்களே இவற்றின் இலக் கணம் பகர்கின்றன. பன்னிருபாட்டியல் கீழ்க்கணக்கின் இலக் கணத்தை இவ்வாறு இயம்புகிறது:

> அடிநிமிர்பு இல்லாச் செய்யுள் தொகுதி
> அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
> திறம்பட உரைப்பது கீழ்க்கணக் காகும்
>
> (பன்னிருபாட்டியல், 542)

1) பல அடிகள் இல்லாத செய்யுள்களின் தொகுதி 2) அறம் பொருள் இன்பம் என்னும் பொருள்பற்றி வருவது என்னும் இரண்டிலக்கணங்களையும் உடையது கீழ்க்கணக்கு என்பது இதனால் புலனாகிறது. இவை எல்லாமே வெண்பா யாப்பால் அமைந்தவை என்பதும் கருதத்தக்கது

இக்கணக்கில் இடம்பெற்ற பதினெட்டு நூல்களும் இவை :

நாலடி, நான்மணி, நால்நாற்பது, ஐந்திணை, முப்
பால், கடுகம், கோவை, பழமொழி, மாமூலம்
இன்னிலை, சொல் காஞ்சியோடு ஏலாதி, என்பதூவும்
கைந்நிலையும் ஆம்கீழ்க் கணக்கு

இவற்றுள் 11 நூல்கள் அறம் பற்றியவை; 6 நூல்கள் அகம் பற்றியவை; ஒன்று புறம் பற்றியது. அகப்பொருள் நூல்கள் அறநூல்கள் அல்ல; புறப்பொருள் நூலும் அறநூல் அல்ல. அறம் பொருள் இன்பம் பற்றிப் பேசுவன கீழ்க்கணக் காயின. ஆதலால் அகப்பொருள் நூல்களும் புறப்பொருள் நூலும் இத்தொகையில் இடம்பெற்றனபோலும்.

அறம் பாடும் 11 கீழ்க்கணக்கு நூல்களும் பொதுவாகச் சில இயல்புகளைக் கொண்டவை:

1. எளிய மொழிநடையில் அமைந்தன
2. வெண்பா என்னும் சிறு பாடல்களால் யாக்கப்பெற்றன. பிற மொழிகளில் சில அடிகளால் அமைந்த சூத்திரங்கள் போன்றவை இவை
3. சமண வைதிகப் புலவர்களால் இயற்றப்பட்டன
4. கொல்லாமை, புலாலுண்ணாமை, வாய்மை என்னும் அறங்களைப் பெரிதும் பேசுவன
5. நாற்பது, நானூறு முதலான தொகைகளைப் பெயர்களாகக் கொண்டன

சமண பவுத்த வைதிக சமயங்களின் செல்வாக்கை இந் நூல்களில் காணலாம். வடபுல தென்புலக் கலப்பால்

தோன்றிய கருத்துக்களை இங்குக் காணலாம். இருவேறு பண்பாடுகள் இணைகின்றபோது புத்தூக்கம் தோன்றுகிறது; புதுமைகள் பிறக்கின்றன. பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் இதற்கு நல்ல சான்று. பண்டைத் தமிழ்க் கருத்துக்களையும் புதுச் சமயக் கருத்துக்களையும் கீழ்க் கணக்கில் காணலாம். முப்பால் என்னும் திருக்குறளே இதனை நன்கு காட்டும்.

இப்பதினொரு நீதி நூல்களில் முப்பால், நாலடி நானூறு, பழமொழி நானூறு ஆகிய மூன்றும் மேம்பட்ட அறக்கருத்துக் களோடு சுவைப்பட்ட இலக்கிய நலங்களையும் தம்மகத்தே கொண்டன. பிற நீதி நூல்கள் எல்லாம் அறங்களைத் தொகுத்துச் சொல்லும் அவ்வளவினவே.

நாலடி நானூறு சமண முனிவர்கள் பலர் பாடிய நானூறு வெண்பாக்களின் தொகை. அறம் பொருள் இன்பம் என்னும் பாகுபாட்டில் அமைத்த முயற்சியுடையது. ஆனால் அது ஒரு போலி முயற்சியாகிவிட்டது.

பழமொழி நானூறு பண்டைத் தமிழகத்தில் வழங்கிய நானூறு பழமொழிகளைத் தொகுத்து அவற்றால் வெளிப்படும் அறங்களை விளக்கிச் செல்கிறது. சமண முனிவர் முன்றுரை யரையர் இதன் ஆசிரியர். பல சமய அறிவும் தமிழக வரலாற் றறிவும் நிரம்பப்பெற்றவர் இவர் எனத் தெரிகிறது.

காணார் எனச் செய்யார் மாணா வினை (பாட்டு 102)
அறிமடம் சான்றோர்க்கு அணி (பாட்டு 361)

இவை சில பழமொழிகள்.

இந் நீதி நூல்கள் சிலவற்றின் ஓர் இயல்பு மருந்தின் பெயர்கள் உவமையாகு பெயர்களாக நூல்களுக்கு அமைந் திருத்தல். திரிகடுகம் (சுக்கு, மிளகு, திப்பிலி), சிறுபஞ்ச மூலம் (கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி), ஏலாதி (ஏலம், இலவங்கம், நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு) முதலிய பெயர்கள் இதற்குச் சான்று, உடற்

பிணி போன்று உள்ளப்பிணியும் நீங்கவேண்டும் என்பது இதன் கருத்து.

பதினெண்கீழ்க்கணக்கில் மட்டுமல்லாது தமிழ் மொழியிலேயே முதன்மையானதும் முழுமையானதும் தொன்மையானதுமான அறநூல் முப்பால் என்னும் திருக்குறளே. அறம் பொருள் இன்பம் என்னும் மும்முதற் பொருள்கள் பற்றி நுவலும் நூலாதலால் இது இப்பெயர் பெற்றது. தமிழ் மொழியில் அறம் பொருள் இன்பம் பற்றி உரைக்கும் முழுமையான நூல் இது ஒன்றே. அது மட்டுமல்ல, இந்தியாவிலேயே முப்பால் பற்றி ஒரே ஆசிரியரால் ஒரே நூல் செய்யப்பட்டது இது ஒன்றே. முப்பாலுக்கு முன்னும் பின்னும் இப் பொருள் பற்றிப் பேசுவது வேறில்லை. அறத்தையும் பொருளையும் இன்பத்தையும் தனித்தனியே ஆய்ந்து அறிவுறுத்திய புலவோர் இந்தியாவில் உண்டு. ஆனால் இம்மூன்று முதற் பொருள்களையும் தனித்தனியாகவும் கண்டு அம்மூன்றையே ஒன்றாகவும் கண்டு - வாழ்க்கையின் கூறுகளைத் தனித்தனியும் கண்டு முழுமையாக ஒன்றெனவும் கண்டு-உணர்த்திய பெருமை வள்ளுவர்க்கே உண்டு. இதனால் 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்பது போன்ற ஒற்றைக் கண் குறை நீங்குகிறது. அறம் பொருள் இன்பங்கள் தமக்கிடையே கொண்ட உறவும் தெள்ளென விளங்குகின்றது.

முப்பாலுக்குப் பல சிறப்புக்கள் உண்டு. அதன் தலையாய பண்பு உலகவாழ்வுக்குரிய நற்பண்புகளையும் நல்லொழுக்கங்களையும் விளக்கி இவ்வுலக வாழ்க்கையை வற்புறுத்திப் பேசுவதுதான். பிற இந்தியச் சமயங்கள் எல்லாம் உலக வாழ்வின் நிலையாமையை வற்புறுத்திப் பேச, இம்முப்பால் ஒன்றே இவ்வாழ்வின் பெருமை பேசுகிறது. இதன்பொருட்டே உலகப்பெரியார் சுவைட்சர் முப்பாலைப் போற்றுகிறார்.

முப்பால் ஆசை காட்டியும் அச்சம் காட்டியும் ஒழுக்கங்களை வற்புறுத்தவில்லை. நல்லொழுக்கங்கள் நன்மையின் பொருட்டே போற்றப்படவேண்டும் என்பது முப்பாலின் கொள்கை. இதுவும் சுவைட்சர் போற்றும் பண்பு.

சமயங்கள் எல்லாம் கூடிச் சழக்கிட்டுக்கொண்டிருந்த காலத்தில் 'சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது என்ற' பெருமை முப்பாலுக்கு உண்டு.

பழங்காலத்துக்கு மன்னர் காலத்துக்கும் உரியதானாலும் முப்பால் கூறும் அறங்களைப் பொதுமைப்படுத்தி நுண் பொருள் ஆக்கியே பேசுகின்றது. பேசும் கருத்துக்களும் அடிப் படையான கருத்துக்களாகவே உள்ளன. ஆதலால் காலம் மாறினும் வள்ளுவர் வழங்கிய கருத்துக்கள் மாறாது பயன் பட்டு வருகின்றன.

வள்ளுவர் அறத்தை வருணாசிரம தருமமாகக் காண வில்லை; அதனை உலகமக்கள் எல்லார்க்கும் பொதுவான ஒழுக்கமாகவே அவர் கண்டார். அரசியலில் வெற்றி பெற்றுப் பேரும் பொருளும் ஈட்டும் அரசியலாக அல்லாது அறத்தின் அடிப்படையில் இயங்கும் அரசியலாகவே வள்ளுவர் பொருட் பாலை அமைத்துள்ளார். தடிதழீஇக் கோலோச்சும் மன்னனை அல்லாது குடிதழீஇக் கோலோச்சும் மன்னனையே அவர் பொருட்பாலில் காட்டுகிறார். காமசாத்திரம் போன்று அசிங் கமான காமத்தைக் காட்டாது அருமையான காதலின்பத்தையே காமத்துப்பாலில் வள்ளுவர் வரைந்து காட்டுகிறார்.

உலகம் உச்சிமீது வைத்து மெச்சும் அறநூல் திருக்குறள்.

இக் கீழ்க்கணக்கு நூல்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டி லிருந்து 8ஆம் நூற்றாண்டுக்கிடையிலான காலத்தில் தோன்றி யிருக்க வேண்டும்.

## 5. பிற்கால அறநூல்கள்

இதன்பின்னர் அறநூலாக்கத்தில் தமிழ்மொழி வளர்ச்சி காணவில்லை. கூறியது கூறும் நூல்கள் பல தோன்றித்தான் உள்ளன. அறநூல் உரைத்தலில் இடைக்காலத்தில் தலை யானவர் அவ்வை மூதாட்டி. பின்னர் அதிவீரராமபாண்டியர்,

குமரகுருபரர், சிவப்பிரகாசர் முதலானோர் குறிக்கத்தக்கனர்.

அவ்வையார் : ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை

அதிவீரராமபாண்டியர் : வெற்றிவேற்கை (நறுந்தொகை)

முனைப்பாடியார் : அறநெறிச்சாரம்

சிவப்பிரகாசர் : நன்னெறி

உலகநாதர் : உலகநீதி

குமரகுருபரர் : நீதிநெறிவிளக்கம்

இப் பின்னை நீதி நூல்கள் எல்லாம் எளியன; பெரியோர்க்கு என்பதைவிடச் சிறியோர்க்கே நீதி கூறுவன; ஓரளவு சமயம் சார்ந்தன.

இடைக்காலத்தின் பிற்காலத்தில் சதகங்கள் என்னும் ஒருவகை நீதி நூல்கள் தோன்றின; 100 பாடல்களைக் கொண்டமைந்தவை இவை; சமயஞ்சார்ந்து சமய நீதிகளையும் பிற உலகியல் நீதிகளையும் குழைத்துத் தருவன; சில சுவைபடவும் அமைந்துள்ளன. அறப்பளீசுரர் சதகம், தண்டலையார் சதகம் என்பன சிறப்பாகக் குறிக்கத்தக்கன.

பதினெண்கீழ்க்கணக்கை அடுத்து நீதிகள் சமயம் சார்ந்தவையாகிவிட்டன; வீட்டுக்குக் கருவியாகிவிட்டன. அறம் பொருள் இன்பம் என்னும் புருடார்த்தங்கள் நீதி நூல்களுக்கு அடிப்படை ஆன நிலை படிப்படியே மறைந்தது. மக்கள் பண்பாடும் சிந்தனையும் சமயம் சார்ந்தவையாகிவிட்டன; அதன் நிழலையே நீதி நூல்களிலும் காணுகிறோம்.

ஐரோப்பியர் வருகையால் மேலை நாகரிகத் தொடர்பு ஏற்பட்டது; தமிழகத்திலும் புதுமை பிறந்தது. அறநூல்களிலும் புதுச் சிந்தனைகளைக் காணமுடிகிறது; சிறப்பாகக் குறிக்கத்தக்கன கிறித்தவத் தமிழறிஞர் வேதநாயகனாரின் நீதிநூலும் பெண்மதிமாலையும். அவ்வப்போது தனித்தனிப் பொருளைப் பற்றி அறம்பாடியதே நீதி நூல். இலக்கியநலமும் சுவையும்

ஓரளவு கொண்டது இந்நூல். பெண்டிர் மேம்பாட்டுக்குப் பாடுபடும் ஓர் அறநூல் பெண்மதிமாலை.

இப்புதுமை நோக்கில் அடுத்துக் குறிக்கத்தக்கன சுப்பிர மணிய பாரதியாரின் ஆத்திசூடியும் புரட்சிக்கவிஞரின் ஆத்தி சூடியும் ஆகும். அவ்வையின் ஆத்திசூடியைப் பின்பற்றி இவை அமைந்தனவாயினும் புதுமைக்கருத்துக்கள் கொண்டன.

பண்டைத் தமிழிலும் இடைக்காலத்துத் தொடக்கத்திலும் அறநூலாக்கம் சிறந்ததோர் இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால் பின்னர் அது உயிர்ப்புள்ள இலக்கிய வகையாக வளரவே இல்லை. இன்றைய தமிழர், மூதாதையர் உடைமை யாலேயே பெருமை கொள்ளலாம்.

# 3. காப்பியங்கள்

சென்றகாலத்தின் பழுதிலாத் திறங்களையும், இனி எதிர் காலத்தின் சிறப்புக்களையும் காட்டி மக்களை இலட்சியப் பாதையில் அழைத்துச் செல்லும் வழித்துணை இலக்கியங்கள்.

தமிழ்மொழியில் தமிழினத்தின் வாழ்வையும் வளர்ச்சியை யும் வித்தாகக் கொண்டு விளைந்தவை சில இலக்கியங்கள்; அவை மக்கள் வாழ்கின்ற இடம், சூழல், இவற்றால் அமையுந் தொழில், சமுதாய அமைப்பு இவற்றை அடியாகக்கொண்டு ஆங்காங்குத் தோன்றிய திருமணமுறைகள், சடங்குகள், இல்லற வாழ்க்கை இவற்றைப் பொருளாகக்கொண்டு விளைந்தவை. இவைகளே அகப்பொருள் இலக்கியங்கள்.

அரசு, போர், வெற்றி தோல்வி, ஒப்புரவு, கொடை, விழா முதலான நாட்டு இயக்கமுறைகளை வித்தாகக்கொண்டு விளைந்தவை சில. இவை புறப்பொருள் இலக்கியங்கள்.

இவற்றுள் முன்னதைக்கொண்டு தமிழர்சமுதாய அமைப்பு, இனவளர்ச்சி, இவற்றை அறியலாம். பின்னதைக்கொண்டு நாட்டுநடப்பு, மன்னர்,வீரர், வள்ளல்கள் வரலாற்றுக்குறிப்புக் களை அறியலாம்; நம் முன்னோரின் பண்பாடுகளையும் பார்க் கலாம்.

இவ்விருவகை இலக்கியங்களுமே பழம்பெருங்காலத்தில் அடிநிமிர்ந்த அகவற்பாக்களால் ஆக்கப்பெற்றிருந்தன.

---

எழுதியவர் ச. தண்டபாணிதேசிகர்

வேற்றூப்பாக்கள் விரவியகாலம் பின்புதான். விருத்தப்பாக்களும் வேறு பாவினங்களும் விரவியது மிகப்பின்னைய காலத்தில் தான்.

அகமும் புறமும் பற்றிய பழங்கவிதைகள் தனிமலர்களாகவும் சிறுகொத்துக்களாகவும் தோன்றின. பின்னர்க் கட்ட முடியாத பெரியமலர்கள் பாட்டாகவே அமைந்தன. சிறுமலர்கள் தொகையாக்கப்பெற்றன.

பல சமுதாயங்களும், பல்வேறு திணைமக்களும் நாட்டு மக்களும் கூடி ஓரமைப்பின் கீழ் வாழவேண்டிய சூழல் நேர்ந்த போது வளர்ந்தவை, சமுதாயச் சட்டங்களாகிய நீதிகள். நீதிகள் அறவொழுக்கங்களையும் கட்டுப்பாட்டையும் அறிவிப்பன. எந்தக்காலத்திலும் சட்டங்களும் கட்டுப்பாடுகளும் சமுதாயத்தால் விரும்பி ஏற்கப்படுவன அல்ல. ஒருநிகழ்ச்சியால் வருந்தியவன் சட்டத்தை வரவேற்பான்; வருத்தியவன் சட்டத்தை அவமதிப்பான். வரவேற்பவனுங் கூட வருந்துகிற காலத்தில் மட்டும் வரவேற்பான். பொதுவாக அறவொழுக்கங்கள் வேப்பங்காய்தான். ஆசிரியர் தொல்காப்பியரும் நீதியின் இயல்பை,

> வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
> வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்
> தாங்குதலின்றி வழிநனி பயக்குமென்று
> ஓம்படைக் கிளவி வாயுறுத்தற்றே

என்பர். (தொல்., பொருள்., செய், 112)

மருந்து விரும்பியுண்டாலும், வெறுப்புடன் உண்டாலும் நன்மையைத்தான் தரப்போகிறது. ஆனாலும் விரும்பியுண்ண என்ன செய்யலாம்? எப்படிக் கொடுக்கலாம்? என்ற சிந்தனை கவிஞர் உள்ளத்திலே தோன்றியிருக்கிறது.

தாய், தந்தை, ஆசிரியர் சொல்லுக்கு அடங்காதபிள்ளை ஒருவன்; அறவொழுக்கங்களை விரும்பாதவன்; தீயஒழுக்கம் உடையவன். உலகத்தைப் பார்த்தாவது திருந்தவேண்டும்

என்ற உள்ளம் சிறிதும் இல்லாதவன்; மனைவி சொற்படி திருந்தத் தொடங்கினான். அவள் அவனை அறுசுவையிலும், உவகைச் சுவையிலும் மயங்கவைத்து அந்நவேளையில் அறிவுறுத்தினாள். அவன் முழுவதும் நல்லவனாகிவிட்டான். இதனைக் கண்ட கவிஞர் நாமும் நீதிகளைக் காப்பியக் கன்னியின் வாயிலாகக் கொடுத்தால் நல்லது என்று கண்டார். கதையோட்டத்திலே ஒன்பது சுவைகளையும் மாறிமாறிக் கலந்து ஊட்டினார். இங்ஙனம் கதைத்தேனிலே சுவையமுதத்தைக் குழைத்துத்தர எழுந்தனவே காப்பியங்கள். காப்பியங்களை வடநூலார் கற்புடைய மனைவியைப் போன்றது என்ற கருத்தில் காந்தாசங்கிதை என்பர். காந்தை மனைவி.

ஆதலால், நீதிகளை ஒரு தனிமனிதனுடைய வரலாறுகளிலே வைத்து அங்கங்கே வாழ்க்கையில் நேரும் நலந்தீங்குகளைச் சுட்டிக்காட்டி, நீதிகளையும் ஒட்டவைத்து, இசையினிமையும் பொருட்செறிவும் உடைய காப்பிய அமுதைக் கடைந்து திரட்டி வைத்தார்கள். அவைகளே காப்பியங்கள்.

காப்பியங்கள் பழைய கதைகளைப் பொருளாகக்கொண்டு உரையும் பாட்டும் ஆக இருந்தன என்றும், அவை பெருந்தேவனாராற் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன என்றும் கூறுவர் பேராசிரியர். நச்சினார்க்கினியர் சிலப்பதிகாரமும் இதன்பாற்படும் என்றனர் (தொல்., பொருள். 550). இவற்றுள் தகடூர்யாத்திரையும் சிலம்பும் தமிழ்நாட்டில் நடந்த கதை. மாபாரதம் வடநாட்டுக்கதை சிலம்பு ஆசிரியர் காலத்திலேயே நடந்தது, அவரால் கேட்கப் பெற்று ஆக்கப்பெற்றது.

இராமன் கதைக்குறிப்புக்களும் சங்கநூல்களிற் காணப்படுவதால் இராமகாதையும் சங்ககாலத்தில் இருந்திருக்கலாம். சைனஇராமாயணம் என்ற ஒன்று இருந்தது; அதனைச் சைன இளைஞர் சங்கம் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறது. ஆதலால் இருப்பனவற்றுள் பழைமையானது சிலப்பதிகாரம்.

## சிலப்பதிகாரம்

இந்தக் காப்பியத்தலைவன் கோவலன். தலைவி கண்ணகி மாற்றுத்தலைவி மாதவி. கோவலன் கண்ணகியை மணந்தான். கலைப்பித்தனாகிய கோவலன் கலையில் மயங்கி மாதவியைக் காதலித்தான். இல்வாழ்க்கை இல்லாத வாழ்க்கையாயிற்று. கலைக்காதல் வாழ்க்கையும் கடைசியிற் கசந்தது. சிறக்க வாழ்ந்த இடத்தில் தேய்ந்து வாழக்கூடாது என்று எண்ணினான். மனைவியின் காற்சிலம்பை வாணிக முதலாகக் கொண்டாவது பொருளைப் பெருக்கலாம் என்று மதுரைமாநகரை அடைந்தான். ஊழ் அவனைக் காட்டிக்கொடுத்தது. அரசநீதி அவனைக் கொன்றது. கணவனையிழந்த கண்ணகி கவலையால் வாடி, வான்மொழி காட்டிய வழியில் வைகைக் கரைவழியே நடந்து பதினான்காம்நாள் வானவூர்தியில் வந்த கணவனோடு தெய்வமாகி விண்ணுலகடைந்தாள் என்பது வரலாற்றுக்கோப்பு.

முதற் குறிக்கோள்

காப்பியங்கள் கதைசொல்ல வந்தன அல்ல. கதையின் வாயிலாக அரிய நீதிகளை ஆணித்தரமாக அறிவிற் பதிக்க வந்தவை. ஆதலால், சிலம்பு, அரசநீதிதவறி ஆராயாமல் கொலைத்தண்டம் கூறிக்குற்றப்பட்ட மன்னன் இறந்தான் என்பதால் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகிக் கொல்லும் என்பதனை வலியுறுத்துகிறது. மன்னன் அரசுகட்டிலிற்றுஞ்சிய நெடுஞ்செழியன் எனப்பட்டாலும், ‘துஞ்சிய’ என்ற அடைமொழி ‘முதலில் ஆராயாமல் முடிவுகண்டவன்’ என்ற இழிவை நினைவிற்குக் கொண்டுவருகிறது. பின்பு தான் அதற்காக உயிர்துறந்தவன் என்ற பெருமையைப் புலப்படுத்துகிறது.

இரண்டாவது குறிக்கோள்

கணவன் அன்பை மணம்புணர்ந்த சிலநாட் பெற்றும் பல நாள் பெறாத கண்ணகி, மதுரையில் மாதரி வீட்டில் ‘பொன்னே கொடியே புனைபூங் கோதாய்!, நாணின் பாவாய்! நீணில விளக்கே! கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி!’ என்ற

கணவன் பாராட்டைப் பெறுகிறாள். அடுத்துச் சிலகணத்தில் செல்வன்மகன் செல்வனாகிய கோவலனை ஊழ்வினை கள்வனாக்குகிறது; அதனால் கொல்லப்படுகிறான். இதனால் 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்ற இலக்கை வலி யுறுத்துகிறது.

மூன்றாவது குறிக்கோள்

கணவனை இழந்த கண்ணகி பதினான்கு நாள் கழித்து தான் செய்த தவத்தாலும் கற்பாலும் தெய்வ மாகிறாள். கணவனே தெய்வவுருவில் வந்து அழைத்துப் போகிறான். சேர மன்னனும் மக்களும் சிலையமைத்து நாட் பூசையும் சிறப்புஞ்செய்து வழிபடுகிறார்கள். கண்ணகி காலங் காலமாக அருள்வழங்கும் தெய்வமாகி விளங்குகிறாள் என்ற நிகழ்ச்சி, 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துதலை' நினைக்கச் செய்கிறது. இங்ஙனம் இந்த மூன்று குறிக்கோள் களே இக்காப்பியத்தின் மையக்கரு.

தமிழகக் காப்பியம்

காப்பியக் கதைத் தோற்றம் சோழநாட்டுப் புகார்நகரில், காப்பிய விரிவும் பரப்பும் பாண்டியநாட்டு மதுரையில், தெய்வ மானதும் வழிபாடும் வரந்தருதலும் சேரநாட்டில். இங்ஙனம் மூன்று நாட்டையும் பற்றிய தமிழக வரலாறாகிறது இக் காப்பியம்.

சுவையமைப்பு

புகார்க் காண்டத்துச் சிறந்தசுவை உவகை அல்லது இன்பச் சுவை. மதுரைக் காண்டத்துச் சிறந்த சுவை வீரச்சுவை. வீரச் சுவை ஆண்மையினிடம் தோன்றுகிறது எங்கும் மலர் கையை யறுக்காது; கத்தியறுக்கும் பெண்மையினிடம் வீரம் தோன் றாது; தன் கணவனை இழந்ததால் விளைந்த அவலச்சுவை, காவல்அரசு, காவல் தவறியதால் அவலமே அவளிடம் பெண்மையை மாற்றி ஆண்மையை வழங்குகிறது. அதனால் கண்ணகியிடம் வீரந்தோன்றி, மன்னனை உணரவைத்து உயிரையுங்குடித்து, மதுரையையும் எரித்து அமைகிறது.

வஞ்சிக்காண்டத்து மீண்டுந் தலையெடுத்த அவலம் வான் மொழி வழிகாட்டச் சிறிது சிறிதாக தெய்வத்தன்மையை விளைவித்து அவளுக்கு அமைதி அல்லது சாந்தச் சுவையை அளிப்பதாகவும் காண்போர்க்கும் கேட்போர்க்கும் வியப்புச் சுவையை விளைவிப்பதாகவும் நிறைவெய்துகிறது.

அறிவியற்கலை நுட்பங்களை அறிவிப்பதும் காப்பியப் பயனாகக் கருதப்பெறும் இதில் மதில், மதிற்பொறிகள், நவமணிகள் அவற்றின் குணங்குற்றங்கள், முகத்தல் அளவைகள், களவுநூலும், அது கூறும் நுணுக்கமான கருத்துக்களும், இசை, நாடகம், நாட்டியம், கைவரிசைகள் அடிவைப்பு முறைகள், கருவியமைப்பு, இவற்றைப் பற்றிய நுண் கலை நுட்பங்கள், வேடர், ஆயர் முதலானாருடைய தெய்வ ஆடல்கள், நகர அமைப்பும், நாற்படைகளின் நடப்பும் முதலான பலவேறு அறிவியற்கலை நுட்பங்களும் பொதிந்த காப்பியம் இது.

இதன் ஆசிரியர் இளங்கோவடிகள். கம்பராமாயணத்திற்கு அடுத்து ஆய்வு நூற் கட்டுரைகளாக இருநூற்றுப் பதின்மூன்றைப் பெற்றும் மேலும் பலருக்கு ஆய்வுக்களனாக விளங்குவது இக்காப்பியம்.

## மணிமேகலை

சிலப்பதிகாரத்தோடு இணைந்த கதைதொடர் காப்பியம் மணிமேகலை. கண்ணகி தெய்வமாதலும் மாதவி துறவுமாகிய இவ்வளவில் சிலப்பதிகாரம் அமைகிறது. இந்நூல் இந்திரவிழாவை முகமாகக்கொண்டு, இந்திரவிழாவிற் சிறப்பாகப் பங்குபற்ற வேண்டிய மாதவியும் மணிமேகலையும் வாராமையால் ஊர் அலர் தூற்றுகிறது என்பதைத் தோற்றமாகக்கொண்டு, மணிமேகலை அறமகளாகித் துறந்தோர், பிணிப்பட்டோர், கல்லாமாக்கள் முதலானோர்க்குப் பெருந் துணையாகிப் பசிப்பிணி போக்கிப் பல்வேறு சமயத் துணிவுகளை ஆய்ந்து, முடிவுகண்டு உண்மையுணர்ந்து, அறவண அடிகள்பால் எட்டுக்கட்டளையும் கேட்டு, பிறப்பறுதலையே குறிக்கோளாகக்கொண்டு தவஞ்செய்த வரலாற்றைச் சொல்கிறது.

இதனுள், மாதவி, மணிமேகலை, சுதமதி, கோவலன், உதயகுமரன் முதலியவர்களின் பழம்பிறப்பு வரலாறும், ஆபுத்திரன் வரலாறு கூறுவதன் வாயிலாக சிருடிமூலம் நதி மூலங்களையும், வேள்விகளின் நோக்கம், விளைபயன் முதலிய வற்றையும் விளக்குகிறது. இதனுள் சமயக்கணக்கர்தம் திறம் உரைத்த காதை மெய்ப்பொருள் இயல் ஆய்வு முறைக்கும், அளவையிலக்கணங்களுக்கும், மெய்ப்பொருள் வீடு இவற்றின் இயல்புகளுக்கும் ஒரு கண்ணாடி போல்வது.

இடையில் சுதமதியும் அறவண அடிகளும் கூறும் அற வுரைகள் காமஎழுச்சியையே தடுக்கும் மனக்கதவுகளாகின்றன.

இதன் குறிக்கோளும், ஊழ்வினை, சாதி ஒழிப்பு, இடைக் காலத்தில் மாற்றுக் கருத்தால் விளைந்த கேடுகள் இவற்றை விளக்கும் அறவுரைகளாக அமைகின்றன. சிறப்பிற் சிறப்பாக,

> அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
> திருந்தாச் செய்கைத் தீந்தொழிற் படாஅன்

என்ற மாதவியுரை தன்மகள் மணிமேகலையின் குறிக்கோளை யும், ‘போதல் செய்யா உயிரொடு நின்றே நற்றொடி நங்காய்; நாணுத் துறந்தேன்’ என்று வயந்தமாலையைப் பார்த்து மாதவி சொல்லும் உரை, அவள் இலக்கு உலகுகூறும் நாணுக்காகக் கொள்கையைத் துறவேன் என்ற குறிக்கோளை யும் உணர்த்துவன.

சுவை

இக்காப்பியம் அமைதிச் சுவையைத் தலைமையாகக் கொண்டது. சுவையுலகில் அமைதியைச் சுவையாகக் கொள் வதா? என்பதைப் பற்றியே கருத்து வேறுபாடுண்டு. ஆனாலும் இக்காப்பியம் அதனையே தலைமையாகக்கொண்டு அதற்கு மாறான உவகை, வீரம் முதலியவற்றைச் சிறிதளவு எடுத்துக் காட்டுவதன் வாயிலாக எள்ளல், இளிவரல்களைச் சுதமதியுரை யிலும், மணிமேகலா தெய்வத்தின் உரையிலும் அமைத்து,

அவலச் சுவையைத் தரும் உதயகுமாரன் கொலையுண்டது முதலியவற்றால், அதனை அமைதியின் வாயிலாக்கிச் செல்கிறது.

நீதிகளாக, ஆதிரை கணவன் சாதுவன் வரலாறாகப் பரத்தையரிழிவு, சூதின் கொடுமை, அருந்தவக் கற்பின் மேன்மை முதலியன காட்டப்பெறுகின்றன

வரலாறுகளில், காவிரி தோன்றிய வரலாறு கரகங்கவிழ்த்த செய்திவரையில் ஏனைய வரலாறுகளோடு ஒத்தியங்குவதாயினும் சம்பாபதியோடு இணைந்து புத்தமதக் கதையாகிறது. இங்ஙனம் சில வரலாறுகள் சமயமாற்றம் பெறுகின்றன.

பெருமை

சமய நூல்களை அவ்வத்துறையிற் பயின்றாலும் அறிந்து கொள்ள முடியாத அளவைகள், துணிமுறைக்கு அணுகும் உபாயம் இவற்றைத் தமிழர்களுக்கு அறிவிக்கிற நூல் இதுவேயாகும். இது பௌத்தமதக் காப்பியமாய்ப் பௌத்த தத்துவங்களையே உணர்த்த எழுந்ததாயினும் 'காக்கைக்குத்தன்குஞ்சே பொன்குஞ்சு' என்றாற்போலின்றிப் பல்வேறு சமயக்கொள்கையறிவுத் துலையிலிட்டு ஆராய்ச்சி நிறைகல்லால் நிறுத்து முடிவு காணும் முறையை முதலிற் தந்தது எனலாம்.

இதன் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகஞ் சாத்தனார். 'தண்டமிழ் ஆசான்' என இளங்கோவடிகளாலேயே பாராட்டப்பெறுபவர். வணிக மரபினர். இவருடைய நுண்மான் நுழைபுலத்தையும், பல்துறைச் சமயப் புலமையையும், வாதத் திறத்தையும், அவர் வாய்ச்சொல்லாலேயே அறியலாம்.

## சீவகசிந்தாமணி

செந்தமிழிலக்கிய உலகில் தலையாய இடம் சிந்தாமணிக்கே என்றும் உரியது. தேவசிந்தாமணி நினைத்ததை எல்லாம் கொடுக்குமாம். தேவர் சிந்தாமணி யார் எதை விரும்பி ஏட்டைக் கையில் எடுத்தாலும் அவற்றையெல்லாம் கொடுப்பதை அகக்கண்ணாலும் புறக்கண்ணாலும் பார்க்க

லாம். சுவையனைத்தும் இங்கே; இலக்கண நுட்பங்களனைத்தும் இங்கே ; சந்த வேறுபாடுகள், வரலாற்றின் இனிய ஓட்டம், விளையாட்டுவகை, போர்வகை, கலைத்திறம், சைன சமய நுட்பங்கள், மந்திரவகைகள், அனைத்தும் இங்கே. இந்நூற்கு சிந்தாமணி என்னும் பெயர் 'தன்மையால் வந்தது' என்னும் இலக்கண நூல்கள். இதுதான் இந்நூற்குத் திருத்தக்க தேவரிட்ட பெயர் என்பதை ''சிந்தாமணியின் சரிதம் சிதர்ந்தேன் தெருண்டார், நந்தாவிளக்குச் சுடர்மணி நாட்டப் பெற்றே'' என்ற இவர் வாய்மொழியே சான்றாகும். ஏதோ முறையல் முறையாகச் சிதர்ந்தேன் எனப் பலபொருள்படக் கூறுவாராயினும், மணியாதலால் ஒளிச்சிதரால் நம் மனத்தைக் கவருகின்றது. தேனனைய துளிச்சிதரால் மனத்திலும் இனிப்புத் தருகிறது; உறுதியைத் தருகிறது. நல்லபெயர் எனலாம்.

வரலாறு

ஏமாங்கதநாட்டு இராசமாபுரத்து குருகுலக்கோமான் சச்சந்தன். அவன் மனைவி விசயை. அரசன் அவள்மேல் வைத்திருந்த அளவுகடந்த காதலால் கடமையிற் தவறக் கட்டியங்காரன் என்னும் அமைச்சனால் கொல்லப்பட்டான். அப்போது விசயை நிறைசூலுடையவள். மன்னன் மயிற்பொறியில் வைத்தனுப்ப அவள் இடுகாட்டில் இறங்கி, மன்னன் இறந்தான் என்ற அதிர்ச்சியால் ஓர் ஆண்மகவைப் பெற்றாள். அவனே காப்பியத் தலைவன் சீவகன் என்பது அவன் பெயர்.

எட்டு மணங்கள் செய்து இன்பமுடன் அரசயோகத்திருந்த சீவகன் ஒரு சிறிய நிகழ்ச்சியாகிய குரங்கின் செயலால் உலகத்தில் உவர்ப்புக்கண்டு மனமாறித் துறவு பூண்டு, சாரணர்களிடத்துப் பழம்பிறப்புணர்ந்தும் ஒரு முனிவர்பால் நல்லுரை கேட்டும் மனைவியர் அனைவருடனும் துறவு பூண்டான். சீவகன் தேவர்களால் சிவிகையேறிச் சமவ சரணம் அடைந்தான்.

இவன் மணங்களும், வெற்றியும், வீடுபேறுமாகிய அனைத்தும் இவனுடைய கலையுணர்வும், கல்வியும், வீரமும், அறச்சிந்தனையும் அளித்த பேறுகளாம்.

நீதிகள்

முத்தியிலம்பகம் முழுவதுமே நீதிக்களஞ்சியம் எனலாம். இடையிடையே இலைமறை காயாகவும், பழங்களாகவும், கலந்துள்ள அறவுரைகள் திருக்குறளிலிருந்து மட்டும் 'இரு நூற்று ஐம்பத்து ஆறு. ஆயின் பிறநூல் கருத்துக்களும் எத் துணை இருக்கக் கூடும்.

சமய ஒழுக்கங்களாகச் சமவசரணம் பெற்றாரின் அற வுரைகளும் சாரணர் பலருடைய அறவுரைகளும் இடம் பெறு கின்றன. சீவகன் முனிவர்கள் பலருக்கு அறமுரைத்துத் தெளிவுறுத்தினன் என்றதும் சிந்தித்தற்குரியது.

இதன் ஆசிரியர் திருத்தக்கதேவர் என்பதையும், அவரியற் றிய பாடல் இரண்டாயிரத்தெழுநூறு என்பதையும், மிகைப் பாடலான நானூற்று நாற்பத்தைந்து பாடல்களும் கந்தியார் என்ற பெண்புலவர் பாடிச் சேர்த்தன என்பதையும், அவரா சானியற்றிய ஓம்படைப் பாட்டாகிய ''மூந்நீர் வலம்புரி'' என்பதில் வரும் 'சிந்தாமணி ஓதியுணர்ந்தார், கேட்டார், இந்நீரராய் உயர்வர்; ஏந்து பூந்தாமரையாள் காப்பாள் ஆம்' என்ற பகுதி நன்கு விளக்கும்.

## வளையாபதி

பெருங்காப்பிய வரிசையில் நான்காவதாக எண்ணப்படு வது வளையாபதி. இதன் முழுவடிவத்தையும் கண்டு சுவைக் கும் பேற்றினைத் தமிழ் மக்கள் பெற்றிலர். ஆனால் புறத் திரட்டு, சிலப்பதிகார உரை, தொல்காப்பிய உரை, வீரசோழிய உரை முதலியன சில பாடல்களைத் தொகுப்பாகவும் மேற் கோளாகவும் எடுத்தாண்டுள்ளமையால் பெயராவது அறியக் கூடிய நிலையில் உயிர்தாங்கி நிற்கிறது.

இதன் ஆசிரியர் பெயர், நுதலிய வரலாறு, ஒன்றும் அறியக்கூடவில்லையாயினும், சிலப்பதிகார உரையில் வரும் 'துக்கந் துடைக்கும்' என்னும் செய்யுளும், தொல்காப்பியச் செய்யுளியலில் இளம்பூரணர் எடுத்துக்காட்டும் 'உலக மூன்றும்' என்னும் செய்யுளும், 'உயிர் கொன்று உண்டு உயிர் உய்யன் மின்' என்ற பகுதியும் இந்நூல் சைனக் காப்பியம் என்பதைத் தெரிவிக்கின்றன.

இதில் இன்றுவரை கிடைத்த பாடல்கள் எழுபத்திரண்டே. அவையனைத்தும் நீதிப் பாடல்களே. இந்நூல் கதை தழுவிய தொடர்நிலைச் செய்யுளாயினும் வரலாறு அறியக்கூடாமை மையால் வளையாபதிச் செய்யுள் என்று செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. பின்னர் உரையுடன் சைவ சித்தாந்தக் கழகம் வெளியிட்டுள்ளது.

ஆண்மகன் மனைவியை-மக்களை-அரசை- அனைத்தையும் ஆளுவான்; ஆனால் புலன்களை அடக்கியாள இயலாது. அவன் அவற்றையும் அறிவு என்னும் தோட்டியான் ஆள்வானாயின் அவனே அறிவன்; அவனடியைத் தொழுதாலே வினையகலும் என்ற உயர்ந்த கருத்தை வழங்கும் 'உலக மூன்றும் ஒருங்குடன் ஏத்தும் ஆண் திலகமாய திறலறிவன்' என்ற பகுதி விருந்தாகும்.

மருதவளங் கூறும் 'செந்நெற் கரும்பினொடிகலும்' என்ற பாடல் காப்பிய உலகில், கம்பர், சேக்கிழார், தோலாமொழித் தேவர் முதலிய கவியரசர்களின் கவிதைகளில் 'நெல்லல்லக் கரும்பென்ன, கரும்பல்ல கமுகென்ன' என்பதுபோலப் பல உருவந் தாங்கிப் பரவியிருப்பதே இதன் பெருமையை நன்கு விளக்கும்.

## குண்டலகேசி

உரையாசிரியர்களால் காக்கப்பெற்ற நூல்களில் இதுவும் ஒன்று. சீவகசிந்தாமணிக்கும் வளையாபதிக்கும் காலத்தால் முற்பட்ட காப்பியம். குண்டலகேசியின் வரலாற்றை நீலகேசி உரையால் அறியலாம்.

குண்டலகேசியின் இளமைப் பெயர் பத்திரை. ஒரு வணிகன் மகள். திருட்டுத் தொழிலில் ஈடுபட்ட ஒரு வணிகன் மகனாகிய காளனைக் காதலித்து மணந்துகொண்டாள். ஊடலில் அவனைக் கள்ளன் என்று நகையாடியதால் அவன் இவளைக் கொல்லக் கருதி ஒரு மலையுச்சிக்கு அழைத்துச் சென்று, தன் கருத்தைத் தெரிவித்தான். அவள் காளனை வஞ்சனையாற் கொன்றாள். காளன் இறக்கும்போது புத்தர் திருவடி எண்ணத்தோடு இறந்தமையால் நிர்வாணம் அடைந்தான். இவள் சைனத் துறவியாகி சாரிபுத்தனோடு வாதம் செய்து தோற்றாள். சாரிபுத்தன் இவள் வன்மையறிந்து இவளைப் புத்தர்பாற் சேர்த்தான். புத்தர் உபதேசத்தால் தேரியானாள். இறுதிவரை புத்தமதத்தைப் பரப்பி நிர்வாணம் எய்தினாள்.

இவள் சமணத் துறவியாக இருந்தபோது ஆவணம்' என்ற ஊரில் நாதகுத்தனாரோடு வாதுசெய்து வென்று அவரையும் புத்தத் துறவியாக்கினாள் என்பன இவள் வரலாறு. இவற்றை நீலகேசி மொக்கலவாதச் சருக்கத்தான் அறியலாம். அந்த நாதகுத்தனாரே இந்நூலைச் செய்தவர்

இந்நூலின் பத்தொன்பது பாடல்கள் உரைகளில் எடுத்தாளப்பெற்றுள்ளன. அவையே குண்டலகேசி என்ற பெயரால் இன்று வெளிவந்திருப்பவை. ஏனைய தொண்ணூற்றிரண்டு பாடலின் முதற்குறிப்பு மட்டும் நீலகேசி உரையாசிரியரால் குறிக்கப்பெற்றுள்ளன. அவ்வுரையில் வேறு இரண்டு முழுப் பாடல்கள் குண்டலகேசிச் செய்யுள்களாகக் கருதத்தக்கவையாக உள்ளன.

கிடைத்த வரலாற்றைக்கொண்டு நோக்கும்போது உவகைச் சுவையில் தோன்றி, அவலச் சுவையில் அடிவைத்து நிர்வாணம் பெறுதலாகிய அமைதிச் சுவையில் முடிகிற காப்பியம் இது எனலாம்.

கிடைத்திருக்கிற பாடல் நடையும் வரலாற்றுப்போக்கும் ஒரு சிறந்த காப்பியம் எனத்தகும் சிறப்புடையது இது என்றே துணியத் தோன்றுகிறது.

## உதயணன் கதை

இந்நூல் பெருங்கதை எனவும் வழங்கும் கவிஞர் பெருமானாகிய கொங்குவேளிர் என்பவரால் இயற்றப்பெற்ற ஒரு தொடர் நிலைச் செய்யுள். சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்தது. தெள்ளிய இனிய நடை வாய்ந்தது.

இன்று நம் பார்வையிற் பட்டு, நம் அறிவைப் பல்வேறுகலை நுட்பங்களில் நிலைக்கச்செய்து, பெருவிருந்தாக இருக்கிற இக்காப்பியமோ முதலும் முடிவும் இல்லாதது. ஒரு பாரசீகக் கவிஞர் சொன்னாராம் 'உலகம் ஒரு தொடர்நிலைக் காப்பிய ஏடு. அதன் தொடக்கமும் முடிவும் நம்மால் அளந்தறிய முடிகிறதில்லையல்லவா?' என்று அதுபோல இந்நூலின் தொடக்கப்பகுதியும் இல்லை; முடிவும் இல்லை. ஆனால் இறந்தகால உலகம், நிகழ்கால உலகம், எதிர்கால உலகம் பற்றிய கதை அனைத்தையும் இதில் பார்க்கிறோம்.

இது கட்டுக்கதைக் காப்பியமன்று; வரலாற்றுக் காப்பியம் காப்பியத் தலைவன் உதயணன். இவன் குரு குலச் செம்மலும் கௌசாம்பி நகரத்து அரசனுமான சதானீகன் புதல்வன். குரு குலம் பாண்டவர்கள் தோன்றிய குலம். பாண்டவர்கள் வாழ்ந்த இடம்தான் இன்றைய பழைய தில்லி மாநகரம்.

பாண்டவர்கள் காலத்திற்குப் பின்னர்ச் சதானீகன் என்று பெயர்வாய்ந்தவர் இருவர். ஒருவன் சணமேசயன் மகன். அவனுடைய பேரனுக்கு மகன் நிசக்னு. அவன் காலத்தில் அத்தினாபுரம் அழிந்தது. அவன் வத்தவநாட்டுக் கௌசாம்பியைத் தலைநகராக்கி வாழ்ந்தான். அந்த நிசக்னுவின் பதினாறாவது தலைமுறையில் தோன்றியவன் ஒரு சதானீகன். அவனுடைய புதல்வனே நம் காப்பியத் தலைவனாகிய உதயணன் (விஷ்ணுபுராணம்; அம்சம் ச, அத்யாயம் 21) ஆதலால் வரலாறு கூறும் காப்பியமே இது.

அறக்கருத்துக்கள்

தெய்வ வழிபாடும், மந்திர வன்மையும் பெரியோர் துணையும் அரசுக்கு மிகத்தேவையானவை; சிந்தனைத் திறமும் செயற்றிறமும் உள்ளவனைப் பகைவனும் பாராட்டுவான்; வினை செய்வான் துணைவலி இடவலி காலவழி அறிந்தே செய்தல் வேண்டும்; காலத்தைக் கண்ணாக மதிக்கவேண்டும்; யாரையும் இகழ்தலாகாது என்பன போன்ற நூற்றுக்கணக்கான நீதிகள் ஆங்காங்கு வலியுறுத்தப்படுகின்றன.

அன்றியும், அணிவகை, கட்டில்வகை, சிற்பவகை, தேர்வகை முதலான சிற்ப நுட்பங்களைத் தெரியவேண்டுவார்க்கு இந்நூல் ஒரு கருவூலமாகும்.

ஒருவனுக்குக் கொட்டாவி வந்தால் தொத்துநோய் போல மற்றவனுக்கும் வரும். உறவினர் நினைத்தால் நினைக்கப் பட்டார்க்குத் தும்மல் வரும் என்பனபோன்ற சமுதாய நுணுக்கங்களையும் இந்நூற் கதைப்போக்கிற் காணலாம்.

உதயணன் காலத்துச் சமய நுணுக்கங்களும், சைனமத உயர்வும் உரைக்கப்பெறுகின்றன. ஆசிரியர் சைன மதத்தினர். இது வடமொழி வழிவந்த காப்பியம். இதன் முதனூல் பிருகத் கதை வழிவந்த ஒரு வடநூலே என்பர் ஐயரவர்கள்.

பெருமை

இலக்கண இலக்கிய உரையாசிரியர்கள் அனைவரும் இலக்கண அமைதிக்கும் சொற் சோதனைக்குமாக இதன் பல பகுதிகளை எடுத்துக்காட்டுவர். இதுவே இதன் பெருமைக் குச் சான்று.

இங்ஙனம் எல்லாவகையிலும் சிறந்த காப்பியமான இது முழுதுங் கிடைக்காத குறையை யாரும் மறக்க இயலாது.

இங்குக் கூறப்பெற்ற ஐந்து நூல்களையும் ஐம்பெருங்காப் பியம் என்பது மரபு. சிறுகாப்பியங்களாவன யசோதர காவியம் சூளாமணி, உதயணகுமார காவியம், நாககுமார காவியம், நீல

கேசி' என்பன. அவற்றுள் யசோதரகாவியம் ஏனையவற்றை விடச் செய்யுணடை, பொருள்நலம் மிகவுடையதாயினும் அத்துனை இலக்கியநலம் படைத்ததன்று என்பதை ஆய்வாளர் அனைவரும் ஒப்புவர்.

## யசோதர காவியம்

இதில் ஒவ்வொரு காப்பிய உறுப்பினருக்கும் நாலைந்து பிறப்பு வரலாறு பின்னப்படுவதால் பாவகன்மங்களும், அவற்றின் பயனும் அறிவிக்கப்பெறுகின்றன. காப்பிய நடையும் கதைப் பின்னலும் எளிமையில் இல்லையாயினும் தீய ஒழுக்கங்களையும், கொலைப்பாவங்களையும் பலியிடுதலையும் விளக்கும் சிறந்த நீதிகளைப் பொதிந்திருக்கிறது எனலாம்.

சுவையமைப்பில் மிக இழிவான காமச் சுவையும், பல துறைகளில் அவலத்தையும் காட்டி இக் காப்பியம் அவலக் காப்பியமேயாகிறது எனலாம். ஆசிரியர் பெயர் தெரிந்திலது.

## சூளாமணி

சிறுகாப்பியங்களில் இரண்டாவதாகக் கூறப்படினும் காப்பிய நடையில் சுவையமைப்பில், நீதிக் கருத்துக்களைப் பொருத்தும் வகையில், கற்பனையில் அணியமைப்பில் அனைத்திலும் இது சிந்தாமணியைப் போன்று புலவர் கூட்டுண்ணும் அமுதமாகிறது எனலாம்.

ஆசிரியர் தோலாமொழித்தேவர். இப்பெயரும் காரணப் பெயரேயன்றி இயற்பெயரன்று என்பது ஆய்வாளர் துணிவு. இவர் காலம் சிந்தாமணிக்குப் பின்னரும், தேவார காலத்திற்கு முன்னருமாக இருத்தல்கூடும் என்று சக்கரவர்த்தி நயினாரும் பிறரும் கருதுவர் ஆயினும் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறுதல் இயலாது.

### வரலாறு

சுரமைநாட்டு மன்னன் பயாபதி. அவனுக்கு மிருகாபதி, சசி என்பாரிருவர் மனைவியர். அவருள் மிருகாபதி மகன் விசயன். சசி என்பாள் மகன் திவிட்டன். அவருள் திவிட்டன் வித்யாதர மன்னன் மகள் சுயம்பிரபையை மணந்து வித்யாதர அரசனான். அங்ஙனமே விசயனும் மணந்து, தன் தம்பி

யுடன் இருந்து அரசாண்டு சருகதேவனடியை மனத்திருத்தி வாழ்ந்திருந்தான் என்பது மிகச்சுருங்கிய வரலாற்றுக் குறிப்பு. இதன் வரலாறு மண்ணையும் விண்ணையும் இணைக்கும் பெரிய வரலாறு. போரும், சுயம்பரமும், அரசியல், தந்திரங் களும் நிறைந்த வரலாறு.

இக்காப்பியத்தை இடமாகக்கொண்டு பிறப்பின் கொடுமை, பிறந்த உயிர்கள் முயன்று அடையவேண்டிய நோன்பும் பய னும் உணர்த்திப படிப்பவர் மனத்தில் மெய்யறிவினை யூன்றிச் செல்கிறது.

இதன்கண் வரும் கதையுறுப்பினர் ஒவ்வொருவரும் ஒவ் வொரு குணத்தின் உருவாக நாட்டுமக்களுக்கு இன்றியமை யாத நற்குணங்களை விளக்குங் கருவிகளாக அமைகின்றனர்.

எண்வகைச் சுவைகளும் நிரம்பி, உவகையும் வீரமும் வியப்புமாகிய சுவைகள் ததும்ப நிற்பது இக்காப்பியம்.

உதயணகுமார காவியமும், நாககுமார காவியமும், நீல கேசியும் ஏனைய மூன்று சிறுகாப்பியங்கள். இவற்றுள் நாக குமார காவியம் இன்னும் அச்சாகவில்லை; கிடைக்கவும் இல்லை. உதயணகுமார காவியம் உதயண சரிதத்தையும், நீல கேசி நீலகேசி என்ற பெண்ணின் வரலாற்றையும் கூறுவது வாயிலாகப் பௌத்த மதத்தைக் கண்டித்துச் சைன மரபை நிலைநாட்டு தலையும் குறிக்கோளாகக்கொண்டு வந்தவை. இவற்றுள் உதயணகுமார காவியம் என்ற நூல் பொருட்செறி வும் சொற்செறிவும் உடையதன்று. காப்பிய இயல்பு முழுதும் அமைந்ததும் அன்று. ஆதலால் பெருங்கதையாகிய உதயணன் கதையே இங்கு இடம்பெறத்தக்கது என்று மகாமகோபாத்தி யாய உ.வே. சாமிநாதையர் அவர்கள் உதயணன் கதை முக வுரையில் ஆய்ந்து முடிவு கண்டுள்ளார்கள். இந்நூலில் ஆசிரியர் பெயர் முதலியன அறியக்கூடவில்லை.

## கம்பராமாயணம்

இது அரசியல் முறைகட்கும், நீதிகட்கும், சுவைகட்கும், உறைவிடமான இன்பந் ததும்பும் இனிய ஓசையோடு, தமிழ் மரபையும் காத்துவரும் உயர்ந்த காப்பியம். இதன் பெருமைக்கு இதனைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளாகவும், பதிப்புக்களாகவும் பல வெளிவந்திருப்பதே சிறந்த எடுத்துக்காட்டு.

கம்பராமாயணம் தனித்தனியே காண்டங்களாகவும், முழு நூலாகவும் இதுவரை அறுபத்தொன்பது பதிப்புக்கள் வந்துள்ளன. ஆசிரியரைப்பற்றிய ஆய்வு, வரலாற்றுறுப்பினரைப் பற்றிய ஆய்வு, அணியமைப்பு, உயிரியல், மரபியல் முதலான பொருண்முறை ஆய்வு, அரசு, அமைச்சு முதலான அரசியலமைப்பாய்வு இவைகளைப் பற்றி எழுநூற்றறுபத்திரண்டும் பிற்சேர்க்கையில் நாற்பத்தோராய்வுகளும் ஆகச் சற்றேறக் குறைய எண்ணூற்றுமூன்று ஆய்வுநூல்கள் வெளிவந்துள்ளன என்று கம்பன் ஆய்வடங்கல் அறிவிக்கிறது. மேலும் சில பகுதிகட்கும் முழுநூலுக்குமாக மொழிபெயர்ப்புக்களும் உள்ளன. இதன் பெருமையையும் இது மக்கள் காப்பியமாகப் பல ஆண்டுகளாகப் பயன்பட்டு வருவதையும் நன்கறியலாம்.

## பெரியபுராணம்

சேக்கிழாரால் பாடப்பட்டது இக்காப்பியம். திருத்தொண்டர் புராணம் என்பது இதன் இயற்பெயர். தமிழகத்தே வாழ்ந்த நாயன்மார் அறுபத்துநால்வர் வரலாற்றை விளக்குகிறது இக்காப்பியம். சுந்தரது திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியன இதற்கு அடிப்படையாகும். சுந்தரர் பாடிய 60 நாயன்மாருடன், சுந்தரர், அவர் தந்தை, தாய் ஆகிய மூவரையும் சேர்த்து அறுபத்து மூவராக்கினார் நம்பி.

12 சருக்கங்களையும் நாலாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களையும் கொண்டது இந்நூல். ‘உலகெலாம்’ என்று இறைவனே அடியெடுத்துக் கொடுத்ததாகக் கூறுவர்.

சுந்தரர் வரலாறு முதல், இடை, கடைப் பகுதிகளில் அமைந்து சுந்தரரே காப்பியத் தலைவர் என்னும் கருத்தை ஏற்படுத்துகிறது. பல்வேறு அடியார் கதைகளின் தொகுப்பாக இருப்பதால் இது காப்பியமன்று என்று மறுப்போருமுண்டு. சுந்தரரே தன்னிகரில்லாத் தலைவன் என்று கூறிக் காப்பிய இலக்கணங்கள் அனைத்தும் இதற்குப் பொருந்துவதாக விளக்குவோரும் உளர்.

பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவனாகிய சேக்கிழார் சமயக் கருத்துக்களை ஏற்ற இடங்களில் விளக்கிச் சொல்கிறார். இயற்கைப் புனைந்துரையிலும் சமயக் கருத்தை இணைத்திருப்பது குறிக்கத்தக்கது. அதேபோல சில செய்திகளைத் தன் சொற்களால் கூறாமல் 'தன்கருத்தே முற்றுவித்தான்' என்பதுபோலச் சொல்லிச் செல்வது இவரது சிறப்பு.

சிந்தாமணியின் செல்வாக்கை அறிந்து அதற்குப் போட்டியாக எழுந்ததென்பர் இதனை.

வரலாற்றுத் தன்மை, சமய உண்மை, இலக்கிய நயம் ஆகியவற்றில் குறைவின்றிக் காப்பியத்தை எழுதியுள்ளார் சேக்கிழார். அதன் பெருமை நோக்கித் 'திருத்தொண்டர் புராணம்' என்ற பெயர் மாறிப் பெரியபுராணம் என்று வழங்கலாயிற்று.

## கந்தபுராணம்

ஆறு காண்டங்களையும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுள்களையும் உடையது இக்காப்பியம். கச்சியப்ப சிவாச்சாரியாரால் பாடப்பட்டது.

வடமொழியில் உள்ள ஸ்கந்தனின் வரலாற்றையே இது தமிழில் தருகிறது என்பர். ஆயின் முருகன் தமிழ்க் கடவுளே; எனவே இக்கதை தமிழகத்தது; வடமொழிப் புராணம் இதனுடன் கலந்தது என்று கூறுவர் இக்கால ஆய்வாளர்.

முருகனது பிறப்பு, சூரபன்மாவை அவன் வென்றமை, வள்ளி தெய்வயானையை மணம் புரிந்தமை ஆகிய செய்திகள் விரிவாகப் பாடப்படுகின்றன.

சோழர் காலத்தே சைவ சமயம் தழைத்தோங்கிய காலத்தில் புராணக் கதைகள் பலவும் விளங்க இந்நூல் எழுதப்பட்டது. ஏறக்குறைய கம்பராமாயணத்தின் கதைப்போக்கிற்கும் இதன் கதைப் போக்கிற்கும் ஒற்றுமை காணலாம்.

## தேம்பாவணி

கிறித்தவத் தமிழ்க் காப்பியங்களுள் முதலிடம் பெறுவது இத்தாலியத் தமிழர் வீரமாமுனிவரின் தேம்பாவணி. இசுபானிய மொழியில் ஆகிர்தமரி எழுதிய 'கடவுளின் நகரம்' என்னும் நூலை முதல் நூலாகக் கொண்டு, இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய வளன் கதையினை விரித்துரைக்கும் இக் காப்பியம் முப்பத்தாறு படலங்களும் மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து பாக்களும் உடையது; தமிழில் அச்சேறிய முதல் தமிழ்க் காப்பியமாகத் திகழ்கிறது.

பாலத்தீன் நாட்டின் ஒரு பகுதியாகிய யூதேயாவின் எருசலேமில் சகோபு—நீப்பி ஆகியோரின் மகனாகத் தோன்றும் வளன் மரியாயாளை மணப்பதும், தச்சுத் தொழிலாளியாக வாழ்வதும், இயேசுவின் வளர்ப்புத் தந்தையாக விளங்குவதும், எசித்து நாட்டில் வேத விளக்கம் வழங்குவதும், அறுபதாண்டு வாழ்வியலுக்குப் பிறகு விண்ணிலும் மண்ணிலும் முடிசூட்டப் பெறுவதும் காப்பியச் செய்தியாம். காப்பியத்திற்கு உரை வரைந்த மாமுனிவரின் மாணவர் கூறுவதுபோன்று, 'வண்ணம் தொண்ணூறும் மறைக்கதைகள் நூற்றைந்தும் தண்ணந் தமிழ்வலோன் தந்த நூலின் பயன்' ஆகும்

'வையகத்தார் வானகத்தார் வணங்குகின்ற வரம்பெற்ற மதிவல்லோன்' எனப் பாராட்டப்பெறும் வளன், இறைவன் மார்பில் தேம்பாவணியாக—வாடாத மாலையாக அமையும் செய்தி செப்பமாகச் சொல்லப்பெறுகிறது.

அறக்கடல் நீயே அருட்கடல் நீயே அருங்கரு ணாகரன் நீயே
திறக்கடல் நீயே திருக்கடல் நீயே திருந்துளம் ஒளிபட ஞான

நிறக்கடல் நீயே நிகர்கடந் துலகில் நிலையும்நீ உயிரும்நீ
நிலைநான்
பெறக்கடல் நீயே தாயும்நீ எனக்குப் பிதாவும்நீ அனைத்தும்நீ
யன்றோ

எனவரும் இறைவாழ்த்துப் பாடல் உள்ளத்துள் அருள் உணர்வை எழுப்புகிறது. ஞாபகப் படலம், வாமனாட்சிப் படலம், வேதக் கெழுமைப் படலம் ஆகிய மூன்றும் கிறித்தவ சமயக் கோட்பாடுகளை மணிமேகலைக் காப்பியம் போன்று எடுத்துக் கூறுகின்றன.

பெருமிதச் சுவையும் மருட்கைச் சுவையும் மிகுந்து விளங்கும் இக்காப்பியம் பத்திப் பனுவலாகக் காட்சி தருகிறது. தமிழ் இலக்கியத்தின் தலைசிறந்த நான்கு நூற்களுள் தேம்பாவணியும் ஒன்று என்பர் கால்டுவெல். தமிழ்மணம் கமழும் தேம்பாவணியை 'ஈரமாய் நெஞ்சில் இடம்பெற நட்டால் இன்பமாய் மலரும் என் வாழ்வே' என்று புகழ்வர் சுத்தானந்த பாரதியார். தமிழ் அன்னையின் கழுத்தில் வாடாத மாலையாகத் திகழும் தேம்பாவணியுள் விருத்தமும் சந்தமும் வீறுடன் விளங்கக் காண்கிறோம். தமிழ் மொழியும் இலத்தீன் முதலிய மொழிகளும் கலந்துறவாட வழிகாட்டியுள்ளது தேம்பாவணிக் காப்பியம்.

## இரட்சணிய யாத்திரிகம்

ஆங்கிலத்தில் 'சாண் பனியன்' எழுதிய 'பரதேசியின் மோட்சப் பயணம்' பாட்டக்கரை சாமுவேல் பவுல் ஐயரால் தமிழில் உரைநடை வடிவு பெற்றது; அந்நூலை முதல் நூலாகக்கொண்டு என்றி ஆல்பிரட்டு கிருட்டினன் இரட்சணிய யாத்திரிகம் என்னும் மூற்றுருவகக் காப்பியத்தை நாற்பத்தேழு படலங்களாகவும் மூவாயிரத்து எழுநூற்று எழுபத்தாறு பாக்களாகவும் அமைத்து எழுதியுள்ளார்.

திருப்பயணியான கிறித்தியானைக் காப்பியத் தலைவனாகக் கொண்டு, அவன் நாசநாட்டிலிருந்து பேரின்ப நாட்

டுக்குச் செல்லும் செய்தியை விளம்புவதே இக்காப்பியக் கதை யாகும். ஆன்மாக்களுக்கு இரட்சிப்பு நல்கும் மருந்தாகக் காப் பியம் துவங்கிடச் செய்துள்ளார் ஆசிரியர்.

திருக்குறளை 'இயற்றமிழ் முதுமொழி' என்று போற்றும் ஆசிரியர், குறட்பாக்களை எழுபது இடங்களில் எடுத்தாண் டுள்ளார். தொண்ணூற்றாறு வகைச் சந்தங்களுடன் பத்திச் சுவை கனியப் பாடப்பெற்ற இக்காப்பியம், 'தன்னரிய திரு மேனி சதைப்புண்டு தவிப்பெய்திப் பன்னரிய பாடுபல படும் போதும்' பரிவோடு தன் தந்தையை நோக்கி அறியாது செய் யும் மாந்தர் பிழையை மன்னிக்க மன்றாடிய அருள் வள்ளல் இயேசுவை உள்ளங் கொள்ளும் வகையில் எடுத்தியம்புகிறது.

திருவாக்குப் புராணம், சுவிசேடப் புராணம், கிறிஸ்தா யணம், கிறிஸ்து மான்மியம், திருச்செல்வர் காவியம், சுடர் மணி ஆகிய பிற ஏடுகளும் கிறித்தவ சமய நூற்களாகத் தோன்றியுள்ளன. இவை அனைத்தும் விவிலியத் திருநூலை அடிப்படையாகக்கொண்டு, இயேசுவின் வாழ்வினை வகுத்தும் தொகுத்தும் விரித்தும் பேசுகின்றன.

## சீறாப்புராணம்

இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களுள் தனிப்பெருஞ் சிறப் புடன் திகழ்வது பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உமறுப் புலவர் எழுதிய சீறாப்புராணம் மூன்று காண்டங் களும் தொண்ணூற்றிரண்டு படலங்களும் ஐயாயிரத்து இரு பத்தேழு பாக்களும் கொண்டதாக இக்காப்பியம் அமைந் துள்ளது

திருத் தூதராகிய முகம்மதுவின் பிறப்பு (விவாதத்து), நபித்துவம் (நுபுவ்வத்து), திருப்பயணம் (இசுரத்து) ஆகிய முப்பெருஞ் செய்திக் குறிப்புக்களையும் இசுலாமிய அறநெறி வளர்ச்சியையும் சீறாப்புராணம் சித்திரிக்கிறது. சீறாவின் தொடர்காப்பியமாகக் காயல்பட்டினம் பனி அகம்மது மரைக் காயர் எழுதிய 'சின்னச்சீறா' விளங்குகிறது.

'மாநிலந் தனக்கோர் மணிவிளக்காகப்' பிறக்கும் முகம் மதுநபி நாற்பது வயதில் நபிப்பட்டம் பெற்றார்; தீன் என் னும் இசுலாமிய நெறியாம் பயிர்க்குச் செழுமழையானார். அறி யாமைக்கும் மெய்யறிவுக்கும் எழுந்த போராட்டத்தைக் கருப் பொருளாகப் பெற்ற இக்காப்பியத்துள் மதியை அழைப் பித்த படலமும் தசைக் கட்டியைப் பெண்ணுருவமைத்த பட லமும் மருட்கைச் சுவையுடன் மிளிர்கின்றன. அரபு நாட்டைத் தமிழ்நாடாகவும், இசுலாமிய சமயத்தைத் தமிழ்ச் சமயமாக வும், நபிகள் நாயகத்தைத் தமிழ்த் தலைமகனாகவும் உமறுப் புலவர் உருவாக்கியுள்ளார்.

''திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்
பூதலத் துறைந்தபல் லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே''

எனவரும் இறைவாழ்த்துப்பா எளிமையாகவும் தெளிவாகவும் இறைவனின் நிறைமாண்பை முறையாக எடுத்து மொழியக் காண்கிறோம்.

ஞானிமுகைதீன் அப்துல்காதர் செயிலானி வரலாறு கூறும் முகைதீன் புராணமும், சுலைமான் நபியின் பெருமை செப்பும் இராசநாயகமும் சேகனாப் புலவர் தீட்டிய 'புதூகுச்சாமும் இசு லாமியக் காப்பியங்களுள் குறிப்பிடத்தக்க பிற ஏடுகளாம்.

இவைதவிர இருபதாம் நூற்றாண்டிலும் சில காப்பியங்கள் தோன்றியுள. முடியரசனது 'பூங்கொடி' அசலாம்பிகையம் மையாரின் காந்தி புராணம், சுத்தானந்த பாரதியாரின் பாரத சக்தி முதலியவை குறிக்கத்தக்கவை.

# 4. தெய்வ இசைப்பனுவல்கள்

இயற்கை வனப்பும் தெய்வ வனப்புமாகிய இருவகை வனப்புகளே இசைப்பாடலுக்குரிய சிறப்புடைப் பொருள் களெனப் பண்டைத் தமிழாசிரியர் கருதினர். இக்கருத்தினா லேயே இசைப்பாடல்கள் யாவும் உலகியற் பொருள்களின் இயற்கையழகினையும், அவற்றின் உடனாய் விளங்குந் தெய்வ அழகினையும், பொருளாகக்கொண்டு பாடப்பெறுவனவாயின.

இசையில் வல்ல பாணர் முதலிய கலைச்செல்வர் தம் இசைத்திறத்தை அவையின்கண் புலப்படுத்தும் பொழுதெல் லாம் இசைப்பாடலுக்குச் சிறப்புடைப் பொருளாய் விளங்கும் முழுமுதற் பொருளைப் போற்றும் தெய்வப் பாடலையே முதன்மையாகப் பாடுவது வழக்கம். பண்டை நாளில் வாழ்ந்த பாணர் முதலியோர் இம்முறையினைத் தொன்றுதொட்டு வரும் இசைமரபாகக் கொண்டு போற்றுதலைத் தமது முதற் கடமையாகக் கடைபிடித்து வந்துள்ளனர். இச்செய்தியினைப் பத்துப்பாட்டுள் ஒன்றாகிய மலைபடுகடாத்துள்,

> மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
> நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்
> கடவ தறிந்த இன்குரல் விறலியர்
> தொன்றொழுகு மரபிற் றம்மியல்பு வழாஅது
> அருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை
> விருந்திற் பாணி கழிப்பி (534-539)

எழுதியவர் க. வெள்ளைவாரணன்

எனவரும் அடிகளிற் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் தெளிவாக விளக்கியுள்ளமை காணலாம்.

'வாரம் பாடுதல்' என்பது, இசைப்பாடலாற் கடவுளைப் போற்றி வழிபடுதல் என்ற பொருளில் கடைச்சங்க காலத்தே வழங்கி வந்ததாகத் தெரிகிறது. சிலப்பதிகார அரங்கேற்று காதையிலே,

தொன்னெறி யியற்கைத் தோரிய மகளிரும்
சீரியல் பொலிய நீரல நீங்க
வாரம் இரண்டும் வரிசையிற் பாட

எனவரும் தொடர்க்கு 'ஆடிமுதிர்ந்தாராகிய மகளிர் நன்மை யுண்டாகவும் தீமை நீங்கவும் வேண்டித் தெய்வப்பாடல் பாட' என அரும்பதவுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் பொருள் கூறியுள்ளார்கள். எனவே இத்தொடரில் வந்த 'வாரம்' என்ற சொல் 'தெய்வப்பாடல்' என்ற பொருளில் இளங்கோவடிகளால் ஆளப்பெற்றதென்பது நன்கு பெறப் படும்.

அன்றியும் சிலப்பதிகாரத்திற் கடலாடுகாதையில் திருமாலைப்பாடும் தேவபாணியும் இறைவனைப் போற்றுந் தேவ பாணியும் வருணப்பூதர் நால்வரையும் பரவும் நால்வகைத் தேவபாணியும், ஞாயிறு திங்கள் என்னும் தெய்வத்தைப் பரவும் தேவபாணியும் கூத்தின்கண் பாடுதற்குரிய தெய்வ இசைப்பாடல்களாகக் கொள்ளப்பட்டன என இளங்கோவடி கள் குறிப்பிட்டுள்ளார். பாணி என்பது பண்ணோடுகூடிய இசைப்பாட்டு. தெய்வத்தைப் பண்பொருந்தப் பாடிய இசைப் பாடல் தேவபாணியெனப் பெயர் பெறுவதாயிற்று.

சங்கத்தொகை நூல்களில் ஒன்றாகிய பரிபாடல் தமிழகத் தில் பண்டை நாளில் இசையுடன் பாடப் பெற்ற தெய்வப் பனுவலாகும். சங்கச் சான்றோர்களால் இயற்றப்பெற்ற எழு பது பாடல்களைக் கொண்ட இத்தொகை நூலில் இருபத்

திரண்டு பாடல்களே இப்பொழுது முழுமையாகக் கிடைத்துள்ளன. திருமால், செவ்வேள், காடுகிழாளாகிய கொற்றவை ஆகிய தெய்வங்களையும் மதுரை நகரத்தையும் வையை யாற்றினையும் போற்றிப் பரவிய இசைநலம் வாய்ந்த பரிபாடல் என்னும் பாக்களின் தொகுப்பாக அமைந்ததே இத்தொகை நூலாகும். இதன்கண் ஒவ்வொரு பாடலின் கீழும் அப்பாடலின் நுவல் பொருளாகிய கடவுள் வாழ்த்து முதலிய பொருட் பகுதியும், அப்பாடலைப் பாடிய புலவர் பெயரும், அப் பாடற்கு இசையமைத்த இசையாசிரியர் பெயரும், அப் பாடலுக்குரிய பண்ணின் பெயரும் முறையே குறிக்கப் பெற்றுள்ளமை காணலாம். பரிபாடல் என்னும் செய்யுள், நால்வகைப் பாக்களுக்குரிய பலவகை அடிகளையும் ஏற்று இசைநலம் விளங்கப் பாடுதற்கேற்றவாறு இயற்றப் பெறுவதாகும். பரித்தல் – சுமத்தல், பண்சுமந்த பாடலாதலின் பரிபாடல் என்னும் பெயருடையதாயிற்று. 'பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும் பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்' என வரும் திருவாசகத்தொடர், இங்ஙனம் இன்னிசையால் தெய்வத்தைப் பரவிப் போற்றும் முறையில் இயற்றப் பெற்ற தெய்வப் பனுவலைக் குறித்தது எனக் கருதுதல் பெரிதும் பொருத்தமுடையதாகும்.

கடைச்சங்க காலத்தையடுத்துத் தோன்றிய முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் 'திங்களைப் போற்றுதும்' 'ஞாயிறு போற்றுதும்', 'மாமழை போற்றுதும்,' 'பூம்புகார் போற்றுதும்' எனவரும் மங்கலவாழ்த்துப் பகுதியும், கானல் வரியில் காவிரியைப் போற்றிப் பரவும் முறையில் அமைந்த வரிப்பாடல்களும், வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை என்னும் பகுதிகளில் கொற்றவை, திருமால், முருகன் ஆகிய தெய்வங்களைப் பரவும் முறையில் அமைந்த வரிப் பாடல்களும் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறாண்டுகளுக்கு முன் தமிழகத்தில் இன்னிசையுடன் பாடப்பெற்று வந்த தெய்வ இசைப்பனுவல்களாகும்.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் சிவபெருமானது திருவருள் பெற்ற செம்புலச் செல்வியாராகிய காரைக்காலம்மையார் திருவாய் மலர்ந்தருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டும் முறையே நைவளம் (நட்டபாடை) என்ற பண்ணிலும் இந்தளம் என்ற பண்ணிலும் பாடப்பெற்ற இன்னிசைத் திருப்பதிகங்களாகும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இறைவன் திருவருள் பெற்ற செம்புலச் செல்வராகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், இவ்விருவர்க்கும் பின்வந்த நம்பியாரூரர் ஆகிய மூவரும் சிவபெருமானது பொருள்சேர் புகழினை இன்சொற்படுத்தியும் இன்னிசைப்படுத்தியும் பாடியருளிய செந்தமிழ்த் தெய்வப் பனுவல்களே தேவாரம் என்ற பெயராற் போற்றிப் பயிலப் பெறுகின்றன. இத்தேவாரத் திருப்பதிகங்களும் இவற்றின் பண்ணமைதியும் இடைக்காலத்திற் போற்றுவாரின்றி அருகி மறையும் நிலையில் திருநாரையூரிற் பொல்லாப்பிள்ளையார் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பிகளின் துணைகொண்டு தேவாரத் திருமுறைகளைத் தில்லைப்பெருங்கோயிலில் தேடிக் கண்டு தொகுத்துதவியவன் இராசராச அபயகுலசேகரன் எனப் போற்றப்பெறும் சோழமன்னனாவன். திருமுறை கண்ட சோழனாகிய இப்பெருந்தகை, திருவெருக்கத்தம் புலியூரில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் தோன்றிய பாடினியாரைக் கொண்டு தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பழையமுறையில் பண்வகுத்தமைத்தனன் எனத் திருமுறைகண்ட புராணம் கூறும்.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் நன்னோக்கத்துடன் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய இப்பெருமக்கள் மூவரும் அருளிய திருப்பதிகங்கள் இறைவனை முன்னிலை, படர்க்கை என்னும் இரண்டிடங்களிலும் போற்றிப் பரவுவனவாதலின் தேவாரம் என்ற பெயரால் வழங்கப்பெறுவனவாயின. இவர்கள் அருளிய திருப்பதிகங்கள் இவர்கள் பாடும்பொழுதே இன்னிசையுடன் பாடப்பெற்றன என்பது இவர்களது வரலாற்றால் இனிது புலனாகும். வாரம் என்ற

சொல்லுக்கு இசையியக்கம் நான்கினுள் ஒன்று என்னும் பொதுப்பொருளும் தெய்வப்பாடல் என்ற சிறப்புப் பொருளும் உரியனவாதலின் அப்பொதுமையினை நீக்கித் தெய்வப்பாடல் என்ற சிறப்புப் பொருளையே அச்சொல் தருதல் வேண்டிப் பிற்காலத்தார் அதனைத் தேவாரம் என்ற சிறப்புடைய அடை மொழியுடன் சேர்த்து வழங்குவாராயினர். இன்னிசையால் இறைவனைப் பாடிப்போற்றுதலையே பண்டைத் தமிழர் சிறப் புடைக் கடவுள் வழிபாடாகக் கைக்கொண்டொழுகினர். அத னால் தெய்வ இசைப்பாட்டினைக் குறித்த தேவாரம் என்னுஞ் சொல் இறைவனை உளமுருகிப் போற்றும் வழிபாட்டினையும் குறிப்பதாயிற்று.

திருஞான சம்பந்தர் 1600 பதிகங்களும், திருநாவுக்கரசர் 4900 பதிகங்களும், சுந்தரர் 3800 பதிகங்களும் பாடியருளினார் களெனவும், அம்மூவரும் அருளிச் செய்த திருப்பதிகங்களின் தொகை 10300 எனவும், அவற்றின் பாடற்றொகை 103000 எனவும் திருமுறை கண்ட புராணத்தால் இனிது புலனாகும்.

தேவார ஆசிரியர்கள் மூவரும் பாடியனவாக மேற் குறித்த எல்லாத் திருப்பதிகங்களும் பிற்காலத்தார்க்குக் கிடைக்க வில்லை. செல்லரித்துச் சிதைந்தமையால் மறைந்தன போக, எஞ்சிய பதிகங்களையே நம்பியாண்டார்நம்பி சோழமன்னன் ஆதரவு கொண்டு தில்லையில் தேடியெடுத்து முன்போல் முறைப்படுத்தி ஏழு திருமுறைகளாகத் தொகுத்தார் எனத் திரு முறைகண்ட புராணம் கூறுகிறது.

திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கள் 384-ம் முதல் மூன்று திருமுறைகளாகவும் திருநாவுக்கரசர் தேவாரப் பதி கங்கள் 310-ம் நான்கு, ஐந்து, ஆறாந்திருமுறைகளாகவும் சுந்தரர் தேவாரப் பதிகங்கள் 100-ம் ஏழாந்திருமுறையாகவும் நம்பியாண்டார் நம்பிகளால் தொகுக்கப்பட்டன.

இங்ஙனம் வகுக்கப்பட்ட ஏழு திருமுறைகளும் பண்ணா கிய இசைமுறை பற்றியும் பாவாகிய இயல்முறை கருதியும்

முறைப்படுத்தப் பெற்றிருத்தல் வேண்டுமென்பது, இவற்றிற் காணப்படும் பண்கள் எல்லாவற்றிற்கும் கட்டளையாகிய யாப்பியல் வகை கூறும் திருமுறைகண்ட புராணப் பகுதியால் இனிது புலனாம். சேக்கிழார்நாயனார்க்கு நெடுங்காலத்திற்கு முன்னரே மூவர் தேவாரத் திருப்பதிகங்களும் பண்முறை பற்றிக் கட்டளைகள் வகுக்கப்பெற்று முறைப்படுத்தப்பெற்றிருந்தன என்பது பெரிய புராணத்தில் மூவர் வரலாறு கூறும் இடங்களில் தேவாரத் திருப்பதிகங்கள் சிலவற்றிற்குப் பண்ணமைதியும் (தடுத்தாட்கொண்ட புராணம். செய் - 75) கட்டளைக் கூறுபாடும் (திருஞான சம்பந்தர் புராணம், செய்-107) குறிக்கப்பெற்றிருத்தலால் நன்கு விளங்கும்.

இப்பொழுது வழங்கப்பெற்றுவரும் மூவர் தேவாரப் பதிப்புக்களில், 796 - திருப்பதிகங்கள் அடங்கியுள்ளன.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வடநாட்டில் வாழ்ந்த சாரங்கதேவர் என்பார் தமிழ்நாட்டிற்கு வந்து இங்கு வழங்கிய தேவாரப்பண்களை நன்குணர்ந்து அப்பண்கள் சிலவற்றின் இலக்கணங்களைத் தாம் இயற்றிய 'சங்கீரத்தனாகரம்' என்னும் வடமொழி இசை நூலில் பொன்னேபோற் போற்றி வைத்துள்ளார்,

தேவார ஆசிரியர்கள் காலத்தையொட்டி வாழ்ந்த திருவருட்புலமைச் செல்வர்கள் திருமாலடியார்களாகிய ஆழ்வார்கள் ஆவர். ஆழ்வார்கள் அருளிச் செயலாகிய திவ்வியப் பிரபந்தத்தில் பொய்கையார், பூதத்தார், பேயார் என்னும் முதலாழ்வார் மூவரும் அருளிய திருப்பாடல்கள் இயற்பா வகையைச் சார்ந்தன. பெரியாழ்வார் அருளிய திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி என்பனவும் ஆண்டாள் அருளிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பனவும், குலசேகரப் பெருமாள் அருளிய பெருமாள் திருமொழியும், திருமழிசைப் பிரான் அருளிய திருச்சந்த விருத்தமும், தொண்டரடிப் பொடி

யாழ்வார் அருளிய **திருமாலையும், திருப்பள்ளியெழுச்சியும்,** திருப்பாணாழ்வார் அருளிய **அமலனாதிபிரான்** என்னுந் திருப்பதிகமும், திருமங்கையாழ்வார் அருளிய **பெரிய திருமொழி திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம்** என்பனவும்; நம்மாழ்வார் அருளிய **திருவாய்மொழித் திருப்பதிகங்களும்** பண்பொருந்தப்பாடுதற்குரிய இசைத் தமிழிலக்கியங்களாக அமைந்துள்ளன. நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிப் பதிகங்கட்குப் பழந்தமிழ்ப் பண்களும் தாளங்களும் குறிக்கப் பெற்றுள்ளன. ஆயினும் அத்திருப்பதிகங்களைப் பண்ணுடன் பாடும் மரபு இடைக்காலத்தில் மறைந்து போயிற்று. எனினும் இக்காலத்திலும் பண்ணுடன் பாடப் பெற்று வரும் தேவாரத் திருப்பதிகங்களின் யாப்பமைதியினையும் இசையமைதியினையும் அடியொற்றி, நாலாயிரத் திவ்யப் பிரபந்தத் திருப்பாடல்களையும் பழைய மரபின் படி பண்பொருந்தப்பாடும் முறையினை, இயலிசைப் புலவர் துணைக்கொண்டு மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருதல் இசைத்தமிழ் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்புடையதாகும்.

திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழிப் பதிகங்கள், மூவர் தேவாரத் திருப்பதிகங்களையொத்த இயலிசையமைப்புடையனவே. எடுத்துக்காட்டாக ஒரு சில பதிக அமைப்பினை இங்குக் குறிப்பிடலாம்.

திருமங்கையாழ்வார் அருளிய திருக்குறுந்தாண்டகம் என்பது திருநாவுக்கரசர் அருளிய திருநேரிசைப் பதிகங்களையொத்த இயலிசை அமைப்பினையுடையதாகும். திருநெடுந்தாண்டகம் என்பது தாண்டகவேந்தராகிய திருநாவுக்கரசர் பாடியருளிய திருத்தாண்டகப் பதிகங்களையொத்த இயலிசை அமைப்பினைப் பெற்றதாகும். இசை நலம் பொருந்திய மூல இலக்கியங்களாகப் பல இன்னிசைத் திருப்பதிகங்களை அருளியவர் திருஞானசம்பந்தப்பிள்ளையாராவர்.

இடரினுந் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழல் தொழுதெழுவேன்
கடல்தனி அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள ஆவடு துறையானே

என நாலடிமேல் வைப்பாகத் திருஞானசம்பந்தப்பிள்ளையார் அருளிய காந்தாரபஞ்சமப் பதிகத்தின் இயலமைப்பினையும் இசையமைப்பினையும் பின்பற்றியமைந்தது,

வண்டுணு நறுமலரிண்டை கட்டிப்
பண்டைநம் வினைகெட வென்றடிமேல்
தொண்டரு மமரரும் பணியநின் றங்
கண்டமோ டகலிட மளந்தவனே
ஆண்டாயுனைக் காண்பதொ ரருளெனக் கருளுதியேல்
வேண்டேன்மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே

எனத் திருமங்கையாழ்வார் பாடியருளிய பெரிய திருமொழித் திருப்பதிகமாகும். இதனை 'நாலடிமேல் வைப்பு' என்ற தலைப்பிற் பதிப்பித்தலும் மேற்குறித்த காந்தாரபஞ்சமப்பண் முறையிற் பாடுதலும் இயலிசையறிஞர் கடனாகும். இவ்வாறே நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திலுள்ள திருப்பதிகங்களிற் பெரும்பாலன தேவாரத் திருப்பதிகங்களையொத்துப் பாடுதற்கேற்ற இயலிசையமைப்புடைய தெய்வ இசைத்தமிழ் இலக்கியங்களாகத் திகழ்கின்றமை காணலாம்.

சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவராகிய மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்துள் அமைந்த திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பூவல்லி, திருக்கோத்தும்பி, திருப்பள்ளியெழுச்சி முதலியன இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழுக்கும் உரிய தெய்வ அருட்பனுவல்களாகும். சேந்தனார் முதலிய அருளாசிரியர் ஒன்பதின்மராற் பாடியருளப் பெற்ற திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆகிய ஒன்பதாந் திருமுறையிலுள்ள திருப்பதிகங்கள் தேவாரத் திருப்பதிகங்களைப்

போன்று பண் பொருந்தப்பாடிப் போற்றுதற்குரிய தெய்வப் பனுவல்களாகும்.

பதினோராந்திருமுறையில் திருவெண்காட்டடிகள் பாடியருளிய **கோயில் நான்மணிமாலையிலுள்ள** சந்தச்செய்யுட்கள், கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டிற்றோன்றி முருகப்பெருமான் திருவருளை இன்னிசைத் தமிழாற்பரவிப் போற்றிய அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப்பாடல்களின் சந்தங்களுக்கு மூல இலக்கியமாகத் திகழ்கின்றன.

## பிற்கால பக்திப்பாடல்கள்

பக்தி இயக்க காலத்தில் பெருகி வளர்ந்த பக்திப்பாடல்கள் பின்னர் வந்த காலங்களிலும் வற்றாது உயிராறாய் ஓடிக் கொண்டுள்ளது.

பட்டினத்தார் கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டில் தோன்றிக் **கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக் கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்ப முடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபாஒருபஃது** ஆகிய சிற்றிலக்கியங்களைப் பாடினார்.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய அருணகிரிநாதர் பாடிய பாடல்கள் திருப்புகழ் எனத் தொகுக்கப்பட்டுள்ளன. சந்த இனிமை மிகுந்த இவர் பாடல்களில் வடசொற் கலப்பு மிகுந்துளது. **திருவகுப்பு, கந்தரநுபூதி கந்தரலங்காரம் கந்தரந்தாதி, வேல்விருத்தம்** ஆகிய நூல்களையும் இவர் பாடினார்.

தாயுமானவர் மெய்ப்பொருட் சிந்தனையும் பக்தியும் கலந்து பாடியபெரும் புலவராவார். இவர் பாடிய கண்ணிகள் எளிமையும் இனிமையும் உடையவை. இல்லறமேற்றுப் பின் துறவு மேற்கொண்டார். அரசபதவியில் சிலகாலம் இருந்து பின் துறவுபூண்டாரென்ப. இவர் சமரச சன்மார்க்கத்தை வலியுறுத்திப் பாடியுள்ளார்.

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய இராமலிங்க அடிகளார் மிக எளிய இனிய கவிதைகள் பாடினார். அவை திருஅருட்பா எனும் பெயரால் ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள. இவரது பாடலை ஏற்றுக்கொள்ளாமல் அவற்றை மருட்பா என்று போராடியோரும் உளர். நாயக நாயகி பாவத்திலும் கண்ணி, கும்மி, கீர்த்தனை முதலிய எளிய வடிவங்களிலும் எளிய சொற்களில் பாடல் புனைந்தார். சீவ காருண்யம், சோதிவழிபாடு முதலியவை இவரது முக்கிய குறிக்கோள்களாகும். மனுமுறைகண்டவாசகம், சீவகாருணிய ஒழுக்கம் ஆகிய உரைநடை நூல்கள் இவரால் இயற்றப்பட்டன. சமரச சன்மார்க்க நெறியைப் பெரிதும் வற்புறுத்திப் பாடினார்.

பாரதியாரின் பக்திப் பாடல்கள் பக்தி இலக்கிய வரிசையில் குறிப்பிடத்தக்கவையாகும். கண்ணனைப் பல்வேறு கோணங்களில் கண்டு அவர் பாடும் பாடல்களும், சக்தி, முருகன், விநாயகர் ஆகிய கடவுளரைப் பாடும் பாடல்களும் அவரது பக்தியுணர்வைக் காட்டும். இவரும் சமரச நெறியை வலியுறுத்துகிறார். வேதாந்த நெறிநின்று சமயக்கருத்துக்களையும் விளக்குகிறார். இவரது குயிற்பாட்டு வேதாந்த உட்பொருளுடன் அமைந்ததாகும்.

இசுலாமிய, கிறித்துவ சமயத்தைச் சார்ந்த பக்திப் பாடல்கள் பின்னர்த் தோன்றித் தமிழை பக்திமொழி எனப் போற்றுமளவுக்கு உயர்த்தின.

---

எந்த நாட்டினரும் பெருமை கொள்ளக்
கூடிய இலக்கியம் தமிழ் இலக்கியம்

—எப். எம். கெல்லட்

# 5. இலக்கண நூல்கள்

'இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்' என்கிறார் பிங்கல முனிவர். தமிழ்மொழியின் இனிமையையும் நல்ல நடையையும் சீர்குலையாமல் கட்டிக்காத்து வருவன இலக்கண நூல்களே. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' காலப் போக்கில் இயல்பாய் நிகழ்ந்து வந்துள்ளன.

கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ

என்கிறார் சிவஞானமுனிவர்.

அகத்தியம் முதற்சங்க இலக்கணம் எனப் பேசப்படுகிறது அதன் சுவடுகளாகச் சில நூற்பாக்களை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். எனினும், காலப் பழமையான அந்தத் தொன்னூலின் தன்மையை நன்கு அறிய இயல வில்லை.

தொல்காப்பியம் சங்கத் தமிழுக்கு என அமைந்த பேரிலக் கணம் தமிழ்கூறும் நல்லுலகில் பேச்சிலும் எழுத்திலும் வழங் கிய மொழியின் இயல்புகளை எல்லாம் நன்கனம் ஆராய்ந்து தொல்காப்பியர் இந்நூலை ஆக்கியுள்ளார். எழுத்து, சொல், பொருள் என்னும் மூவகையையும் முழுமையாய் விளக்குகிறது இப்பெருநூல். பின்வந்த உரைகாரர்களால் இந்நூல் விளக்கம்

எழுதியவர் மு. சண்முகம்பிள்ளை

பெற்றுப் பழந்தமிழின் இயல்புகளையெல்லாம் உள்ளபடி அறிய நமக்கு உறுதுணையாயிருந்து வருகிறது. இலக்கணப் பொருள்கள் பின்னால் ஐவகையாகப் பெருகி வளர்ந்தமைக்கும், சொற்பொருள் விளக்கும் உரிச்சொற்பனுவல்களாகிய நிகண்டின் தோற்றத்திற்கும் வழிகாட்டியாயிருந்ததும் இதுவே.

தொல்காப்பியம் தோன்றிய பல நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த மொழி இலக்கண நூல் நன்னூல். 13 ஆம் நூற்றாண்டினராகிய பவணந்தி முனிவரால் ஆக்கப்பெற்ற இந்நூல் தொல்காப்பிய அடிச்சுவட்டில் அமைந்ததே எனினும், காலத்திற்கேற்ற புதிய மரபுகளையும் இது கொண்டுள்ளது. பதவியலில் காணப்படும் பகுபத உறுப்பிலக்கணம, வடமொழியாக்கம் என்னும் இரண்டும் இலக்கண உலகில் நன்னூல் தரும் ஒரு புதுமை. இந்நாள் வரையில் இலக்கணப் பயிற்சிக்கு முதல் நூலாகக் கல்வியுலகில் பயன்பட்டு வருவதும் இதுவே.

நன்னூலைப் போலவே எழுத்து, சொல் இலக்கணம் கூறும் மற்றொரு நூல் **நேமிநாதம்**. இதனை ஆக்கிய குணவீர பண்டிதர் வச்சணந்தி முனிவரின் மாணவர். 97 வெண்பாக்களில் இந்நூல் சுருக்கமாயுள்ளது. எனவே, இதற்குச் 'சின்னூல்' என ஒரு பெயரும் வழங்குகிறது.

அகப்பொருள், புறப்பொருள் என்னும் இரண்டிலும் அகப்பொருள் பற்றிய இலக்கண நூல்களே மிகுதியாயுள்ளன ஒரு காலத்தில் பாண்டிய மன்னன் பொருளதிகாரம் வல்லாரைக் காணாது கவன்று, **இறையனார் களவியல்** என்னும் நூலை இறையருளால் பெற்றான் என்பது வரலாறு. இந்த இறையனார் அகப்பொருளும், இதற்கு நக்கீரர் எழுதிய உரையும் 8 ஆம் நூற்றாண்டில் தோன்றியனவாகும்.

இந்நூலுக்குப் பின்வந்தது நாற்கவிராச நம்பி செய்த **அகப்பொருள் விளக்கம்**; சிறப்பான ஒருநூல். அகப்பொருள் இலக்கணம் பயில்வார் கற்கும் தொடக்க நூலாகவும் இது உள்ளது. இதில் தஞ்சைவாணன் கோவைப் பாடல்களே பெரும்பான்மையும் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன. சிறு

பான்மை சங்கப் பாடல்கள் முதலிய பிறநூல் மேற்கோள்களும் உண்டு.

நம்பியகப்பொருள் போல, மாறன் அகப்பொருள் என்னும் ஒரு நூலும் திருக்குருகூர் மாறன் பெயரில் பின்னாளில் தோன்றியது, தமிழ்நெறிவிளக்கம், களவியற்காரிகை என்பன அறை குறையாகக்கிட்டியுள்ள அகப்பொருள் நூல்களாம்.

புறப்பொருள் பற்றிப் பிற்காலத்து எழுந்த இலக்கணநூல் புறப்பொருள் வெண்பாமாலை. பெயருக்கு ஏற்ப இந்நூல் வெண்பாவினால் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் ஐயனாரிதனார்; சேரர் பரம்பரையைச் சேர்ந்தவர். இந்நூலுக்குச் சாமுண்டிதேவநாயகர் இயற்றிய சிறப்பான உரையும் உள்ளது.

இந்நூலுக்கும் முற்படப் பன்னிருபடலம் என்னும் புறப்பொருள் இலக்கணநூல் இருந்தது என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், அந்த முதல் நூல் நமக்கு இன்று கிட்டாத நூல்களுள் ஒன்றாய் விட்டது.

நூல்களில் இடம்பெறும் பாவகைகளைப் பயிலுவதற்கும் பாக்களை இயற்றுவதற்கும் செய்யுளிலக்கணம் பயிலுதல் இன்றியமையாதது. தொல்காப்பியத்திலும் செய்யிளியல் மிக விரிவான பகுதியாகும். யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் இரண்டும் அமிதசாகரரால் இயற்றப்பெற்ற செய்யுளிலக்கண நூல்கள். யாப்பருங்கலம் நூற்பாவாலாகிய பெருநூல். யாப்பருங்கலக்காரிகை இப்பெருநூலுக்கு அங்கமாகக் கட்டளைக் கலித்துறையினால் ஆக்கப்பெற்ற சுருக்க நூல். இந்த இரு நூல்களுக்கும் விளக்கமான உரைகள் உள்ளன.

யாப்பருங்கலம், காரிகை உரைகளில் உரையாசிரியர் அவிநயனார், காக்கைபாடினியார், நற்றத்தனார், பல்காயனார் முதலியோர் செய்த நூல்களிலிருந்து மேற்கோள் நூற்பாக்களையும் கருத்துக்களையும் அங்கங்கே எடுத்துக்காட்டிள்ளனர். இதனால் இவையெல்லாம் மேலே சுட்டிய இருயு

யாப்பிலக்கண நூல்கள் தோன்றுவதற்கு முன்வழங்கியவை என்பது தெரியவரும். யாப்பிலக்கணத்திற்கு எடுத்துக்காட்டு இலக்கியமாகச் சிதம்பரச்செய்யுட்கோவை, மாறன் பாப்பாவினம், திருவலங்கற்றிரட்டு என்னும் நூல்கள் செய்யப்பட்டுள்ளன. உரைநடையில் விசாகப்பெருமாளையர் செய்த யாப்பிலக்கணமும் கலியாணசுந்தரயதீந்திரர் செய்த செய்யுளிலக்கணமும் பள்ளிகளில் பயிலும் மாணவர் பொருட்டாகப் பிறந்த பிற்கால நூல்கள் ஆகும்.

தனிப்பா இலக்கணம் கூறும் யாப்பிலக்கண நூல்களின் வேறாக இலக்கிய வகைகளின் இலக்கணங்களை விளக்கவந்தவை பாட்டியல் நூல்கள். இவை ஒரு நூலைத் தொடங்கும் போது அமைக்கும் முதற்சீர் எவ்வெவ்வகையான பொருத்தங்களுடன் இருத்தல் வேண்டும் என்பதனையும் விளக்குகின்றன. இவ்வகையில் வந்த நூல்களுள் பன்னிருபாட்டியல், வெண்பா பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல், பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை என்பவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

உவமை முதலிய அணி இலக்கணம் கூறும் நூல்களும் வளர்நிலையுற்றன. வடமொழி அலங்கார நூல்களின் செல்வாக்கும் தமிழ்நாட்டில் பெருகலாயிற்று. அணியியல் என ஒரு நூலிருந்தமையை அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். கி.பி 8 ஆம் நூற்றாண்டில் தோன்றிய திவாகரம் 28 பொருளணிகளின் பெயர்களையும் சித்திரகவி வகைகளையும் பட்டியலிட்டுத் தருகிறது.

வடமொழியில் தண்டியாசிரியர் இயற்றிய 'காவியாதரிசம்' என்னும் அணியிலக்கண நூலின் மொழிபெயர்ப்பாகத் தண்டியலங்காரம் என்னும் ஒரு நூல் 12ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இதில் 35 பொருளணிகள் விளக்கப்பட்டுள்ளன; சொல்லணி பற்றிய பகுதியில் சித்திரகவி விளக்கம் உள்ளது. சென்ற நூற்றாண்டில் தி. ஈ. சீநிவாச ராகவாச்சாரியார் என்பார் தண்டியலங்காரசாரம் என ஓர் அணியிலக்கண நூல் ஆக்கியுள்ளார்.

திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பார் மாறனலங்காரம் என்னும் அணி இலக்கண நூலை இயற்றியுள்ளார். மாறன் என்பது நம்மாழ்வாரின் திருப்பெயர். இவரைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பெற்ற மேற்கோள் பாடல்களுடன் இந்நூல் உள்ளது; 64பொருளணிகளை விளக்குகிறது இந்நூலுக்கு உரை எழுதியவர் நூலாசிரியரின் மாணவராகிய காரிரத்தினகவிராயர்.

வடமொழியில் உள்ள அணிநூல்களாகிய சந்திரலோகமும் குவலயானந்தமும் வெவ்வேறு ஆசிரியர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. 'ஆரணச் சைலர் அலங்கார பஞ்சகம்' என்னும் சிற்றிலக்கியம் சந்திராலோகம் கூறும் நூறு அணிகளுக்கும் விளக்கமான இலக்கியமாகும்.

அணிஇலக்கண நூல்களை பொறுத்தவரை வடமொழியின் செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது. அணி இலக்கணம் மட்டுமன்று. தமிழ் மொழி இலக்கணம் முழுமையிலுமே வட நூல் மரபைப் புகுத்தி இலக்கணம் செய்ய முற்பட்டாரும் உளர். இவரெல்லாம் தமிழ்மொழிக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்னும் கோட்பாட்டினராவார்

பௌத்த சமயம் சார்ந்த புத்தமித்திரனார் என்பார் 11ஆம் நூற்றாண்டில் வீரசோழன் காலத்திலே வீரசோழியம் என்னும் ஐந்திலக்கண நூலை ஆக்கினார். இதற்குப் பெருந்-தேவனார் என்பார் உரை எழுதியுள்ளார். இந்நூலும் உரை-யும் வடமொழி மரபைத் தமிழிலக்கண உலகில் புகுத்தியமையால் பெருக வழங்காது போயின. எனினும், இக்கொள்கையுடையார் சிலர் எல்லாக் காலத்தும் இருப்பது இயல்பே. 18ஆம் நூற்றாண்டில் சுப்பிரமணிய தீட்சிதர் இயற்றிய பிரயோக விவேகமும் அடுத்துத் தோன்றிய சாமிநாததேசிகர் செய்த இலக்கணக்கொத்தும் வடமொழிக்கு முதன்மை தந்து அமைந்த வீரசோழிய வழிநூல்களாம்.

இஃது ஒரு பாலாக ஐந்திலக்கண மரபினைத் தமிழ்நெறி தழுவிக் காலத்திற்கு ஏற்பப் புதுநூல் செய்ய முற்பட்ட புல

வரும் சிலர் உளர். இவர்களுள் இலக்கண விளக்கம் செய்த திருவாரூர் வைத்தியநாததேசிகர் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கவர். இவருடைய நூலும் தமிழ்நாட்டில் செல்வாக்குடன் சிலகாலம் நிலவியது. 'குட்டித்தொல்காப்பியம்' என இதனைப் புகழ்ந்தனர்.

இவருடைய வழியில் காலத்திற்கேற்ற மாறுதல்களுடன் முத்துவீரியம், தொன்னூல் விளக்கம், சாமிநாதம் என்னும் இலக்கண நூல்கள் எழுந்தன. தொன்னூல் விளக்கம் தந்த வீரமாமுனிவர் எழுதிய செந்தமிழ், கொடுந்தமிழ் என்னும் இலக்கண நூல்கள் புதிய விழிப்புணர்வைத் தருவன, ஐவகை இலக்கணத்தின் மேலாகப் 'புலமை இலக்கணம்' என்னும் ஒன்றைப் புகுத்தி அறுவகை இலக்கணம் என்னும் பெயரில் தண்டபாணி சுவாமிகள் ஓர் இலக்கண நூலை ஆக்கியுள்ளார்.

மாணவர்களுக்கு எளிதில் விளங்கும் வகையில் பழைய இலக்கண நூல்களுக்குப் புதிய உரையும் சிறப்புக் குறிப்புகளும் அமைத்து நூல் இயற்ற முன் வந்தனர் சிலர். சுன்னாகம் அ. குமாரசாமிப் பிள்ளை யாப்பருங்கலக்காரிகை, அகப்பொருள் விளக்கம் ஆகியவற்றிற்குப் புத்துரை எழுதியுள்ளார். வித்துவான் வேங்கடராஜுலு ரெட்டியார் எழுதிய 'தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி', மோசஸ்பொன்னையா எழுதிய 'நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை' ஆகியவை நல்ல முயற்சி.

உவமான சங்கிரகம், அநுமான விளக்கம், தொனி விளக்கம் முதலியனவாக வந்துள்ள தனிநூல்களும், வித்துவான் வேங்கடராஜுலு ரெட்டியார் எழுதிய 'நுண்பொருள் விளக்கம்', 'இலக்கணக் கட்டுரைகள்' என்னும் நூல்களும் இலக்கணம் பற்றிய பல்வேறு பொருள்களுக்கான விளக்கம் தருவனவாகும்.

மாணவர் பொருட்டு உரைநடையில் எழுதப்பெற்ற இலக்கண நூல்களும் பல. அவற்றுள் ஆறுமுக நாவலரின் 'இலக்

கணச் சுருக்கம்', விசாகப் பெருமாளையரின், 'பஞ்சலட்சணம்,' மழவை மகாலிங்கையர் எழுதிய 'தமிழ் இலக்கணம்,' தாவீது யோசேப்பு உபாத்தியாயர் எழுதிய 'தமிழ்இலக்கணத்தெளிவு' என்பவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை,

ஆங்கிலமொழிக் கல்வி நாட்டில் வளர்ந்துவந்த நிலையில் அம்மொழி அறிந்தாரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் இலக்கணக் குறியீடுகளுக்கான ஆங்கிலச் சொல்லும் உடன் தருவாராயினர். டாக்டர் ஜி.யு. போப்புப் பாதிரியார் முதலியோர் வெளியிட்ட தமிழிலக்கண நூல்கள் இத்தகைய குறியீடுகளுடன் உள்ளன.

காலந்தோறும் தோன்றிய இலக்கண இலக்கியங்களை ஒப்பிட்டு ஆராய்கின்றபோது மொழிவளர்ச்சியின் நிலைகள் நன்கு புலனாகும். இத்தகைய ஆராய்ச்சியும் சென்ற நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. கால்டுவெல் பாதிரியாரின் 'திராவிட மொழி ஒப்பிலக்கணம்' புதிய விழிப்பினை நல்கிய பெருநூல். சாமுவேல் பிள்ளை என்பார் தொகுத்து, விளக்கக் குறிப்புகளுடன் 1894 ல் வெளியிட்ட 'தொல்காப்பிய நன்னூல்' சிறப்பான ஒரு முயற்சி. அண்மையில் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் வெளியிட்ட 'தொல்காப்பியம்-நன்னூல்' தெளிவுற அமைந்த விளக்கநூல். டாக்டர் மு.வ. எழுதிய மொழிநூல், மொழிவரலாறு குறிப்பிடத்தக்கவை. டாக்டர் ரா. சீனிவாசன் முதலியோரும் இவ்வகை நூல்கள் இயற்றியுள்ளனர். பண்டாரகர் இலங்கை வேலுப்பிள்ளை எழுதிய 'தமிழ் வரலாற்றிலக்கணம்' மொழி வரலாற்றை அறிய உதவும் ஓர் ஆய்வு நூல்.

தமிழில் மொழியியல் படிப்பும் ஆராய்ச்சியும் இப்பொழுது ஒரு தனிக்கூறாய் வளம் பெற்று வருகின்றன. மொழி ஆய்வுக்குத் துணையாக முன்னையோர் எழுதிய நூல்களுள் சுன்னாகம் அ. குமாரசாமிப் பிள்ளையின் 'வினைப்பகுபத விளக்கம்' மோசூர் வேங்கடராமையரின் 'விகுதிவிளக்கம்' என்பவை குறிப்பிடத்தக்கவை. பேராசிரியர் மு. இராகவையங்கார் 'வினைத்

திரிபு விளக்கம்' என்னும் ஓர் அருமையாள நூலை ஆக்கியளித் துள்ளார். மகாகவி அ.கு. ஆதித்தனாரின் உரிச்சொல் விளக் கம், டாக்டர் இசரயேல் எழுதிய வினைச் சொல் போன்றவை யும் புதிய நோக்கில் அமைந்தவை.

சொற்களின் வரலாறுகளைத் துருவி ஆராயும் நிலையில் வந்த நூல்களும் சில உள. பேராசிரியர் கே. என். சிவராச பிள்ளை இயற்றிய 'சில தமிழ்ச்சொல்லாராய்ச்சி,' பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை ஆக்கிய 'சொற்களின் சரிதம்,' மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் எழுதிய சொல்லா ராய்ச்சிக் கட்டுரைகள், வேர்ச்சொல் கட்டுரைகள் போன்றவை முன்மாதிரியானவை. இவ்வாறாக இலக்கண நூல்களும் இலக் கணப் பொருள்பற்றிய ஆய்வுகளும் இன்னும் வந்து கொண் டேயிருப்பது மொழித்திறன் முட்டின்றி அமையத்துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

---

திராவிட மொழிகளுள் தமிழ் மொழியே மிகத் தொன்மை வாய்ந்ததும் பெருவளம் பொருந்தியதுமாகும்; மிகவும் சீர்திருந்தியமைந்த உயர்தனிச் செம்மொழியுமாகும்; செல்வவளம் மிகுந்தது; கணக்கிட முடியாப் பழங்காலந் தொட்டே பயின்றும் வருவது

— கிரியர்சன்

# 6. உரையாசிரியர்கள்

நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என ஆசிரியரை மூவகையராகப் பகுத்துக் காண்பர். நூல் வெளிவந்த பின், அவற்றை ஏனையோர் கற்றுவரும் நிலையில், கற்பித்து வரும் நிலையில் உரைவிளக்கம் பிறத்தல் இயல்பு. ஆசிரியர் மாணவருக்கு நூற்பொருளை விளக்க, வழிவழியாக உரை மரபு வளர்ந்துவந்து, பின் அவற்றை எழுதிவைக்கும் நிலை தோன்றியது.

தொடக்க காலத்தில் அருஞ்சொல் விளக்கமான அரும்பத உரைகளே பல நூல்களுக்கும் தோன்றியிருத்தல் வேண்டும். இதனைப் பண்டை நூல்களின் பழையவுரைகள் கொண்டு அறியலாகும். பின்னர் வரவரப் பதவுரை, பொழிப்புரை, அகலவுரை முதலியன தோன்றலாயின. நூலுக்கான உரையை எழுதியவர்களையே நாம் உரையாசிரியர்கள் என்று குறிப்பிடுகிறோம்.

இந்நாளில் கிட்டியுள்ள உரைநூல்களுள் முந்தியது இறையனாரகப்பொருளுரை. மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றிய இவ்வுரை பழைய உரைநடைக்கு ஓர் எடுத்துக்காட்டாய் உள்ளது. இவ்வுரை பின்னாளில் வந்த உரைகாரர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் இருந்திருக்கிறது.

---

எழுதியவர் மு. சண்முகம் பிள்ளை

இவ்வுரைநூலுக்குப் பின் சில நூற்றாண்டுகள் இடையளவுபட்டே உரைநூல்கள் பலவும் தமிழில் தோன்றக் காண்கிறோம். இதற்கு அடுத்த நிலையில் நமக்குக் கிடைக்கின்ற உரை தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் எழுதிய உரையே. இவருடைய காலம் 11ஆம் நூற்றாண்டாகும். இவரைத் தொடர்ந்து இலக்கண இலக்கிய உரைகள் பல தோன்றக் காண்கிறோம். நச்சினார்க்கினியர் காலமாகிய 14ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியை உரையியல் காலம் என்றே குறிப்பிடுவர்.

தொல்காப்பியம் முழுமைக்கும் உரைகண்ட பெருமைக்குரியவர் இளம்பூரணர். இவருடைய உரை தெள்ளிய தமிழ்நடையில் சுருக்கமும் தெளிவும் கொண்டு விளங்குகிறது. இவரைப் பின்வந்த தொல்காப்பிய உரைகாரர்களும் பிறரும் ‘உரையாசிரியர்’ என்றே போற்றுவர். ‘உரையாசிரியராகிய இளம் பூரணவடிகள்’ என்று குறிப்பிடுகிறார் அடியார்க்கு நல்லார். எம் நாடு தமிழ்நாடு என்று பெருமிதம் கொள்கிறார் இவர்.

இளம்பூரணரைப் போலவே தொல்காப்பியம் முழுமைக்கும் பேருரை கண்டவர் நச்சினார்க்கினியர். இப்பொழுது மெய்ப்பாட்டியல், உவமவியல், மரபியல் ஒழிந்த 24 இயல்களுக்கே இவருடைய உரை காணப்படுகிறது. தருக்க முறையில் அமைந்த இவருடைய பேருரை முந்திய உரைகாரர்களின் உரைகளையெல்லாம் விஞ்சி நிற்கிறது.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் என்னும் ஐவர் உரைகள் உள. இவற்றுள் சேனாவரையர் உரையே புலவர் உலகம் போற்றும் பெருமை படைத்துள்ளது. இவர் 13 ஆம் நூற்றாண்டினர். கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் இவர்தம் உரையுள் எங்கும் மிளிரக் காணலாம்.

தெய்வச்சிலையாரின் உரை ஆற்றொழுக்காகக் கருத்துகளை விளக்கும் திறமும் தெளிவும் படைத்தது. இவருடைய உரையில் சிற்சில புதிய விளக்கங்கள் தென்படுகின்றன. கல்லாடர் உரையோ முந்திய உரைகளின் ஒரு தொகுப்புப்போலக் காணப்படுகிறது.

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் மேலும் குறிப்பிடத்தக்க ஒருவர் பேராசிரியர். தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பின் நான்கு இயல்களுக்கு மட்டுமே இவருடைய உரை கிட்டியுள்ளது. மணிவாசகரின் திருக்கோவையாருக்கு உரை எழுதிய பேராசிரியர் இவரின் வேறானவர் என்பர்.

அடுத்துத் தமிழிலக்கண நூல்களுள் பலருடைய உரைகள் பெற்ற சிறப்புடைய நூல் பவணந்தி முனிவரின் நன்னூல். இந்நூலுக்கு முதலுரை கண்டவர் மயிலைநாதர். இவருடைய உரை நூலாசிரியரின் காலத்தை அடுத்து 13ஆம் நூற்றாண்டளவில் வந்த தெளிவான உரை.

இவருக்குப் பின்னர் 17 ஆம் நூற்றாண்டில் சாமிநாததேசிகரின் மாணவராகிய சங்கர நமச்சிவாயப்புலவர் இதற்கு விளக்கவுரை கண்டார். இவருக்குப்பின் வந்த சிவஞானமுனிவர் இவருடைய உரையில் சிற்சில இடங்களைச் செப்பனிட்டுப் புதுக்கருத்துக்கள் சிலவற்றையும் உடனிணைத்துப் புதுக்கிய புத்துரை விருத்தியுரை எனப் போற்றப்படுகிறது. பின்னாளில் கல்விச்சாலை மாணவர் பொருட்டாகக் காண்டிகை உரைகளைப் பலர் ஆக்கியுள்ளனர். முகவை இராமாநுசக்கவிராயர், ஆறுமுகநாவலர், விசாகப்பெருமாளையர், சடகோப ராமாநுசாசாரியர், பவானந்தம்பிள்ளை முதலியோரின் காண்டிகை உரைகள் குறிப்பிடத்தக்கவை.

நன்னூலைப் போலவே எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் இரண்டனையும் விளக்குவது நேமிநாதம். இந்நூலுக்குப்

பழையவுரை ஒன்றும் உள்ளது. இவ்வுரையாசிரியர் பெயர் முதலிய விவரம் தெரியவில்லை.

ஐவகை இலக்கணமும் முழுமையாய்க் கொண்ட வீரசோழியம் வீரராசேந்திர சோழன் காலத்தில் புத்தமித்திரரால் இயற்றப்பட்டது. இவர் தமிழ்நெறி தழுவாது வடமொழி இலக்கணக் கொள்கைகளைத் தமிழில் புகுத்த முற்பட்டார். இந்நூலுக்கு உரை செய்த பெருந்தேவனார் நூலாசிரியர் கருத்திற்கியைய உரை கண்டுள்ளார். பிற்காலத்தில் பிரயோக விவேகம் செய்த சுப்பிரமணிய தீட்சிதரும், இலக்கணக்கொத்து இயற்றிய சாமிநாததேசிகரும் வீரசோழியம் போல வடநூல் மரபு தழுவினர். இவ்விரு நூல்களுக்கும் உரை எழுதியவரும் அவர்களே.

இவ்வாறு நூலும் உரையும் செய்ய வழிகாட்டியவர் இலக்கணவிளக்கம் இயற்றிய வைத்தியநாததேசிகர். இவர்தம் நெறி முறையில், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சாமிநாதம் என்னும் நூல்கள் நூலாசிரியர் ஆக்கிய உரையுடன் அமையலாயின. இந்நூல்களும் ஐவகை இலக்கணம் பற்றியனவே.

அகப்பொருள் இலக்கணம் பற்றிய தனி நூல்களுள் நாற்கவிராச நம்பியாரின் அகப்பொருள் விளக்கமும், தமிழ்நெறி விளக்கம், களவியற் காரிகை என்னும் நூல்களும் காலத்தை ஒட்டி அமைந்த புத்திலக்கணங்கள். இவற்றிற்குரிய உரைகளையும் இவ்வாசிரியர்களே இயற்றியிருக்கவேண்டும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

புறப்பொருள் வெண்பாமாலை பெரிதும் பயிலப்படும் புறத்திணை இலக்கணநூல். இதற்கு உரை எழுதியவர் சாமுண்டிதேவநாயகர். பாடல்களில் சொற்களைக் கொண்டு கூட்டாது அவை கிடந்தவாறே உரை எழுதிச் செல்வது இவருடைய இயல்பு.

நச்சினார்க்கினியர் இலக்கண உரையாசிரியர் மட்டுமல்லர். பற்பல இலக்கிய நூல்களுக்கு உரைகண்ட வித்தகரும் ஆவர். பத்துப்பாட்டிற்கும் கலித்தொகைக்கும் இவர் உரையெழுதியுள்ளார். குறுந்தொகையில் பேராசிரியர் உரையெழுதாது விடுத்திருந்த 20 பாடல்களுக்கு இவர் உரை எழுதினார். ஐம்பெருங் காவியங்களுள் ஒன்றான சிந்தாமணிக்குச் சிறந்த உரை கண்டுள்ளார். இவர் தம்முடைய உரையில் இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர் மூவரையும் குறிப்பிடுகின்றார். இவருடைய காலம் 14ஆம் நூற்றாண்டின் இறுதியாகும். இவருடைய உரைநயச் சிறப்பு புலவர்களுடைய உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டுள்ளது.

பத்துப்பாட்டுள் பலவற்றிற்கும் சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் வாழ்ந்த புலவர் புலர் விளக்கவுரைகளும் புத்துரைகளும் ஆராய்ச்சியுரைகளும் எழுதியுள்ளனர். இவர்களுள் **ஆறுமுகநாவலர், மறைமலையடிகள், மகாவித்துவான் ரா. இராகவையங்கார், பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், ஜயம்பெருமான் கோனார், பொ. வே. சோமசுந்தரனார்** முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூற்றின் ஒரு பகுதி, புறநானூறு ஆகியவற்றிற்குப் பழைய பொழிப்புரை, குறிப்புரை முதலியன கிடைத்துள்ளன. இவற்றைப் பதிப்பாசிரியர்கள் ஆராய்ந்து பதிப்பித்துள்ளார்கள். இவ்வுரையாசிரியர்களின் பெயர் அறியப்படாவிடினும் பலகாலம் எழுதிப் போற்றப்பட்டுவந்துள்ளமையினால் அவற்றின் பழமை தெரியவரும். இப்பழைய உரைகள் காரிருளில் கைவிளக்குப்போல நமக்கு உதவுகின்றன. பரிபாடலுக்குப் **பரிமேலழகரின்** செவ்விய உரை உள்ளது. புறநானூற்றுக்கு இந்நூற்றாண்டுப் பெரும்புலவர் அவ்வை **துரைசாமிப்பிள்ளை** முழுமையாய் விரிவுரை எழுதியுள்ளார் அகநானூற்றிற்கு **நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்**

டார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம்பிள்ளை ஆகியோரின் உரை உள்ளது.

நற்றிணை, குறுந்தொகை நூல்களுக்குப் பழைய உரைகள் இல்லை. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நற்றிணைக்கும் திருக்கண்ணபுரம் திருமாளிகை சௌரிப்பெருமான் அரங்கன் குறுந்தொகைக்கும் உரைகண்டு பதிப்பித்தனர். பின்னர் நற்றிணைக்கு அவ்வை துரைசாமிப்பிள்ளை உரையும், குறுந்தொகைக்கு டாக்டர் உ. வே. சாமிநாதையர் உரையும் கூடிய வரையில் பழைய மரபை ஒட்டி வெளிவந்துள்ளன. மகா வித்துவான் ரா. ராகவையங்கார் எழுதிய குறுந்தொகை உரையுள் 112 பாடல்களுக்கு மட்டுமே அச்சிடும் வாய்ப்பு நேர்ந்தது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் சிறப்பிடம்பெற்றுத் திகழும் திருக்குறளுக்கு தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, காலிங்கர், பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள் என்னும் பதின்மர் உரை எழுதியுள்ளனர். இவற்றுள் மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதி, காலிங்கர், 'பரிமேலழகர் என்னும் ஐவர் உரைகள் அச்சில் வெளிவந்துள்ளன. இவர்களுள் இறுதியாக உரையெழுதியவரான பரிமேலழகர் உரையே திருக்குறளுக்குரிய விளக்கப் பேருரையாகும். இவ்வுரையின் சிறப்புக்கருதித் திருக்குறளோடு இவருடைய உரையையும் ஒரு நிகராக வைத்து ஆன்றோர் போற்றியுள்ளனர். இவருடைய உரைக்கருத்துக்கள் பலவற்றை விளக்கிக் காரிரத்தினகவிராயர் ‘நுண்பொருள்மாலை’ என்னும் நூல் இயற்றியுள்ளார். பரிமேலழகருரைக்த விளக்கமாகச் சென்ற நூற்றாண்டிலும் வந்த விளக்கவுரைப் பதிப்புகளும் பல.

நாலடியார் நானூறு பாடல்களையும் பொருளைடவு செய்து உரை கண்டவர் பதுமனார். இப் பதுமனாரின் முதலுரை சிறப்பாக அமைந்த பொழிப்புரை. இவருக்குப் பின் தருமர் என்பவர் உரை வரைந்துள்ளார். புதுவை நயனப்ப

முதலியார் (1812) தொடங்கிப் பதின்மருக்கும் மேற்பட்டோர் இந்நூலுக்கு உரை விளக்கம் எழுதியுள்ளனர்.

இவைதவிர ஏனைய நான்மணிக்கடிகை, நானாற்பது முதலிய எல்லா நூல்களுக்கும் பழைய பொழிப்புரை உள்ளது. இவற்றில் பல நூல்களுக்குக் கோ. இராசகோபாலப்பிள்ளை, நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் முதலியோர் புத்துரை எழுதியுள்ளனர்.

தமிழ்க் காப்பியங்களுள் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, நீலகேசி என்னும் மூன்றற்கும் பழைய உரைகள் உள்ளன. சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை என இரண்டு உரைகள். அரும்பதவுரை முந்தியது; நூல் முழுமைக்கும் உள்ளது. சிலப்பதிகாரத்தை 'முத்தமிழின் பாடல்' என்று குறிப்பிடுகிற அடியார்க்கு நல்லார் இசை, நாடக நூல் நுணுக்கங்களை எல்லாம் முன்னூல்களின் துணை கொண்டு நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளார். இவருடைய உரை கானல்வரிக்கும் 20 ஆவது வழக்குரை காதை முதலியவற்றிற்கும் இல்லை. சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரும் வேறு சிலரும் கானல்வரிக்கு உரை எழுதியுள்ளனர். பழைய உரைகளின் அடிப்படையில் நாவலர் ந.மு. வேங்கடசாமிநாட்டார் நூல் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார். இதன்பின் பெருமழைப் புலவர் சோமசுந்தரனார் முதலியோரும் உரை எழுதியுள்ளனர்.

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியரின் புலமையுரை உள்ளது. சமணசமயக் கோட்பாடுகளை நன்கு தெரிந்து இவர் ஆக்கிய உரை இல்லாமற் போனால் இக்காவியத்தைக் கற்றுணர்தல் இயலாமல் போயிருக்கும். நீலகேசிக்குச் சமயதிவாகரவாமன முனிவரின் விருத்தியுரை உள்ளது.

மணிமேகலையைப் பதிப்பித்த டாக்டர் உ வே. சாமிநாதையர் அதற்கு ஒரு குறிப்புரையும் எழுதியுள்ளார். பின், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரும், அவ்வை துரைசாமிப்

பிள்ளையும் நூல் முழுமைக்கும் விளக்கவுரை கண்டனர். இவ்வாறே சூளாமணி, யசோதர காவியம் முதலியவற்றிற்கும் இந் நூற்றாண்டில் உரை கண்டுள்ளனர்.

பெருங்காவியமாகிய கம்பராமாயணத்திற்குப் பலர் உரை காண முற்பட்டுள்ளனர். திரிசிரபுரம் வி. கோவிந்தப்பிள்ளை, காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு, சுப்பராயச் செட்டியார், திரு மயிலை சண்முகம்பிள்ளை, மு. ரா கந்தசாமிக் கவிராயர், சுன்னாகம் அ. குமாரசாமிப்பிள்ளை, டி என் சேஷாசலம் என் போர் சிற்சில காண்டங்களுக்கு மட்டுமே உரை எழுதியுள்ளனர். நூல் முழுமைக்கும் வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியசரின் விரிவுரை உள்ளது. டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பலருடைய கூட்டு முயற்சியால் இப்பெருங்காவியம் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

சைவ வைணவ தோத்திர சாத்திர நூல்களுக்கான உரைகளும் பலவாய் வெளிவந்துள்ளன. சைவத் திருமுறைகளாகிய தெய்வப்பனுவல்களுக்கு உரையெழுதுதல் கூடாது என்ற ஒரு கொள்கையினால் உரை எழுதும் முயற்சியில் முன்னையோர் மிகுதியும் ஈடுபட்டாரில்லை. திருமுறைகளில் திருக்கோவையாருக்குத்கான் பேராசிரியரின் அழகிய உரை உள்ளது. திருவாசகம், திருமந்திரம், பதினொராந்திருமுறை, பெரிய புராணம், முதலியவற்றிற்கும் பின்னாளில் உரை எழுதுவராயினர். திருவாசகத்திற்குக் காழித்தாண்டவராயரின் அனுபூதி உரை உள்ளது. மறைமலையடிகள் திருவாசகத்தின் முதல் நான்கு அகவல்களுக்கு எழுதிய உரையும் பண்டிதமணி கதிரேசஞ்செட்டியார் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகியவற்றிற்கு எழுதிய கதிர்மணி விளக்கவுரையும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. பெரியபுராணத்திற்குக் கோவை சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் பேருரை காணத்

தக்கது. சைவ சித்தரந்த சாத்திரங்களுக்குச் சிவஞானமுனிவர், நிரம்பவழகியதேசிகர் முதலியோர் ஆக்கிய சீரிய உரைகள் உள்ளன.

நாலாயிர திவ்வியப்பிரபந்தம் முழுமைக்கும் பெரியவாச் சான்பிள்ளையின் உரை உள்ளது. நம்மாழ்வாரின் திரு வாய்மொழிக்கு ஐந்து உரைகள் உள்ளன. அவற்றுள் நம் பிள்ளை ஈடு பேருரையாகும். இவ்வுரைகள் வடமொழி கலந்த மணிப்பிரவாள நடையில் உள்ளன. ஆதலால் வடமொழியறி யறிவும் உடையோரே இவ்வுரைகளை நன்கு தெளிய இயலும். திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம் பு.ரா. புருஷோத்தம நாயுடு அவர்களால் ஆக்கப்பெற்றுள்ளது.

சென்ற நூற்றாண்டுத் தொடக்கமாகப் புலவர் பலர் பெரு நூல்களுக்கும் சிற்றிலக்கியங்களுக்கும் உரையெழுதும் பணி புரிந்து வந்துள்ளனர். வில்லிபாரதம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், காஞ்சிப்புராணம், நைடதம், நள வெண்பா, அட்டப்பிரபந்தம், பிரபுலிங்கலீலை முதலிய பல நூல்கள் உரைவளம் பெற்றன. தாயுமானவர், பட்டினத்தார் பாடல் போன்ற அருளாளர் நூல்களுக்கும் உரை கண்டார் சிலர். நால்வர் நான்மணிமாலை, மறைசையந்தாதி, மதுரைக் கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்களுக்கும் செம்மையான உரை காணப் பலர் முயன்றுள்ளனர். சிற்றிலக்கிய உரை களில் தக்கயாகப்பரணி, மூவருலா, தஞ்சை வாணன் கோவை முதலியவற்றிற்கு அமைந்த உரைகள் பெருஞ்சிறப்புடை யவை. இவ்வாறாகத் தமிழில் உரையாசிரியர்களின் பணிமுடி வில்லாத தொடராக நீண்டு சென்றுகொண்டிருக்கிறது.

# 7. சிற்றிலக்கியங்கள்

தமிழிலக்கியங்களில் பெரும்பாலனவும் சிற்றிலக்கியங்களே; அவை எல்லாக் காலத்தும் காணப்படுகின்றன. என்றாலும் கி பி. 1500 தொடக்கமாகவுள்ள காலப்பகுதியைச் சிற்றிலக்கிய காலம் என்பர். சிற்றிலக்கியம் என நாம் இப்பொழுது குறிப்பிடும் இலக்கியங்களைப் 'பிரபந்தம்' என முன்பு வழங்கி வந்தனர்.

தமிழில் இந்நாள் வரையில் பிறந்துள்ள சிற்றிலக்கியங்களை எண்ணிட்டு வரையறைப்படுத்துவதும் இயல்வதன்று. காலந்தொறும் புதிது புதிதாகக் கிளைக்கின்ற ஒன்று எண்ணிற்குள் அடங்குமோ? இலக்கிய வகைகளின் இயல்பு உரைக்கும் பாட்டியல்களில் இடம்பெற்ற இலக்கிய வகைகளைக் கணக்கிட்டால் 150க்கு மேல் உள. இவ்வகை இலக்கண நூல்களில் கூறப்படாத சிற்றிலக்கிய வகைகளும் அந்த அளவை எட்டுகின்றன. ஆகவே, முந்நூறுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கிய வகைகள் தமிழில் உள்ளன என்பது தெரியவருகிறது.

ஆற்றுப்படை இலக்கியம் பழமையானது. இதன் இயல்புகளைத் தொல்காப்பியர் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார். பத்துப்பாட்டில் செம்பாதி ஆற்றுப்படைகளே. புறநானூறு, பதிற்றுப்பத்து நூல்களிலும் ஆற்றுப்படைப் பாடல்கள் உள.

---

எழுதியவர் மு. சண்முகம் பிள்ளை

ஆற்றுப்படையேயன்றி அரசர்களைப் பாடும் வகையில் அமைந்த கடைநிலை, இயன்மொழி வாழ்த்து, கண்படை நிலை, துயிலெடைநிலை, பெருமங்கலம் முதலியனவாகப் பல் வேறு இலக்கிய வகைகள் தொல்காப்பியத்தில் காணப்படு கின்றன.

அகப்பொருட் பாடல்கள் ஐந்திணைக் கூறுபாட்டில் அடங் குவன. ஐங்குறுநூற்றிலும் கலித்தொகையிலும் ஐந்-திணைத் தனி அமைப்புக் காணலாம். இவற்றைப் போலவே பதினெண்கீழ்க்கணக்கிலும் ஐந்திணை நூல்கள் ஆறு உள்ளன. இவற்றை ஐந்திணைச் செய்யுள் எனப் போற்றுவர்.

தனித்தனிக் கூற்று நிகழ்ச்சிகளாயிருந்த அகப்பொருட் கிளவிகளைக் கோவைப்பட அமைத்து இடைக்காலத்தில் அகப் பொருட் கோவைகள் இயற்றினர். கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் நானூறு கொண்டு பெரும்பாலும் இவ்வகை இலக் கியம் அமைவதால் 'நானூற்றுக்கோவை' என்றும் குறிப்பிடு வர். பாண்டிக்கோவை, திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை போன்ற கோவை இலக்கியங்களும் பலவாக உள்ளன. பின்னாளில் அகப்பொருள் துறைகளுள் ஏதேனும் ஒன்றை எடுத்துக்கொண்டு பலபாடல்களில் இலக்கியம் ஆக்கியுள்ளனர். இத்தகைய நூல்களை 'ஒரு துறைக் கோவை' என்பர்.

இடைக்காலத்தில் எழுந்த தெய்வப்பனுவல்களிலும் அகப் பொருள் இலக்கிய மரபுகள் இடம்பெற்றன. இவற்றை நாயக - நாயகி நிலையில் அமைந்த பாடல்கள் என்பர். பிள்ளைத்தமிழ், தாலாட்டு, உலா, மடல், தூது முதலிய சிற்றி லக்கியங்கள் எழுவதற்கான அடிப்படைகள் இத்தெய்வப்பனு வல்களில் உள்ளன.

பெரியாழ்வார் பாடிய கண்ணனுடைய பிள்ளைப் பருவம் பற்றிய பாமாலைகள் பிள்ளைத்தமிழ் இலக்கியம் தோன்ற முதல் வழிகாட்டியாம். தெய்வத்தையோ மக்களையோ குழந்

தையாக வைத்துக் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்துப்பருவங்களில் பப்பத்துப் பாடல்களாகப் பாடப்பெறும் இலக்கியம் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் எனப்படும். ஆண்பாலுக் குரிய இறுதி மூன்று பருவங்களை மட்டும் மாற்றிக் கழங்கு, அம்மானை, ஊசல் போன்ற மகளிர் விளையாட்டின் அடிப் படையில், மூன்றைச் சேர்த்துப் பெண்பாற் பிள்ளைத்தமிழ் பத்துப் பருவங்களில் பாடியுள்ளனர்.

பிள்ளைத்தமிழின் முதல் பருவமாகிய காப்பு என்பது காப்புமாலை எனத் தனி இலக்கிய வகையாகவும் வளர்கிறது. அங்ஙனமே 'தால்' என்பது தாலாட்டு இலக்கியமாகிறது. குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுப் பாடுவது தாய் மார் இயல்பு. இவ்வகையில் நாடோடி இலக்கியமாகவும் புல வர் பாடிய இலக்கியமாகவும் பல உள. பெண்கள் விளை யாட்டில் ஒன்று ஊஞ்சல்; திருமணக் காலங்களில் மணமக்கள் ஊஞ்சல் ஆடும் நிகழ்ச்சியில் ஊஞ்சல்பாட்டுப் பாடுவர். தெய் வத்திற்கும் ஊஞ்சல்பாட்டு இலக்கியம் பாடியுள்ளனர்.

காதல், உலா, மஞ்சரி, மடல், தூது என்பவை தலைவன் தலைவியரின் காதல் வாழ்வுபற்றி எழுந்தவை. தலைவன் தலைவியர் எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் விரும்பிக் கூடுவதை இயற்கைப் புணர்ச்சி என்பர். இப்பொருளில் வந்த தனி இலக் கியமே காதல் என்பது. கூனப்பநாயக்கன் காதல், முத்துச் சாமிப் பிள்ளை பேரில் காதல் முதலியன இவ்வகை இலக்கியங் களில் குறிப்பிடத்தக்கவை.

தலைவன் வீதியில் உலா வர அவனைக் கண்ட எழுபருவ மங்கையரும் காதல்கொண்டு பேசுவதாக அமைக்கப்படுவது உலா ஆகும். சேரமான் பெருமாள் பாடிய திருக்கயிலாய ஞான உலா முதல் உலா இலக்கியம்; எனவே இது ஆதியுலா என்னும் சிறப்புப் பெற்றது. ஆளுடைய பிள்ளையார் திருவுலா

மாலை பதினொராந் திருமுறையில் உள்ளது. ஒட்டக்கூத்தர் சோழமன்னர் மூவர்மேல் பாடிய உலாக்கள் 'மூவருலா' என்று பேசப்படுகிறது. உலா வகையில் பல நூல்கள் பின்னர் வந்துள்ளன.

காதலியை அடைய முடியாமல் தடைநேர்ந்தபோது தலைவன் மடலேறுவதாகப் பாடப்படும் மரபு பழமையானது. ஆடவரன்றிப் பெண்கள் மடலேறுவதாகப் பாடுதல் மரபன்று ஆனால், திருமங்கை மன்னன் பாடிய பெரிய திருமடல், சிறிய திருமடல் இரண்டும் பெண் மடலேறுவதாக அமைந்தவை. பின்னாளில் பழைய மரபை ஒட்டி உலாமடல், கலிமடல், வளமடல், சித்திரமடல் என்னும் பெயர்களில் இலக்கியங்கள் பிறந்துள்ளன.

தலைவனைப் பிரிந்திருக்கும் நிலையில் தலைவி தன் ஆற்றாமையைக் கிளி, வண்டு, மேகம் முதலிய பொருள்களுள் ஒன்றை முன்னிலையாக்கித் தலைவன்பால் தூது விடுவதாக அமைந்தவை தூது இலக்கியங்கள்.

உலா, காதல், தூது முதலியவற்றின் கூட்டாக 'மஞ்சரி' என்னும் இலக்கியவகை தோன்றியுள்ளது. சேலம் தாலந் தீர்த்த செழியன் மஞ்சரி இவ்வகை இலக்கியங்களுள் ஒன்று.

மகளிரின் உறுப்பு நலன் முதலியவற்றைச் சிறப்பித்துப் பாடுவதும் உண்டு. புகழ்ச்சிமாலை, பெருமகிழ்ச்சி மாலை, மங்கல வள்ளை, தாரகை மாலை, நயனப்பத்து, பயோதரப் பத்து என்பன மகளிரின் அழகு, குணம், உறுப்பு முதலியவற்றைச் சிறப்பித்து வெவ்வேறு அமைப்புகளில் செய்யப்பெறுவதாம். ஆண்பாலர் பெண்பாலர் உறுப்புகளை அடி தொடங்கி முடியளவும் முடிதொடங்கி அடியளவும் புகழ்ந்து பேசுவதும் உண்டு. இவற்றை முறையே பாதாதிகேசம், கேசாதிபாதம் என்பர்.

தம்முடைய உறுப்புகளைத் தெய்வ வழிபாட்டில் ஈடுபடுமாறு பாடப்பெறும் நூல் 'அங்கமாலை' எனப்படும். 'தலையே

நீ வணங்காய்' எனத் தொடங்கும் திருநாவுக்கரசரின் திருப் பதிகம் 'திரு அங்கமாலை' என்று போற்றப்படுகிறது.

மகளிரின் விளையாட்டாகிய ஊஞ்சல், கழல் பந்தாடல், அம்மானை, குரவை முதலியவற்றைப் பொருளாகக் கொண்டும் இலக்கியங்கள் எழுந்துள்ளன மகளிரின் விளையாட்டு அடிப்படையில் மாணிக்கவாசகர் பல பத்துகள் அமைத்துள்ளார். மகளிர் மார்கழி நீராடிப் பாவை நோன்பு நோற்பது பற்றிய பாட்டு பாவைப்பாட்டு ஆகும். ஆண்டாளின் திருப் பாவையும் மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் இங்குக் கருதத்தக்கன.

அகப்பொருள் பற்றியும் ஆடவர் பெண்டிர் பற்றியும் சிற்றிலக்கியங்கள் எழுந்தது போலவே அரசர் முதலியோரது சிறப்புக்களைப் பேசும் புறப்பொருள் சிற்றிலக்கியங்களும் பல. அவற்றுள் முற்படக் குறிப்பிடத்தக்கது தசாங்கம் ஆம். அரசனுடைய மலை, நதி, நாடு, ஊர், தார், குதிரை, யானை, கொடி, முரசு, செங்கோல் என்னும் உறுப்புகளைச் சிறப்பித்துப் பத்துப் பாடல்கள் அமைவது தசாங்கப் பத்தாம். அரசர் மேல் பாடப்பெற்ற தசாங்கத்தினைத் தெய்வத்தின் மேலும் பாடலாயினர். மாணிக்கவாசகரின் திருத்தசாங்கம் இங்குக் கருதத்தக்கது. உலா, காதல், மஞ்சரி முதலியவற்றிலும் தசாங்கம் ஓர் அங்கமாய் அமைவதுண்டு. இச் சின்னங்கள் பற்றி முப்பதிற்குமேல் பாடல்கள் அமையுமானால் அதனைச் 'சின்னப்பூ' என்று குறிப்பிடுவர்.

அரசனுடைய நாடு, ஊர், படை முதலியன குறித்து விருத்தப் பாடலால் பாடப்பெறுவது 'விருத்தம்' என்னும் இலக்கியமாம் ஏதேனும் ஒரு பொருள் மேல் பாடப்பெறும் விருத்தங்கள் அவ்வப் பொருள்களின் பெயர்களைப் பெறும் நரி விருத்தம், மயில் விருத்தம், கோம்பி விருத்தம் முதலியன குறிப் பிடத்தக்கன.

அரசனுடைய களப்போர் குறித்துச் சிறப்பித்துப் பாடப் படுவது 'களவழி' என்று பெயர் பெறும். களவழி நாற்பது என்னும் நூல் இத்தகையது. இதுவே பின்னாளில் பரணி இலக்கியமாக வளர்ந்துள்ளது. அரசனுக்கு முன்னாளில்பாடப்பெற்ற 'துயிலெடை நிலை' யின் அடிப்படையில் வந்த இலக்கியமே திருப்பள்ளியெழுச்சி.

தலைவன் ஒருவனுடைய பெயரையும் ஊரையும் போற்றி வெண்பாவினால் அமையும் நூல்கள் பெயர் நேரிசை, பெயரின்னிசை, ஊர் நேரிசை, ஊரின்னிசை என்று பெயர் பெறும். இதேபோல் பின்னாளில் ஒரு தலைவனின் ஊரைச் சிறப்பித்துச் 'சிலேடை வெண்பா' என்னும் இலக்கிய வகை தோன்றியுள்ளது.

மக்களுடைய தொழில் அடிப்படையில் மக்களைப் பற்றிய இலக்கியமாகக் குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம், குளுவ நாடகம் போன்றவை பிறந்துள்ளன. விலாசம் என்னும் பெயரில் அமைந்த நாடக நூல்கள் பலவாகும். அகப்பொருள் பற்றிய விலாசங்கள் இவற்றின் வேறாகும். சமுத்திரவிலாசம், சந்திரவிலாசம், பூதரவிலாசம் போன்றவை அகப்பொருள் இலக்கியங்களாம். கூத்துத் தொடர்பாக 80க்கும் மேற்பட்ட இலக்கிய வகைகளை அடியார்க்குநல்லார் எடுத்துக்காட்டியுள்ளார்.

பத்து, நூறு முதலிய எண் தொகைகளில் எழுந்த இலக்கியங்களோ பலப்பல. சங்க நூல்களுள் ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து என்பவை குறிப்பிடத்தக்கவை.

பத்துப் பாடல்கள் கொண்டது 'பதிகம்' எனவும், நூறு பாடல்கள் கொண்டது 'சதகம்' எனவும் பெயர்பெறுகின்றன. தேவாரம், திருவிசைப்பா முதலிய பக்திப்பனுவல்கள் பதிகப் பாமாலைகளே. திருவாசகதில் திருச்சதகம் உள்ளது. பக்தி வழிச் சதகங்களன்றி அறம் பற்றிக் குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், தண்டலையார் சதகம் முதலிய பல சதக நூல்கள் உள. நாட்டுவரலாற்றை உள்ளடக்கிய பாண்டிமண்டல சதகம் தொண்டை மண்டலசதகம் போன்ற நூல்களும் பல உள.

அந்தாதியாகப் பாடல்களை அமைத்துப் பாடுவது ஒரு பழைய மரபே. பத்துப்பாடல்கள் கொண்ட அந்தாதி பதிற்றந்தாதி எனவும், நூறு பாடல்கள் கொண்ட அந்தாதி நூற்றந்தாதி எனவும் வழங்கப்படும். பதிற்றந்தாதி பத்துக் கொண்டு அமைவது பதிற்றுப்பத்து அந்தாதியாம். இன்னும் ஒலியலந்தாதி, நீரோட்டக யமகவந்தாதி (இதழகலந்தாதி) என்னும் வகைகளிலும் இலக்கியங்கள் உள.

பொருள் வேற்றுமை, பாவகை, பாடல் தொகை, முதலிய வற்றால் வெவ்வேறு பெயர்களில் அமைந்த அந்தாதி அமைப்புடைய இலக்கிய வகைகளும் பலவாம். அவையாவன : அட்டமங்கலம், நவமணிமாலை, ஒருபா ஒருபஃது, இரட்டைமணி மாலை, இணைமணிமாலை, மும்மணிமாலை, மும்மணிக் கோவை, நான்மணிமாலை, பன்மணிமாலை, கலம்பகமாலை முதலியனவாம். வருக்க எழுத்துகளை முதலிற் கொண்டு பாடப்பெற்ற இலக்கிய வகைக்கு வருக்கமாலை, வருக்கக் கோவை என்று பெயர் சூட்டியுள்ளனர்.

கலம்பகம் என்பது அகம் புறம் பற்றிய பொருள்களும் பல் வேறு வகையான பாக்களும் கொண்ட ஒருவகைக் கலவை இலக்கியமாம். ஒருபோகு, வெண்பா, கலித்துறை மூன்றையும் முதலுறுப்பாகக் கொண்டு கலம்பகங்கள் அமையும். புய வகுப்பு, அம்மானை முதலிய பதினெட்டு உறுப்புகள் இதில் இடம் பெறும். காலப்போக்கில் வளர்ந்து பெருகிய புதிய உறுப்புகளும் பல உண்டு.

சித்திரகவிகளும் சிற்றிலக்கியத்தின் பாற்படுவனவே. மடக்கு, ஏகபாதம், மாலைமாற்று, எழுகூற்றிருக்கை முதலிய சித்திரகவிகளைத் திருஞானசம்பந்தர் தம் தேவாரப்பதிகங் களில் அமைத்துப் பாடியுள்ளார். நிகண்டுகளும் அணி இலக்கண நூல்களும் பல்வேறு வகையான சித்திரகவிகள் பற்றியே விளக்கம் தருகின்றன. இவையெல்லாம் ஒருவகையான சொற் சிலம்பமான அமைப்புடையன. எனவே, இவற்றை உணர்ந்து தெளிவது அத்தனை எளிதன்று.

சங்க நூல்களாகிய எட்டுத்தொகை நூல்கள் பல புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்புகள். பத்துப்பாட்டும் பதினெண் கீழ்க்கணக்கும் பலர் பாடிய நூல்களின் தொகுப்புகள், தேவாரத்திருமுறைகள், திருவிசைப்பா, பதினொராந்திரு முறை, திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றையும் நூல் தொகுப்பு கள் என்றே சொல்லுதல் வேண்டும்.

சங்ககாலத் தொகை நூல் போல 14 ஆம் நூற்றாண்டு வரையில் தோன்றிய பல புலவர்கள் பாடிய நூல்களிலிருந்து பாடல்களைத் திரட்டித் தருவது புறத்திரட்டு. இத்தொகை நூல் வழி எத்தனையோ பல நூல்கள் பிறந்து நிலைபெறாது மாய்ந்த வரலாறுகள் நமக்குத் தெரியவருகின்றன. இது போன்று பின்னாளில் எழுந்த திரட்டு நூல்களும் பலவாகும். இவற்றிலும் பல்வேறு வகைச் சிற்றிலக்கியக் கூறுகள் இடம் பெற்றிருப்பது கண்டு மகிழத்தக்கது.

---

தமிழர்கள் தொன்மை சரித்திரகாலத்தையுங் கடந்து அதற்கு மேலுந் துருவிச்சென்று நீண்டுபோவது. அதை ஒரு கால எல்லைக்குள் கட்டுப்படுத்த இயலாது.

— திரு. வி. க.

# 8. கவிதையும் உரைநடையும்

## அ. கவிதை

இலக்கிய வகைகள் காலந்தோறும் சமுதாயச் சூழலுக்கேற்ப மாறியும் புதுமையடைந்தும் வந்துள்ளன. முற்காலத்தில் தனிநிலைப் பாடல்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் முதலிய செய்யுள் வடிவ இலக்கிய வகைகள் சிறப்புற்றிருந்தன.

19ஆம் நூற்றாண்டில் உரைநடை இலக்கியங்கள் பேரளவில் தோன்றலாயின. ஆனால் அதே சமயத்தில் பழமையான இலக்கிய வகைகளைப் போற்றிய புலவர் பெருமக்களும் இருந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கவிச்சக்கரவர்த்தியென விளங்கிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1815 - 1876) பழைய மரபையொட்டிச் சிற்றிலக்கியங்கள் பல பாடினார். அவர் காலத்தில் வாழ்ந்துவந்த இராமலிங்க அடிகளார் (1823-1874) எளிமையான முறையிலும் மக்களின் இசைப்பாடல் வடிவங்களைப் பின்பற்றியும் பாடல்கள் பாடினார். கோபாலகிருஷ்ணபாரதி இசைத்தமிழ்க் கீர்த்தனைகள் பல பாடினார்.

செல்வர்கள், நிலக்கிழார்கள் ஆகியோரைப் போற்றியும் அவர்கள் கேட்டு மகிழும் பாடல்களையும் புலவர்கள் பாடிவந்தனர். கேட்போரை மருட்டும் சொல்லணிகளும் சித்திர கவிகளும் பாடப்பட்டன. அத்தகைய நிலையை மாற்றிக் கவிதை

---

எழுதியவர் நா. செயராமன்

பினை மக்கள் நடுவே பரவும் வகையில் எளிமைப்படுத்தினார் வள்ளலார். புலவர் ஏற்கத் தயங்குமளவிற்கு மிக எளிமையான முறையில் பாடினார் கோபாலகிருஷ்ண பாரதியார்.

## பாரதியார் (1882-1921)

இத்தகைய இலக்கியப் பின்னணியில் விடுதலை வேட்கை நாட்டில் வேரூன்றிய காலத்தே பாரதியார் தோன்றினார். நாட்டுவிடுதலை, சமுதாய முன்னேற்றம், பக்தி ஆகியவற்றை பாடுபொருள்களாகக் கொண்டு எளிய முறையில் கவிதை பாடினார். இவரது வாழ்க்கை எட்டயபுரம் ஜமீன்தார் அரண்மனையில் தொடங்கிய போதிலும் பின்னர் மாறியது. இயல்பாகவே விடுதலை மனப்போக்குடைய பாரதியார் நாட்டு விடுதலை உணர்வைத் தம் பாடல்களில் பாடியதில் வியப்பில்லை. விடுதலையைத் தேவியாகவும் பாரதத்தைத் தேவியாகவும் உருவகித்துப் பாடுகிறார். நாட்டுத் தலைவர்களைப் போற்றிப் பாடியுள்ளார்.

நாடகக் கூற்றுக்கள் போலவும் சில பாடல்கள் அமைந்துள்ளன. இலங்கைத் தமிழர் துயரைப் பாடுவதும் ருசியப் புரட்சியைப் பாடுவதும் குறிக்கத்தக்கன. பாஞ்சாலியாகப் பாரத தேவியை உருவகப்படுத்திப் பாடுகிறார். அக்காலத்துச் சமுதாயக் கொடுமைகளைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல் வருந்திப் பாடுகிறார். புதிய பாரத சமுதாயம் படைக்க விரும்பிப் பாடுகிறார். புதுமைப் பெண்களைப் படைக்கிறார்.

அரவிந்தர் முதலான சான்றோர் கூட்டுறவால் ஞான நிலையை அறிந்து பாடும் வாய்ப்புப் பெற்றார். இவரது குயிற் பாட்டில் வேதாந்தக்கருத்து உருவகமாக அமைந்துள்ளது.

பாடல், உரைநடை ஆகிய இரண்டு வடிவங்களையும் பயன்படுத்திய பாரதியார் இரண்டும் கலந்த வசனகவிதைக்கும் தோற்றுவாய் செய்தார்.

இடைக்காலக் கம்பர் போல இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய ஞாயிறாகப் பாரதி விளங்கித் தமிழிலக்கியம் புதுமை வடிவம் பெற்றிலங்கச் செய்தார்.

## பாரதிதாசன்

'புரட்சிக் கவிஞர்' எனப்படும் பாரதிதாசனின் (1891-1964) இயற்பெயர் கனக சுப்புரத்தினம். பாரதியின் நட்பையும் அன்பையும் பெற்ற இவர் பகுத்தறிவு இயக்கத்தின் பாசறைச் சங்கென முழங்கினார். சக்தியைப் பற்றியும் தேசியத்தைப் பற்றியும் தொடக்கத்தில் பாடிய போதிலும் இவரது கவிதை வீறுகொண்டெழுந்தது பிற்காலத்திலேதான். அரசியற் கட்சிகளின் பின்னணியும் இவருக்கிருந்தது.

இவருடைய கவிதைகளில் உணர்ச்சிப் புயல், புரட்சிக் கனல் தமிழ்த் தென்றல் ஆகியவற்றைக் காணலாம். இவரது பாடல்களில் சமுதாய மூடநம்பிக்கைகள் குறிப்பாகச் சாதிப் பிரிவும், சமயமும் கடுமையாகச் சாடப்படுகின்றன; விதவை மறுமணம் பெரிதும் வற்புறுத்தப்படுகின்றது; சமய மறுப்பு வாதம் பாடல்களெங்கும் காணப்படும். பொதுவுடைமை போற்றப்படும்; ஒருலக மனப்போக்கு, போரற்ற உலகு ஆகியவை காட்டப்படுகின்றன. அழகின் சிரிப்பில் இயற்கை அழகை எழிலுறப் பாடுகிறார். இதற்கு முன்னோடியாக அமைந்தது பரிதிமாற் கலைஞரின் தனிப்பாசுரத் தொகை என்பர்.

புரட்சிக்கவி, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், வீரத்தாய், எதிர்பாராத முத்தம், காதலா கடமையா?, கடல் மேல் குமிழிகள், தமிழச்சியின் கத்தி, பாண்டியன் பரிசு, குறிஞ்சித் திட்டு முதலிய கதை தழுவிய பாடல்களைப் பாடியுள்ளார். குடும்ப விளக்கும் இருண்ட வீடும் முரண்பட நின்று குறிக்கோள் குடும்பத்தைக் காட்டுகின்றன. இசையமுது, தமிழியக்கம் ஆகியன தமிழின் உயர்வுக்கு வழி வகுப்பனவாய் அமைந்துள.

இவரது பாடல்களில் சாடு மொழிகளின் கடுமைபுயலாக வீசக் காணலாம். பழந்தமிழர் வீரமும் காதலும் போற்றப்படுகின்றன. எளிய விருத்தங்கள், சிந்து மெட்டுக்கள், கண்ணிகள் ஆகியவை இவர் பயன்படுத்திய பா வடிவங்களாகும். தாலாட்டு

எனும் இலக்கிய மரபையும் இவர் போற்றுகிறார். பாரதி தேசியக் கவிஞராகப் போற்றப்படுவதுபோலப் பாரதிதாசன் புரட்சிக் கவிஞராகப் போற்றப்படுகிறார்.

## தேசிகவிநாயகம் பிள்ளை (1876 - 1954)

விடுதலைப் போரும் பகுத்தறிவு இயக்கமும் தமிழகத்தே உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்திய போதிலும் அவற்றால் பாதிக்கப்படாமல் அமைதியான கவிதை பாடியவர் கவிமணி. அதற்கு அவர் வாழ்ந்த நாஞ்சில் நாடே காரணமெனலாம்.

நாஞ்சில் நாட்டு மக்களிடையே இருந்த மருமக்கள் தாய முறையை அங்கத முறையில் சாடுகிறார் தமது நாஞ்சில் நாட்டு **மருமக்கள் வழி மான்மியம்** எனும் நூலுள்.

தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்த கவிமணியவர்கள் குழந்தைப் பாடல்கள் சிறப்புறப் பாடியதில் வியப்பில்லை. **மலரும் மாலையும்** தொகுப்பில் அவற்றைக் காணலாம். சமுதாயச் சீர்திருத்தம் பற்றிய பாடல்களும் போற்றிப் பாடல்களும் இரங்கற் பாடல்களும் இத்தொகுப்பில் உள' பெண்ணின் பெருமை, பொதுவுடைமைக் கொள்கை, மதுவிலக்கு, தீண்டாமை ஆகியவற்றை இவரது பாடல்களில் காணலாம்.

எட்வின் ஆர்னால்ட் எனும் புலவர் ஆங்கிலத்தில் பாடிய ''*Light of Asia*'' எனும் நூலைத் தமிழில் **ஆசிய ஜோதி** எனும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். பாரசீகக் கவிஞர் **உமர்கய்யாம்** பாடல்களின் மொழிபெயர்ப்புள் 'பிட்ஜ் ஜீரால்ட். என்பாரின் மொழிபெயர்ப்பையும் சுவாமி கோவிந்த தீர்த்தரின் மொழிபெயர்ப்பையும் அடியொற்றி அழகிய எளிய தமிழ்நடையில் மொழிபெயர்ப்பெனும் உணர்வு தோன்றாத வகையில் படைத்துள்ளார்.

தேசிக விநாயகம்பிள்ளையின் **கீர்த்தனங்கள்** அவரது இசைத்தமிழ்ப் பாடல்களாகும். நாட்டுப் பாடல்களின் இசை வடிவங்களைப் பயன்படுத்திப் பல பாடல்கள் பாடியுள்ளார்.

## நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

பாரதியைப் போலவே தேசியத்தையும் தமிழினத்தையும் பாடியவர் நாமக்கல்லார். **தமிழன் இதயம்** என்பது தமிழினப் பெருமையைப் பாடும் பாடல்களைக் கொண்டுள்ளது. **சங்கொலி, தமிழ்த்தேர்** முதலிய தொகுப்புக்களிலும் இவரது சிறப்பான பாடல்கள் உள. **காந்தி அஞ்சலி** யில் காந்தியக் கருத்துக்களையும் காந்தியின் புகழையும் பாடுகிறார்.

தமிழ்நாட்டின் அரசவைப் புலவராகவும் நாமக்கல் கவிஞர் இருந்தார். பகுத்தறிவு இயக்கத்திற்கு எதிரான கோட்பாடுடையவர் இவர். **அவனும் அவளும்** என்பது இவர் பாடிய கதையாகும். இவரது பாடல்கள் எளிய நடையிலமைந்தனவாகும்.

## சுத்தானந்த பாரதியார்

விடுதலைப் போராட்டக் காலமுதல் இன்றுவரை எண்ணற்ற இலக்கியங்களைச் சலிப்பின்றி எழுதி வருகிறார். **பாரத சக்தி** இவர் படைத்துள்ள காப்பியமாகும். நாட்டுணர்ச்சி, பக்தி, சமுதாயம் ஆகியவை பற்றிப் பல்வேறு இலக்கிய வடிவங்களைப் படைத்துள்ளார்.

திரு. வி. க., மறைமலையடிகள் ஆகியோர் பழைய மரபில் பாடல்கள் பாடியுள்ளனர். காந்திய நெறியில் நம்பிக்கை கொண்டு 1918 முதல் பல கவிதை நூல்கள் எழுதி வருகிறார் முருகேச பாகவதர். அசலாம்பிகை அம்மையார் மூவாயிரத்திற்கு மேற்பட்ட பாடல் கொண்ட **காந்திபுராணம்** எனும் காப்பியம் பாடியுள்ளார்.

வாழும் கவிஞர்களுள் கண்ணதாசன் உணர்ச்சியும் சொல் வளமுமுடைய கவிதை புனைவதில் வல்லவர். திரையிசைப் பாடல்களே மிகுதியாகப் பாடியுள்ள போதிலும் **மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி** முதலிய கதைப் பாடல்களும் புனைந்துள்ளார். பழந்தமிழ் இலக்கியச் செல்வாக்கும் நாட்டுப்புறப் பாடல்களின் செல்வாக்கும் இவர் பாடல்களில் மிகுதியாக

உள்ளன. சுரதா பாரதிதாசனைப் பின்பற்றிக் கவிதை புனைந்தார்; உவமைக் கவிஞர் என்று பாராட்டப்பெற்றார்.

கொத்தமங்கலம் சுப்பு கிராமத்துத் தமிழில் கவிதை புனைந்தார். காந்திமகான் கவிதை இம்முறையில் அமைந்தது. திருலோக சீத்தாராம், துறைவன், என்.எஸ். சிதம்பரம், எஸ்.டி. சுந்தரம், கு.ச. கிருஷ்ணமூர்த்தி, புத்தனேரி சுப்பிரமணியம் ஆகியோர் கவிதைகளும் குறிப்பிடத்தக்கன. வாணிதாசன், புதிய சமுதாயம் பற்றியும் இயற்கையைப் பற்றியும் பாடியுள்ளார்; கம்பதாசன் பாடல்களும் அத்தகையனவே.

பழைய யாப்பில் புரட்சிக் கருத்துக்களைப் பாடுகிறார் சிதம்பர ரகுநாதன். தமிழ்ஒளி, பாரதிதாசன் பரம்பரையைச் சார்ந்தவர் என்று கருதப்படுகிறார். கவிஞர் முடியரசன் பாடிய பூங்கொடி இக்காலத் தமிழ் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்ட காப்பியம்; மணிமேகலையை அடியொற்றி இது எழுதப்பட்டுள்ளது. இவரது காவியப்பாவை என்னும் தொகுதி குறிப்பிடத்தக்கது. சோமு (இளவேனில், வெண்ணிலா, பொருநைக் கரையிலே, தாரகை), தமிழ் அழகன் (கலைச்செல்வி, அன்னையின் கூத்து, பிறைநிலா) ஆகிய கவிஞர்களும் குறிக்கத்தக்கவர்கள். இயற்றமிழும், இசைத்தமிழும் பாடியுள்ளார் பெ. தூரன்.

இரா. இராகவையங்காரின் பாரிகாதை, புலவர் குழந்தையின் இராவண காவியம், ஜகவீரபாண்டியனின் வீரபாண்டியன் ஆகியவை இக்காலத்தில் எழுந்த குறிக்கத்தக்க காவியங்கள் ஆகும். நாவலர் பாரதியார் 1936 இல் வெளியிட்ட மாரிவாயில் மிகச்சிறந்த தூது இலக்கியமாகும். பரிதிமாற் கலைஞர் பாடிய தனிப்பாசுரத் தொகுதி பேலைநாட்டுப் பாடல் வகையில் இயற்கை முதலிய பல்வேறு பாடல்கள் கொண்ட தொகுப்பாகும்.

சாலை இளந்திரையன், கோமுகிவேலன், தமிழழகன், சிற்பி பாலசுப்பிரமணியன், ஈரோடு தமிழன்பன், மின்னூர் சீனிவாசன் ஆகியோர் இயற்கை அழகைப் பாடியுள்ளனர்.

அறிவொளி ஒலிநயமும் புதுமைக் கருத்தும் உடைய கவிதைகளைப் படைத்துள்ளார். தமிழ்ஒளி, புத்தர் பிறந்தார் எனும் சிறு காப்பியம் பாடியுள்ளார். அது முற்றுப்பெறவில்லை.

கி.வா. ஜகந்நாதன், அ. சீனிவாசராகவன் இருவரும் பழமை மரபை ஒட்டிக் கவிதை புனைந்துளர். கலைஞர் கருணாநிதி, சேதுராமன், அப்துல் ரகுமான், சுந்தரம், மீரா ஆகியோர் கவிதைகள் குறிக்கத்தக்கவை

## புதுக்கவிதை

பாரதியாரால் தொடங்கப்பட்ட வசனகவிதையே இதன் தோற்றுவாயாகும். தாகூரும் விட்மனும் பாரதிக்கு இதில் வழிகாட்டினார்கள் என்பர்.

பாரதிக்கு அடுத்து ந பிச்சமூர்த்தி, கு.ப.ரா., வல்லிக் கண்ணன் ஆகியோர் புதுக்கவிதை பாடும் முயற்சியில் ஈடுபட்டனர். அ. சீனிவாசராகவனும் இத்தகைய கவிதைகள் பாடியுள்ளார்.

1959 சனவரியில் சி.சு. செல்லப்பா தொடங்கிய எழுத்து இதழ் புதுக்கவிதை வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக அமைந்தது.

புதுக்குரல்கள் இவ்வகையில் வெளிவந்த முதல் தொகுப்பாகும். உருவத்திலும் உள்ளடக்கத்திலும் உத்திகளிலும் புதுமை உடையதாக விளங்கியது புதுக்கவிதை. சி. மணி, சுந்தரராமசாமி, டி. கே. துரைசாமி, மீரா, நா. காமராசன், மு. மேத்தா ஆகியோர் குறிக்கத்தக்க புதுக்கவிஞர்கள். புதிய இதழ்கள் பல தோன்றி இக்கவிதை வளரப் பெரிதும் துணை நிற்கின்றன. இன்று புதுக்கவிதை தமிழில் நிலைத்த இடத்தைப் பிடித்துள்ளதெனலாம்.

இக்காலத் தமிழ்க் கவிதை சங்கக் கவிதை போலச் சமயச் சார்பின்றி அமைந்துளது. சமுதாய, தனிமனிதச் சிக்கல்களை மையமாகக் கொண்டுள்ளது. விடுதலை வேட்கை, நாட்டுப் பற்று, தமிழ்மொழிப் பற்று, இனப்பற்று ஆகியவை இக்

காலத்தே புதிதாய்த் தோன்றிப் பாடுபொருள்களாயின. காந்தியம், பொதுவுடைமை எனும் தத்துவங்கள் பெரிதும் போற்றப்படுகின்றன. பெண்களுக்குச் சமஉரிமை அளித்தல், விதவை மறுமணம் முதலியவை வலியுறுத்தப் படுகின்றன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் சங்கப் புலவர் கருத்துப்போலவே ஒருலக மனப்போக்கு காணப்படுகிறது. இயற்கைக்காகவே இயற்கையை வருணிப்பது இக்கவிதைகளில் காணப்படும்புது நிலையாகும் பழந்தமிழிலக்கிய வகைகளான காப்பியம், சிற்றிலக்கியங்கள் (தசாங்கம், நான்மணிமாலை, பள்ளியெழுச்சி, பஞ்சகம், தூது, நவரத்தினமாலை, பிள்ளைத்தமிழ், பாவை போன்றன) ஆகியவை ஓரளவு இடம்பெற்றாலும் தனிநிலைப் பாடல்களே சிறப்பிடம் பெற்றன.

புதிய யாப்புக்களும் பழைய யாப்பகன்ற புதுக்கவிதை வடிவமும் இசை வடிவங்களும் இக்காலத்தே இடம்பெற்றன. பழைய புராணங்கள் புதிய பொருளுடனும் புதிய கோணத்துடனும் புதிய முடிவுகளுடனும் பாடப்பட்டன.

### ஆ உரைநடை

இருபதாம் நூற்றாண்டில் உரைநடை சிறப்பிடம் பெற்றுள்ளது.

## உரைநடையின் தோற்றம்

தொல்காப்பியர் செய்யுளியலில் ஏழுவகை யாப்பினைக் கூறுகிறார். பாட்டு, உரை, நூல், பிசி, வாய்மொழி, அங்கதம், முதுசொல் என்பன அவை. அவற்றுள் பாட்டு மட்டும் அடிவரையறை உடையது என்றும் ஏனையவை அடிவரையறை அற்றன என்றும் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

இன்று உரைநடைக்கும் கவிதைக்கும் உள்ள அடிப்படையான வேறுபாட்டினை ஆராய்கின்ற பொழுதும் அடிவரையறையே வேறுபாடாகக் கூறப்படுகிறது. நுவல் பொருள்,

உத்தி, அணி, நடை ஆகியவற்றில் இரண்டிற்கும் சிறிதே வேற்றுமை இருந்தாலும் அடிப்படையான வேற்றுமையாக அடிவரையறையையே கொள்ளலாம்.

உரைபற்றிக் கூறும்போது பாட்டிடை வைத்த குறிப்பு, பாவின்றெழுந்த கிளவி, பொருளொடு புணராப் பொய்மொழி, பொருளொடு புணர்ந்த நகைமொழி என்று நான்கு வகைப் படுத்திக் கூறுகிறார். பாட்டிடைவைத்த குறிப்பு என்பது பாட்டிற்கு இடையிடையே வரும் உரைநடை என்பதையும் பாட்டிற்கு எழுதப்பட்ட உரை என்பதையும் குறிக்கின்றது.

எனவே (1) தொல்காப்பியர் காலத்திலேயே உரை இருந்தது (2) பாட்டுக்கும் உரைக்கும் உள்ள வேறுபாடு அடிவரையறையே (3) உரை நால்வகைப்படும். (4) உரை என்பது உரைநடை (Prose), உரை (Commentary) என்னும் இரு பொருளையும் குறித்தது எனும் செய்திகளை அறியலாம்.

உரை என்பது பாட்டுக்குக் கூறப்படும் கருத்து, அடிவரையறையின்றித் தொடர்ந்து நடப்பது என்னும் இரு பொருளையும் தொடக்கத்தில் குறித்தது. ஆயின் காலப்போக்கில் உரை என்பது ஒரு பொருளையும் (Commentary) உரைநடை என்பது மற்றொரு பொருளையும்(Prose)குறிக்கத் தொடங்கின. 'உரை வகை நடையே' என்ற தொல்காப்பியத் தொடரே உரைநடை எனும் சொல்லாக்கத்திற்கு அடிப்படையாகும்.

தொல்காப்பியர் கால முதல் உரைநடை வடிவம் இருந்த பொழுதிலும் செய்யுள் வடிவமே தலைவியென்ற சிறப்பு நிலையில் அமைய உரைநடை தோழியாய் அமைந்திருந்ததெனலாம். எட்டுத்தொகைப் பாடலடிக்குறிப்பில் உள்ள தொடர்கள், சிலப்பதிகாரத்திற்கிடையில் வரும் தொடர்கள் அக்கால உரைநடைக்குச் சான்றுகளாகும்.

இறையனார் களவியலுரையில் உரைநடை பேரளவில் இடம்பெற்றுள்ளது. பாடலுக்கு உரையாக அஃது அமைந் துள்ளபோதும் பாடல் போன்றே கருதும் அளவுக்கு அமைந்

துள்ளது. அவ்வுரையினை மாற்றியமைத்தால் ஆசிரியப்பா வாக அமைக்க இயலுமென்பர்.

பின்னர் இலக்கண, இலக்கியங்கள் காலப் போக்கில் புரிந்து கொள்ளச் சற்று கடினமான நிலையில் உரையாசிரியர் கள் தோன்றினர்.

## உரைநடையின் வளர்ச்சி

தமிழகம் போந்த ஐரோப்பியர் தமது கிறித்துவ சமயத்தை இங்குள்ள மக்களிடையே பரப்ப முனைந்தபோது இங்குள்ள செய்யுள் வடிவம் அவர்களுக்குப் பெரிதும் தொல்லையைத் தந்தது. எனவே அவர்கள் தமிழில் உரைநடை வடிவத்தைக் கொண்டுவர வேண்டுமென விரும்பினர். அவ்விருப்பத்தின் விளைவே தமிழில் தனியான உரைநடை வடிவத்தின் வளர்ச்சி யாகும். 'தமிழில் தனி உரைநடை நூல் ஐரோப்பியரால் முதன் முதல் உண்டாக்கப் பட்டது என்பது மறுக்க முடியாத உண்மை என்பார் மயிலை சீனி வேங்கடசாமி (கிறித்துவமும் தமிழும், பக். 22)

## உரைநடைநூலின் தோற்றம்

முதலில் வீரமா முனிவரே உரைநடைநூல் எழுதினாரென்று கூறப்படுவதை மறுத்து கி.பி.1577 இல் எழுதப்பட்ட கிறித்துவ வேதோபதேசம் என்னும் நூலேமுதல்தமிழ் உரைநடை நூலாக இருக்க வேண்டும் என்பார் மயிலை சீனி வேங்கடசாமி. அதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

கி.பி. 1575 ஆம் ஆண்டில் கோவா நகரில் கூடிய இயேசு சபை மறைமாநிலக் கூட்டத்தில் செய்த முடிவின்படி தமிழ் மொழியில் கிறித்துவத் திருமறையின் கொள்கைகளைக் கூறும் தமிழ் நூலொன்றும் இல்லாக் குறையைப் போக்கும்படி ஆன் றிக்கு அடிகளார் பணிக்கப்பட்டார் என்றும் அதன்படி அவர் தம்பிரான் வணக்கம், கொம்பேசியானாயரு, கிரீசித்தியானி வணக்கம், ஓர் அடியார் வரலாறு ஆகிய போர்த்துக்கீசிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து நூலாகத் தந்தார் என் றும் கூறுவர்.

## அச்சுக்கலையின் தோற்றம்

பனை ஓலையும் எழுத்தாணியுமே எழுது பொருளாக இருந்தமையால் எதையும் சுருக்கமாகச் செய்யுள் வடிவில் தர வேண்டிய சூழல் இங்கு நிலவியது. தமிழ் நூல்களை அச்சிட வேண்டுமெனும் எண்ணத்தை ஏற்படுத்தியவர்கள் ஐரோப்பியர்களே.

கி.பி. 1577இல் எழுதப்பட்டதாகக் கூறப்பட்ட கிறித்துவ வேதோபதேசம் என்னும் நூலே முதலில் அச்சிடப்பட்ட தமிழ் நூல். அது வைப்புக் கோட்டை என்னும் ஊரில் அச்சிடப் பட்டதென்பர் (கிறித்துவமும் தமிழும்,பக். 35).

இந்திய மொழிகளில் முதன்முதலில் தமிழ் எழுத்துக்களிலே அச்சிடும் முயற்சி கி. பி. 1577இல் நடந்ததென்பார் மு. வ. (தமிழ் இலக்கியவரலாறு, பக். 225). ஆயின் 1554இல் லிஸ்பனில் (லூசோ தமிழ்ச் சமய வினாவிடை (Luso Tamil Catechism) எனும் நூலே முதலில் அச்சிடப்பட்டதாகக் கூறுவர். (மா. சி. சம்பந்தன், அச்சுக்கலை).

தத்துவபோதக சுவாமியவர்கள் (1577-1656) பல தமிழ் உரைநடை நூல்களை எழுதினார். அடுத்து வீரமாமுனிவர் 1680-1742) தமிழ் மரபைத் தழுவிக் காப்பியம், சிற்றிலக்கியம் ஆகியவற்றைப் பாடியதோடு உரைநடை நூல்களும் எழுதினார்.

இவ்வாறு ஐரோப்பியரால் உரைநடை நூலும் அச்சுப் பொறியும் தமிழருக்கு அறிமுகமாயின.

## தமிழ் உரைநடை நூல்களின் வளர்ச்சி

பதினொராம் நூற்றாண்டில் தமிழில் உரைநடைநூல் தோன்றிய போதிலும் பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகே அது சிறப்புற்று வளரத் தொடங்கியது. அதற்குக் காரணம் கூறுவோர் அந்த இரண்டு நூற்றாண்டுகளும் அரசியல் குழப்பம் மிகுந்த நூற்றாண்டுகள்; ஆங்கிலேயர் ஆட்சி நிலையூன்றிய பிறகே தமிழ் உரைநடைநூல் வளரத் தொடங்கியது என்

பர். ஆயின் உரைநடை முதலில் வந்தாலும் அச்சுப்பொறி தமிழகத்தில் நிறுவப்பட்டதே தமிழில் உரைநடைநூல் வளரக் காரணமாயிருந்தது எனலாம்.

பின்னர்த் தமிழகத்தே அனைவரும் கற்கும் நிலை உருவாகியது. எனவே பாடநூல்கள் பல எழுதப்படவேண்டிய நிலை உருவாகியது. சென்னைக் கல்விச் சங்கம், சென்னைப் பாடசாலைப் புத்தக சங்கம் ஆகியவை தமிழில் உரைநடை நூல்களை அச்சிட்டன.

சங்க இலக்கியத்திற்குப் பிறகு சமயமே தமிழிலக்கியத்தைப் பெரிதும் வளர்த்துள்ளது. எனவே தமிழை, பக்தி மொழி என்பர். அதற்கேற்பத் தமிழில் உரைநடைநூல் தோன்றக் காரணமாய் அமைந்திருந்ததும் சமயம் பரப்ப வேண்டுமெனும் நோக்கமே ஆகும். அச்சுப் பொறியும் அந்த நோக்கத்தோடு தான் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

பிறகு தமிழிலக்கியத்தைப் படிப்போர் பரப்பு பெருகியது. கல்வியும், நூல் கிடைக்கும் வசதியுமே இதற்குக் காரணங்களாகும். இச்சூழலில் தமிழ் உரைநடை நூல்கள் வளரத் தொடங்கின.

## உரைநடைநூல் எழுதிய முதல் தமிழறிஞர்கள்

கி. பி. 1825இல் தாண்டவராயமுதலியார் பஞ்ச தந்திரக் கதையை மகாராஷ்டிரத்திலிருந்து மொழிபெயர்த்துத் தந்தார். தமிழ்க் கதைகளைத் திரட்டிக் கதாமஞ்சரி எனும் நூலை வெளியிட்டார். வீராசாமி செட்டியார் அடுத்து விநோதரசமஞ்சரி எனும் நூலை எழுதினார்

தமிழ்க் கவிதையில் எளிமையையும் இனிமையையும் மிளிரச்செய்த இராமலிங்க அடிகளார் (1823-1874) மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய உரைநடை நூல்களை எழுதினார். இவருடைய பாடல்கள் எளிமையாக இருக்க உரைநடை கடுமையான நடையில் அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது.

ஆறுமுக நாவலர் (1822-1876) இக்கால இலக்கிய உரை நடையின் தந்தை என அழைக்கப்படுவார். எளிய விழுமிய இலக்கணம் வழுவாத உரைநடை எழுதினார்.

பரிதிமாற் கலைஞர் (1870-1903) தனித்தமிழ் ஆர்வம் நிரம்பியவர்; தமிழ்மொழியின் வரலாறு, தமிழ்ப் புலவர் சரித்திரம் முதலிய உரைநடை நூல்களை எழுதினார். இவருடைய தமிழ் நடை கடுமை உடையதாக இருந்த போதிலும் ஒருவகை உயிரோட்டமுடையது என்பார் மு. வரதராசன். வேதநாயகம் பிள்ளை தொடக்க காலத்தில் உரைநடை வளர்ச்சிக்குத் தொண்டு செய்தவராவார். தமிழில் உரைநடை வளர வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே பிரதாப முதலியார் சரித்திரம் (1876) என்ற புதினத்தை எழுதியதாக அவர் கூறுவது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

ரா. இராகவையங்கார் (1870-1948) 'செந்தமிழ்' என்னும் இலக்கிய இதழின் ஆசிரியராக இருந்து இலக்கியக் கட்டுரைகள் பல எழுதினார். வஞ்சி மாநகர், நல்லிசைப் புலமை மெல்லியலார், தமிழ்மொழி வரலாறு எனும் நூல்களை எழுதினார்.

மு. இராகவையங்கார் (1878-1960) செந்தமிழின் ஆசிரியராக இருந்து பல கட்டுரைகள் எழுதினார்.

உ. வே. சாமிநாதையர் (1855-1942) தமது அனுபவங்களையும் இலக்கிய நயங்களையும் சுவைபடப் பல நூல்களாகத் தந்துள்ளார். மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் வரலாறு மிகச் சிறந்த படைப்பாகும். கண்டதும் கேட்டதும், பழையதும் புதியதும், நல்லுரைக் கோவை, நினைவு மஞ்சரி முதலியவை அவரது நூல்கள்.

மறைமலையடிகள் (1876-1950) தனித்தமிழ் இயக்கம் கண்டு தமிழில் புதிய உரைநடை உருவாகக் காரணமாக இருந்தார். இடைக்காலத்தில் தொடங்கிப் பெருவழக்குப் பெற்றிருந்த மணிப்பிரவாள நடைக்கு எதிரான இயக்கமாக இது விளங்கியது.

முதலில் கலப்புத் தமிழில் எழுதிவந்த இவர் 1916 முதல் தனித்தமிழில் எழுதத் தொடங்கினார். சைவ சமயப் பற்றும் தமிழார்வமும் உடைய இவர் உரைநடை நூல்கள் எழுதினார். ஆங்கிலம், வடமொழி, தமிழ் எனும் மும்மொழிப் புலமை உடைய இவர் வளமான நடையில் எழுதினார். இவருடைய நடை இலக்கிய நயம் உடையதாய் பிறமொழிச் சொல் பயிலாத தாய் இருந்தது. தமிழ் உரைநடை வரலாற்றில் இவரது பணி சிறப்புமிகு பணியாகும்.

மகிழ்நன் எனும் பெயர் பூண்ட க.ப. சந்தோஷம் ஆங்கிலக் கட்டுரைகளைப் பின்பற்றிக் கட்டுரைகள் பல எழுதினார். பூவை கலியாணசுந்தரர் (1854-1918), எஸ். சீனிவாசபிள்ளை (1871-1931) ஆகியோரது பணியும் குறிக்கத்தக்கது.

செல்வக்கேசவராய முதலியார் (1864-1921) தமிழ்ப் புலவர் பற்றியும் இலக்கியம் பற்றியும் பல உரைநடை நூல்கள் எழுதியுள்ளார். கே. வடிவேலுச் செட்டியாரின் (1863-1936) கட்டுரைகள் வியாச போதினி எனும் பெயரில் இரு தொகுதிகளாக உள. பூரணலிங்கம்பிள்ளை (1866-1947) தமிழ்க் கட்டுரைகள், மருத்துவன் மகள், தப்பிலி, கதையும் கற்பனையும் முதலான உரைநடை நூல்களை எழுதினார். கா. சுப்பிரமணிய பிள்ளை (1885-1945) திருஞானசம்பந்தர் முதலான சைவ சமயச் சான்றோர் வரலாறுகளை எழுதினார். ந.மு. வேங்கட சாமி நாட்டார் (1884-1944) கபிலர், நக்கீரர், வேளிர் வரலாறு முதலிய நூல்களையும் சில கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

பண்டிதமணி கதிரேசச்செட்டியார் (1831 – 1953) செறிவான நடையில் உரைநடைக் கோவை எனும் நூலினை எழுதியுள்ளார். வேங்கடராஜுலு ரெட்டியார், கபிலர் முதலிய நூல்களைப் புலமையின் ஆழம் புலப்பட எழுதியுள்ளார். சோமசுந்தர பாரதியார் (1879-1959) தமிழ்மொழிப் பற்று மிகக் கொண்டவர். தசரதன் குறையும் கைகேயி நிறையும், சேரர் தாயமுறை, நற்றமிழ் முதலிய பல உரைநடை நூல்கள் எழுதியுள்ளார். தமிழைக் காப்பதில் ஆர்வமுடைய இவரது நடை கடுமையானது.

வையாபுரிப் பிள்ளை (1891-1956) பழமையிலும் புதுமையிலும் ஆர்வமுடைய ஆராய்ச்சியாளர். இவருடைய இலக்கியத் திறனாய்வு நூல்கள் பல; ஆராய்ச்சி முறை போற்றத் தக்கதாக இருந்த போதிலும் முடிவுகள் கருத்து வேறுபாட்டிற்குரியனவாகும். இலக்கிய சிந்தனைகள், இலக்கிய தீபம், இலக்கிய உதயம், இலக்கிய மணிமாலை, இலக்கிய விளக்கம் முதலிய பல உரைநடை நூல்கள் எழுதியுள்ளார்.

டாக்டர் ரா.பி சேதுப்பிள்ளை (1896-1961) எளிய இனிய நடையில் கலையழகு மிளிரப் பல நூல்கள் எழுதியுள்ளார். எதுகை மோனை இவர் நடையின் சிறப்பு. இருபத்தைந்துக்கு மேற்பட்ட உரைநடை நூல்களை எழுதியுள்ளார். டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் (1907-1967) மிடுக்கான நடையில் முன்பனிக்காலம், தமிழோசை, தமிழ் காட்டும் உலகு, இளங்கோவின் இன்கவி முதலான பல நூல்களை எழுதியுள்ளார்.

திரு.வி.க. (1883-1953) எளிய நடை, சிறிய தொடர், சொற்பொழிவாற்றும் பாங்கு முதலியவற்றால் தமிழ் உரை நடைக்குச் சிறப்புச் சேர்த்தவர். இதழாசிரியராக இருந்ததாலும் தொழிலாளர் தலைவராக இருந்ததாலும் இவருக்கு இத்தகைய எளிய நடை வாய்த்ததென்பர். மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், முருகன் அல்லது அழகு, சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, பெண்ணின் பெருமை முதலியவை அவரது நூல்களிற் சில. இவரது முதல் நூலாகிய கதிரைவேற் பிள்ளைசரித்திரம் எனும் நூலில் உள்ள நடைக்கும் பிற்கால நூல்களில் உள்ள நடைக்கும் வேறுபாடும் வளர்ச்சியும் காணப் படுகின்றன. தமிழ் உரைநடை இவர் கைபட்டுத் தென்றலாய் தழவத் தொடங்கியதெனலாம்.

டாக்டர் தெ.பொ.மீ (1901-1980) பல்துறை அறிவு மிக்கவராகத் திகழ்ந்தவர். இவர், கானல்வரி, குடிமக்கள் காப்பி

யம், குலசேகரர் முதலிய பல நூல்களை எழுதியுள்ளார் நடை எளிமையாக இருந்த போதிலும் எளிதில் புரிந்துகொள்ள இயலாத சிந்தனையோட்டத்தை இவரது நூல்களில் காண லாம்.

டாக்டர் மு.வ. (1912-1974) தமிழ் உரைநடை மூலம் தமிழகத்தையே பிணித்தவரெனலாம். இலக்கியத் திறனாய்வு மட்டுமின்றிச் சமுதாயச் சிந்தனை பற்றிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார். தெளிவும் எளிமையும் இலக்கியத் தன்மையும் இவரது தனிச்சிறப்புக்கள். மயிலை சீனி வேங்கடசாமி சிறந்த ஆய்வுத் திறனும் வரலாற்றுணர்வும் கொண்டு பல நல்ல நூல் களைப் படைத்துள்ளார்.

இவர்களைத் தவிர இருபதாம் நூற்றாண்டு உரைநடை யாசிரியருள் குறிப்பிடத்தக்கோர் மிகப்பலர் உளர். அவருள் டாக்டர் மா.இராசமாணிக்கனார், சாமி சிதம்பரனார், மு.அரு ணாசலம், வெள்ளைவாரணர், அ.மு. பரமசிவானந்தம், வேங்கடராமச் செட்டியார், துரை. அரங்கசாமி. கா. அப்பாத் துரை, டாக்டர் வ.சுப. மாணிக்கனார், ந. சஞ்சீவி, டாக்டர் ம. பொ. சிவஞானம், டாக்டர் கு. திருமேனி, அ.ச. ஞான சம்பந்தம், டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், டாக்டர் ச.வே. சுப்பிரமணியம் ஆகியோர் சிலர். இன்னும் பேரறிஞர் பலரும் உரைநடை வளர்ச்சியில் பங்குபெற்று வருகின்றனர்.

தமிழில் வளர்ந்து வரும் உரைநடை நூல்கள் பலவும் இலக்கியக் கட்டுரைகளாகவும் திறனாய்வுகளாகவும் இருந்து வருகின்றன. பிற அறிவியல், கலையியல் தொடர்பான பாட நூல்கள் ஓரளவு வெளிவரத் தொடங்கியுள்ளன. அவற்றுள் தமிழ்நடை செம்மையடைய வேண்டும். அறிவியல் கருத்துக் களை வெளியிடும் வகையில் புதிய தமிழ்நடை சிறப்புற உரு வாக வேண்டும்.

# 9. நாடகமும் புனைகதையும்

## அ. நாடகம்

தமிழ் நாடக வரலாற்றைப் பொறுத்த வரையில் கி.பி. 16-19ஆம் நூற்றாண்டுகள் குறிப்பிடத்தக்க காலங்கள் ஆகும். இக்காலத்தில்தான் நாடக இலக்கியங்கள் நமக்கு எழுத்து வடிவில் கிடைக்கலாயின. நாடகங்கள் பொதுவியல் கூத்தாக - மக்கள் கலையாக – வளர்ந்தன. நாட்டுப்புற நாடகங்கள் என்ற வகையில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், கீர்த்தனை நாடகம், விலாச நாடகம், யட்சகானம், பாகவதமேளா நாடகம் போல்வன இக்காலத்தில் செல்வாக்குப் பெற்றன. இவற்றின் அமைப்பு, பெரும்பாலும் தெருக்கூத்தை ஒட்டியிருந்தது. மேடையின்றி, கட்டை கட்டிக்கொண்டு தெருக்களில் ஆடப்படும் தெருக்கூத்து இயல், இசை, கூத்து என்னும் முக்கூறுகளையும் தன்னுள் அடக்கிய கலை. தமிழின் தொன்மையான நாடக மரபைக் காத்துவந்த பெருமை இத்தெருக்கூத்திற்கு உண்டு. பெரும்பாலும் இசை நாடகமாகவே இது அமையும். இதில் அங்கம், களம் என்ற பகுப்புக்களின்றி, கட்டியங்காரன் இன்றியமையாத மாந்தராக இடம் பெறுவான். தெருக்கூத்து, பாடலும் வசனமும் கலந்து வரும் இசைக்கூத்தாக அமையும். மேற்கூறிய நாட்டுப்புற நாடக வகைகள், தெருக்கூத்தின் அமைப்பையும் நடிப்பு முறையையும் தம்மகத்தே கொண்டு மக்களிடையே செல்வாக்குப் பெற்றன.

---

எழுதியவர் சு. வேங்கடராமன்

நாட்டுப்புற நாடகங்களின் தாக்கத்தைத் தொடக்க காலச் சமூக நாடகங்களிலும் காணலாம். பொதுவாக மேடை நாடகங்கள் வளர்ந்துள்ள இன்றைய நிலையிலும் நாட்டுப்புற இசை நாடகங்கள் பொது மக்களிடையே மிகுந்த செல்வாக் குடனும் அதே நேரத்தில் மேடை நாடகங்களில் பாதிப்பை ஏற்படுத்தியும் விளங்குகின்றன. நாட்டுப்புற நாடகங்களில் மொழி, பாடல், யாப்பு, இசை, கூத்துமுறை, ஒப்பனை, ஆடை அணிகலன் போன்றஅனைத்தும் எளிய, மண்ணின் மணமிக்க, மக்கள்வாழ்வியலோடு ஒன்றியதாக இருந்தன நாடகம், பார்ப் பவர்களுக்குப் பொழுது போக்கை நல்குவதுடன் உயர்ந்த அறிவு ஊட்டும்வாயிலாகவும் விளங்கின. இவற்றில் நாட்டுப் புற இலக்கியவடிவங்கள் பல இடம் பெற்றன. தாலாட்டு, ஒப்பாரி, ஏசல், கும்மி, கப்பற்சிந்து, ஓடப்பாட்டு, முளைப் பாட்டு, தர்க்கப்பாட்டு போன்ற பலவற்றையும் இக்கால நாடகங்களில் காணலாம். இவ்வாறு நாடகக்கலை மக்களின் வாழ்வியலோடு ஒன்றியதாக இருந்தது

பள்ளு நாடகங்களில் முக்கூடற்பள்ளு, காலத்தால் முற் பட்டது. இதனை என்னயினாப் புலவர் 18ஆம் நூற்றாண்டில் நாடகமாக விரிவுபடுத்தினார். பள்ளு நாடகங்களில் இடம் பெறும் பண்ணைக்காரன் பாத்திரப்படைப்பு, சமூக அங்கத மாக விளங்கியது. நகைச்சுவையுடன் அவனுடைய செயல்கள் நாடக ஆசிரியரால் பாடப்பட்டன. பள்ளில் இடம்பெறும் பள் ளனின் இரு மனைவியர்களான பள்ளியர்களுக்கிடையில் எழும் மிரண்பாடு, நாடகச்சுவையை நல்குகிறது.

குறவஞ்சி நாடகம் ஆலயங்களில் நடிக்கப்பெற்றது. குறம் இலக்கியத்தின் வளர்ச்சியான இதில் இரு வேறுபட்ட வாழ்க்கை நிலைகளில் காணப்படும் முரண் நாடகச்சுவையை நல்குகிறது. ஆலயங்களில் உள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட பள்ளர், குறவர் வாழ்வியலை முறையே பள்ளு, குறவஞ்சி நாட கங்களாகப் படைத்து ஆலயங்களிலே நடித்த தன்மை பாராட் டிற்குரியது.

நொண்டி நாடகம், நொண்டி ஒருவன் தன் கடந்த கால வாழ்க்கையை நினைவு கூறும் வண்ணம் அமைந்தது. கள்ளர்களின் வாழ்வை மையமிட்டது இந்நாடகம். கீர்த்தனை களாக முழுவதும் அமையும் நாடகம் கீர்த்தனை நாடகமாகும். நாடகமாக நடிக்கவும், கதையுரை கலையாகச் (கதா காலட்சே பமாகச்) சொல்லவும், தனியே இசை அரங்குகளில் பாடவும் கூடிய தன்மையுடையவை கீர்த்தனை நாடகங்கள். மேல் நாட்டு 'ஆபரா'வுடன் இவை ஒப்புமை உடையவை. நாட்டுப் புற நாடகங்களில் இடம்பெறும் 'தரு' என்னும் இசைப்பாடல் வகை மிக நுட்பமான ஒன்று. நாட்டுப்புற இசைப்பாடல் வகையில் ஒன்றான இத் தரு, நாடகங்களில் மாந்தர் அறி முகம், நுழைவு, புலம்பல், வருணனை, இரு மாந்தர் உரை யாடல், தர்க்கம், ஏசல் என்ற பல்வேறு நிலைகளுக்கும் பயன் பட்டன. புராணக் கதைகளே பெரும்பாலான நாட்டுப்புற நாடக வகைகளில் கதைகளாக அமையக் காண்கிறோம்.

தெருக்கூத்தின் வளர்ச்சியில் புராணக் கதைகளிலிருந்து சமூகக் கதைக்கு மாற்றத்தையும் காண்கின்றோம். இன வர லாற்றைக் கூறும் வன்னியர் நாடகம், ஒட்ட அலங்கார நாட கம் போல்வனவும் கோவலன் நாடகமும், தேசிங்குராசன், கட்டபொம்மன் வரலாறு கூறும் நாடகங்களும் தோன்றின. அலிபாதுஷா நாடகம், ஆரிய சபா நாடகம் என்பன அரசி யலைப் பற்றியன. மாரிமுத்தா பிள்ளையின் அதீத நாடகம் 18 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிறந்த சமூகச் சீர்திருத்த நோக்குடையது. நொண்டி நாடகத்தில் சமூகச் சீர்திருத்தத்தின் வித்தினைக் காண்கிறோம். அங்கத நாடக வகைக்கு இது சிறந்த சான்று. டம்பாச்சாரி விலாசம் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சமூகச் சீர்திருத்த நாடகமாகும். தாசில்தார் நாட கம் (காசி விசுவநாத முதலியார் படைத்தது) அக்கால அரசு அதிகாரிகளின் போலித்தனத்தைச் சுட்டிக்காட்டும் சமூகச் சீர்திருத்த நாடகம். இந்நாடகத்தில் மிகுதியாகப் பிறமொழிச் சொற்களைக் காணலாம். சமூக அங்கத நாடக வகைக்கு இது

வும் சிறந்த சான்று. பிற்காலத்தில் அங்கத நாடகங்கள் (சபாபதி போல்வன) தோன்றவும், நாடகங்களில் பிறமொழிச் சொற்கள் இடம்பெறவும் கூடிய சூழலைக் காசி விசுவநாத முதலியாரின் மேற்குறிப்பிட்ட இரு நாடகங்களிலும் காணலாம். இவையும் தெருக்கூத்து அமைப்பிலே படைக்கப்பட்டன. மிகுதியும் பாடல்களையும் இடையிடையே கட்டியங்காரனின் கூற்று முறையில் பாடல்களின் விளக்கமாக அமையும் உரையாடல் (வசனம்) என்ற நிலையிலிருந்து, மாறி வளர்ச்சி பெற்ற நிலையையும் டம்பாச்சாரி விலாசம் நாடகம் காட்டும். இந்நாடகத்தில் மிக நீண்ட உரையாடல்களையும் வசனப்பகுதிகளையும் காணலாம். 1877 ஆம் ஆண்டு வெளிவந்த பிரதாபசந்த்திர விலாசம் என்னும் நாடகம் பெரும்பாலும் உரைநடையிலான நாடகம் ஆகும் ஆங்கில நாடகஅமைப்பை ஒட்டிக் களம், காட்சி என்ற பகுப்பையும் இதில் முதலில் நாம் காண்கிறோம்.

நாடகமேடை வரலாற்றில், வளர்ச்சியில் கோவிந்தசாமி ராவ் குறிப்பிடத்தக்கவர். மேடை ஏதுமின்றி வீதி நாடகமாக இருந்த கூத்தினை அரங்கிற்குள் மேடையிட்டு நடிக்குமாறு இவர் செய்தார். மராட்டிய நாடகமேடை மரபையும் இவர் தமிழ் நாடக மரபில் புகுத்தினார். குழு அமைத்து நாடகங்களை இவர் நடித்தார். தமிழ் நாடக மேடையை நெறிப்படுத்திய சான்றோர் நாடகத் தந்தை சங்கரதாசு சுவாமிகள் ஆவர் தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் எனப் பாராட்டப்படுபவர். தெருக்கூத்தின் அமைப்பு முறையையும் உயிர்த்துடிப்பையும் நன்கு உணர்ந்து, அதே தன்மையில் நாடகங்களை இசை நாடகங்களாகப் படைத்தார். மேடையமைத்து, காட்சி மாற்றம், நுட்பமான திரைச் சீலை, பின்னணி, ஒலி, ஒளி, அமைப்பு, நயமான வசனங்கள், தமிழ் மொழியின் பெருமை. கலைச் சிறப்பு, பண்பாட்டு விளக்கம் போன்ற பல்வேறு கோணங்களில் நாடகக் கலையை ஆழமும் அகலமும் உடையதாக்கி நாடக மேடைக்கு உயிரூட்டினார். புராண நாடகங்களின்

நிகழ்ச்சிகளில் இடையிடையே சிறந்த அறிவுரைகளைப் படைத்தார் நடிகர்களைக் கலைஞர் என்ற நிலைக்கு உயர்த்தினார். சிறுவர்களைக் கொண்டு 'பால சபா' என்ற அமைப்பை ஏற்படுத்தி, குழுக்களின் வளர்ச்சிக்கு வித்திட்டார். சிறந்த நடிகர், நாடக ஆசிரியர், இயக்குநர் பார்வையாளர் என்ற அனைத்து நிலைகளிலும் இருந்து நாடக மேடையைச் செம்மைப்படுத்தினார். சிறந்த இசைப் பாடல்கள் மட்டுமின்றித் தமிழ் உரையாடல்களின் மூலம் நடிகர்களின் பேச்சாற்றலையும் வளர்த்தார். அரங்க நிர்மாணம், காட்சி மாற்றம், காட்சியமைப்பு போன்ற மேடை நுணுக்கங்கள் வளர்ச்சியில் சுவாமிகளின் சாதனை அளவிடற்கரியது. புராண நாடகங்களை எல்லோரும் விரும்பும்படி படைத்தார். இன்றும் தென் தமிழ்நாட்டு இசை நாடகங்களாக இவருடைய நாடகங்களே பட்டி தொட்டிகளில் நடிக்கப்பட்டு வருகின்றன.

கந்தசாமிமுதலியார் சமூகச் சீர்திருத்த நாடகங்கள் பலவற்றைப் படைத்தார். நாவலாசிரியர்களின் நாவல்களை நாடகமாக்கினார். நாடக விளம்பரங்களில் புதுமைகளைப் புகுத்தினார். தமிழ் நாடக உலகில் குறிப்பிடத்தக்க பெருஞ் சாதனையாளர் சம்பந்தமுதலியார். சுகுண விலாச சபை என்ற பெயரில் பயில்முறை நாடக சபையை நிறுவினார். சம்பந்த முதலியாரின் வடமொழி, ஆங்கில அறிவு நாடகத்தில் புதுமைகளைச் செய்ய உதவியது. பாடல்கள் நிறைந்த நாடகங்களில் தோன்றி, முழுவதும் உரைநடையிலான நாடகங்கள் வரை பல்வேறு நிலைகளில் நாடகங்களை அவர் படைத்தார். அவருடைய சபாபதி நாடகம் சிறந்த அங்கத நாடகம். அவருடைய சிறந்த நடிப்புத் திறனும் படைப்புத் திறனும் ஆராய்ச்சிப் போக்கும் தமிழ் நாடக மேடையை வளப்படுத்தின. நாடக மேடை நினைவுகள் (ஆறு பாகங்கள்), நாடகத் தமிழ் போன்ற அவருடைய நாடகத் திறனாய்வு நூல்கள் தமிழ் நாடக மேடையின் வரலாற்றை அறிய உதவும் ஆவணங்களாகும். சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் கிராம மக்களின் கலையாக விளங்க, சம்பந்த முதலியாரின் நாடகங்கள் நகர மக்களை

ஈர்த்தன. சுவாமிகளின் நாடகப் பள்ளியில் வளர்ந்த டி கே. சண்முகம் குழுவினரே பிற்காலத்தில் சம்பந்த முதலியார் நாடகச் சிந்தனைப் போக்கையும் ஏற்றுக்கொண்டனர். தமிழ் நாடகமேடை வரலாற்றில் பாமர மக்களின் சுவைப் போக்கைச் சங்கரதாசர் நாடகங்களிலும், நகர மக்களின் சுவைப் போக்கை பம்மலாரின் நாடகங்களிலும் உய்த்துணரலாம்.

சமூக நாடகங்களுடன் விடுதலை உணர்வைப் பொதிந்து நாடகமேடை மூலம் விடுதலை வேட்கையை மக்களிடையே நாடக ஆசிரியர்கள் வளர்த்தனர். புராண நாடகங்களிலும் இத்தகைய போக்குக் காணப்பட்டது. வள்ளி திருமணம் நாடகத்திலும், பவளக்கொடி நாடகத்திலும் நாடகத் தலைமை மாந்தர்கள் வெள்ளையர்களை எதிர்த்துப் பாடினர். நவாப் டி. எஸ். இராஜமாணிக்கத்தின் நாடகத்தில் பாரத அன்னை யின் விலங்கு உடைய, காந்தியடிகள் வருகை தருவது மேடை காட்சியாகக் காட்டப்படும்போது அக்காட்சியால் உணர்வு பெற்றோர் பலராவர். முழுவதும் தேசிய விடுதலை உணர் வையே மையமிட்டுக் கதரின் வெற்றி, தேசியக் கொடி, பம்பாய் மெயில் போன்றவற்றைத் தெ. பொ கிருஷ்ணசாமிப்பாவலர் படைத்தார். இலண்டனில் சென்று நாடகங்களை நடத்தித் தமிழ் நாடகச் சிறப்பை நிலைநாட்டினார். பொழுது போக்கிற்கு என்ற நிலையிலிருந்து முழுதும் பிரச்சாரத்திற்காக என்ற நிலைக்கு நாடகம் இக் காலகட்டத்தில் மாறியது.

கன்னையா நாடகங்கள் புராணக் கதைகளை மையமிட் டவையே. மேடை, காட்சி அமைப்புக்களில், ஒளியமைப்பில் சாதனை செய்தவர் இவர். மூன்று பரிமாண அமைப்பில் மேடையில் புதுமையை இவர் கையாண்டார். வாரம் இரு முறை என்ற அளவில் நாடகம் நடத்திய நிலையை மாற்றி, தினந்தோறும் நடத்தியும் காலை நேரத்தில் நடித்தும் நாடக மேடையில் மாற்றஞ் செய்தார். நவாப் டி. எஸ். இராஜ மாணிக்கம் புராண நாடகங்களை மட்டுமின்றி, வங்காள

நாவலாசிரியர் பங்கிம் சந்திரரின் துர்கேச நந்தினி கதையை நாடகமாகவும் நடித்தார். நாடகங்களைப் பலமுறை நடித்து வெற்றிகண்டார்.

சங்கரதாசரிடம் பயிற்சி பெற்று வளர்ந்து புகழ்பெற்ற நாடகக் குழுவாக விளங்கியது டி.கே.எஸ். குழு ஆகும். நாட்டு விடுதலை உணர்வைத் தூண்டும் நாடகங்கள் புராண வரலாற்று, சமூக நாடகங்கள் பலவற்றை இவர்கள் நடித்தனர். தாங்களே படைத்து நடித்த நாடகங்களுடன் சிறந்த நாவல்களை நாடகப் போட்டி மூலம் நாடகங்களைத் தேர்ந்தெடுத்து நடித்தும் நாடகக்கலைக்குத் தொண்டாற்றினர் டி.கே எஸ். குழுவினர். இராஜராஜசோழன், சிவகாமியின் சபதம், ஔவையார் போன்ற நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. நாடகக் கலைஞர்கள் மகாநாடு நடத்திக் கலைஞர்களுக்குச் சமூகத்தில் உயர்ந்த இடம் அளிக்கத்தக்க வகையில் முன்னோடியாக இருந்தும் காட்டியவர் டி.கே.எஸ்; நாடகக்கலை, இவர் நாடகத் தலைமையாசிரியர், எனது நாடக வரலாறு போன்ற சிறந்த நாடக திறனாய்வு நூல்களையும் படைத்துள்ளார். நாடகக்கலை, நாடகமேடை வரலாறு ஆகியவற்றை அனுபவமிக்க நாடகக் கலைஞர்கள் மூலம் அறிவது சிறப்புமிக்க ஒன்றாகும். முழுவதும் குழந்தைகளைக் கொண்டு சிறுவர்களுக்காக அப்பாவின் ஆசை போன்ற நாடகங்களைப் படைத்து, தமிழ் நாடக மேடையில் புதுமையைச் செய்தவர் இக்குழுவினர். சிறுவர் நாடகக் குழுக்கள் பலவும், தொழில் நாடகக் குழுக்கள் பலவும் தோன்றி நாடக மேடையை வளம்பெறச் செய்தன. முழுவதும் பெண்களையே கொண்டு நடிக்கப்பெற்ற பெண்கள் நாடகக் குழுக்கள்பல இருந்தன. சங்கரதாசரின் நாடகங்களையே இவர்கள் நடத்தினர். பாலாமணி நாடகசபை இவற்றில் குறிப்பிடத் தகுந்தது.

பல்வேறு நாடகக்குழுக்கள் இன்றும் இயங்கி வருகின்றன. இவை சென்னை போன்ற பெரும் நகரங்களில் விடுமுறை நாட்

களிலும், இசைவிழாக்காலங்களிலும் நாடகங்கள் நடத்தி வருகின்றன. பொழுதுபோக்கிற்காக மட்டுமே இவற்றில் பெரும்பாலான நாடகங்கள் அமைகின்றன. மக்களைச் சிந்திக்கத் தூண்டும் தன்மையில் இந் நாடகங்கள் உருவாக்கப்படுவதில்லை. நகைச்சுவைத் துணுக்குகள் நிறைந்த பொழுதுபோக்குச் சாதனமாக நாடகங்கள் பல அமைவதை இன்று காணலாம். இப்போக்கிற்கு மாறுபட்டு ஆங்காங்கு ஒருசில சிறந்த முயற்சிகளும் காணப்படுகின்றன. சமூக அங்கத நாடகங்களாகக் கோமல் சுவாமிநாதன், சோ, பாலச்சந்தர் போன்றோரின் நாடகங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. மக்களின் புராண ஆர்வத்தைப் பயன்படுத்தி புராண நாடகங்கள் பலவற்றைத் தற்கால அறிவியல் வளர்ச்சியின் துணை கொண்டு, ஒலி, ஒளி, காட்சியமைப்பு, அரங்கு நிர்மாணம் போன்ற நாடகமேடை உத்திகளை நுட்பமாகக் காட்டி மனோகர் நாடகங்களைப் படைக்கிறார். கன்னையா, நவாப் இராஜமாணிக்கம் போன்றோரின் நாடகமேடை வளர்ச்சியையே மனோகரின் நாடகங்களில் நாம் காண்கிறோம் இன்றும் தென்மாவட்டங்களில், கிராமங்களில் சங்கரதாசரின் நாடகங்களே புகழ்பெற்ற நாடகங்களாக நடிக்கப்பெற்று வருகின்றன. இசைநாடகங்களான இவை பொதுமக்களுக்குப் பொழுது போக்குடன் அறிவூட்டலையும் நல்குகின்றன. இவ்வகையில் உடையப்பாவின் நாடகங்கள் குறிப்பிடத்தக்கன. எஸ். ஜி. கிட்டப்பா, கே. பி. சுந்தரம்பாள், எஸ். டி. சுப்புலட்சுமி, டி. ஆர். மகாலிங்கம் போன்றோர் நடத்திய ‘ஸ்பெஷல்’ நாடகங்களில் இசை சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. இதே தன்மையில் உடையப்பாவின் நாடகங்கள் அமைகின்றன. இவருடைய நாடகங்கள் சென்னை போன்ற பெருநகரங்களில் அவ்வப்போது நடிக்கப் பெற்றாலும், தென்தமிழ்நாட்டுச் சிற்றூர்களில்தான் வரவேற்பு மிகுதி

நாட்டிய நாடகங்கள் என்ற வகையில் பல நாடகங்கள் நடிக்கப்பெறுகின்றன. புராண இதிகாசக் கதைகளும், சிலப்

பதிகாரமும் குறவஞ்சிகளும் இவ்வாறு நடிக்கப் பெறுகின்றன. இவை ஒருவகை வளர்ச்சி. இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட மற்றொரு வளர்ச்சி வானொலி நாடகங்களாகும். வானொலியில் நீண்டநேர நாடகங்கள், குறுகிய கால நாடகங்கள் என்று பல்வேறு வகைகளில் நாடகங்கள் ஒலிபரப்பாகின்றன. வானொலி நாடகத்தில் இன்றியமையாத இடம்பெறுவது உரையாடல் தான். மேடையில் நடிகரின் நடிப்பு, ஒலி, ஒளி, காட்சியமைப்பு, பின்னணி, திரைச்சீலை போன்ற பல்வேறு அமைப்புக்களால் நாடகத்தை வெளிப்படுத்திடலாம். வானொலி நாடகத்தில் இவை அனைத்தும் உரையாடல் வழியே வெளிப்படுகின்றன. எனவே, வானொலி நாடகம் படைப்பவரின் எழுத்தாற்றலையும் நடிகர்களின் குரல்வளத்தையும் அடிப்படையாகக்கொண்டு வெற்றிபெறுகிறது. அண்மைக் காலங்களில் வானொலி வழியே மேடை நாடகங்கள் பகுதி பகுதியாக ஒலிபரப்பப்படுகின்றன. அவ்வப்போது அகில இந்திய நிலையில் பிறமொழி நாடகங்கள் மொழிபெயர்க்கப்பட்டு முழுநேர நாடகங்களாக ஒலிபரப்பப் படுகின்றன. புகழ் பெற்ற நாவல்கள் நாடகங்களாக்கப்பெற்று ஒலிபரப்பப்படுகின்றன. வானொலி நிலையங்கள் ஆண்டு தோறும் நாடகவிழாக்கள் மூலம் நாடகங்களை ஒலிப்பரப்பு கின்றன. இவ்வாறே, அண்மைக்காலமாகத் தொலைக்காட்சி வழியேயும் நாடகங்கள் ஒளிபரப்பப்படுகின்றன.

அரசு நிலையில் நாடகக்கலைக்கு ஊக்கந்தரும் வண்ணம் கலைஞர்கள் பாராட்டப்படுகின்றனர். தமிழ்நாடு இயல் இசை, நாடக மன்றம் சிறந்த நூல்கள் வெளியிட நிதிஉதவி செய்கிறது. இவ்வகையில் கூத்தநூல் வெளியிடப்பட்டது. தென்னிந்திய நாடக நடிகர் சங்கமும் புது தில்லியில் உள்ள அமைப்புக்களும் சிறந்த கலைஞர்களுக்கு ஊக்கம் தருகின்றன. நாடகப் பயிற்சிப் பணிமனைகள் நடத்தி நாடக் கலை நுட்பங்களைக் கற்றுத்தர இவை துணைநிற்கின்றன. பிற மாநிலக் கலைக்குழுவினர் பிறநாட்டு நாடகக்குழுவினர் ஆகியோர்

வருகை தரும்போது சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து நாடகக்கலை வளர்ச்சிக்கு இவை தொண்டு செய்கின்றன.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனோன்மணீயம் தொடங்கி, கவிதை நாடகங்கள் என்ற ஒருவகை நாடகங்கள் தோன்றின. இவை; பெரும்பாலும் மேடை நாடக அமைப்பு என்ற பாங்கு பற்றிக் கவலைகொள்ளாமலே படைக்கப்பட்டன. குறிப்பாக, அனைத்து மாந்தர்களும் கவிதையிலே உரையாடியமை இயல்பிற்கு மாறுபட்டதாக அமைந்தது. இவற்றின் விளைவாக, படிப்பதற்குரிய நாடகம் என்று இக்கவிதை நாடகங்களை வகை செய்தனர். கல்லூரி மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்படவே இவ்வகை நாட கங்கள் மிகுதியும் தோன்றின. வடமொழி, ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழி நாடகங்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. இவை மொழிபெயர்ப்பு நாடகங்கள் என்று வகைப்படுத்தப்பட்டன.

பல்கலைக்கழக நிலையில் நாடகக்கலை வளர்ச்சிக்குப் பல்வேறு வாய்ப்புகள் அண்மைக் காலத்தில் ஏற்பட்டன. பம்மல் சம்பந்தமுதலியார், 1944 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நாடகக்கலை பற்றி மூன்று சொற்பொழிவுகளை ஆற்றினார். பின்னர் டி.கே. சண்முகம் 1959 ஆம் ஆண்டு அதே பல்கலைக்கழகத்தில் நாடகக்கலை பற்றிப் பேசினார் இதன்பின் பல்கலைக்கழகங்களில் நாடகக் கலைஞர்கள் நாடகக்கலை பற்றிப் பற்பல பொழிவுகளை ஆற்றினர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பம்மல் சம்பந்தமுதலியார் அறக்கட்டளை என்ற பெயரிலும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தவத்திரு சங்கரதாசர் அறக்கட்டளை என்ற பெயரிலும் அவ்வை டி.கே. சண்முகம் இவ்வாறு சொற்பொழிவுகள் நிகழ ஆவன செய்துள்ளார். இவ்விரு வரிசைகளிலும் பல நாடகக் கலைஞர்கள் பற்பல கோணங்களில் தமிழ் நாடக வரலாறு பற்றிப் பொழிவுகள் ஆற்றியுள்ளனர். இவற்றில் பல நூல்களாகவும் வெளிவந்துள்ளன. நாடக மேடையுடன் பல காலமா

கத் தொடர்புடைய இக்கலைஞர்கள் தங்கள் அனுபவங்களுடன் குழைத்துத் தந்துள்ள இவைதான் மெய்யான நாடக வர லாறுகள் ஆகும். நாடகக் கலை வளர்ச்சியில் பல்கலைக்கழகங் கள் செய்துவரும் இப்பணி தலைசிறந்ததாகும்.

பல்கலைக்கழகங்களில் பிஎச். டி., எம்.லிட்., எம். ஃபில். பட்ட ஆய்வுகளாக நாடகங்கள் அமைந்தன. தமிழ் நாடக இலக்கியம் என்ற பொருளிலும், மனோன்மணியம் பற்றியும், அறிஞர் அண்ணாவின் நாடகங்கள் குறித்தும் சென்னைப் பல் கலைக்கழகத்திலும், 19ஆம் நூற்றாண்டில் தமிழ் நாடகங்கள், தமிழ் நாடகம் பரிணாம வளர்ச்சி என்ற பொருள்களில் அண் ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பம்மல் சம்பந்தமுதலியார் குறித்துக் கேரளப் பல்கலைக்கழகத்திலும் ஆய்வுகள் செய்யப் பெற்றுள்ளன. தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் தோற்பாவைக் கூத்து, தமிழகத்தில் தெருக்கூத்து, கீர்த்தனை நாடகங்கள், நொண்டி நாடகங்கள் ஆகியன குறித்து மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆய்வுகள் நிகழ்த்தப் பெற்றுள் ளன. சென்னைப் பல்கலைக் கழக இசைத்துறையில் தென் னிந்திய இசை நாடகங்கள் என்ற பொருளில் ஆய்வு செய்யப் பெற்றுள்ளது இவற்றின் விளைவாக ஆய்வுக்கட்டுரை பலவும் தோன்றின; ஆய்வேடுகள் நூலாக வெளிவந்தன. இதுகாறும் அச்சாகாமலிருந்த நாடக ஏடுகள் அச்சாயின.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நாடகவியல் பல் வேறு நிலைகளில் கற்பிக்கப்பட்டு வருகிறது. முதுகலை வகுப் பில் விருப்பப்பாடமாக மூன்று தாள்களாகக் கோட்பாடுகள் நிலையிலும் பயிற்சி நிலையிலும் கற்பிக்கப்பட்டு வருகிறது. மாலைநேரப்பகுதி வகுப்புக்களாகச் சான்றிதழ், நிறைசான்றி தழ் நிலைகளிலும், பட்டப்படிப்பு வகுப்பு, முத்தமிழ் (B.A. Mut tamil) என்ற நிலையிலும் நாடகவியல் பாடமாக இப்பல் கலைக்கழகத்தில் கற்பிக்கப்படுகிறது. இவற்றிற்கு உதவும் வண்ணம் நாடகப் பயிற்சிமுகாம், கோடைக்காலப் பயிற்சிப் பள்ளி முதலிய நிலைகளில் நாடகக்கலை வல்லுநர்களால் நாடகவியல் பற்றிய கலை நுணுக்கம் கற்பிக்கப்படுகின்றன.

தனிப்பட்ட முறையில் தனியாக ஒருவரோ, பலர் கூடிக் குழுவாக அமைந்தோ நாடகக்கலை வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வருகின்றனர். தொடக்க காலத்தில் பரிதிமாற்கலைஞர் படைத்த நாடகவியல் நூல் இத்தன்மையில் குறிப்பிடத் தக்கது. அண்மைக் காலங்களில் எஸ் வி. சகஸ்ரநாமம் தம்முடைய சேவாஸ்டேஜ் நாடகக்குழுவின் துணையுடன் நடத்தும் நாடகப்பயிற்சிப் பள்ளியும், சென்னையில் இயங்கும் கூத்துப் பட்டறை, பரீக்ஷா போன்ற அமைப்புக்களும், மதுரையில் இயங்கும் நிஜநாடக இயக்கமும் இவ்வகையில் குறிப்பிடத்தக்க முயற்சிகளாகும். கூத்துப்பட்டறை என்ற அமைப்பு, தெருக்கூத்தை நவீனப்படுத்தி, தமிழ் நாடக மேடை மரபின் தொன்மையை நிலைநாட்ட எண்ணி முயற்சித்துப் பணியாற்றி வருகிறது.

இவ்வாறு, தமிழ் நாடகம் படைப்பு அளவிலும் ஆய்வு நிலையிலும் கடந்த சில நூற்றாண்டுகளில் (கி.பி. 16ஆம் நூற்றாண்டு தொடங்கி இன்று வரை) நன்கு முன்னேறி வருகிறது இவ்வளர்ச்சி உரமிக்க சீரிய வளர்ச்சி எனில் அது மிகையன்று

## ஆ. புனைகதை

கி.பி. 18ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்தே ஆங்கிலேயர் ஆட்சி இந்திய மண்ணில் கால்கொள்ளத் தொடங்கியது. ஆயினும், மேற்கத்திய நாகரிகம், இந்திய மண்ணின் அடிவரை சென்று வேர்கொள்ளச் சிலகாலம் பிடித்தது. இதனால் உடனடியாக ஏற்பட்ட விளைவுகளுள் ஒன்று உரைநடையில் ஏற்பட்ட அளப்பரிய வளர்ச்சி ஆகும். தமிழில் பழங்காலந் தொட்டே உரைநடை இருப்பினும், படைப்பிலக்கியத்திற்கு உரைநடையைப் பயன்படுத்தும் பாங்கு, வெள்ளையர் வரவிற்குப் பின்பே தோன்றியது. தொழிற் புரட்சிக்குப்பின் இயந்திர வசதிகள் பெருகத் தலைப்பட்டன. போக்குவரத்து வசதிகளும், தந்தி, அஞ்சல் போன்ற தொடர்புச்சாதனங்களும் இந்

திய மண்ணில் நிறுவப்பட்டன. அச்சு இயந்திரங்கள் பெருகின. செய்தி இதழ்கள் தொடர் வருகை புரிந்தன.

கிறித்தவப் பாதிரிமார்கள் தங்கள் சமயப் பிரச்சாரத்திற்கென்று உரைநடையைக் கையாண்டு துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர். அச்சு இயந்திரங்களின் பயன்பாடு பெருகத் தலைப்பட்டன. உரைநடையைப் புனைகதை இலக்கியத்திற்கு, படைப்பிலக்கியத்திற்கு வீரமாமுனிவர் பயன்படுத்தி வழிகாட்டினார். அவருடைய பரமார்த்தகுருகதை இவ்வகையில் குறிப்பிடத்தக்க முயற்சி. ஆங்கிலக் கல்வி வேகமாகப் பரவியது. ஆங்கிலக் கல்வி பெற்ற வாசகர் கூட்டம் ஒன்று புதிதாக ஏற்பட்டது. ஆங்கில ஆட்சி முறையாலும் ஆங்கிலக் கல்வியாலும் விழிப்புணர்வுபெற்ற மத்தியதர வகுப்பாரிடையே நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் பெருகத் தலைப்பட்டன. ஆங்கிலம் போன்ற மேனாட்டு மொழிகளில் காணப்பட்ட புதிய இலக்கிய வடிவங்களான புதினம், சிறுகதை என்னும் புனைகதை வகைகள் இவர்களைக் கவர்ந்தன.

ஆங்கிலக் கல்வியால் விழிப்புணர்வு பெற்றோர் புனைகதை வடிவங்களைத் தத்தம் மொழிகளிலும் படைக்கத் தலைப்பட்டனர். இவ்வாறு, தமிழில் புதினமும் சிறுகதையும் தோன்றின. கதை கூறும் பாங்கு பழையமரபு என்றாலும் புதினம், சிறுகதை என்ற இலக்கிய வடிவங்கள் புதியன. கவிதையில் இருந்து புனைகதைக்கு - புதினம், சிறுகதை வடிவங்களுக்கு - உரைநடைக்கு— மாறிய இம்மாற்றம் தமிழ் இலக்கிய உலகில் நிகழ்ந்த இன்றியமையாத மாற்றம் ஆகும். இதனைப் படித்த மக்கள் கூட்டம் வரவேற்று ஏற்றது. இவ்வாறு, புதினம், சிறுகதை தோன்றிப் பெருகின. இதழ்களும் இவற்றை மிகுதியும் வெளியிடத் தலைப்பட்டன.

**புதினம்**

தமிழில் முதல் புதினம் 1976ஆம் ஆண்டில் பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் பெயருடன் வேதநாயகம் பிள்ளை

யால் படைக்கப்பட்டது. தம் படைப்பை அவர் வசன காவியம் என்றே கூறுகிறார். அறிவூட்டல், மகிழ்வூட்டல் என்னும் இரு நோக்கங்களை மையமாகக் கொண்டு அவர் முதல் புதினத்தை வெளியிட்டார். அன்றைய சமூக வாழ்வின் பல்வேறு நிலைகளை இந்நாவலில் காணலாம். அரசன் - அரசி கதைப்பாங்கில் இந்நாவல் அற்புத நவிற்சிப் பாங்கில் அமைந்துள்ளது. இந்நாவல் நேரடியாக நாவலாகப் படைக்கப்பட்டது.

1896 ஆம் ஆண்டில் வெளிவந்த ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரம் அடுத்த இடத்தைப் பெறுகிறது. இப்புதினம் 'விவேக சிந்தாமணி' இதழில் 1893-1895 ஆம் ஆண்டுகளில் தொடர்கதையாக வெளிவந்தது. தொடர்கதையாக வெளிவந்து, புதினமான முதல் தமிழ்ப் படைப்பு இதுவே. தத்துவம் தமிழ்ப் புதினத்தில் கலந்துவரும் பாங்கு கிராமப் பின்னணி, வட்டாரப் புதின வகை, பேச்சுமொழி வழக்கு ஆகிய தன்மைகளுடன் நடப்பியல் பாங்கு மிக்க படைப்பு என்ற வகையிலும் கமலாம்பாள் சரித்திரம் தமிழ்ப் புதின வரலாற்றில் முதல் படைப்பு ஆகும்.

மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் 1898இல் வெளிவந்தது. சமுதாயச் சீர்திருத்தப் புதினம் என்ற வகையில் பத்மாவதி சரித்திரமும் முத்து மீனாட்சியும் குறிப்பிடத்தக்கவை. பண்டித நடேசசாஸ்திரியின் தீனதயாளு அலுவலக வாழ்க்கை நிலையைக் கூறும் முதல் தமிழ்ப் புதினம். இவருடைய திக்கற்ற இரு குழந்தைகள் புதினத்தில் சமூகத் துப்பறியும் தன்மையைக் காண்கிறோம். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்கிப் பெருகிய மர்ம, துப்பறியும் புதினங்களுக்குரிய வித்தினை இந்நாவலில் காண்கிறோம். தி ம. பொன்னுசாமிபிள்ளையின் புதினங்கள் இயல்பான கதைகூறும் போக்கை உடையவை இதன் பின்னர் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் மர்ம துப்பறியும் புதினங்கள் தமிழில் பெருகின. இடைக்காலப் புதினங்களான இவற்றில் ஒருசில, மேனாட்டுப் புதினங்களின் அப்பட்டமான மொழிபெயர்ப்புகளாக விளங்கின. வடுவூரார் மேல் நாட்டுத் துப்பறியும் கதை அமைப்பில் தமிழ் மண்ணின்

சமூகச் சிக்கல்களைப் புதினங்களாக்கினார். இவருடைய புதினங்களில் சமூகச் சீர்திருத்த நோக்கு மிகுதி. வை. மு. கோதை நாயகி அம்மாள் தமிழில் மிகுதியான புதினங்களைப் படைத்த பெண் எழுத்தாளராவர் ; தமிழ்ப் புதினங்களில் பல்வேறு கருப்பொருள்களைக் கையாண்டு வெற்றி பெற்ற படைப்பாளரும் இவரே. இதனையடுத்துப் பல்வேறு புதினங்கள் இக் காலகட்டத்தில் புற்றீசல்களாக வந்தன. பொழுதுபோக்கு ஒன்றையே மையமிட்டு இவை படைக்கப்பட்டன. மலிவு விலைப் புதின வரிசை என்ற பெயரில் ஆபாசமான புதினங்கள் பல பெருகின.

அரசியல் பின்னணியில் கிராமச் சீரமைப்பு, நாட்டு விடுதலைப் போராட்டம் ஆகியவற்றைக் கருவாகக் கொண்டு கா. சீ. வேங்கடரமணி புதினங்களைப் படைத்தார். அவருடைய முருகன் ஓர் உழவன், தேசபக்தன் கந்தன் ஆகியன குறிப்பிடத்தக்கன. இதனையடுத்து, தமிழ்ப் புதினத்துக்கு வளஞ் சேர்த்தவர் கல்கி. எண்ணற்ற வாசகர் கூட்டத்தைச் சென்றடையும் வண்ணம் புதினத்தை இவர் படைத்தார். நாட்டு விடுதலை, சமூக மாற்றம், சீர்திருத்தம் ஆகியன இவரது புதினங்களில் வலியுறுத்தப்பட்டன. தமிழ் நடையின் எளிமையையும் இனிமையையும் ஒருங்கே புலப்படுத்தியவர் கல்கி. சமூகப் புதினங்களுடன் வரலாற்றுப் புதினங்களையும் கல்கி படைத்தார். இன்றும் தமிழில் வரலாற்றுப் புதினம் எழுதுபவர்கள் கல்கியின் போக்கையே பின்பற்றுகின்றனர். தமிழில் நகைச் சுவையுடன் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைப் புதினங்களில் வெளியிட்டவர்களுள் கல்கி குறிப்பிடத்தக்கவர். இதே வரிசையில் தேவன், எஸ். வி. வி., தி. ஜ. ர., கொத்தமங்கலம் சுப்பு போன்றோர் அமைவர். இன்று தமிழில் நகைச் சுவையுடன் எழுதும் எழுத்தாளர்களைக் காண்பது அரிது.

நாட்டு விடுதலைக்குப்பின் எழுத்தாளர்கள் சமூகச் சீர்திருத்தம், தனி மனிதனின் சிக்கல்கள் போன்றவற்றை மிகுதியும் புதினங்களுக்குக் கருப்பொருளாக்கினர். எனவே இவர்

களின் புதினங்களில் சமுதாய இயல், உளவியல் போன்ற பிற துறைச் செய்திகள் இடம்பெறலாயின. வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கித் தாம்பெற்ற அனுபவங்களுடன் புதினங்களைப் படைத்தனர்.

புதினம், கருப்பொருளான உள்ளடக்கத்தில் மட்டுமின்றி, கதை கூறும் முறையிலும், கதை அமைப்பு நிலையிலும் புதுப்புதுக் கோலம் கொண்டது. வ.ரா., நாரணதுரைக் கண்ணன், அகிலன், கோ. வி. மணிசேகரன், மு. வரதராசன், கு. இராசவேலு, க நா. சுப்பிரமணியன், சிதம்பர சுப்பிரமணியன், எம். வி. வெங்கட்ராம், தி. ஜானகிராமன், லா ச. ரா., ஜெயகாந்தன், ஜெகசிற்பியன், சாவி, சோமு, ஆர். வி., இந்திரா பார்த்தசாரதி, சி. சு. செல்லப்பா, ரகுநாதன், நா. பார்த்தசாரதி, லெட்சுமி, சூடாமணி, நீல. பத்மனாபன், ஆர். சண்முகசுந்தரம், ஹெப்சிபா ஜேசுதாசன், சுந்தர ராம சாமி, ஜெயந்தன், சு. சமுத்திரம் போன்றோர் குறிப்பிடத்தக்க இக்காலப் படைப்பாசிரியர்கள்.

இராஜம் கிருஷ்ணன் தமிழ்ப் புதின உலகில் புதிய புதிய கருப்பொருள்களையும், புதிய புதிய பின்னணிகளையும் கொண்டு புதினங்கள் படைப்பவர். ஒவ்வொரு புதினத்துக்கும் கள ஆய்வு மேற்கொண்டு பெண்களின் வாழ்க்கைச் சிக்கல் களைச் சமுதாய, உளவியல் நோக்குகளில் படைத்து வருபவர் இவர்.

பொதுவாக, தமிழ்ப் புதினம் பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்றுள்ளது. சமுதாய தனிமனிதச் சிக்கல்களுக்குத் தீர்வு காணக் காந்தியம், பொதுவுடமை, பகுத்தறிவு இயக்கம் ஆகியன துணைசெய்யும் என்று பல்வேறு நெறிகளைக் காட்டும் புதினங்கள் பெருகலாயின. இவற்றுடன் அறிவியல், உளவியல், வட்டாரவியல், நனவோடை, புதுக்கவிதை, வசன கவிதை, கற்பனை உலகம், துப்பறியும் பாங்கு, அரசியல்,

சமூக வரலாறு, இன வரலாறு, குடும்பச் சிக்கல், தனிமனிதச் சிக்கல், அலுவலகச் சிக்கல், குழந்தை உளவியல், பெண்ணெழுச்சி என்று பல்வேறு வகைகளாகத் தமிழ்ப் புதினம் வளர்ச்சி பெற்றுள்ளது.

தமிழ்ப் புதின வளர்ச்சிக்குத் துணைநிற்பன இதழ்கள், வாசகர் கூட்டம், வெளியீட்டகம், இதழ்கள் நடத்தும் போட்டிகள், அரசு – தனியார் - நல்கும் பரிசுகள் போல்வனவாகும். அண்மைக்காலத்தில் மாத வெளியீடுகளாகவும், மலிவு விலைப் பதிப்புக்களாகவும் புதினம் பெருகி வளரத் தலைப்பட்டுள்ளது. இவையேயன்றி, புதின ஆசிரியர்கள் தாமே, பதிப்பகங்கள் வழியே நேரிடையாகப் புதினங்களை வெளியிட்டு வருகின்றனர். பொதுவாக, வாசகர்களுக்குப் பொழுதுபோக்கை நல்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் புதினம் படைப்பவர்களே இன்று மிகுதி இதழ்களின் அசுரவளர்ச்சியில் படைப்பாளர் பலர் படிப்பவரின் சுவையுணர்வை இழிநிலைக்கு இறக்குகின்ற போக்கும் இன்று காணப்படுகிறது. இதன் விளைவாகப் பாலுணர்வைத் தூண்டும் புதினங்கள் பெருகியுள்ளன. கால வெள்ளத்தில் இவை கரையேறிச் செல்லா. எனினும் படிப்பவரின் சிந்தனையை மழுங்கச் செய்யும் புதினங்களில் கலைத்தன்மையையோ, கருப்பொருள் ஆழத்தையோ காணமுடியாது. இருப்பினும் ஆங்காங்கு இதழ்களின் வழியேயும் நேரடியாகவும் தரமிக்க நல்ல புதினங்கள் வந்துகொண்டுள்ளன.

பல்கலைக்கழகங்களில் அண்மைக் காலங்களில் ஆய்வுப் பொருளாகத் தமிழ்ப் புதினங்கள் அமைகின்றன. சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன்முதலில் தமிழ்ச் சமூகப் புதினங்கள் பற்றி ஆய்வு நிகழ்த்தப் பெற்றது. பின் மற்ற பல்கலைக் கழகங்களில் மிகுதியும் ஆய்வு நிகழலாயிற்று. இதில் மதுரைப் பல்கலைக்கழகம் முன் நிற்கிறது. இரு புதின ஆசிரியர்களை ஒப்பிட்டும், சமுதாயவியல் அடிப்படையில் ஒப்பிட்டும், பிற மொழிப் புதின ஆசிரியர்களுடன் ஒப்பிட்டும், காந்தியம்,

பகுத்தறிவுவாதம், பொதுவுடைமை என்று கொள்கை அடிப்படை ஆய்வுகள் நிகழ்த்தியும் ஆய்வுகள் இப்பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. அகிலன், மு.வ. ஆகிய இரு படைப்பாளர்களுக்கு நான்கு நாட்கள் கருத்தரங்குகள் நிகழ்த்தியும், அந்த ஆய்வுரைகளை நூலாக வெளியிட்டும், படைப்பாளர்களுக்கு ஆய்வடங்கல் உருவாக்கி வெளியிட்டும், ந. பிச்சமூர்த்தி, லா.ச. ராமாமிருதம், ஆர். சண்முகசுந்தரம் ஆகியோருக்கு ஒருநாள் கருத்தரங்கம் நடத்தியும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் புதின ஆய்வில் முன் நிற்கிறது. சென்னை, அண்ணாமலை, மதுரை, கேரளப் பல்கலைக் கழகங்களில் மட்டுமன்றி லெனின்கிராட், ஆக்ஸ்போர்ட், எடின்பர்ரோ, மலேயா போன்ற வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்ப் புதினங்கள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ., பி ஏ., போன்ற வகுப்புக்களில் பாடங்களாகப் புதினங்கள் கற்றுத்தரப்படுகின்றன. முதுகலை வகுப்பில் விருப்பப்பாடமாக இக்கால இலக்கியம் பகுதியில் புதினங்கள் கற்றுத் தரப்படுகின்றன.

சென்னையிலுள்ள கிறித்தவ இலக்கியச் சங்கத்தில் நண்பர்கள் வட்ட ஆதரவில் புதினம், சிறுகதை பற்றிய ஆய்வுகள் ஆண்டுதோறும் நிகழ்த்தப்பெற்று ஆய்வுரைகள் பல ஆண்டுகள் தொடர்ந்து நூல்களாக வெளியிட்டு வரப்பெறுகின்றன. தமிழ் வளர்ச்சிக் கழகம், எம். ஏ. சி. அறக்கட்டளை, சாகித்ய அகாதெமி, ஞானபீடம், நேரு நினைவு விருது போன்ற அமைப்புக்கள் தொடர்ந்து புதினங்களுக்குப் பரிசுகள் வழங்கி வருகின்றன இவை தவிர, இதழ்கள் அவ்வப்போது புதினப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குகின்றன. சாகித்ய அகாதெமி, நேஷனல் புக் டிரஸ்ட் ஆகிய அமைப்புக்கள் புதினங்களைப் பிற இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டு வருகின்றன. இவற்றால் பிற மொழிகளில்

நிகழும் மாற்றம், ஏற்படும் வளர்ச்சி பற்றி அறிய வாய்ப்பு கிட்டுகின்றது.

இவ்வாறு இந்த நூற்றாண்டில் தமிழ்ப் புதின வளர்ச்சி போற்றத்தக்க முறையில் உள்ளது.

## சிறுகதை

கதை சொல்லும் மரபு பழமையானதுதான் என்றாலும் சிறுகதை என்னும் கலைவடிவம் மேனாட்டார் தொடர்பால் தமிழில் விளைந்ததாகும். கி. பி. 18ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவரின் பரமார்த்த குருகதை அங்கத நூலாக வெளி வந்தது. 19ஆம் நூற்றாண்டில் வீராசாமிச் செட்டியாரின் விநோதரஸ மஞ்சரியும் தாண்டவராய முதலியார் மொழி பெயர்த்த பஞ்சதந்திரக் கதைகளும் தோன்றின. 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தமிழ் இதழ்கள் வெளிவரத் தொடங்கின. அவ்விதழ்களில் வெளியிடத்தக்க அளவு சிறிய கதைகளாக அமையலாயின. சிறுகதையின் உருவ வளர்ச்சிக்கு இதழ்கள் முக்கிய காரணமாக அமைந்தன. பாரதியார், மாதவையா போன்றோர் தொடக்க காலத்தில் சிறுகதைகள் படைத்தனர். தாகூரின் கதைகளை மொழிபெயர்த்துத் தமிழில் தந்தார் பாரதியார். அவற்றில் வடிவச் செம்மை அருமையாக உள்ளது. மாதவையா ஆங்கிலத்திலும் தமிழிலும் கதைகள் பலவற்றைப் படைத்தார். சமூக இன்னல்களைக் கண்டு ஆற்றாத பாங்கில் அவருடைய கதைகள் அமைகின்றன. அக்காலத்திய தமிழ்நாட்டின் வாழ்க்கைச் சிக்கல்கள் அவர் கதைகளில் கருப்பொருளாயின. அவருடைய ஆங்கிலப் பயிற்சி காரணமாகச் சிறுகதையின் வடிவம் செம்மையாக அமைந்தது.

வ. வே. சு. ஐயர் தமிழ்ச் சிறுகதையின் தந்தை எனப் போற்றப்படுவர். மங்கையர்க்கரசியின் காதல் என்னும் தொகுப்பில் அமைந்துள்ள 'குளத்தங்கரை அரசமரம்' என்னும் கதை

தமிழ் மண்ணை முழுவதும் பிரதிபலிக்கும் கதை. கதையின் கரு, கதையின் வடிவம், கதை கூறப்படும் முறை ஆகிய பல்வேறு நிலைகளாலும் இக்கதை சிறப்பாக அமைந்த ஒன்று. சிறுகதை என்னும் இலக்கிய வகையை அனைத்து நிலைகளிலும் தமிழ்மரபுடன் இணைத்து, அவ்வடிவம் தமிழுக்கு இயைபானது என்பதை வ. வே. சு. ஐயரின் இம்முயற்சி நிலைநாட்டியது.

வ. வே. சு. ஐயரைத் தொடர்ந்து தமிழ்ச் சிறுகதைக்கு வளஞ் சேர்த்தவர்களை மணிக்கொடி குழுவினர், கல்கியைச் சார்ந்தோர் எனப் பாகுபடுத்துவர். மணிக்கொடி இதழின் வழியே எழுதியவர்கள் பி.எஸ். இராமையா, புதுமைப்பித்தன், கு. ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, லா. ச. ராமாமிருதம். ந. சிதம்பரசுப்பிரமணியன், சி.சு. செல்லப்பா, மௌனி போன்றோர் ஆவர். இவ்விதழ் விரைவில் நின்றுவிட்ட போதிலும் தமிழ்ச் சிறுகதைக்கு வளமூட்டியது. புதுமைப்பித்தன் கதைகள் இறவாவரம் பெற்றவை. சிறுகதையின் கரு, வடிவம், உத்தி என்ற மூன்று நிலைகளிலும் ஒப்பற்ற கதைகளை அவர் படைத்தார். சமூக அவலங்களைக் கண்டு சாடும் அவர் கதைகள் உலகச் சிறுகதைகளுடன் போட்டியிட வல்லன. கு.ப.ரா. கதைகளில் பெண்மையின் மென்மை, நளினம் காணப்படும். சிறுகதையில் காதல், பாலுணர்வு ஆகியவற்றை இலக்கிய நயத்துடன் இவர் படைத்தார்.

ந. பிச்சமூர்த்தியின் கதைகளில் வடிவச் செம்மை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பொதுவாகப் புதுமைப்பித்தன் நீங்கலாக ஏனைய மணிக்கொடி, எழுத்தாளர்கள் அனைவரும் குடும்பச் சிக்கல்களையே பெரிதும் படைத்தனர். கல்கியின் கதைகளில் சமூகச் சிக்கல்களும், நாட்டு விடுதலைப் போராட்டமும் பெரிதும் இடம்பெற்றன. கல்கியின் கதைகளில் சிறுகதை நிறைவையும் அகல வளர்ச்சியையும் பெற்றது. இதழ்களின் வழியே

பல்லாயிரக் கணக்கானவர்களை அடையுமாறு சிறுகதையை அவர் அகலப்படுத்தினார்.

சிறுகதையில் நாட்டு விடுதலைப் பின்னணியில் சமூகச் சீர் கேடுகள் அலசப்பட்டன. தி. ஜ. ர., ந. சிதம்பர சுப்பிர மணியன், லா.ச.ரா., தி. ஜானகிராமன் போன்றோர் படைத்த சிறுகதைகள் ஆழமான படைப்புக்களாக அமைந்தவை. கதை யின் கருத்தையே முதன்மைப்படுத்தி ராஜாஜி கதைகளைப் படைத்தார். தி. நா. சுப்பிரமணியம் வரலாற்றுச் சிறுகதை களையும், எஸ். வி. வி., தேவன் போன்றோர் நகைச்சுவைக் கதைகளையும் பெரிதும் படைத்தனர்.

திராவிடக்கழகம்,-தி.மு க. ஆகியவற்றைச் சார்ந்த படைப் பாளர்கள் சிறுகதைகளில் பிரச்சாரக் கருத்துக்களை முதன் மைப்படுத்தி, கதையின் கலைத்தன்மையில் நாட்டஞ் செலுத் தாமல் சிறுகதைகளைப் படைத்தனர். நாட்டு விடுதலைக்கு முன்பிருந்ததைவிட இக்காலத்தில் வாசகர் கூட்டம் பெருகியது

நாட்டு விடுதலைப் போராட்ட காலத்திலும், பின்னும் எழுதத் தொடங்கியவர்கள் சமூகக் கொடுமைகளை மைய மிட்டுக் கதைகளைப் படைத்தனர். அவர்கள் சிறுகதை வழியே அறிவூட்டலை முதன்மைப்படுத்தினர். இவ்வாறு சிறு கதை படைத்தோருள் விந்தன், அகிலன், கு. அழகிரிசாமி, மு.வ., ஜெகசிற்பியன், தி.ச. ராஜு போன்றோரைக் குறிப் பிடலாம். விந்தன் பெரும்பாலும் ஏழைகளைப் பற்றியும் சமு தாய அடிமட்டத்தாரைப் பற்றியும் கதைகள் படைத்தார். அகிலன் சிறுகதைகளில் உள்ளடக்கமும் உருவமும் சிறந்து காணப்பட்டன. புதுமைப்பித்தனுக்குப் பின் சமூக முரண்பாடு கள், வாழ்க்கை அவலங்கள், பொருளாதார வேறுபாடுகள் ஆகியவற்றை மிகுதியும் சிறுகதைக் கருப்பொருளாக அகிலன் படைத்தார். அவரைத் தொடர்ந்து பின்வந்தோருள் இவற்றை மிகுதியும் படைத்தவர் ஜெயகாந்தன். இவரிடம் சிறுகதை அளப்பரும் வளர்ச்சி பெற்றது. கருப்பொருளில் இவர் மிகுதி

யும் கவனஞ் செலுத்தினார்; தனிமனிதச் சிக்கல்களையும் இவர் மிகுதியும் சிறுகதைகளில் படைத்தார்.

பெண்களின் சிக்கல்களை உளவியல் நோக்குடன் நுட்பமாகப் படைத்தவர்களுள் ராஜம் கிருஷ்ணன், சூடாமணி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சிறுகதையை வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் படைக்காமல், அன்றாட வாழ்வில் நாம் கண்முன்பே காண்பவற்றைக் காட்டி, சமுதாயச் சீர்திருத்த எண்ணங்களைக் கதைகளில் கலைநயத்துடன் தந்தவர்கள் பலர். இவர்களுக்கு மாறுபட்டு வெறும் பொழுதுபோக்கிற்காகவே என்ற நிலையில் சிலர் சிறுகதைகளைப் படைத்தனர். இதழ்களின் மிகு வளர்ச்சி, அவைகளிடையே காணப்பட்ட வணிகப்போட்டி, எதையும் பற்றிக் கவலையின்றி வாசகர்களைச் சிந்திக்கவிடாமல் எழுதும் எழுத்தாளர்களின் சமூகப் பொறுப்பற்ற போக்கு ஆகிய பல்வேறு காரணங்களால் சிறுகதைகள் இலக்கியத் தகுதிக்குப் பொருந்தாத நிலையில் பத்திரிகைக் கதைகளாகப் பல்கின. இவை வெறும் பொழுதுபோக்குக் கதைகள் என்ற நிலையில் நின்றன. இவற்றின் தொடர்ச்சியாகப் பாலுணர்வை மையமிட்ட ஆபாசக்கதைகள் பெருகின; கவர்ச்சி, (நியூவேவ்) புதிய அலை என்ற பெயரில் இதழ்களில் இவை பல்கின.

இத்தகைய படைப்புக்கள் தமிழ்ச் சிறுகதை இலக்கிய வளர்ச்சியில் காணப்படும் களைகள் ஆகும். இவற்றினூடே ஆங்காங்கே இதழ்களில் ஒருசில நல்ல தரமிக்க கதைகளும் வெளிவருகின்றன. ஜெயகாந்தன், சு. சமுத்திரம் போன்றோரின் சிறுகதைகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. சிறுகதை இப்போது நன்கு வளம்பெற்று உள்ளது. சிறுகதை வரலாறு இவ்வாறு போற்றத்தக்க முறையில் வளர்ந்துள்ளது.

பிறமொழிச் சிறுகதைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டும், தமிழ்ச் சிறுகதைகளைப் பிறமொழிகளில் மொழிபெயர்த்தும் சாகித்ய அகாதெமி, நேஷனல் புக் டிரஸ்ட் போன்ற நிறுவனங்கள் சிறுகதை வளர்ச்சிக்குத் துணைநிற்

கின்றன இவைகளும் வேறு சில அமைப்புகளும் நல்கும் பரிசு களும் இதழ்கள் நடத்தும் சிறுகதைப் போட்டி, பரிசுகள் ஆகி யனவும் சிறுகதை வளர்ச்சிக்கு வளமூட்டுகின்றன. சென்னை யிலுள்ள இலக்கியச் சிந்தனை மாதந்தோறும் சிறந்த கதை கதைகளைத் தேர்வுசெய்து ஆண்டு முடிவில் அவற்றைத் தொகுப்பு நூலாக வெளியிட்டு வருகிறது.

பல்கலைக்கழகங்களில் சிறுகதைகள் பாடமாக வைக்கப் பட்டுக் கற்பிக்கப்படுகின்றன முதுகலை, எம்.ஃபில்., எம்.லிட்., பிஎச்.டி. போன்ற பட்டங்களுக்கு ஆய்வுப்பொருளாகச் சிறு கதை அமைகிறது தொடக்கநிலையில் கேரளப் பல்கலைக் கழகத்தில் புதுமைப்பித்தன் கதைகளும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கல்கி, அகிலன், கு.ப.ரா. சிறுகதைகள் பற்றி ஆய்வுகள் நிகழ்த்தப்பெற்றன. இவை ஆய்வு நூல்களா கவும் வெளிவந்துள்ளன. இவற்றைத் தொடர்ந்து பல்வேறு படைப்பாளர்களின் சிறுகதைகள் இப்போது ஆராயப்படுகின் றன. இளங்கலை, முதுகலை வகுப்புகளில் சிறுகதைகள் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. சிறுகதை வளர்ச்சிக்கு இவை துணை செய்யக்கூடும்.

பொதுவாக, இந்த நூற்றாண்டில் இக்காலப் புனை கதை இலக்கியம் பற்றிப் படைப்போர், படிப்போர், ஆராய் வோர் என்னும் முந்நிலைகளிலும் விழிப்புணர்வும் வரவேற்பும் தோன்றியுள்ளன. இச்சூழல், புனைகதை இலக்கிய ஆழ, அகல வளர்ச்சிக்கு உதவும்.

# 10. துறைதோறும் வளரும் தமிழ்

சென்ற நூற்றாண்டிலிருந்தும் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தும் தமிழ் தன்னோடு தொடர்புடைய பல துறைகளிலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருகிறது. மொழியியல், நாட்டுப்புறவியல், ஒப்பியல், இதழியல், திறனாய்வியல், மருந்தியல், தொல்பொருள் ஆய்வியல், கல்வெட்டியல், அகராதிக் கலையியல் என அதன் எண்ணிக்கை மிகப் பலவாகும். உளவியல், பொருளியல், வரலாற்றியல், வணிகவியல் போன்றவற்றைத் தமிழ்வழிக் கற்பிக்கும் நன்முயற்சியும் இதனுள் மிகவும் குறிப்பிடத்தக்கதொரு கூறாகும் இவையனைத்தும் தமிழினுள்ளும் ஒரு சிறிது உள்ளீடாய்க் கலந்திருந்தே, இன்று வெளிநாட்டுக் கலைத் துறையாய்வு முறைகளாலும் செல்வாக்காலும் பாலிடை கடைந்தெடுக்கப்படும் வெண்ணெயென உருண்டு திரண்டு வருகிறது.

## மொழியியல்

தொல்காப்பியமும் உரைகளும் பிற தமிழ் இலக்கண நூல்களும் மொழியியல் ஆய்வுக்குப் பேரிடம் தருகின்றன. வெளிநாட்டறிஞர் பலரும் இன்று இத்துறையையே விரும்பி நாடுகின்றனர். கால்டுவெல் ஐயர் 'திராவிட மொழி ஒப்பிலக்கணம்' என்ற நூலை எழுதிய நாள்தொட்டுத்

எழுதியவர் தமிழண்ணல்

தமிழில் மொழியியல் பெருவளர்ச்சி கண்டது. தெ பொ. மீ. அவர்கள் மொழியியலில் அக்கறை காட்டி அத்துறை தமிழகத்தில் கால்கொள்ளச் செய்தார். வி. ஐ. சுப்பிர மணியம் இத்துறையினைக் கேரளப் பல்கலைக்கழகத்தில் தழைத்தோங்கச் செய்தார். சுனித்குமார் சாட்டர்ஜி மற்றும் மேலைநாட்டு அறிஞர் பலர் திராவிட மொழியியலைப் பேணி வளர்த்துள்ளனர். கேரளப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகியன இத்துறையில் முனைந்து பணியாற்றி வருகின்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியல் உயர் ஆய்வு மையம் அமைந்து, சிறப்புறப் பணியாற்றி வருகிறது.

## நாட்டுப்புறவியல்

தமிழில் நாட்டுப்புறப் பாடல் தொகுப்பு கடந்த பல ஆண்டு களாக நடைபெற்று வருகிறது. அன்னகாமு, கி வா ஜ., பெ. தூரன் மீ.ப. சோமு, தமிழண்ணல், நா. வானமாமலை போன் றோர் தொகுப்புக்கள் இத்துறையில் குறிப்பிடத்தக்கன. ஆறு. அழகப்பன், சு சண்முகசுந்தரம், மு இராமசாமி, வி சரசுவதி, குருவிக்கரம்பை சண்முகம் போன்றோர் நாட்டுப்புறவியலில் ஆய்வு செய்து 'டாக்டர்' பட்டம் பெற்றுள்ளனர். கேரளப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியம் மேற் பார்வையில் கே. பி. எஸ். அமீது, பா ரா. சுப்பிரமணியம் போன்றோர் ஆராய்ச்சி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இசைத் துறையில் திருமதி சியாமளா பாலகிருஷ்ணன் நாட்டுப் புறப் பாடல் இசை பற்றிச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து பட்டம் பெற்றுள்ளனர்.

## ஒப்பியல்

ஒப்பியல்துறை தமிழில் அண்மைக் காலமாகக் குறிப்பிடத் தக்க வளர்ச்சி பெற்றுள்ளது. சென்ற நூற்றாண்டின் இறுதி யில் ஜி.யு. போப்பையர், எஸ், கிருஷ்ணசாமி ஐயங்கார் போன் றோர் ஒப்பீட்டுத் துறைக்கு வாய்ப்புண்டு என்று சுட்டிக் காட்

டினர். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, வ.வே சு. ஐயர் போல்வார் ஒப்பிலக்கியத்தை வற்புறுத்தியிருப்பதுடன் தமிழில் சிறந்த முன்னோடிகளாகவும் விளங்கியுள்ளனர். தனிநாயக அடிகளார், டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் வ. சுப. மாணிக்கம், டாக்டர் க. கைலாசபதி, டாக்டர் எஸ். இராம கிருஷ்ணன் ஆகியோர் தம் நூல்களால் ஒப்பிலக்கியத் துறையைச் சிறப்பித்துள்ளனர். பண்டிதமணி மு கதிரேசனாரும், மறைமலையடிகளாரும் வடமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து ஒப்பிலக்கியத் துறைக்கு உறுதுணை புரிந்துள்ளனர். ஜே. ஆர். மார், கமில் சுவலபில், ஜார்ஜ் எல். ஹார்ட், பேரா சிரியர் இ. பி. செலிஷெவ் போன்ற வெளிநாட்டறிஞர்கள் தமிழிலக்கிய ஒப்பீட்டிற்கு வழிகாட்டியுள்ளனர். பேராசிரியர் ஆர். சீனிவாசராகவன், டாக்டர் வி. சச்சிதானந்தம், டாக்டர் கே. செல்லப்பன் போன்ற ஆங்கிலத்துறைப் பேராசிரியர்கள் தமிழிலக்கிய ஒப்பீடு நன்கு வளரச்செய்துள்ளனர். ஆங்கிலத் துறையின் மூலம் தமிழிலக்கிய ஒப்பீட்டில் ஆராய்ச்சிப்பட்டம் பெற்று வருவோர் பலராவர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் கதிர் மகாதேவன் ஒப்பிலக்கியத் துறையில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். மதுரை காமராசர் பல்கலைக்கழகம், கேரளப் பல்கலைக்கழகம் ஆகியவை இத்துறையில் ஈடுபாடு காட்டி வருகின்றன.

## பிறதுறைகள்

இதழியல் தமிழில் குழந்தைப்பருவத்தில் வளர்ச்சிபெற்று வருகிறது. பழனி அரங்கசாமி, இரா.கோதண்டபாணி போன்றோர் இத்துறை சார்ந்த நூலை வெளியிட்டுள்ளனர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் விருப்பப்பாடமாகவும், சான்றிதழ் படிப்பாகவும் இத்துறை இடம்பெற்று வருகிறது.

தமிழில் திறனாய்வியல் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது. ‘புலத்தினும் போரினும் போர் தோலாக் கூடல்’ என்ற சங்க கால மரபின்படியும், அரங்கேற்ற முறைகளின்படியும் இத் திறனாய்வு முறை கால்கொண்டு வளர்ந்து வந்தது. இன்று

மேலை நாட்டுச் செல்வாக்கால் இத் திறனாய்வுத்துறை புத்துணர்ச்சியும், புதுவளர்ச்சியும் கண்டுள்ளது. அ. ச. ஞானசம்பந்தனின் இலக்கியக்கலையும், டாக்டர் மு.வ. அவர்களின் இலக்கியத்திறன், இலக்கியமரபு, இலக்கிய ஆராய்ச்சி போன்ற நூல்களும் குறிப்பிடத்தக்கனவாகும். தமிழிலக்கியம் அனைத்தையும் பற்றிய நூற்றுக்கணக்கான திறனாய்வு நூல்கள் இன்று தோன்றி வளரக் காண்கின்றோம்.

தொல்பொருள் ஆய்வியல் தமிழில் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி பெற்றுள்ளது. அதனுடன் கல்வெட்டியலும், கோயிற் கலையியலும் இணைந்து வளர்கின்றன. டாக்டர் இரா. நாகசாமி இத்துறையில் தாமும் முயன்று உழைத்துப் பிறரையும் ஊக்கி வருகின்றார். நடன. காசிநாதன், மா. சந்திரமூர்த்தி போன்றோர் இத்துறை சார்ந்த நூலை வெளியிட்டுள்ளனர். பெரும்புலவர் சி. கோவிந்தராசன், புலவர் இராசு போன்றோர் இத்துறையில் ஈடுபாடு காட்டி நற்பணியாற்றியுள்ளனர். ஐராவதம் மகாதேவனை இத்துறையின் முன்னோடி எனலாம். தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை இதனை நன்கு வளர்த்து வருகிறது.

## அகராதிக்கலையியல்

தமிழில் இக்கலையின் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தொன்றுதொட்டு இத்துறை வளர்ச்சிபெற்று வந்துள்ளது எனில் மிகையாகாது. ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் உரியியலில் நூற்றிருபது அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளார். இடையியல், மரபியல் ஆகியவற்றிலும் சொற்களைத் தொகுதிப்படுத்திப் பொருள்கூறும் முறையும் உண்டு. இம் மரபுவழி வந்த நிகண்டுகள் ‘உரிச்சொல் பனுவல்கள்’ என்று அழைக்கப்பட்டன. இவை தமிழில் தோன்றிய ‘அகராதிக்கலை’ எனப் போற்றப்படவேண்டும். முன்பு நிகண்டு கற்றுத்தான் தமிழ்படிக்கத் தொடங்குவர். நிகண்டுகள் செய்யுள் வடிவில் அமைந்து காணப்படுவதால் நினைவு கூர்

வதற்கு எளிதாயின. இதனால் தமிழ்க்கல்வி செழித்தோங்கியது எனலாம்.

ஆதி திவாகரம் எனும் சிறப்புப்பெயர் பெற்ற திவாகரம், ஏனைய நிகண்டுகளுக்குக் காலத்தால் முற்பட்டது. இந்நிகண்டில் சங்கச் சான்றோர் வழக்கு மிகுதி. இந் நிகண்டிற்குச் சேந்தன் திவாகரம் என்ற பெயரும் உண்டு. இதன் காலம் கி.பி 8ஆம் நூற்றாண்டென்பர். திவாகரரின் மாணவர் பிங்கல முனிவர் எழுதிய நூல் பிங்கல நிகண்டாகும். இந்நூல் பத்தாம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகும். இந்நிகண்டில் 14,700 சொற்களுக்கு விளக்கமும், 1091 பல்பொருள் தரும் ஒரு சொற்களும் காணப்படுகின்றன. 11ஆம் நூற்றாண்டில் மண்டலபுருடர் எழுதிய சூடாமணி நிகண்டு இங்குக் குறிப்பிடத்தக்கது. உரிச்சொல் நிகண்டு, கயாதர நிகண்டு, அகராதி நிகண்டு, ஆசிரிய நிகண்டு ஆகியவை நிகண்டுகளின் வளர்ச்சியினை அடிச்சுவடுகளாகக் காலப்போக்கில் காட்டவல்லன.

வீரமாமுனிவரின் சதுரகராதி தோன்றிய பிறகு தமிழில் அகராதிக்கலை நன்கு முன்னேறியது. மதுரைத் தமிழ்ச்சங்கம் 'செந்தமிழ் அகராதி' என இரண்டு பகுதிகளை வெளியிட்டது. யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளை வெளியிட்ட, ஆயிரத்தெழுநூறு பக்கங்கட்கு மேற்பட்ட பேரகராதி இத்துறையில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சென்னைப் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரகராதி' (Lexicon) யினை ஏழு தொகுதிகளாக வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்மொழி மூலம் பல்கலைக் கல்வி

தமிழ் இன்று துறைதோறும் வளர்ச்சி பெறுவதற்கு, கல்லூரி அளவில் அது பாடமொழியாக அமைவதே தக்க அடிப்படையாகும். கோவை பூ. சா. கோ. தொழில்நுட்பக் கல்லூரியினர் சிறந்த முறையில் கலைச்சொல்லாக்கப் பணிக்கு உறுதுணை புரிந்துள்ளனர். கலைக்கதிரின் பணி மிகச் சிறந்த

தாகும். ஆட்சிச்சொல் அகரவரிசை கண்ட திரு கீ. இராமலிங்கனாரின் பணி குறிப்பிடத்தக்கதாகும். தொழில் நுட்ப அறிவியல் மேதை டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் இத்துறை வளர்ச்சிக்கு உதவியதுடன், தாம் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்தபொழுது 'களஞ்சியம்' என்ற இதழ் ஒன்றை வெளியிட்டு இதன் வளர்ச்சிக்குத் தக்க கால்கோளிட்டார். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஜி.ஆர் தாமோதரனார் 'கலைக்கதிர்' இதழ் மூலமாகவும், கலைச்சொல் அகரவரிசை நூல்கள் மூலமாகவும் இத்துறை வளர ஆவன செய்துள்ளார்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் இத்துறை வளர எல்லா வகையாலும் பற்பல நூல்களை வெளியிட்டு வருகிறது. தொடக்க நிலைக்கு இயல்பாக அமையும் குற்றங்குறைகள் சில காணப்படினும், அவை இயல்பாகக் களைதற் குரியன. விரைவிலேயே கலைத்துறைகளும், அறிவியல் துறைகளும் தமிழ் வடிவம் பெறும் என்பதுறுதி. அறிவியல் நூல்கள் தமிழாக்கம் பெறுவது கடினம் என்று கருதப்பட்டு வந்த காலம் மாறிவருகிறது. இன்று மருத்துவக் கல்வி முதல் அனைத்து உயர் கல்வித் துறைகளும் தமிழில் வழங்கப்படுவதை இலங்கையில் காண்கிறோம். தமிழகத்திலும் அதுபோல் மருத்துவ உயர் கல்வி, தொழில் நுட்ப உயர்கல்வி, அறிவியல் உயர்கல்வி மூன்றும் ஆங்கிலத்தில் மட்டுமன்றி, தமிழிலும் கற்பிக்கப்படும் காலம் விரைவில் வரவேண்டும். அப்போதுதான் தமிழ் வழிக் கல்வி வெற்றி பெறும். தமிழின் உண்மையான வளர்ச்சி - இக்கால முன்னேறிய மொழிகளுக்கு இணையான வளர்ச்சி அப்போதுதான் அமையும்.

---

தமிழ் பண்டையது ; நலம் சிறந்தது ; உயர்நிலையில் உள்ளது ; விரும்பினால் வடமொழி உதவியின்றி இயங்க வல்லது.

— டாக்டர் கால்டுவெல்

# 11. அறிவியலும் கலையியலும்

கற்பனை வளமும் இன்ப நலமும் மொழிப்போக்கின் ஒரு கூறென்றால், அறிவாக்கமும் உண்மை நாட்டமும் அதன் மறு கூறு எனப்படும். கற்பனையும் இன்பமும் தரும் படைப்புக்களைப் போல அறிவும் உண்மையும் நல்கிடும் ஆக்கங்களும் உருவாகிட வேண்டும்; இவ்வாறு உருவாவ தற்கான சூழல்கள் அமைந்து அவற்றைத் தக்கவாறு பயன் கொள்ளும் மொழியானது வளர்ச்சியும் வாழ்வும் பெறும்.

தமிழ் நிலத்து ஐந்திணை வளமும் மாந்தர் உழைப்பும் பழந்தமிழ் இலக்கியத்திற்கும் களங்கள் ஆயின; சமய எழுச்சி யும் அரசு மாற்றங்களும் பிற்கால இலக்கியங்களுக்குப் பின்னணி தந்தன; அறிவியல் பெருக்கமும் உரிமை வேட்கை யும் இக்காலப் படைப்புக்களுக்குச் சூழல் அமைக்கின்றன. இச்சூழலில் மலரும் இலக்கியப் பிரிவுகளுள் கவிதை, நாடகம் ஆகியவற்றைவிடக் கதையும் கட்டுரையும் காலப்போக்கில் முன்னிடம் பெற்று வருகின்றன. கட்டுரைத் துறையில் அறி வியலும் கலையியலும் சிறப்பிடம் வகிக்கின்றன. இந்த நூற்றாண்டை 'உரைநடைக்காலம்' என அழைக்கும்வண்ணம் அவற்றின் வளர்ச்சியும் வனப்பும் பொலிகின்றன.

ஐரோப்பியர் வருகைக்காலம் தொட்டு (கி பி. 1600 — 1947) தொடக்கம்பெற்ற புதிய உரைநடை இயக்கம், உரிமைப் போர்க்காலத்தும் சுதந்திர ஆட்சிக் காலத்தும் (1900 முதல்) வீறு பெற்று வளர்ந்து வருகிறது. ஐரோப்பியர் வருகையால்

---

எழுதியவர் சு. குழந்தைநாதன்

தமிழகம் பெற்ற முதல் நன்மை அச்சுக்கூடங்கள் நிறுவப்பட்டமை ஆகும். இவற்றினின்று பல்வேறு வகைப்பட்ட உரைநடை நூல்கள் தோன்றலாயின. நாடெங்கும் கல்விச் சாலைகள் நிறுவப்பெற்றமையால் பாடநூல்கள் பரவின; பத்திரிகைகள் வந்தமையால், மேனாட்டு இலக்கியங்கள் அறிமுகம் செய்யப்பட்டுப் புதினங்கள் வந்தன; அறிவியலும் தொழிலியலும் வந்தமையால் பிறதுறைகளும் வேர்விடத் தொடங்கின. என்றாலும் கூட 19ஆம் நூற்றாண்டிலிருந்தத தமிழகத்தில் ஒவ்வொரு துறையிலும் தமிழ்மொழி உரிமையிழந்து நலியத் தொடங்கிற்று. இசையரங்கில் தெலுங்கு, இறைவன் கோயிலில் வடமொழி, அரசியலிலும் ஆங்கிலம் எனத்துறை தோறும் வேற்றுமொழிகள் ஆதிக்கம் பெற்றன.

ஆங்கிலம் ஒன்றையே கற்றார் - அதற்கு
ஆவியோடாக்கையும் விற்றார்;
தாங்களும் அந்நியரானார் - இன்பத்
தமிழின் தொடர்பற்றுப் போனார்

என வேதநாயகர் ஆங்கில ஆதிக்கத்தை வெறுத்தும் எதிர்த்தும் பாடினார். எனவே 19ஆம் நூற்றாண்டுப் புலவர்கள், பிற மொழி ஆதிக்கப் பிடிப்பிலிருந்து தமிழை விடுவித்து அதன் பழம் பெருமைகளைச் சொல்வதிலேயே ஈடுபட்டனர். கிறித்தவ சமயச் சார்பான உரைநடை நூற்கள் வரக்கண்டு எழுச்சியுற்ற ஆறுமுகநாவலர் போன்றோர் புராண, இதிகாச நூல்களை வசன நடையில் எழுதவே முற்பட்டனர். உரிமைப்போர் வலுக்கத் தொடங்கிய பின்னரே நாட்டன்போடு மொழியுணர்வும் தலையெடுக்கத் தொடங்கியது.

அரசியல் முன்னிடம் பெற்ற சுதேசியமும் தாய்மொழிப் பற்றும் கல்விக் கூடங்களிலும் எதிரொலித்தன. ஆங்கிலம் எனும் பைசாசக் கல்வியொடு தாய்மொழிக் கல்விக்கும் தக்க தோரிடம் தரும் போக்குகள் மலர்ந்தன. 1850இல் சென்னைக் கல்விச்சங்கம் (The Madras School Society) நிறுவப்பெற்றுப் பாடநூற்கள் ஆக்கப்பட்டன, மொழிபெயர்ப்பு நூற்களும்

கொணரப்பட்டன. இப்பள்ளிகளில் எல்லாம் தேசீயக கல்வி அளிக்கப்படவேண்டும் என்ற இயக்கம் வலுத்தது. இதுபற்றி பாரதியார் பின்வருமாறு எழுதினார் :

"தேசபாஷையின் மூலமாகவே சரித்திரப் படிப்பு மட்டுமேயன்றி மற்றெல்லாப் பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும் ..........பௌதிக சாஸ்திரங்கள் கற்றும் கொடுப்பதில், மிகவும் தெளிவான எளிய தமிழ் நடையில், பிள்ளைக்கு மிகவும் சுலபமாக விளங்கும்படி சொல்லிக் கொடுக்க வேண்டும். இயன்ற இடத்திலெல்லாம், பதார்த்தங்களுக்குத் தமிழ்ப்பெயர்களையே உபயோகப்படுத்த வேண்டும் ... ..." (பாரதி நூல்கள் - கட்டுரைகள், பக். 498).

"தேசீயக் கல்வித் திட்டத்திற்குத் தேவைப்படும் பாடநூல்களை எழுதுவதிலேயும் வெளியிடுவதிலேயும் கூட அந்நாளைய தேசீயவாதிகள் ஆர்வங்காட்டினர். கல்வி பயில்வோரின் தொகை மிகுதியாக இராத அந்நாளிலேயே பாடநூல்களை எழுதுவதும் வெளியிடுவதும் வருவாய் தரும் தொழிலாக இருக்கவில்லை. அந்நிலையிலும் தியாக உணர்வோடு இந்தத் தொண்டில் ஈடுபட்டனர். தேசீயவாதிகளில் பெருந்தலைவர்கள் கூடப் பாடநூல்கள் எழுதலாயினர் தலைவர் ராஜாஜி அவர்கள், தம்பி வா, இதையும் படி எனும் தலைப்புக்களிலே ஆரம்பப் பள்ளிகளுக்கான பாடநூல்களை எழுதி வெளியிட்டார்.... விஞ்ஞானப் பாடங்களுக்குத் தமிழைப் பாடமொழியாக்குவது சாத்தியமில்லை என்று கல்வி நிபுணர்கள் கருதினர். தாய்மொழிப் பற்றுடையோரிலும் ஒருசாரார் அத்தகைய கருத்தைக் கொண்டவராக இருந்தனர். அவர்களுக்குப் பதிலளிக்கும் முறையில் தமிழில் முடியுமா? எனும் பெயரில், 'முடியும்' என்று விடையளிக்கும் வகையில் ராஜாஜி ஒரு நூல் எழுதினார். "(ம பொ. சி., விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, பக். 276).

1937 இல் தமிழகத்து உயர்நிலைப் பள்ளிகளில் தமிழே பயிற்றுமொழியாற்று.

புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

எனப் பல்லாண்டுகட்கு முன்னர் பாரதி கண்ட குறையைக் களையும் முயற்சிகள் மெல்லத் தொடங்கின. பள்ளி இறுதித் தேர்வுக்கான 'ஏ' பிரிவுப் பாடங்களைத் (வரலாறு, நிலவியல், பொது அறிவியல் போன்றவை) தாய் மொழியில் கற்பிக்கத் தொடங்கியமை நாளடைவில் 'சி' பிரிவுப் பாடங்கட்கும் (வேதியியல், பௌதிகவியல், கணிதம் எனும் விருப்பப் பாடங்கள்) நீடிக்கப் பெற்றதால் முதலில் தரமான பாடநூல்களை எழுதும் முயற்சிகள் அரும்பின.

தொடக்க காலத்தில் வெளிவந்த அறிவியல் நூல்களில் கலைச்சொற்கள் சரியாக அமையவில்லை. நூலெழுதுவோரின் தமிழறிவும் குறைவாக இருந்தமையால் நடை ஆற்றொழுக்காயில்லை. ஆனால் 1940க்குப் பின்னர், மொழியறிவோடு அவ்வப் பாடத்துறை அறிவும் பெற்ற ஆசிரியர்கள் தொகை பெருகியமையால் நூல்களும் புது மெருகுடன் வரத்தொடங்கின இக்காலத்தே, உயர்பள்ளிக் கல்வித்திட்டத்திற்கு மேல், சற்று உயர்ந்த நிலையில் பொதுமக்கள் படிப்பதற்கென்றும் பல நூல்கள் தோன்றலாயின அஷ்டாவதனம் வீராசாமி செட்டியாரின் விநோதரச மஞ்சரி ஒரு சுவையான தொகுப்பு நூல். இரங்கூனில் வெளியிடப்பெற்ற மானிட மர்மசாஸ்திரம் பயனுள்ளதொரு சுவை விருந்து. ஆ. சிங்காரவேலுவின் அபிதான சிந்தாமணி 1910 இல் வந்தது. இராஜாஜி அவர்களின் திண்ணை இரசாயணம், பெ.நா. அப்புசாமியின் மின்சாரம், வானக்காட்சி. நீங்களும் விஞ்ஞானமும், ஆர்.கே. விசுவநாதனின் ஆலயமணி, விசுவரூபம், அணுவில் ஆனந்தத்தாண்டவம், ஈ த. இராஜேஸ்வரியின் சூரியன், பானக்குமிழ் ஆகிய இவையெல்லாம் முதல்நிலைத் தொண்டர்கள் தமிழில் தந்த அறிவியல் ஆக்கங்களாகும்.

1831 முதல் தமிழ் இதழ்களிலும் சஞ்சிகைகளிலும் அறிவியல், கலையியற் கட்டுரைகள் வெளியிடப்பெற்றன. இதில் 1831 இல் வெளிவந்த 'தமிழ்ப் பத்திரிக்கை' முன்னோடி எனலாம். மறைமலையடிகளின் 'ஞானசேகரம்' (1902) பாரதியாரின் 'இந்தியா' (1907), திரு. வி. க. வின் 'தேசபக்தன்' (1917), வரதராஜுலு நாயுடுவின் 'தமிழ்நாடு' (1922), ப. ஜீவானந்தத்தின் 'ஜனசக்தி' (1937) முதலியன அரசியல் சமுதாயவியற் செய்திகளொடு அறிவியல் கலையியற் கட்டுரைகளுக்கும் இடம்தந்தன. 1917இல் தொடங்கப்பெற்ற 'தமிழ் நேசன், அறிவியல் ஏடாகவே கருதப்பட்டது. இலங்கையின் 'ஈழகேசரி', வீரகேசரி', சிங்கப்பூர்'தமிழ்முரசு', கோலாலம்பூர் 'தமிழ்நேசன்' என்பனவற்றிலும் சிறந்த கட்டுரைகள் வெளிவந்தன. சுதந்திரத்திற்கு முன்னர் வெளிவந்த 'சக்தி' 'கலைமகள்', 'ஜோதி', 'குமரிமலர்' 'மங்கை' என்பன மேனாட்டு ஏடுகளைப் போன்ற அமைப்பும் கருத்தாக்கமும் பெற்றுத் தமிழில் புதுநெறி காட்டின.

உயர்நிலைப்பள்ளி அளவில் தாய்மொழிக் கல்வி கொணரப்பட்டமையால் தமிழில் அறிவியல் நூல்களை ஆக்கும் முயற்சிகள் தோன்றலாயின. ஆயினும் தமிழில் கலைச் சொற்களை ஆக்கிக் கொள்வதில் சீரானதொரு முறையைப் பின்பற்றுவதில் இடர்ப்பாடேற்பட்டது. காலத்தின் தேவையினை அறிந்து கலைச் சொற்களை ஆக்க வேண்டும் எனச் சென்னை மாகாணத் தமிழர் முதலாண்டு மாநாட்டில் (1934) தீர்மானிக்கப்பெற்றது. அம்மாநாட்டில் அமைக்கப்பட்ட சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் சொல்லாக்கக் கழகமொன்றை அமைத்து அறிஞர்களைக் கூட்டிச் சொற்களைச் செப்பமிட்டுத் தந்தது. கணிதவியல், பௌதிகவியல், வேதியியல் முதலிய 9துறைகளில் கலைச் சொற்கள் இச்சங்க ஆதரவில் 1938இல் வெளியிடப்பட்டன. தனித்தமிழ்ச் சொற்களொடு கலைச்சொற்களும் கலந்தமைந்த இப்பட்டியல் பல ஆண்டுகள் அறிவியல் கலையியல் நூலெழுதுவோர்க்குப் பெருந்துணையாயமைந்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இப்பணியில் முதலில் ஈடுபட்டது. இடைநிலை வகுப்புக்கான அறிவியல் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வழிகாட்டியது. நவீன அசேதன இரசாயணம் 2 பகுதிகள் (1938, 1941). பௌதிகநூல் 2 பகுதிகள் (1941), அளவையியல் என்பன குறிப்பிடத்தக்கவை.

விடுதலையுணர்வு, கல்விப்பரப்பு, பத்திரிகை வளர்ச்சி, அறிவியல் முன்னேற்றம் முதலிய பல்வேறு காரணங்களால், தமிழில் துறைதோறும் நூற்கள் வெளியிடப்பெற்றன.

1872இல் மேலைநாட்டு மருத்துவமுறை பற்றி உடற்கூற்று நூல் எனும் பெயரில் தமிழில் வெளிவந்துவிட்டது. அதற்கு முன்னர் 1867இல், அறுவை மருத்துவநூல், வைத்தியர் கைவாகடம் என்பன வெளிவந்தன. வெல்சின் வேதியியல், டால்கனின் உடல்நூல், வாரிங்கின் இந்திய வாகட நூல், ஹூப்பரின் மருத்துவர் கையேடு எனப் பல மொழிபெயர்ப்பு நூல்கள் கிட்டின. தி. வி. சாம்பசிவம் பிள்ளை என்பவர் தமிழ்-மருத்துவ அகராதியினை இரு தொகுதிகளில் வெளியிட்டார். ஏட்டுச்சுவடிகளிற் சிறைப்பட்டுக் கிடந்த பழந்தமிழ் மருத்துவ முறைகள் அச்சில் கொணரப்பட்டன. அனுபோக வைத்திய நவநீதம், போகர் ஏழாயிரம், தேரையர்வாகடம், இரசவாத சிந்தாமணி என்பனவும் நாட்டுப்புற மருத்துவம், பச்சிலை மூலிகை, சித்த மருத்துவம், ஆயுர்வேதக் கலை, ஹோமியோபதி முறை பற்றி வெளிவந்தனவும் குறிப்பிடத்தக்கவை. ஆங்கில மருத்துவ இயல் பற்றி ஆண்டுதோறும் ஓரிரு நூற்கள் அச்சாகி வந்தன. டாக்டர் லக்ஷிமியின் தாய்மை, டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் நமது உடல் என்பன பரிசும் பாராட்டும் பெற்ற நூற்களுள் சில. வீட்டு வைத்தியர் (டாக்டர் ராஜன்), டி. எஸ். ஜனகுமாரியின் வைத்திய நூற்கள் மருத்துவக்கலை அன்றும் இன்றும், டாக்டர், வாய் பல் மருத்துவம், கண்மருத்துவம், நரம்பு மருத்துவம், குழந்தை வளர்ப்பு முறை. அறுவை சிகிச்சை,

குடும்பநலம் எனப் பல்வேறு நூல்கள் வெளிவந்துள்ளன என்றாலும், மருத்துவ நூல்களைத் தொழில் நுணுக்க அடிப்படையில், தரத்தில் சிறந்தனவாக வெளியிடும் நிலை இன்றும் ஏற்படவில்லை. மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பத்தார் தமிழில் வெளியிட்டுள்ள அழகழகான மருத்துவ நூற்களுக்கு ஈடாக ஒருநூல்கூடத் தமிழ்நாட்டில் உருவாகவில்லை. மருத்துவக் கல்வி ஆங்கில மொழியிலேயே கற்பிக்கப்படுவதும், அத்துறையில் ஆங்கிலம் இன்றளவும் நீங்காது ஆட்சி செலுத்துவதும் இதற்குக் காரணங்கள் எனலாம். இலங்கையில் மருத்துவப் படிப்பிற்கான பல நூல்கள் வெளிவந்திருப்பதை ஒப்பிட்டறிய வேண்டும்.

சுதந்திரப் போராட்டக் காலத்தே தோன்றிய பதிப்பகங்களும் வெளியீட்டகங்களும் அரசியல் சமூகவியலொடு, ஒரு சில அறிவியல், கலையியல் நூல்களையும் வெளியிட முற்பட்டன. பிரபஞ்சஜோதிப் பிரசுராலயத்தின் வழியாக வெ. சாமிநாத சர்மாவும் (பிளேட்டோவின் அரசியல் முதலியன...), அன்பு நிலையம் வழியாக யோகி சுத்தானந்த பாரதியாரும் (இன்றைய மனிதனும் இனிவரும் மனிதனும், யோக சித்தி), இன்னும் பலரும் நூல்களை வெளியிட்டனர். சக்தி வெளியீடுகள், நவயுகப் புத்தகாலயம், மணிக்கொடிப் பிரசுரங்கள், தினமணி வெளியீடுகள், கலைமகள் வெளியீடுகள், புதுமைப் பதிப்பகம், அல்லயன்ஸ் பதிப்பகம், தமிழ்ப்பண்ணை என்பன இப்பணியில் அணிவகுத்தன.

காந்தி சகம் பிறந்ததும் காந்தியக் கொள்கைகள் பற்றியும் உரிமைப்போர் பற்றியும் மொழிபெயர்ப்பு நூல்களொடு தமிழிலேயும் பல நூல்கள் எழுதப்பட்டன. தீண்டாமை, மதுவிலக்கு விதவை மறுமணம் முதலிய சீர்திருத்தவியல் பற்றியும் பல நூல்கள் வந்தன. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், இந்தியாவும் விடுதலையும், பெண்ணின் பெருமை, சீர்திருத்தம் முதலிய திரு. வி.க வின் நூல்கள் நினைக்கத்தக்கன. விடுதலைப்போர்

பொதுமக்கள் எழுச்சியாகக் கிளர்ந்தபோது, தமிழ் நூல்கள் பெருகி, கிராமங்களிலும் நகரங்களிலும், தேசபக்தர்கள் நினைவாக நிறுவப்பட்ட நூலகங்களில் இடம்பெற்றன விடுதலைப் போரின் மற்றொரு முனையாகத் தோன்றிய தொழிலாளர் இயக்கத்தாலும் தமிழ் வளர்ந்தது. ருசியப் புரட்சியின் எதிரொலியாகத் தமிழ் ஏடுகளில் பல கட்டுரைகள் எழுதப்பட்டன. திரு. வி.க , பி. வரதராசுலு நாயுடு, தோழர் சிங்காரவேலர், ப. ஜீவானந்தம் முதலியோர் தொழிலாளர் இயக்கத்தை எழுத்தாற்றலால் வளர்த்தார்கள். எனினும் இந்தியத் தொழிலாளர் இயக்கம் பிறந்த தமிழ்நாட்டில், அதுபற்றிக் குறிப்பிடத்தக்க நூற்கள் வெளிவரவில்லை

நாடு விடுதலை பெற்ற பின்னர் சுயமரியாதை இயக்கத்தின் சமூக சீர்திருத்த ஏடுகள் அணிவகுக்கத் தொடங்கின. பெரியார் ஈ.வெ.ரா., அறிஞர் அண்ணா, டி.கே. சீனிவாசன், தில்லை வில்லாளன், மு. கருணாநிதி, அன்பழகன், நெடுஞ்செழியன் ஆகியோரின் படைப்புக்கள் இளைஞர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. சுயமரியாதை இயக்கத்தால், தனித்தமிழ்க் கொள்கை மீண்டும் வலுப்பெற்று வளரத் தொடங்கியது. நடுநிலையில் நின்று நல்ல தமிழில் மு.வ. எழுதிய அறமும் அரசியலும், அரசியல் அலைகள் என்பன தனிச் சிறப்புப் பெற்றன.

பொருளியல் துறையில் காந்தியப் பொருளாதாரத் திட்டத்தையும் இந்தியப் பொருளாதார அமைப்பையும், விளக்கும் நூற்கள் பல வந்தன. டாக்டர் பா. நடராசன், பேராசிரியர் வேலாயுதம், சண்முகசுந்தரம், மா.பா. குருசாமி ஆகியோரின் முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. 'தினமணி' ஆசிரியர் ஏ.என். சிவராமன் (கணக்கன்), 'தினசரி' ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம் ஆகியோர் எளிய நடையில், அரிய கருத்துக்களைச் சுவைபட எழுதினர்.

பழந்தமிழ் நாட்டு வரலாற்றைப் புதிய ஆய்வு நோக்கில் எழுதும் பணிகள் தொடங்கின. ஆயிரத்தெண்ணூறு ஆண்டு

கட்டு முற்பட்ட தமிழகம் எனும் வி. கனகசபைப் பிள்ளையின் நூல் முன்னோடியாயிற்று. இராமச்சந்திர தீட்சிதர், கிருஷ்ண சாமி ஐயங்கார், ந. சி. கந்தையா, சதாசிவப் பண்டாரத்தார், மு. ஆரோக்கியசாமி, டாக்டர் கே.கே. பிள்ளை, இராசமாணிக் கனார், கா. அப்பாத்துரையார் முதலியோரின் படைப்புக்கள் வரலாற்றுச் சிந்தனையில் புதிய திருப்பங்களை அளித்தன. திரு வி.எஸ்.வி. ராகவன் பிளினி, பெரிப்ளூஸ், மெகஸ்தனிஸ், யுவாங்சாங் எனப் பல நூல்களை எழுதி உதவினார்.

நாட்டு வரலாறு என்பது சான்றோரின் வரலாறே என்ப தற்கேற்பப் பல துறையிலும் சிறந்திருந்த பெரியோர்களைப் பற்றி நூற்றுக்கணக்கில் நூல்கள் வந்துள்ளன. பாடநூல்கள் தேவையை மீறி இலக்கியத் தரத்துடன் எழுதப்பட்ட நூல் களும் உள்ளன. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யின் சேக்கிழார் பிள்ளைத்தமிழும் இராமலிங்க வள்ளலாரின் மனுநீதி கண்ட வாசகமும் ஒருவகையில் வரலாற்று நூல்களே. தமிழ்த் தாத்தா உ. வே. சா. வின் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம், தியாகராசச் செட்டியார் சரித்திரம் ஆகியவையும், மறைமலையடிகளின் மாணிக்கவாசகர் வரலா றும் காலமும், திரு வி க. வின் மனித வாழ்க்கையும் காந்தியடி களும் மறை. திரு நாவுக்கரசின் மறைமலையடிகள் வரலாறு அ ச. ஞா. வின் திரு. வி. க. வரலாறு, சி, பாலசுப்பிரமணியத் தின் பெருந்தகை மு. வ-, ம. பொ. சியின் கப்பலோட்டிய தமிழன் ரகுநாதனின் புதுமைப்பித்தன், சு, குழந்தை நாதனின் கோடிகொடுத்த கொடைஞன், கலைத்தந்தை கருமுத்து, ஆறு. அழகப்பனின் முத்தையா செட்டியார் என்பன தமிழில் வாழ்க் கை வரலாற்று நூல்கள் வளர்ந்துள்ளமையைப் புலப்படுத்த வல்லன. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தமிழ்ப் புலவர் வரிசையென 30க்கு மேற்பட்ட தொகுதிகளில் 800 பேர் வர லாற்றைத் தந்திருப்பதோடு பல்துறை அறிஞர்களின் வர லாற்றை வெளியிட்டும், வரலாற்றியல் கருத்தரங்கு நடத் தியும் அரும்பணியாற்றியுள்ளது. டாக்டர் சாலினி இளந்தி ரையன் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் பற்றி ஆய்வு செய் துள்ளார்.

சுயசரிதம் எனும் தன்வரலாற்று நூல்களும் தமிழில் இலக்கியப் பெருமை பெற்றுள்ளன உ.வே.சா வின் என் சரித்திரம், நாமக்கல் கவிஞரின் என் கதை, திரு வி க. வின் வாழ்க்கைக்குறிப்புகள், ஏ.வி. மெய்யப்பனின் எனது வாழ்க்கை அனுபவங்கள் என்பன அவற்றுள் சில.

உரிமைப்போர்க் காலந் தொட்டு மேடையில் தமிழ், வீறுபெற முழங்கத் தொடர்கிறது. அம்மேடைப் பொழிவுகள் எல்லாம் காற்றோடு போய்விடாமல் நூலாகப் போற்றப்பட்டுள்ளன. சத்தியமூர்த்தி பேசுகிறார், வாரியார் விருந்து, வானொலியில் ம. பொ. சி. என்றெல்லாம் வந்தவை ஒருபுறம் இருக்க, மேடைக்கலைப் பற்றியும் பல நூல்கள் ஆக்கப்பட்டன. திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் மேடைத்தமிழ், ஆ. முத்துசிவன் மேடைக்கலை, டி. செங்கல்வராயன், ம. பொ. சி. அறிஞர் அண்ணா, குமரி அனந்தன் ஆகியோரின் நூல்கள் இவ்வகையில் சிறந்தன.

கடித இலக்கியங்களும் தமிழுக்கு அணி சேர்ந்தன சத்தியமூர்த்தியின் கடிதங்கள், கோகிலாம்பாள் கடிதங்கள், சுத்தானந்தரின் கவியோகியின் கடிதங்கள், மு. வ. வின் தம்பிக்கு, தங்கைக்கு முதலியன, டி. கே. சி. யின் கடிதங்கள், அண்ணாவின் தம்பிக்கு என்பன குறிப்பிடத்தக்கன.

பயண இலக்கியங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. ஏ. கே. செட்டியாரின் உலகஞ் சுற்றும் தமிழன், இதில் முன்னோடி எனலாம். திரு. வி.க., மு வ. வின் இலங்கைப் பயண நூற்கள், தனிநாயக அடிகளின் ஒன்றே உலகம், சோமுவின் அககரைச் சீமையில் ரா. பி. சேதுப்பிள்ளையின் ஊரும்பேரும் என்பனவும், சாவி, அகிலன், நெ து. சுந்தரவடிவேலு, எஸ் என். சொக்கலிங்கம் ஆகியோரின் நூல்களும், சோமலெ. மணியன் எழுதிக் குவித்தனவும் இதில் அடங்கும்.

கல்வியியல், உளவியல் என்பன அடிப்படை வாழ்க்கைத் துறைகள் ஆயினும் அவற்றில் ஆசிரியப் பயிற்சிக்கான பாட நூற்கள் வந்த அளவுக்குப் பொதுமக்களுக்குப் பயன்தரும்

நூற்கள் வரவில்லை. வார்தாக் கல்வித்திட்டம். ஆதாரக் கல்வித்திட்டம் எனும் நூற்களுக்குப்பின், அவினாசிலிங்கம், சி சுப்பிரமணியம், நெ. து. சுந்தரவடிவேலு, பி. ஸ்ரீ. ஆச்சாரியா, அருணாசலம் போன்றோரின் படைப்புக்களை நினைவுகூரலாம். நூலகவியல் பற்றித் தொழில் நுணுக்க நூல்களும் வழிகாட்டி ஏடுகளும் வந்துள்ளன. தில்லைநாயகம், திருமலை முத்துச்சாமி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அச்சுக்கலை பற்றி திரு. சம்பந்தன் எழுதியுள்ளார்.

சட்டத்துறை ஒரு மொழியின் சொல்லாட்சித் திறத்தை வரையறுத்துக் காட்டவல்லது. இவ்வகையிலும் தமிழ். திட்ப நுட்ப ஆற்றலுடையது என்பதைச் சென்ற நூற்றாண்டிலேயே, விற்பன்னர் வேதநாயகர் மெய்ப்பித்திருந்தார். முறைமன்ற நடவடிக்கைகளைப் பற்றிச்'சித்தாந்த சங்கிரகம்'எனும் பெயரில் அவர் மொழிபெயர்த்துத் தந்தது இன்றளவும் நமக்குக்கிட்டாமலே போய் விட்டது. மா சண்முகசுப்பிரமணியம், சட்டத் தமிழ், சட்டவியல் குற்றமும் தண்டனையும் எனப் பல நூல்களை வழங்கியுள்ளார். நீதிபதி மகராசன் தலைமையிலமைந்த குழுவும் பல நூல்களை ஆக்கித்தந்துள்ளது. குற்றவிசாரணை முறைச்சட்டம், இந்திய சாட்சியச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம் என்ற நூல்கள், தேவையிருந்தால்தான் ஆக்கம் வரும்' (Necessity is the mother cf invention) என்பதை உணர்த்துவன ஆகும்.

தொழிலியல், பொறியியல், வேளாண்மையில் இனையவற்றிலும் பல நூற்கள் வந்துள்ளன. பஞ்சாலைத் தொழில், உங்கள் மோட்டார், கழனி வளமும் காவிரி நீரும், தையற்கலை, டேப்ரெக்-ார்டர் மெக்கானிசம் என இப்பட்டியல் நீளும். திரு. என். கே வேலன், சூசைராசா, முதலியோர் தொடக்க நிலையினர்க்காகப் பல நூல்களை ஆக்கியுள்ளனர். திரு. ஜி ஆர். தாமோதரன், டாக்டர் வி. சி. குழந்தைசாமி, டாக்டர் அரங்கசாமி, தி. மாணிக்கவாசகம், இல செ. கந்தசாமி, அஞ்சனமழகிய பிள்ளை. ந.வி. செயராமன் போன்றோரின் ஆக்கங்கள்

தரமும் பயனும் உடையவை. பழந்தமிழ் உயிரினங்களைப் பற்றியெல்லாம் தொகுத்தாய்ந்துள்ளன. திரு. பி. எல். சாமியின் நூல்களும், வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை மனையியற் கல்லூரி ஆகியவற்றின் வெளியீடுகளும், கலைக்கதிர் வெளியீடுகளும் குறிப்பிடத்தக்கன.

தமிழர்கள் பேணி வளர்த்த கலைகளில், அழகுக் கலைகள் எனவும் அருங்கலைகள் எனவும் கருதப்படும் இசை, நாட்டியத் தொடு, ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை ஆகியவற்றிலும் நூல்கள் எழுதப்பட்டன மயிலை சீனி வேங்கடசாமியின் தமிழர் வளர்த்த அழகுக்கலைகள், நுண் கலைகள் என்பன சிறந்தவை. கலைப்புலவர் க நவரத்தினப், கார்த்திகா கணேசன், பாலு சகோதரர்கள், பாசு ஆகியோர் அவ்வத்துறைகளில் எழுதியுள்ளனர். திருவாளர்கள் சே மு (ஐந்தருவி), பாஸ்கரத் தொண்டைமான் (வேங்கடம் முதல் குமரி வரை முதலியன), சா. கணேசன் (பிள்ளையார்பட்டித் தலம்), நீதிபதி மகராசன் (ஆடத்தெரியாத கடவுள்), கணபதி ஸ்தபதி (சிற்பச் செந்நூல்), நாகசாமி (கல்லும் சொல்லும் ஓவியப்பாவை), நடன காசிநாதன் (காலச்சுவடு), அ. இராகவனின் (தமிழ்நாட்டு அணிகலன்கள், கப்பற்கலை, திருவிளக்குகள், தமிழர் பண்பாட்டில் தாமரை, இசையும் யாழும் முதலியன), பரணீதரன் (தமிழக ஆலயச் சிறப்புப்பற்றி எழுதிய நூற்கள்) ஆகியோர் கலையியல் பற்றிச் சிறப்புற எழுதியுள்ளனர் பழைய சிற்ப முறைகள் பற்றிய சரஸ்வதி மகால் பதிப்புக்களும் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுக்கழக வெளியீடுகளும் தென்னிந்தியக் கிராமியக்கலை, நடனம் பற்றிய தேசிய நூல் வெளியீட்டுக்கழக வெளியீடுகளும் இப்பட்டியலில் சேரும்.

இக்கலை உணர்வுகட்கெல்லாம் பின்னணியான தமிழர் பண்பாடு பற்றியும் வாழ்க்கைத் தத்துவம் பற்றியும் பல நூற்கள் எழுதப்பட்டன. பேராசிரியர் தெ. பொ. மீ., வானமா மலை, இராமகிருஷ்ணன், சோமலெ முதலியோர் படைப்புக்கள் இவ்வகையின.

ஆயகலைகளான வானியல், சோதிடவியல், யோகமார்க்கங்கள், உடற்கல்வியியல், சமையற்கலை, ஒப்பனைக்கலை,

வங்கியியல், புகைப்படக்கலை, திரைஇயல், இதழியல், மொழி பெயர்ப்பியல், தட்டச்சியல், எனத் துறைதோறும் பல நூற்கள் வந்துள்ளன.

நாடு விடுதலை பெற்ற பின்னர், சென்னை மாநிலக் கல்வி அமைச்சராயிருந்த திரு. அவினாசிலிங்கம் 'எங்கும் தமிழ்', 'எதிலும் தமிழ்' எனும் கொள்கையுடையவராய்த் 'தமிழ்வளர்ச்சிக் கழகத்தை நிறுவினார். இந்திய வட்டார மொழிகளிலேயே முதன் முதல் தமிழில் கலைக்களஞ்சியத்தைக் கொணரும் முயற்சியினை 1947இல் தொடங்கினார் அதன் முதல் தொகுதி 1954 இலும், பத்தாவது இறுதித் தொகுதி 1968 இலும் வந்தது. ஆனால் ஆண்டுதோறும் வளர்ந்துள்ள ஆக்கங்களைத் தொடர்ந்து வெளியிடும் நோக்கம் நிறைவேறவில்லை. டாக்டர் மால்கம் ஆதிசேசய்யாவின் வழியமைப்போடு, யுனெஸ்கோ உதவியுடன் குழந்தைகள் கலைக்களஞ்சியப் பணியும் மேற்கொள்ளப்பட்டு, அதன் நிறைவுத்தொகுதி 1986இல் வந்தது. 1963 முதல் கல்லூரி அளவில் தமிழ் பயிற்று மொழியைக் கொணரக் கருதியமையால் அதற்குரிய பாடநூற்களை ஆக்கும் பணியில் தமிழ் வெளியீட்டுக்கழகம் முனைந்தது நூற்றுக் கணக்கான ஆங்கில நூல்களை மொழிபெயர்த்ததுடன் பல முதல் நூல்களையும் இக்கழகம் வெளியிட்டு நற்பணியாற்றியது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வரும் நூல்கள் வளர்ச்சி நோக்கில் அமைந்துள்ளன. 1956இல் ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டுத் தமிழ் அரியணை ஏறிற்று. 1958இல் தமிழ் அலுவலக மொழியாயிற்று. இவ்வாறு கல்வித்துறையிலும் ஆட்சித்துறையிலும் தமிழ் இடம் பெற்றமையால், கலையியல் அறிவியல் சார்ந்த கலைச் சொற்களைத் தேவைக்கேற்ப ஆக்கித்தர வேண்டிய தேவை நேர்ந்தது

1934 முதல் 1947 வரை பல்வேறு துறைகளில் வெளிவந்த சொற்களையெல்லாம் ஒருசேரத் தொகுத்து, அவற்றைச் சரி பார்த்து, தரப்படுத்திக் கலைச்சொற் பட்டியலாகச் சென்னை மாநில அரசின் ஆதரவில் 1947இல் வெளியிடப்பட்டது. அவை

நூலெழுத முற்பட்டோருக்கு அருந்துணையாயமைந்தன. இந் நிலையில், கல்லூரியில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் எண்ணம் எழுந்ததால், அதற்கென ஒரு குழுவை அமைக்க அமைச்சர் சி சுப்பிரமணியம் முன்வந்தார். திரு. ஜி. ஆர். தாமோதரன் தலைமையில் அமைக்கப்பட்ட 'கல்லூரித் தமிழ்க் குழு' பல்வேறு துறைச் சொற்களைத் திரட்டி ஒரு தொகுதி யில் 1960 இல் வெளியிட்டது இதுபோல இலங்கையிலும் கலைச்சொல்லாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம். 5000க்கும் மேற்பட்ட கலைச் சொற்களைத் தொகுத்து 1959இலும் 1971இலும் வெளி யிட்டது.

'மஞ்சரி' யும் 'கலைக்கதி' ரும் கால் நூற்றாண்டுக்குமேல் ஆற்றியுள்ள பணிகள் வரலாற்றில் இடம்பெறற்குரியன அறி வியல், கலையியல் கட்டுரைகளைச் சுவையும் பயனும் நல்கும் வகையில் வெளியிட்டுவரும் இவ்விரு திங்கள் ஏடுகளில், கலைக்கதிர் தமிழ் மொழியாக்கத்திற்கும் அரும்பணியாற்றி வருகிறது. இதன் வழியாக அறிமுகமானவர் இன்று சிறந்த எழுத்தாளர்களாக்கியுள்ளது. கலைச் சொல்லாக்கப் பணியில், கலைக்கதிரும், கோவை பூ. சா. கோ. அறநிலையத்தாரும் ஆற்றிய தொண்டுகள் போற்றற்குரியவை. அண்ணாமலை, மதுரைப் பல்கலைக்கழகங்களும் அறிவியற் கலைச் சொற் களைத் தொகுத்து வெளியிட்டுள்ளன. தமிழ் ஆட்சி மொழி யானதைத் தொடர்ந்து, ஆட்சிச் சொல் அகர வரிசைகள் அனைத்துத் துறைகட்கும் ஆக்கப்பட்டன. திரு. சீ. இராம லிங்கனார், திரு. தேவநேயப்பாவாணர் ஆகியோரின் சொல் லாக்கப் பணிகளும், 'செந்தமிழ்ச் செல்வி', 'தென்மொழி' ஆகியவற்றின், தொண்டும் குறிப்பிடத்தக்கவை.

'அறிவியல் விரைந்து வளரும் இன்றைய சூழலில் தமிழில் உருவாக்கப்பெறும் நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்களாயி னும் சரி, முதல் நூல்களாயினும் சரி, அவை அண்மைக்கால

வளர்ச்சிவரை எடுத்துக்காட்டுவனவாயிருத்தல் வேண்டும். அறிவியல் நூல்களை மொழிபெயர்ப்போர், அறிவியலறிவு, மொழியறிவு, தமிழ் மொழியறிவு இம் மூன்றும் பெற்ற வராக அமையின் மிக நன்று. இம் மூன்றும் ஒருசேரப் பெற்ற வர் கிடைப்பது அருமை. இன்று வெளிவந்துள்ள பல நூல் களில் தெளிவும் நீரோட்டமான நடையும் காணப்பெறாததற்கு இக் குறையே முக்கிய காரணமாகும்' (அறிவியல் தமிழ், ந. சுப்பு ரெட்டியார்).

என்றாலும் கூட, இக் கலைச் சொல்லாக்க முயற்சிகளால் தரமான அறிவியல் நூல்கள் வந்துள்ளமை நினைவுக்குரியது. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், தமிழ் புத்தகாலயம், பாரிநிலையம் ஸ்டார் பிரசுரம் முதலிய பல்வேறு வெளியீட்டகங்கள் தரமான நூல்களைக் கொணர்ந்துள்ளன. திரு. என். கே. வேலன், டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், பெ. தூரன், எஸ்.எஸ். இராம சாமி, துளசிதாஸ், ஆ. கந்தசாமி ஆகியோரின் எழுத்துக்கள் அறிவியல் தமிழை வளர்த்தன 'அணுக்கதிர்' இதழும், 'விஞ் ஞானச் சுடரும்' பம்பாய்த் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட அணு வியல் நூலும், யுனெஸ்கோ கூரியரும் பல்கலைக்கழக விரி வாக்கப் பொழிவுகளும், மதுரை காமராசர் பல்கலைக்கழகக் 'களஞ்சியமும்' அறிவியல் தமிழுக்கு ஆக்கம் அளித்தன.

கலைச் சொல்லாக்க முயற்சிகளால் தமிழில் சொற் பெருக் கம் பலமடங்கு பெருகியிருப்பதையும் எண்ண வேண்டும். தடுப் பூசி, ஒப்பந்தப்புள்ளி, ஒன்றியம், வேட்பாளர், கொதிகலன், வேலை நிறுத்தம், பசுந்தாளுரம், மின்கடத்தி, குடிசை வாரியம், வானொலி, மிதிவண்டி, பண்பாடு, முத்தரப்பு, பின்னணியிசை, சுழற்குழு, துணைவேந்தர், மூலக்கூறு, கதிரியக்கம், வீரிய விதை, தனிமங்கள், தொலைபேசி, திரைஇசை, சுழற்கேடயம் என்றெல்லாம் நாள்தோறும் புதுச் சொற்கள் வந்த வண்ணமா யுள்ளன. வளர்ச்சியுற்ற மேலைநாட்டவர் நாள்தோறும் புதுப்

புது அறிவியற் பொருள்களைக் கண்டுபிடித்து வருகையில், நாம் அப்பொருள்களுக்குரிய தமிழ்ப் பெயர்களை உருவாக்கு வதிலேயே பொழுதைச் செலவிடுகிறோம் என்ற குறை எழுந் தாலும்கூட, எதிர்காலத்தில் அறிவியற் சிந்தனைகள் ஆக்கம் பெற இப்போதைய கலைச் சொல்லாக்கம் நல்லுரம் தரும் எனத் துணியலாம். பல்கலைக்கழகங்களில் தமிழிலேயே புத் தாய்வேடுகள் அளிக்கப்பெறுவதும், ஆங்கிலத்தில் அளிக்கப் படும் புத்தாய்வுகளின் கருத்துச் சுருக்கம் தமிழில் தரப்படு வதும், அறிவியல் கலையியல் நூல்களைப் பொதுமக்கள் வாங் கிப் படிக்கும் பழக்கம் வளர்ந்திருப்பதும் நம்பிக்கை தருவன.

ஆனாலும் இதில் நிறைவு கண்டுவிட்டதாகச் சொல்ல முடியாது. இந்த நூற்றாண்டில், அறிவியல் கலையியல் துறை களில் பிறநாட்டில், குறிப்பாக ஆங்கில, ருசிய, சப்பானிய மொழிகளில், உரைநடை நூல்கள் பெருகியுள்ள எல்லையைத் தமிழ் இன்னும் அடையவில்லை. பிற இந்திய மொழிகள் சில வற்றில் அண்மைக்கால வளர்ச்சியளவுக்குக்கூடத் தமிழில் பலதுறை ஆக்கங்கள் செழிக்கவில்லை என்பதை ஒப்புக் கொள்ளவேண்டும். மேல்நாடுகளில் வெளிவரும் நூல்களில் 60% அறிவியல் நூல்கள், தொழில் நூல்கள். தமிழில் 100க்குப் பத்து நூலாவது இத்துறை சார்ந்தனவா என்றால் இல்லை யென்றே சொல்லவேண்டும். இயல், இசை, நாடகம் என முத்தமிழை வளர்த்த காலம் மட்டும் போதாது. நுண்கலைத் தமிழ், அறிவியல் தமிழ் என 'ஐந்தமிழ்' விழாக் காணும் கோலங் கள் மிகவேண்டும். பழம் பெருமையில் மட்டும் மூழ்கிவிடாது புதிய துறைகளில் உரைநடை நூல்களை நாள்தோறும் பரப்ப வேண்டும். வெளிநாட்டாரும் வணக்கம் செய்யும் திறமான புலமை தமிழில் மலரவேண்டும். இறவாத புகழுடைய புது நூற்களை இயற்றிச் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்திடவும் வேண்டும்.

# அறிமுகம்

இந்திய மொழிகளுள் தமிழும் வடமொழியும் பிற இந்தியமொழிகட்கெல்லாம் அடிப்படையாய் விளங்குவன. இப் பழமைச் சிறப்பால் தமிழ்மொழி இந்தியப் பெருநாட்டின் தனிப்பெருஞ் செல்வங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. தமிழ்நாடு தவிர்த்த பிற மாநிலங்களில் எல்லாம் தமிழியற் செல்வம் வளர்ந்துவரும் செய்திகள் இங்கே இயன்ற அளவு தொகுத்துத் தரப்படுகின்றன.

தமிழகத்தின் ஒரு பகுதியேயாயினும், புதுவை தனி மாநில ஆட்சியமைப்புடையதாகையாலும், பிரெஞ்சுக்காரர்களின் தொடர்பால் நெடுங்காலம் தனக்கேயுரிய தனித்தன்மைகள் கொண்டமைந்ததாகையாலும் அம் மாநிலத்தின் தமிழியல் வரலாறு தனிக்கட்டுரையாகத் தரப்பட்டுள்ளது தமிழர்கள் ஓரளவு கணிசமாக வாழும் கேரளம், கருநாடகம், ஆந்திரம் முதலிய மாநிலங்களிலும் அலுவல், வாணிபக் காரணங்களுக்காகக் குடியேறி வாழும் இதர பகுதிகளிலும் தமிழ் வளர்ந்து வரும் போக்குகள் தொகுககப்பட்டுள்ளன.

இந்தியாவில் தமிழகம் தவிர, ஏனைய மாநிலங்களில் ஏறத்தாழ இருபது பல்கலைக்கழகங்களிலும், பல உயர் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. தமிழ் மக்கள் ஒரு தொகையாக வாழும், தில்லி, பம்பாய், கல்கத்தா, பெங்களூர், திருவனந்தபுரம், ஐதராபாத், நாகபுரி, முதலிய இடங்களில் தமிழ்ச் சங்கங்களும் பிற அமைப்புக்களும் நிறுவப்பட்டுள்ளன.

# 1. புதுவை மாநிலத்தில்

புதுவை மாநிலத்தின் நான்கு உறுப்புக்களாகத் திகழும் புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம் என்பனவற்றுள், புதுச்சேரியும் காரைக்காலும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளன. மாஹேயில் மலையாளமும், ஏனத்தில் தெலுங்கும் பேசப்படுகின்றன.

புதுவை பிரஞ்சுக்காரர்கள் ஆட்சியில் இருந்த பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலும், இந்நூற்றாண்டிலும் தமிழ்ப் புலவர்கள் பலர் புதுவையில் வாழ்ந்து தமிழ்ப்பணி செய்துள்ளனர். இராமானுச நாவலர் பெரும்புலவராகத் திகழ்ந்தவர். இவர் வைணவ சமயச்சார்பான நூல்களை இயற்றியுள்ளார். மகாவித்துவான் சவரிராயலு நாயக்கர் பத்தொன்பதாவது நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்மிக்க கிறித்தவப் புலவர். இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.

இந்நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் சிறப்புற்று விளங்கிய புலவர் பெருமக்கள் தவத்திரு நாகலிங்க சுவாமிகள், மகாவித்துவான் பு.அ. பெரியசாமிப்பிள்ளை, பண்டித அ.நாராயணசாமி நாயுடு, வித்துவான் துரைசாமி முதலியார், பங்காரு பத்தர் என்போராவர். மறுமலர்ச்சித் தமிழின் விடிவெள்ளியாக விளங்குவது புதுச்சேரி எனில், மிகையாகாது. கவிதைத் துறையில் புரட்சியைத் தோற்றுவித்த தேசீயக்கவி சுப்பிரமணிய

---

எழுதியவர் அ. பாண்டுரங்கன்

பாரதியாரும், பாவேந்தர் பாரதிதாசனாரும், படைப்பிலக்கி யங்களில் ஒன்றான சிறுகதைத் துறைக்கும், ஒப்பிலக்கியத் திற்கும், கம்பராமாயண ஆய்வுக்கும் களனமைத்துக் கொடுத்த வ. வே. சு. ஐயரும், கட்டுரை இலக்கியத்திற்கு வழிவகுத்துக் கொடுத்த வ. ரா. அவர்களும், கவியோகி சுத்தானந்த பாரதி யாரும் வாழ்ந்து தமிழுக்கு வலிவும் பொலிவும் ஊட்டிய மண், புதுவை மண்ணே என விம்மிதம் கொள்ளலாம்.

பிரஞ்சுக்காரர்களின் ஆட்சி நடைபெற்ற காலத்திலும் கிறித்தவப் பாதிரியார்கள் புதுச்சேரியில் தங்கித் தமிழ்ப்பணி ஆற்றியிருக்கின்றனர். தமிழை பிரஞ்சுக்காரர்களும் பிற ஐரோப்பியர்களும் எளிதில் பயிலும்பொருட்டு பிரஞ்சு தமிழ் நூல்கள் பல எழுதப்பட்டன.

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரஞ்சுக்காரர்களுக்குத் தமிழ் மொழியையும், இந்து சமயத்தையும் அறிமுகப்படுத்தி யவர் மரியதாஸ் பிள்ளை (1721-1796) ஆவார். சொன்னரா (Sonnerat) என்னும் பிரெஞ்சு அறிஞருக்குத் தமிழரின் சமயம், நம்பிக்கைகள், விழாக்கள், பழக்க வழக்கங்கள் பற்றி விளக் கினார். லெ ஜென்டில்(Le Gentil) என்னும் கணித மேதைக்கு இந்திய வானியல் நூலின் அடிப்படைகளைக் கற்பித்தார். மரியதாசுப் பிள்ளையின் உதவியால்தான் தெகுய்னே (Deguinee) சந்திரகுப்த மௌரியனுக்கும் அலெக்சாண்டருடைய படையெடுப்புக்கும் உள்ள தொடர்பைக் கண்டறிந்தார் என்பர். கிறித்தவ சகாப்தத்திற்கும் இந்திய நிகழ்ச்சிகளுக்கும் இடையி லான காலத்தை (synchronism) உருவாக்க இது உதவியது. மரியதாஸ் பிள்ளை தமிழ்ப் பாகவதத்தைப் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

பிரஞ்சு-தமிழ் இலக்கணம் என்னும் இருமொழி நூல் ஒன்று பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளியாகியுள் ளது எழுத்து, சொல், யாப்பு பற்றிய தமிழ் இலக்கணக்

கொள்கைகளை இந்நூல் விளக்குகின்றது. இதனையொத்த மற்றொரு விரிவான நூல் 1863இல் புதுவையிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது இந்நூலும் எழுத்து, சொல், யாப்பு இலக்கணங்களைப் பிரஞ்சு மொழியில் எடுத்துக் கூறுகின்றது. 1868இல் பெர்ரோ (Perreaux, P) என்னும் ஆசிரியர் பிரஞ்சுக் கல்லூரியில் பயிலும் பிரஞ்சுக் குழந்தைகளுக்குத் தமிழ் கற்க உதவும் வகையில் சிறு நூலொன்றை வெளியிட்டார் (1868).

தமிழைப் பிரஞ்சு மக்களுக்குப் புகட்டிய அறிஞர்களுள் ஜுலியன் வான்சோன் (Julien Vinson) குறிப்பிடத்தக்கவர். இவருடைய தந்தையார் காரைக்காலில் நீதிபதியாகப் பணியாற்றியபொழுது வான்சோன் காரைக்காலில் பிறந்தார். இளமையிலேயே தமிழின்பால் மாறாத காதல் மிக்குக் காரைக்காலில் வாழ்ந்த புலவர்களிடம் தமிழ் கற்றார். பிரான்சுக்குத் திரும்பியதும் பிரஞ்சுப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசானாக விளங்கி ஐரோப்பியர்களுக்குத் தமிழ் கற்பித்தார் இவர் உ. வே சாமிநாதையருடன் தொடர்பு கொண்டிருந்தார். வில்லைப் புராணத்தின் பதிப்புக்கு மூலபாடத்தை வான்சோன் பிரஞ்சு நூல் நிலையத்திலிருந்து பிரதி செய்து சாமிநாதையருக்கு அனுப்பினார்.

வான்சோன் பல நூல்களை இயற்றியுள்ளார். திராவிட மொழிகளின் வினையமைப்புப் பற்றிய அவருடைய நூல் (1878) குறிப்பிடத்தக்கது. தமிழ் பயிற்றுவிப்பதற்கு ஓர் இலக்கண நூலைப் பிரஞ்சு மொழியில் இயற்றினார் (1903). சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் முதலிய தமிழ் இலக்கியங்களின் சில பகுதிகளைப் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்துள்ளார். தமிழில் இவர் சில சிறுகதைகளையும் எழுதினார் என்று தெரிகின்றது மார்தினே (Martinet) தமிழ் இலக்கணத்தைப் பிரஞ்சுமொழியில் இயற்றினார் (1889) தமிழ்-பிரஞ்சு சுருக்க இலக்கண நூலொன்று 1892 இல் புதுவையிலிருந்து வெளியாகியுள்ளது. பூலேஜ் (Baulez, M.J.)

என்னும் பாதிரியார் பேச்சுத் தமிழ் இலக்கண நூலை எழுதி யுள்ளார். இத்தகைய இலக்கண நூல்களுடன், பிரஞ்சு-தமிழ், தமிழ்–பிரஞ்சு அகராதிகள் பலவும் புதுவையிலிருந்து வெளி யாகியுள்ளன. பாதிரிமார்களான முஸ்ஸே (Musset) யும் துப் புயும் (Dupuis) இணைந்து உருவாக்கிய அகராதி புகழ் பெற் றது. லாப் பாதிரியார் ஓர் அகராதியை வெளியிட்டுள்ளார். வீரமாமுனிவருடைய நூல்களில் சில புதுவையிலிருந்து வெளி யாகியுள்ளன. வீரமாமுனிவருடைய கொடுந்தமிழ் என்னும் நூல் 1843 இல் மறுபதிப்பாக வெளியிடப்பட்டது. பரமார்த்த குரு கதை 1845இல் வெளியிடப்பட்டது. வீரமா முனிவருடைய பிரஞ்சு - தமிழ் இலக்கணம் 1863 இல் வெளியிடப்பட்டது

புதுச்சேரிப் பகுதிகள் தாயகத்துடன் 1954 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டன. அதற்கு அடுத்த ஆண்டில், அதாவது 1955 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட பிரஞ்சு இந்தியப் பண்பாட்டு நிறுவனம் தமிழுக்கும், இந்தியப் பண்பாட்டுக்கும் பெருந்தொண்டாற்றி வருகின்றது. இவ்வாராய்ச்சி நிறுவனம் பாரிசில் உள்ள தூரகிழக்கு நாடுகள் ஆய்வுப் புலத்துடன் (Ecole Francaise d' Extreme-trient) இணைந்து செயலாற்றுகின்றது கம்போடியா, தாய்லாந்து, இந்தோனேஷியா முதலிய தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள தொடர்புகள் குறித்துச் சீரிய ஆராய்ச்சிப் பணிகளை மேற் கொண்டுள்ளது. டாக்டர் பிலியோஸா (Dr. Jean Filliczat) இதன் தலைவராகத் திகழ்கிறார். தூரகிழக்கு நாடுகளில் தமி ழுடன் உள்ள தொடர்பு வடமொழியின் வாயிலாக அமைந் துள்ளது என்று டாக்டர் பிலியோஸா குறிப்பிடுகின்றார். இவ் வாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் பல அருமையான நூல்கள் வெளியாகியுள்ளன. திரு. தேசிகம்பிள்ளையும், டாக்டர் பிலி யோஸாவும் திருவிளையாடற்புராணம், காஞ்சிப்புராணம், கந்தபுராணம் ஆகியவற்றை பிரஞ்சு மொழியில் ஆராய்ச்சி முன் னுரை, குறிப்புக்களுடன் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர்.

காரவேலன், காரைக்கால் அம்மையார் புராணத்தைப் (பெரிய புராணத்தின் பகுதி) பிரஞ்சு மொழியில் வெளியிட்டுள்ளார். டாக்டர் குரோ (Dr. Gros) பரிபாடலைப் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்துள்ளார். இவர் உத்திரமேரூர் பற்றிய நூல் ஒன்றை டாக்டர் நாகசாமியுடன் சேர்ந்து எழுதி வெளியிட்டுள்ளார். தென்னகக் கோயில்களில் உள்ள ஆபரணங்கள் பற்றிய அரிய நூலை டாக்டர் பிலியோஸாவும், பட்டாபிராமனும் எழுதியுள்ளனர். சங்க இலக்கியச் சொற்களை அகராதியாகத் தொகுத்து இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. அய்யனார் - சாஸ்தா வழிபாடு குறித்த ஆராய்ச்சி நூலொன்று, அதிசயம் என்பவரால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. ஆண்டாள் அருளிய திருப்பாவையை டாக்டர் பிலியோஸா பிரஞ்சு மொழியில் வெளியிட்டுள்ளார்; திருமுருகாற்றுப்படையும் இவரால் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பிரஞ்சு இந்தியப் பண்பாட்டு நிறுவனம் மட்டுமன்றி, தனிப்பட்ட முறையிலும் சிலர் தமிழ் நூல்களைப் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர். அவர்களுள் ஞானு தியாகு குறிப்பிடத்தக்கவர் இவர் குறள் நாலடியார், கம்பராமாயணம் போன்ற பேரிலக்கியங்களைப் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்துள்ளார். தேசிகம்பிள்ளையும், காரவேலனும் வேறு சில நூல்களை மொழிபெயர்த்துள்ளனர். புதுவையில் தமிழ்ச் சங்கம் ஒன்று 17-18 ஆம் நூற்றாண்டுகளில் இருந்ததாக கலைமகள் என்னும் இலக்கியத் திங்கள் இதழைப் பல ஆண்டுகள் புதுவையில் வெளியிட்ட துரைசாமி முதலியார் குறிப்பிட்டுள்ளார். இவர் நடத்திய கலைமகள் இதழில் நாவல், சிறுகதை முதலிய புத்திலக்கியங்களும், அவற்றைப் பற்றிய திறனாய்வுகளும் இடம்பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

புதுவையில் பல சங்கங்கள் தோன்றி தமிழ்ப்பணி ஆற்றின. அவற்றுள் குறிப்பிடத்தக்கது கல்விக்கழகம் ஆகும். புதுவைக் கல்விக் கழகத்தின் வெள்ளிவிழா மலர் தமிழர்கள் போற்றிக் காக்கவேண்டிய கட்டுரைக் கருவூலம். தமிழ்

நாட்டில் வாழ்ந்த தமிழறிஞர்கள் அனைவரையும் வரவழைத்துப் புதுவையில் தமிழ் செழித்தோங்குவதற்குக் கல்விக் கழகம் காரணமாக அமைந்தது.

பிரெஞ்சுக் கல்வியமைப்பிலும், பிரெஞ்சுக் கல்லூரிகளிலும் தமிழுக்கு உரிய இடம் கொடுக்கப்படவில்லை. மிக அண்மைக் காலத்தில்தான், பிரெஞ்சுக் கல்லூரியில் தமிழ் மூன்றாவது மொழியாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. எனினும், புதுவை, காரைக்கால் பகுதியில் உள்ள தமிழ்க் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதற்கு ஆசிரியர்களை உருவாக்குவதற்காக ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும், தொடக்க இடைநிலைப் படிப்புகளிலும் தமிழ் பயிற்றுவிக்கப்பட்டது. பிரெஞ்சு மொழியில் 'பிரவே' தேர்வுக்கு இணையாகத் தமிழ் 'பிரவே' படிப்புக்கும் வகை செய்யப்பட்டிருந்தது. பாடங்களைப் பற்றிய அறிவுடன், தமிழில் புலமையும் பெறுவதற்குத் தமிழ் 'பிரவே' உதவியது.

கல்லூரிக் கல்வி 1961 இல் தான் புதுவையில் தொடங்கியது. இன்று அதன் நான்கு உறுப்புக்களிலும் ஆறு கல்லூரிகள் உள்ளன. மாஹே, ஏனாம் நீங்கிய மற்ற இரு இடங்களில் உள்ள கல்லூரிகளில் தமிழ் முதன்மொழியாகப் கற்பிக்கப்பட்டு வருகின்றது. புதுவை பாரதிதாசன் பெண்கள் கலைக் கல்லூரியில் தமிழ்ப் பட்ட வகுப்பு 1968-69 இல் தொடங்கியது. தாகூர் கலைக்கல்லூரியிலும் (புதுச்சேரி), அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியிலும் (காரைக்கால்) 1973-74 இல் தமிழ்ப்பட்ட வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. இவ்விரு கல்லூரிகளிலும் தமிழ் முதுகலை வகுப்புக்கள் 1979-80ஆம் ஆண்டிலிருந்து துவக்கப்பட்டுள்ளன. பாரதியார், பாரதிதாசன் ஆகியோர் பெயர்களில் இரண்டு ஆராய்ச்சி மாணவர்களுக்கும், இரண்டு உயர்நிலை ஆராய்ச்சி மாணவர்களுக்கும் புதுச்சேரி அரசு ஆய்வு செய்வதற்கு உதவித் தொகை வழங்குகின்றது. பாரதியார், பாரதிதாசன் நினைவு நூலகங்களை ஆராய்ச்சி மையங்களாக மாற்றுகின்ற திட்டமும் உருவாகி வருகின்றது.

# 2. கேரள மாநிலத்தில்

செந்தமிழ் வளர்த்த சேர (கேரள) நாட்டில் பல்கலைக் கழகமும் பல்வேறு அமைப்புக்களும் தமிழுக்கு ஆக்கம் அளிக் கின்றன தேசிகவிநாயகத்தின் கவிப்பெருமையைத் தினமும் கேட்ட செவிப்பெருமையுடைய இங்கே திருவாங்கூர்ப் பல் கலைக்கழகத்தில் கொடைவள்ளல் அழகப்பரின் ஒரு இலட்ச ரூபாய் அறக்கொடையுடன் 1944இல் தமிழ்ப் பேராசிரியத் துறை நிறுவப்பட்டது. இத்துறை கடந்த 35 ஆண்டுகளாகச் சீர்பெற வளர்ந்து, கேரளப் பல்கலைக்கழகத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. பேராசிரியர் மு இராகவையங்கார் (1945-51) பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை(1951-54), பேரா சிரியர் வி.ஐ. சுப்பிரமணியம் (1954-66) முதலியோரின் தலை மையால் நலம்பல பெற்றது. எம் ஏ படிப்பிற்கும் (1961), எம். லிட்., பிஎச். டி. நிலை ஆய்வுகட்கும் வசதிகள் பெற்றுள்ளது. இந்தியப் பல்கலைக்கழகங்களிலேயே தமிழில் எம். பில். படிப் பிற்கு வழியமைத்த முதல் பல்கலைக்கழகம் இதுவே எனும் பெருமைக்குரியது; இதன் வழியே தமிழியலில் எம். பில். தகுதி பெற்ற முதல் அணியினர் 1976இல் பட்டம் பெற்றனர். கேரளப் பல்கலைக்கழகத்தின் கீழ்த்திசை மொழியியலில் முதன் முதல் பிஎச்.டி. பட்டம் பெறுதற்கு ஆக்கம் நல்கியது இத்துறை யே ஆகும்.

கேரளப் பண்பாடு, வரலாற்றுக் கூறுகளை அறிதற்கான தமிழிலக்கியச் சான்றுகளைத் தொகுத்து ஆய்தல், சங்க இலக் கிய மொழியியல் அட்டவணை ஆக்குதல், தமிழ் இலக்கியங் களை மலையாளத்திலும், மலையாள இலக்கியங்களைத் தமிழி

லும் மொழிபெயர்த்தல், இரு மொழிகளின் ஒப்பீட்டாய்வுக் களம் அமைத்தல் என்பன இதன் பணிகளுள் குறிப்பிடத் தக்கவை.

நூற்றுக்கு மேற்பட்ட எம்.ஏ. ஆய்வுரைகள், இருபதிற்கு மேற்பட்ட பிஎச்.டி. ஆய்வேடுகள், பல எம்.லிட். ஆய்வுகள், 'இளவேனில்' எனும் ஆண்டுமலர், பழைய மாணவர்களின் ஆய்வுத் தொகை, ஆங்கில ஆய்விதழ் என்பன இப் பல்கலைக் கழகத்தின் தமிழியல் ஆக்கங்கள்.

கேரளப் பல்கலைக்கழகக் கல்லூரி, இடைநிலைக் கல்லூரி, பெண்கள் கல்லூரி, தமிழர்கள் பெருகி வாழும் இடங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் ஆகிய வற்றில் தமிழ் கற்பிக்கப்படுகிறது.

சித்தூர்ப் பகுதிக் கல்லூரிகளில் எம் ஏ. நிலை வரை தமிழ் பயில வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. இடைநிலை வகுப்பு, பி.ஏ. வகுப்பு முதலியவற்றில் தமிழ் பயில வசதிகள் உள்ளன.

பாலக்காட்டுப் பகுதியில் உள்ள கல்லூரியில் தமிழ்க் கல்விக்கும் ஆய்வுக்கும் உரிய வாய்ப்புக்களைக் கோழிக்கோடு பல்கலைக்கழகம் அளிக்கிறது. அப்பகுதியில் தொடக்கப்பள்ளி யிலிருந்தே தமிழ் பயில வழி உண்டு. மலைத்தோட்டப் பகுதி கள், தேவி குளம், பீர்மேடு கோட்டங்கள் முதலியவற்றிலும் தமிழ் வாழ்கிறது.

கேரள மாநிலத்தில் பல தமிழ்ச் சங்கங்கள் அரும்பணியாற்றி வருகின்றன. சித்தூர், கொழிஞ்சாம்பாறை, நெம்மாறா, பாலக்காடு, ஒலவக்கோடு, குன்னத்துப்பாளையம் முதலிய இடங்களில் இவை ஆற்றிவரும் பணிகள் குறிப்பிடத்தக்கன.

கவின் மலையாளத்தொடு கன்னித்தமிழ், பழமையுறவு பேணிப் புதுமையுணர்வு பெற்று வருகிறது. மலையாள மொழி யில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள சிந்தனைப் போக்கின் தாக்கங்கள், தமிழ்க் கலை, இலக்கியப் படைப்புக்களிலும் எதி ரொலிக்கின்றன.

## 3. கருநாடக மாநிலத்தில்

கருநாடக மாநிலப் பல்கலைக்கழகங்களும், தமிழ்ச் சங்கங்களும் தமிழுறவு பேணி வருகின்றன. மைசூர் மாநிலத்தில் பரவலாகப் பலவிடங்களில், தொடக்கப்பள்ளி, உயர்பள்ளி நிலையில் தமிழ் பயில வாய்ப்புண்டு. ஏறத்தாழ 20 கல்லூரிகளில் தமிழ்மொழிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பெங்களூரில் உள்ள நிஜலிங்கப்பா கல்லூரி, கிறித்தவக் கல்லூரி என்பன குறிப்பிடத்தக்கவை

தார்வாரில் உள்ள கருநாடகப் பல்கலைக்கழகத் துறையில் தமிழ் கற்பிக்கப்படுகிறது எம். ஏ. வகுப்பில் கன்னடம் பயில்வோரும், நாட்டுக்கலை, மொழியியல் எனும் துறைகளில் படிப்போரும் தமிழியல் கற்க வாய்ப்பளிக்கப்படுகிறது.

மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் மைய நிறுவனத்தில் பிறமொழியாளர்க்குத் தமிழ் கற்பிக்கப்படுகிறது; பாட நூற்களும் ஆக்கப்படுகின்றன.

ஊரியப், முதல்நிலைக் கல்லூரியில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது.

கருநாடக மாநிலத்தில், பெங்களூர்த் தமிழ்ச் சங்கம், திராவிட வாய்மொழி இலக்கிய மன்றம் என்பனவற்றின் தமிழ்ப் பணிகள் நினைவிற் கொள்ளத்தக்கன.

# 4. ஆந்திர மாநிலத்தில்

வடவேங்கடப் பகுதியிலே தென்குமரித் தமிழ், பல்கலைக் கழகங்களாலும் பண்பாட்டுக் கழகங்களாலும் பேணி வளர்க்கப் படுகிறது.

திருப்பதி வெங்கடேசுவராப் பல்கலைக்கழகக் கல்லூரி யில் 1955இல் பட்ட வகுப்பில் தமிழ்ப் பயிற்சி தொடங்கிற்று. கீழ்த்திசைக் கலைத்துறையில் தமிழ்த் துணைப் பேராசிரியரா யிருந்த திரு. பாலசுந்தரநாயகர் 1960 வரை இங்குக் கற்பித் தார். தமிழ்நாடு அரசின் மானிய உதவியுடன் நிறைகலைத் தமிழ் வகுப்புகள் 1970இல் தொடங்கப்பெற்றன. டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், டாக்டர் கு. தாமோதரன் ஆகியோர் பணியாற்றினர். தற்சமயம் சவுரிராசன் பணியாற்றுகிறார். நாளடைவில் எம்.பில்., பிஎச்.டி. பட்ட ஆய்வுகட்கு வாய்ப் பளிக்கப்பட்டன. தமிழ், தெலுங்கு மொழி இலக்கியங்களில் ஒப்பீட்டாய்வும் வைணவ இலக்கிய ஆய்வும் இப் பல்கலைக் கழகச் சிறப்புக்கள். திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாய ணம், மு.வ.வின் புதினம், இக்கால கவிஞர்கள் எனும் தலைப்பு களில் 1974 முதல் ஆண்டு தோறும் ஆய்வரங்குகள் நடை பெற்று வந்திருக்கின்றன. 1980 இல் தமிழ்ப் பேராசிரியத் துறைக்கென கூடுதலாக ரூ 25000/- நிதி உதவியினைத் தமி ழக அரசு நல்கியது. புத்தூர்த் தமிழ்ச் சங்கம், பகலா (Pakala) தமிழ்ச் சங்கம், சித்தூர் நகரத் தமிழ்ச்சங்கங்கள் ஆகியவற்றிற்

கெல்லாம் இப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆக்கம் அளித்துத் தமிழ்ப் பண்பைப் பேணி வருகிறது. தமிழாசிரியரல்லாத பிற கல்லூரிகளிலிருந்து தமிழ் பயில விழைவார்க்கும், தனிப் பயிற்சி வழியே நிறைகலைப் பட்டம் பெற முயல்வார்க்கும் பயிற்சி தருவதோடு, தமிழரல்லாதார்க்குத் தமிழ் மொழியில் சான்றிதழ் வகுப்புக்களையும் நடத்தி வருகிறது. திருப்பதி கலாச்சாரக்கழகம் திருப்பாவை, திருவெம்பாவை வகுப்புகளை நடத்துகிறது. தமிழக இயல், இசை, நாடகக் கலைஞர்களை அழைத்துச் சிறப்புச் செய்கிறது.

உஸ்மானியாப் பல்கலைக்கழக மொழித்துறைகளில் மிகப் பழமையான தமிழ் மொழித்துறை 1935இல் தொடங்கப் பெற்றது. சென்னைப் பல்கலைக்கழகத்தோடு இணைவு பெற்றிருந்த நிஜாம் கல்லூரியில் முதன்முதல் இத்துறை நிறுவப்பெற்றது. திரு நாராயணசாமி ஐயர் ஆசிரியராயமைந்தார். 1951 முதல் தமிழ்த்துறை சீருற வளரத் தொடங்கியது. பல கல்லூரிகளில், பகுதிநேர விரிவுரையாளர்கள் அமர்த்தப்பட்டனர் 1961 முதல் நிறைகலைத் தமிழ் வகுப்புகள் கற்பிக்கப்படுகின்றன. பின்னர் பிஎச். டி., ஆய்வுக்கு வாய்ப்பளிக்கும் நிலைக்கு உயர்ந்து, தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் கற்பிக்கப்பெறும் அனைத்துத் துறை நலன்களும் உடையதாக விளங்குகிறது. தமிழ்த்துறை நூலகத்தில் மட்டும் 10,000 நூற்றொகுதிகள் உள்ளன. உஸ்மானியப் பல்கலைக் கழகமும், தமிழ்நாடு அரசும் தாராள உதவிகள் நல்கின.

1962 முதல் தமிழ்ப் பேராசிரியக் கட்டிலுக்குரிய ஊதியச் செலவுகளையெல்லாம் தமிழ்நாடு அரசே நல்கி வருகிறது. 1978 முதல் தமிழரல்லாதார் தமிழ் பயில உதவும் சான்றிதழ், பட்டச் சான்றிதழ் வகுப்புக்கள் கற்பிக்கப்படுகின்றன. இதற்காகும் செலவினங்களையும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளுடன் தமிழ் மொழி இலக்கியங்களை ஒப்பிட்டறிய உதவும் சிறந்ததொரு களமாக இப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.

# 5. மேற்கு வங்கத்தி

## கல்கத்தாப் பல்கலைக்கழகம்

பல்கலைக்கழக மானியக்குழு நான்காம் ஐந்தாண்டுத் திட்டகாலத்திலேயே, கல்கத்தாப் பல்கலைக்கழத்தில் தமிழ்த் துறை தொடங்குவதற்காக நிதி ஒதுக்கியது. தமிழக அரசு ரூ. 10,000 நிதியுதவி அளித்தது. 1976ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தமிழ்த்துறை செயல்படத் தொடங்கியது. பேராசிரியர் ஒருவர், இணைப்பேராசிரியர் ஒருவர், விரிவுரையாளர் ஒருவர் ஆகிய மூன்று பதவிகளுக்கான தொகை உதவப்பட்டுள்ளது. தற்சமயம் பேராசிரியர் ஒருவர் மட்டுமே நியமிக்கப் பட்டுள்ளார்.

டாக்டர் டி. பி. சித்தலிங்கய்யா தற்சமயம் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

சைவ சமயம், முதியோர் கல்வி, மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளில் பேராசிரியர் டி. பி. சித்தலிங்கய்யா புலமை பெற்றவர். கன்னட மொழியிலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து கன்னடத்திற்கும் பல இலக்கியங்களை மொழிபெயர்த்துள்ளார். தமிழரல்லாதாருக்குத் தமிழ் பயிற்றும் முறை பற்றியும் நூலொன்று எழுதியுள்ளார்.

கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் தமிழ் எம். ஏ. வ[illegible]டுகள் நடைபெற்று வருகின்றன. சான்றிதழ் வகுப்புக்களுக்கும்

எழுதியவர் டி. பி. சித்தலிங்கய்யா

ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளில் புகுமுகம், பி. ஏ., பி.காம். ஆகிய வகுப்புக்களில் இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்பிக்கப்படுகிறது. விரைவில் தமிழ், வங்காளம் ஆகிய இரு மொழிகளின் ஒப்பிலக்கிய ஆராய்ச்சி தொடங்கப்படவிருக்கிறது.

## ஜாதவ்பூர் பல்கலைக்கழகம்

தமிழ் விரிவுரையாளர் பதவி ஒன்றிற்காகத் தமிழக அரசு ரூ 10,000 நிதியுதவி வழங்கித் தமிழ் ஒப்பிலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமளித்துள்ளது.

## பிற நிறுவனங்கள்

பாரதீய பாஷா பரீஷத் (Bharatiya Bhasha Parishad) அனைத்து இந்திய மொழிகளைப் பற்றியும், அவற்றின் வரலாற்றையும் அறிந்துகொள்ளவும், அவற்றைப் பரப்பவும் தோற்றுவிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனம். சாகித்ய அகாதெமியின் முன்னாள் செயலாளர் டாக்டர் பிரபாகர் மாச்வே இதன் நெறியாளர். இங்குள்ள நூலகத்தில் ஏறத்தாழ 3000 தமிழ் நூல்கள் உள்ளன. மாலை நேரத்தில், தமிழரல்லாதார்க்குத் தமிழ் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன

## பாரதி தமிழ்ச்சங்கம்

கல்கத்தா நகரில் 1941 ஆம் ஆண்டு இச்சங்கம் அமரர் டாக்டர் கே எஸ். கிருஷ்ணன் அவர்களின் முயற்சியால் நிறுவப்பட்டது. 5000 நூல்களை கொண்ட ஒரு நூலகம் இங்கு இயங்கி வருகிறது. 30 இதழ்களைக் கொண்ட ஒரு படிப்பகமும் இயங்குகிறது. தமிழரல்லாதார்க்குத் தமிழ் வகுப்புக்கள், வங்கமொழி வகுப்புக்கள், கல்லூரிகளில் இரண்டாம் மொழியாகத் தமிழைப் பயிலுவோருக்குத் தமிழ் வகுப்புக்கள் ஆகியவை நடத்தப்படுகின்றன. இசை வகுப்பொன்றும் நடத்தப்படுகின்றது.

ஏழைப் பள்ளிக் குழந்தைகளுக்கு உதவிப்பணம் வழங்கு வதற்கென இரண்டு அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன.

கிழமைதோறும் இலக்கியக் கூட்டங்கள், கருத்தரங்குகள் நடைபெறுகின்றன. தமிழறிஞர்களது பிறந்த நாட்கள் கொண் டாடப்படுகின்றன. தமிழகத்திலிருந்து பல அறிஞர்கள் அழைக் கப்பட்டுச் சிறப்புச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்படு கின்றன. இதுவரை 14 நூல்கள் இச்சங்கத்தால் வெளியிடப் பட்டுள்ளன.

## வங்கத் தமிழர் சங்கம்

ஹௌரா நகர்ப் பகுதியில் இச்சங்கம் இயங்கி வருகிறது. இலவசத் தொடக்கப்பள்ளி ஒன்று தமிழ்க் குழந்தைகளுக்கென நடத்தப்படுகிறது. கிழமைதோறும் இலக்கியக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. தமிழகத்திலிருந்து அறிஞர்கள் வர வழைக்கப்பட்டுச் சிறப்புக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படு கின்றன

## திருவள்ளுவர் கலை மன்றம்

ஹௌரா பகுதியில் இயங்கும் மற்றொரு அமைப்பு இது 1953இல் தொடங்கப்பெற்றது திருவள்ளுவர் பிறந்தநாள் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது திருக்குறளை வங்க மொழியில் பெயர்க்கும் பணி நடைபெற்று வருகிறது. ஏனைய மொழி பேசுவோரிடையே தமிழ்மொழி, பண்பாடு ஆகியவற் றைப் பரப்புவதும், அவர்களது மொழி, பண்பாட்டைத் தமிழர் அறிந்துகொள்ளச் செயலாற்றுவதும் முக்கிய பணிகள். ஒரு நூலகமும், படிப்பகமும் இயங்கி வருகின்றன.

## கல்கத்தா தமிழ் மன்றம்

1953இல் நிறுவப்பட்டது இம்மன்றம். பல்வேறு மொழி களைப் பேசும் அறிஞர்களை அழைத்து அவர்களது கருத்துக்

களைத் தமிழர் அறிந்துகொள்வதற்காகப் பல சிறப்புக் கூட்டங்களை நடத்தி வருகிறது. ஆண்டுதோறும் தமிழகத்திலிருந்து அறிஞர்கள் அழைக்கப்படுகின்றனர். கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. பல தமிழறிஞர்களது உருவப்படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. பேச்சுப் போட்டி, சிறுகதைப் போட்டி ஆகியவையும் நடத்தப்படுகின்றன. நாடக விழாக்களும் அவ்வப்போது நடத்தப்பெறுகின்றன. நூலகம் ஒன்றும் இயங்கி வருகிறது.

---

தமிழுக்கும் அமுதென்று பேர்— அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

— பாரதிதாசன்

# 6. தில்லியில்

இந்தியாவின் தலைநகரமாகிய தில்லி மாநகரில் சுமார் 60 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில், சற்றேறக் குறைய மூன்று லட்சம் பேர் தமிழர்கள். இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அரசுத் துறைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் பணியாற்றுகிறவர்கள்; ஏனையோர் வீட்டுவேலை, அன்றாடக் கூலிவேலை, சிறுசிறு பெட்டிக்கடை வியாபாரம் முதலியவற்றில் ஈடுபட்டிருக்கும் எளிய தமிழர்கள்.

அலுவலகத் தமிழர்கள் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பே, மொழிச் சிறுபான்மையினருக்கு உள்ள உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு தமிழ்ப் பள்ளிகள் என்னும் பெயரில், தங்கள் பிள்ளைகளுக்கு இங்கே ஆங்கிலப் பாடமொழிப் பள்ளிகளை அமைத்துக்கொண்டார்கள். தமிழ்மொழிச் சிறுபான்மையினர் என்னும் சலுகையைப் பெறுவதற்காகவும் தமிழக அரசில் லட்சக் கணக்கில் நன்கொடை பெறுவதற்காகவுமே அவர்கள் சொந்தப் பள்ளிகள் தொடங்கியதால், அப்பள்ளிகளில் தமிழ்ப் பயிற்சிக்குச் சிறப்பான இடம் எதுவும் தரப்படவில்லை; நாலாம் வகுப்பு வரை தமிழிலும் ஆங்கிலத்திலும் பாடம் நடத்தப்பட்டது; அதற்குமேல், தமிழும் குழந்தைகளுக்கு மட்டும் ஒரு பாடமாகக் கற்றுத்தரப்பட்டது.

வேலை வாய்ப்புக்குத் தமிழ்ப் படிப்பு உதவாது என்று கருதிய அவர்கள், உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்கு மேலே,

---

எழுதியவர் சாலை இளந்திரையன்.

தங்கள் குழந்தைகளுக்குத் தமிழ் படிக்க வாய்ப்பு வேண்டும் என்று எண்ணவில்லை. இந்தத் தமிழ்ப் பள்ளிகளை நடத்திய கல்விக் கழகம், 'மதராசிக் கல்விச்சங்கம்' என்றே பெயர் பெற்றிருந்தது: தமிழகத்தில் தி. மு. கழக ஆட்சி ஏற்பட்டபோது, தமிழக அரசு வழக்கமாக வழங்கி வந்த நன்கொடை தரவேண்டுமானால், இந்தக் கல்விச்சங்கம் 'தமிழ்க் கல்விக்கழகம்' ஆக வேண்டும் என்று தி. மு. க. வினர் குறிப்பிட்டார்கள். அதன் பேரிலேயே, மதராசிக் கல்விச்சங்கம் தில்லித் தமிழ்க் கல்விக் கழகம் என்று பெயர்மாற்றம் பெற்றது.

தில்லிப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக வந்தவரும், கருநாடக மாநிலத்தைச் சேர்ந்தவருமான பொருளியல் வல்லுநர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள், தலைநகரில் அமைந்த மத்தியப் பல்கலைக்கழகத்தில் இந்தி, உருது, சமஸ்கிருதம் மட்டும் இருந்தால் போதாது, இந்திய மொழிகள் அனைத்தும் பயில்வதற்கு இங்கே வாய்ப்பு இருக்கவேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டுவந்தார். பல மொழிகளுக்குத் தில்லிப் பல்கலைக்கழகத்தில் இடம் இருந்தால், அது இந்தி மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்று கருதிய இந்தி மொழித்துறைப் பேராசிரியரான டாக்டர் நா. நாகேந்திரா அவர்கள் இந்தத் திட்டத்தை ஆதரித்தார். (அவர் நினைத்த படியே, இங்குப்பணியேற்ற பல மொழி அறிஞர்களின் துணையோடு, டாக்டர் நாகேந்திரா அவர்கள், வேறு எந்த இந்திய மொழியிலும் இல்லாத 'இந்திய இலக்கிய அகராதி'யைத் தயாரித்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது).

இந்த இரண்டு அறிஞர்களின் திட்டப்படியே, முதலில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளுக்கும் விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். பிறகு குஜராத்தி, மராட்டி ஆசிரியர்கள் வந்தார்கள். இவ்வாறாகத் தமிழ்மொழி 1959இல் தில்லிப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

முனைவர் (டாக்டர்) சாலை இளந்திரையன் அவர்கள் இதன் முதல் விரிவுரையாளராக 1959 ஏப்ரலில் சேர்ந்தார். 1960-61ஆம் கல்வியாண்டிலிருந்து இளங்கலை (பி.ஏ.) வகுப்பில் தமிழ் ஒரு பாடமாக ஏற்பட்டது. 1960 அக்டோபரில் முனைவர் க. ஆறுமுகம் அவர்கள் தமிழ்த்துறையில் பேராசிரியராகச் சேர்ந்தார். 1965 இல் பா. பாலசுப்பிரமணியமும், 1968 இல் இரா. பார்த்தசாரதியும் இத்துறையில் சேர்ந்தார்கள்.

தில்லிப் பல்கலைக்கழகத்தில் (1960-61இல்) தமிழ் ஒரு பாடமானபோது எந்தக் கல்லூரியிலும் தமிழ்த்துறை ஏற்பட்டிருக்கவில்லை. பஞ்சாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தயாள்சிங் (மாலை நேரக்) கல்லூரியில் மட்டுமே தமிழ் கற்றுக் கொடுக்கப்பட்டது. முனைவர் திருமதி சாலினி இளந்திரையன் அவர்கள் இதன் பகுதிநேரத் தமிழ் விரிவுரையாளராக இருந்து வந்தார். ஏனைய கல்லூரிகளில் தமிழ்த்துறை இல்லாததால், அவைகளில் சேரும் மாணவர்கள் தமிழ்ப் பாடத்துக்குப் பல்கலைக்கழகத்துக்கே வரவேண்டும் என்ற நிலை இருந்தது.

1961இல் முதலாவது தென்னிந்தியர் கல்லூரியான திருவேங்கடவன் கல்லூரி தோன்றியது. ஆந்திரத்தின் திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்தக் கல்லூரியை நடத்துகிறது. தொடர்ந்து, பல்கலைக்கழக கல்லூரியான மிராண்டா(மகளிர்) கல்லூரியிலும் லேடி சீராம் (மகளிர்) கல்லூரியிலும் தமிழ்த் துறைகள் ஏற்பட்டன. இவைகளில் முறையே, முனைவர் மோ. வாசுகி, முனைவர் திருமதி இந்திராணி மணியன் ஆகியோர் விரிவுரையாளராகப் பொறுப்பு ஏற்றனர். இதற்குள், பஞ்சாப் பல்கலைக்கழகக் கல்லூரியாக இருந்த தயாள்சிங் கல்லூரியும் தில்லிப் பல்கலைக்கழகக் கல்லூரியாக இணைந்தது. திரு. ஆர். பார்த்தசாரதி இதன் தமிழ் விரிவுரையாளரானார். இவர் 1968இல் பல்கலைக்கழகத்தில் சேர்ந்ததால் முனைவர் செ. இரவீந்திரன் அதன் விரிவுரையாளரானார்.

மிராண்டாக் கல்லூரி விரிவுரையாளர் காலமானதால், அவரு டைய இடத்தில் திருமதி விசயலட்சுமி என்பவர் 1979இல் நியமனம் பெற்றுள்ளார். திரு. கோ. பரமசிவனை விரிவுரை யாளராகக் கொண்டு அஞ்சல்வழிக் கல்வித்துறையும் தமிழ் கற்க வாய்ப்பளித்து வருகிறது.

தொடக்கத்தில் இளங்கலை வகுப்பின் இரண்டாம் பகுதி யில் அடங்கிய ஒரு பாடமாக மட்டுமே தமிழ் கற்பிக்கப்பட்டது. நாளடைவில், இளங்கலை (சிறப்பு), வணிகஇயல் (முதனிலை), வணிகஇயல் சிறப்பு (முதனிலை), வணிகஇயல் (இறுதிநிலை), இளங்கலை சிறப்பு வகுப்பு (முதனிலை), இளங்கலை (அறிவி யல்) முதனிலை முதலான பல வகுப்புகளிலும் தமிழைப் பாட மாகப் பயிலும் வாய்ப்பு ஏற்பட்டது. இளங்கலை வகுப்பில் கட்டாயப்பாடமாகவே இரு நிலைகள் உள்ளன. அதாவது, பத்தாம் வகுப்பு வரையில் தமிழ் பயின்று விட்டுவிட்டவர்களுக் கும் இளங்கலை வகுப்பில் சற்றே குறைந்த அளவில் தமிழ் உண்டு; 12ஆம் வகுப்பு வரை தமிழ் பயின்று பட்ட வகுப் புக்கு வருவோர்க்கும் தமிழ் உண்டு.

1979–80 முதல் இங்கே மொழிப் பாடத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. இலக்கண, இலக்கியக் கல்வியோடு, செயல்முறைத் தமிழ் (Functional Tamil) என்னும் பாடமும் பயிற்றுவிக்கப்படுகிறது. மொழிநடையையும், கருத்து வெளி யீட்டுத் தோரணையையும் செப்பம் செய்வதோடு அன்றாட வாழ்வின் பல நிலைகளிலும் துறைகளிலும், திட்பநுட்பத் தோடு தமிழைக் கையாளவும் கற்றுத்தருகிறது இந்தப் பாடம்.

பாடங்கள் வளர்ந்து வந்தாலும், மாணவர் தொகை அள வானதாகவே இருப்பதால், கல்லூரிகளின் தமிழ்த்துறைகள் விரிவடைவதற்கான வாய்ப்பு இங்கே மிகவும் குறைவே.

பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பயிற்சி தொடங்கிய காலத் திலேயே, பிறமொழியினருக்குத் தமிழ் பயிற்றும் ஓராண்டு (சர்டிபிகேட்) வகுப்பு ஏற்பட்டது. அத்துடன் இந்தி முதுகலை

(எம்.ஏ) வகுப்பில் தமிழை ஒரு பாடமாகப் பயிலவும் வசதி செய்யப்பட்டது. இந்த வகுப்பிலே பயின்று இந்தி எம்.ஏ. பட்டம் பெற்ற மாணவர்கள் தமிழ் இலக்கியத்தையும் இந்தி இலக்கியத்தையும் ஒப்பிட்டு ஆய்ந்து எம்.லிட். பட்டங்களும் முனைவர் (டாக்டர்) பட்டங்களும் பெற்றார்கள். இந்தியிலும் தமிழிலும் நீதிநூல்கள், இந்தியிலும் தமிழிலும் உள்ள கண்ணன் கதைகள், தமிழ்ச் சிலப்பதிகாரமும் இந்திப் பத்மா வதி சரித்திரமும் முதலான பொருள்களில் ஒப்பியல் ஆய்வு நிகழ்த்தி இவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள். ஆயினும் இந்த வகுப்பு இப்போது நடைபெறவில்லை. பிற மொழியினருக்கு சான்றிதழ் (தமிழ்) வகுப்பு மட்டுமே நடை பெறுகிறது. இந்திய இலக்கியத்தில் எம்.பில். ஆய்வுப் பட்டத் துக்குப் பயில்வோரும் சிலபோது தமிழ் பயில்வது உண்டு.

தில்லிப் பல்கலைக்கழகத்தில் தமிழியற் கல்வி ஏற்பட்ட 1959ஆம் ஆண்டு தொடங்கியே தமிழில் முனைவர் பட்டத் துக்கு ஆய்வு செய்யவும் இங்கே வாய்ப்பு இருந்தது. தமிழ்த் துறையில் பணியாற்றும் இந்திராணி மணியன், ஆர். பார்த்த சாரதி ஆகியோர் இங்கேயே முனைவர் பட்டம் பெற்றவர்கள். ஆயினும், முதுகலைத் தமிழ் வகுப்பு இல்லை. எனவே ஆசிரியர் களாக வருவோர் அல்லது வேறு (தென் மாநில) பல்கலைக் கழகங்களின் மாணவர்களையே ஆய்வாளர்களாக எதிர்நோக்க வேண்டியிருந்தது. இங்குள்ள ஆசிரியர்களின் தளராத முயற் சியால் இப்போது இந்த நிலை மாறியுள்ளது. 1978 ஆம் கல்வி யாண்டிலிருந்து இங்கே தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பும் நடந்து வருகிறது. எனவே, முதல் வகுப்புத் தொடங்கி முனை வர் பட்டம் வரை தொடர்ந்து தமிழ் படிக்க இப்போது தில்லி யில் முழுமையான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தில்லிப் பல்கலைக்கழக எம்.ஏ. வகுப்பில், இலங்கை மற்றும் மலேசியத் தமிழ் இலக்கியம் ஒரு சிறப்புப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. நாட்டுப்புறவியல் மற்றொரு சிறப்புப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. முதுகலை வகுப்பிலேயே

மாணவர்களை ஆராய்ச்சி நெறிமுறைகளில் பழக்கும் நோக்கத்துடன், ஆய்வுரை ஒன்று வரைவதும் எம்.ஏ. பாடத்திட்டத்தின் ஒரு முக்கியக் கூறாக அமைக்கப்பட்டு உள்ளது.

இந்திய மொழிகள் துறையில் தமிழ், தெலுங்கு, கன்னடம் மலையாளம், குஜராத்தி, மராத்தி, மணிபுரி, அசாமி, வங்காளி, சிந்தி, ஒரியா, பஞ்சாபி ஆகிய பன்னிரண்டு மொழிகள் உள்ளன. இந்தி, உருது, சமஸ்கிருத மொழித்துறைகள் அருகிலேயே உள்ளன. மேலை நாட்டு மொழிகளைக் கற்பிக்கும் நவீன ஐரோப்பிய மொழிகள் துறை உள்ளது. தவிர சீனம் ஜப்பானியம், அராபி, பெர்சியன் முதலிய மொழிகளுக்கும் இங்கே இடம் உள்ளது. எனவே, இங்குள்ள தமிழாசிரியர்களில் சிலராவது, அவ்வப்போது இந்தப் பல துறைகளின் நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு, தங்கள் இலக்கிய அறிவுப் பரப்பை விரிவுபடுத்திக் கொள்கிறார்கள். அதேபோல் தமிழின் தொன்மையையும் சமயச் சார்பற்ற அதன் சங்க இலக்கியத் சீர்மையையும் பிறமொழியாளர்களுக்கு சொற்பொழிவு/கலந்துரையாடல்கள் வாயிலாக விளக்குவதிலும் இவர்கள் கணிசமான வெற்றியைப் பெற்றுள்ளார்கள். தமிழைப் பற்றிக் காலங்காலமாக இங்கே நிலவப் பெற்றுள்ள சில தவறான எண்ணங்களையும் இவர்கள் மாற்றியுள்ளார்கள்.

தில்லி வானொலி நிலையத்தில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வாழும் இந்தியர்களுக்கான தமிழ் ஒலிபரப்புப் பகுதி ஒன்று உள்ளது. பெரும்பாலும், அரசியல் செய்திகளுக்கும் திரைப்படப் பாடல்களுக்குமே இடமாக இருந்த இந்த ஒலிபரப்பு, தில்லிப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பயிற்சிக்கு வாய்ப்பு ஏற்பட்டுப் பல தமிழறிஞர்கள் வந்து சேர்ந்ததால், இலக்கிய நிகழ்ச்சிகளுக்கும் இடமளித்துத் தரம் உயர்ந்துள்ளது.

பெரும்பாலும் அலுவலகத் தமிழர்களையே உறுப்பினர்களாகவும் நடத்துநர்களாகவும் கொண்டு 1946இலிருந்து இயங்கிய தில்லித் தமிழ்ச் சங்கமும் பல்கலைக்கழகத் தமிழாசி

ரியர்களின் தொடர்பால் சில பயனுள்ள பணிகளைச் செய் துள்ளது. குறிப்பாக, இச்சங்கத்தின் ஆண்டு வெளியிடாகிய 'சுடர்' இதழ், பல்கலைக்கழகத் தமிழாசிரியர்களின் வரு கைக்குப் பின் கணிசமாகத் தரம் உயர்ந்தது. இதன் வெளி யீடுகளுள், சாலை அவர்களின் ஆசிரியப் பொறுப்பில் வெளி வந்த அண்ணா மலரும் (1970), வெள்ளிவிழா மலரும் (1971) தமிழ் உலகம் எங்கும் பாராட்டப்பட்ட சிறப்புக்கு உரியவை. டெல்லியில் இராமகிருட்டிணாபுரத்தில் சொந்தக் கட்டிடத்தில் அமைந்துள்ள இச்சங்கம், ஆண்டுதோறும் இலக்கிய விழாக்கள் நடத்தித் தமிழகத்தோடு ஆக்கத் தொடர்பு கொண்டுள்ளது.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள இந்திய இலக்கியப் பேர கராதியும் இங்கே தமிழ்ப் பயிற்சிக்குத் தளம் அமைந்ததின் சீரிய விளைவுகளிலே ஒன்று; இந்தியாவின் அனைத்து மொழி களின் இலக்கியங்கள், இலக்கிய ஆசிரியர்கள், இலக்கியப் பெரும் பாத்திரங்கள், இலக்கியத்துறைச் சொற்கள் ஆகியவை களுக்கு விளக்கமும் விவரமும் தரும் நல்ல கையேடு இந்த அக ராதி. தமிழைப் பற்றி மட்டும் ஆயிரத்து இருநூறு குறிப்புகள் இதில் இடம்பெற்றுள்ளன. இவைகளைத் தேர்ந்தெடுத்தவர் சாலை இளந்திரையன். இந்த அகராதி இந்தி மொழியில் வெளியிடப்பட்டுள்ளது.

மற்ற இடங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளை நோக்க, தில்லிப் பல்கலைக்கழகம் சுமார் 20 ஆண்டுகளில் கண்டுள்ள தமிழியற் கல்வி வளர்ச்சி கணிசமானது என்றே சொல்ல வேண் டும். இந்தப் பல்கலைக்கழகத்தின் தமிழியற் கல்வியோடு தொடர்புடைய தமிழ் ஆசிரியர்களில் பெரும்பாலோர் சிறந்த கவிஞர் சிறந்த திறனாய்வாளர், சிறந்த கட்டுரையாளர், சிறந்த நாவலாசிரியர், சிறந்த மொழிபெயர்ப்பாளர், சீரிய தமிழ்நலச் சிந்தனையாளர், சீரிய பகுத்தறிவுப் பணியாளர் என்னும் பல சிறப்புகளுக்கு உரியோராக வளர்ந்திருப்பதையும் குறிப்பிட்டுச் சொல்லுதல் வேண்டும்.

# 7. பிற மாநிலங்களில்

## பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம்

வடபுலத்துக் காசியும் (வாரணாசி), தென் தமிழ்நாட்டு இராமேசுவரமும் இந்திய சமயத் தத்துவ உடன்பாட்டைப் புலப்படுத்தும் திருத்தலங்கள். இந்து சமயத்தவர்க்குப் புனித இடமாக விளங்கும் இதனருகில் புத்த சமயத்தவர்க்கு இனிய சாரநாத் அமைந்துள்ளது. சங்ககாலந் தொட்டே தமிழ் நூல்களில் காசி குறிப்பிடப்பட்டுள்ளமையிலிருந்து இதன் பழமையையும் பெருமையையும் அறியலாம். பிற்காலத்தே குமர குருபரர் இங்கே சென்று, மடம் அமைத்து, இந்தியில் கம்ப ராமாயணத்தை விரித்துரைத்துத் துளசிதாசர்க்கு வழிகாட்டினார். காசி நகர்ப்புலவர் பேசும் முறையைக் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்யவேண்டுமெனப் பாரதி பாடினான்.

இங்குள்ள பல்கலைக்கழகத்தில் இந்தி தவிர்த்த மற்ற இந்திய மொழிகளுக்கான இந்திய மொழித்துறையொன்று அமைந்துள்ளது. பட்டவகுப்பில் பயில்வோர் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் பயிலுதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. மாணவர்கள் தனிமுறையில் பயின்று தேர்வெழுதவும் வசதிகள் உண்டு. நகரத்தார் அமைத்துள்ள திருப்பணிகளும் பிறவும் தமிழகத்தோடு இந்நகரத்தை என்றென்றும் தொடர்பு படுத்தி வருகின்றன.

## அலகாபாத் பல்கலைக்கழகம்

அலகாபாத் பல்கலைக் கழகத்தில் உள்ள இந்தித்துறை, ஒரு தமிழ் விரிவுரையாளரை அமர்த்தித் தமிழ்க் கல்வியளித்தற்குப் பல்லாண்டுகளாக வாய்ப்பளித்து வருகிறது. சான்றிதழ், பட்டச் சான்றிதழ் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இந்தி எம். ஏ. பயில்வோர் தமிழையும் ஒரு பாடயாகக் கொண்டு பயிலலாம்.

## இலக்குமணபுரிப் பல்கலைக்கழகம்

உத்தரப்பிரதேச மாநிலத் தலைநகரான இங்கு நெடுங் காலமாகத் தென்னிந்திய மொழிப்பள்ளி இயங்கிவருகிறது. இதுபோல அந்த மாநிலத்தில் 10க்கு மேற்பட்ட இடங்களில் தமிழ்மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இங்கே தமிழ் பயில்வோர் அனைவரும் பிறமொழியாளர்கள்; வயது வந்தவர்கள்; ஏற்கெனவே அலுவலகப்பணி புரிபவர்கள். எனவே இவர்கள் நலன் கருதி மாலை வகுப்புக்களே நடத்தப்படுகின்றன. பயில்வோருக்கு உதவித்தொகை அளிக்கப்படுகிறது. நான்காண்டுகள் வரை பயில வாய்ப்பளிக்கப்படுகிறது.

இலக்குமணபுரியில் உள்ள தென்னிந்திய மொழிப் பள்ளி, உ.பி. மாநிலப் பள்ளிகளில் எல்லாம் குறிப்பிடத்தக்க வகையில் தமிழுக்கு ஆக்கம் தருகிறது. இங்குப்படிக்கும் மாணவர்களில் சிறப்பாகத் தேர்ச்சியுறுவோர் தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்க்கப் பயணப்படி வழங்கப்படுகிறது. பல்வேறு மொழிபேசும் மக்களிடையே நல்லெண்ணத்தையும் நட்புறவையும் பேணி வளர்க்கும் ஒருமைப்பாட்டரங்குகளாக இப்பள்ளிகள் பயன் தருகின்றன. எனவே உயர்நிலை மொழியாராய்ச்சிப் பணிகட்கு இவை களமாகவியலாது.

## ஆக்ரா பல்கலைக்கழகம்

கலைப்படைப்பால் உலகப் புகழ்பெற்ற இங்கேயுள்ள பல்கலைக்கழகத்தில் மொழியியல் அமைப்பொன்றுள்ளது. இவ்

வமைப்பில் ஓர் தமிழ் விரிவுரையாளர் அமர்த்தப்பட்டுள்ளார். பிற வடஇந்தியப் பல்கலைக்கழகங்களைப் போல, சான்றிதழ், பட்டச்சான்றிதழ் வகுப்புக்களிலும், எம். ஏ இந்தி வகுப்பிலும் தமிழ் கற்பிக்க வாய்ப்புண்டு. திராவிட மொழியியலை அறிதற் கும் பயிற்சி தரப்படுகிறது. அதற்கேற்ற தமிழ் நூல்களமைந்த நூலகப் பிரிவொன்றும் உள்ளது.

## அலிகார் முசுலீம் பல்கலைக்கழகம்

இந்தித்துறையோடு இணைவுபெற்றுத் தமிழ், மலையாள, தெலுங்கு மொழிகள் இங்கே கற்பிக்கப்படுகின்றன. இந்திய அரசால் நடத்தப்படும் இம் மையப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயில்வோர்க்கு உதவித்தொகை அளிக்கப்படுகிறது. இங் குள்ள நூலகத்தில் இக்காலத் தமிழ் நூல்களும் பழைய அரிய நூல்களும் போற்றிக் காக்கப்படுகின்றன.

## பஞ்சாபி பல்கலைக்கழகம்

சண்டிகார் நகருக்கு அருகமைந்துள்ள பாட்டியாலாவில் உள்ள இப்பல்கலைக்கழகத்தில், தமிழக அரசின் நிதி உதவி யோடு தமிழ்க்கல்வி தொடங்கப்பெற்றது. இத்தமிழ்ப் பகுதி, தொல்லாய்வு மொழியியல் துறையொடு இணைக்கப்பட்டுள் ளது. எம். ஏ. மொழியியல் பயிலும் மாணவர்கள் திராவிட மொழியும் தமிழும் கற்கிறார்கள். எம். ஏ. வகுப்பில், பேச்சு வழக்குத் தமிழும் ஒரு பாடமாக அமைந்துள்ளது தமிழ், வட மொழியொடு தொடர்புடைய இந்திய மொழியியல் மரபுகள் சிறப்பாகப் பயிலப்படுகின்றன. எம்.பில். பயிற்சியும் தரப்படு கிறது. திராவிட மொழியியல் பற்றிய பத்திரிகையும் வெளி யிடப்படுகிறது. டாக்டர் எஸ். வைத்தியநாதன் இங்கு பேராசி ரியப்பணி புரிகிறார்.

## பஞ்சாப் பல்கலைக்கழகம்

இந்தியர் விடுதலை பெற்ற பின்னர் திட்டமிட்டு அமைக் கப்பட்ட இந்த எழில்நகரில், தென்னிந்திய மொழிக்கெனத்

தனித்துறையொன்று உள்ளது. வட இந்தியப் பல்கலைக்கழகங்களிலேயே தென்னிந்திய மொழிகளுக்கென ஒரு தனித் துறையைப் பல்லாண்டுகட்கு முன்னரே தொடங்கி விட்ட பெருமை இப்பல்கலைக்கழகத்திற்கு உண்டு. இங்கே சான்றிதழ், பட்டச் சான்றிதழ் வகுப்பொடு, பி. ஏ வகுப்பளவிலும் தமிழ் பயில வாய்ப்பளிக்கப்படுகிறது. திரு. கே. இராமகிருட்டிணன் இங்கே பணியாற்றுகிறார்.

குஜராத், மகாராட்டிரப் பகுதிகளில் தமிழ்க் கல்விக்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. பம்பாயில் தமிழர்கள் பெருகி வாழும் இடங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்கள் தமிழகத்தோடு எப்போதும் பண்பாட்டு உறவு பேணிவருகின்றன. பம்பாயில் அமைக்கப்பட்டுள்ள சண்முகானந்த சபை இதற்கொரு நிலையான சான்றாக விளங்குகிறது.

பீகார், ஒரிசா, அசாம் முதலிய மாநிலங்களில், தமிழர்கள் கூடிவாழும் இடங்களில் எல்லாம் கலை இலக்கியக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பணியாற்றும் அமைப்புக்களைப் பற்றியெல்லாம் விவரங்களை முயன்று தொகுப்பது மிகவும் பயன்தரும்.

செய்யுள் அமைப்பில் கிரேக்க மொழியினையும்
இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியினையும்
வெல்ல வல்லது தமிழ் மொழி

—வின்ஸ்லோ

# 8. திருமடங்களும் தமிழ் மன்றங்களும்

மன்னர்கள், குறுநில மன்னர்கள், செல்வர்கள் ஆகியோரின் நலிவுக்குப் பின்னர், தமிழ்நாட்டு மக்களிடையே சமயப் பற்றையும் மொழிப்பற்றையும் பேணி வளர்க்கும் பொறுப்பினைத் திருமடங்களும் தமிழ்ச் சங்கங்களும், தமிழாய்வு நிறுவனங்களும் ஏற்றுக் கொண்டன.

மதுரைத் தமிழ்ச் சங்கம் 1901ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 14ஆம் நாள் பாண்டித்துரைத் தேவர் அவர்களால் நிறுவப்பெற்றது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் பின்பற்றித் தமிழ் நாடெங்கும் பல நிறுவனங்கள் தோன்றின.

தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளையைப் புரலவராகக் கொண்ட கரந்தைத் தமிழ்ச் சங்கம், மறைமலையடிகளார் நிறுவிய நாகைத் தமிழ்ச் சங்கம் பண்டிதமணி கதிரேசச் செட்டியாரும் வ.பழ.சா. குடும்பத்தாரும் நிறுவிய மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை, சென்னை, திருச்சி, தமிழ்ச்சங்கங்கள், கோவையில் சர்.ஆர்.கே. தொடர்பு பூண்ட தமிழ்மன்றம், திருநெல்வேலி, தூத்துக்குடி தமிழ் இலக்கியக்கழகம், மதுரைத் திருவள்ளுவர் கழகம், தென்காசித் திருவள்ளுவர் கழகம், கோயிற்பட்டித் திருவள்ளுவர் கழகம், இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் நிறுவிய தமிழிசைச் சங்கம், பல்வேறு இசை, நாடக மன்றங்கள், டி.கே.சி.யின் வட்டத்தொட்டி,

திருநெல்வேலி தனித்தமிழ் இலக்கியக்கழகம், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. கண்ட தமிழகப் புலவர் குழு, டாக்டர் வி.ஐ சுப்பிரமணியம் நிறுவிய திராவிட மொழியியல் சங்கம் சென்னையில் உள்ள உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் அனைத்திந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகரிலுள்ள மொழியியற் கழகம், குறிப்பிட்ட இலக்கியங்களுக்காக ஆண்டு தோறும் விழாபெருக்கும் காரைக்குடி கம்பன் கழகம், சென்னை இளங்கோமன்றம், திருவள்ளுவர் கழகம் போன்ற எண்ணற்ற அமைப்புக்கள், அரசியல் சமூக உறவுக்காக நாடெங்கும் நிறுவப்பட்டுள்ள கணக்கற்ற கழகங்கள், சங்கங்கள், மன்றங்கள் எனும் இவையெல்லாம் தமிழ்ப்பணியில் அணிவகுத்து நிற்கின்றன. மொழி ஞாயிறு தேவநாயகப் பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் இயக்கும் தனித்தமிழ் இயக்கங்கள் குறிப்பிடத்தக்கன.

கல்கத்தாவில் உள்ள பாரதி தமிழ்ச் சங்கம் 1941இல் கே.எஸ். கிருஷ்ணன் என்னும் பெரியாரால் நிறுவப்பெற்றது. இச்சங்கம் பல சிறப்பான பணிகளை ஆற்றி ஆற்றி வருகிறது திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இலக்கிய நூல்களை வெளியிட்டுச் சிறப்பான பணியாற்றி வருகின்றது.

சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகிற்குத் தமிழ்ப் பண்பாட்டை உணர்த்துதல், உலகத் தமிழர்களுக்குத் தமிழிலக்கியம் பற்றி அறிவுறுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் 1970ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது.

# அறிமுகம்

நினைப்பிற கெட்டா நெடுங்காலந்தொட்டே நீண்ட தோர் வரலாறும் இடையறாத வாழ்வும் கொண்டது தமிழ் மொழி. இன்று வாழும் இந்திய மொழிகளுள் மிகப்பழமை யான இலக்கியச் செல்வமுடைய உயர்தனிச் செம்மொழி தமிழ். முற்காலத்தில் அரசியல், வாணிபக் காரணங்களுக் காகத் தமிழ மக்கள் திரைகடலோடினார்கள்; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனக்கொண்டு தம் நாகரிகத்தை யும் பண்பாட்டையும் அன்று செல்வாக்குப் பெற்றிருந்த நாடுகளிடையே பரப்பினார்கள். அதனால் தமிழ்மொழி அந்நாடுகளிடையே பரவியது. பிற்காலத்தில், மலேயா, சிங்கப்பூர், மோரிசு, பிஜி ஆகிய பல்வேறு நாடுகளில் பிழைப்பிற்காகத் தமிழர்கள் குடியேறினார்கள். அங் கெல்லாம் இன்றளவும் தமிழ் வாழும் மொழியாக விளங் குகிறது; சமில் சுவலபில் பாராட்டியதுபோல 'உலக மொழி'யாகவும் அது தலை நிமிர்ந்து நிற்கிறது.

தமிழின் பழமையான இலக்கிய இலக்கணச் செல் வங்கள் வெளிநாட்டறிஞர்கள் பலரது கவனத்தைத் தன் பால் ஈர்த்தன; அவற்றை ஆய்ந்த வெளிநாட்டறிஞர்கள் பண்டைத் தமிழரின் பண்பாடு, மொழிச்செம்மை ஆகிய வற்றைக்கண்டு வியக்கின்றனர். மேலை நாடு, கீழை நாடுகளில் தமிழாய்வுக்காகத் தனித் துறைகளை அமைத்து வளர்ப்பதைக் காணும்போது 'தேமதுரத் தமிழோசை' உலகமெலாம் பரவ வேண்டும் என்ற மகா கவி பாரதியின் கனவு நனவாவதை உணர முடிகின்ற தன்றோ?

# 1. இலங்கையில்

## இலங்கையில் தமிழியலாய்வு வரலாறு — 1965 வரை

தமிழ் நாட்டிற்கு வெளியே உள்ள இடங்களைப் பொறுத்தவரை, இலங்கையும் கேரளமும் மட்டுமே தமிழ்மொழியோடு மிகச்சிறப்பான தொடர்பு பூண்டிருந்திருப்பதாகச் சொல்லலாம். தமிழகத்தோடு இலங்கை கொண்டுள்ள உறவு தனிச் சிறப்புடையது. ஆதாரபூர்வமாக எழுதப்பட்ட இலங்கை வரலாறு முழுவதிலுமே தமிழ் இடம் பெற்றிருந்தமைக்குரிய உறுதியான சான்றுகள் உள்ளன. சங்கப்புலவர்களில் ஒருவரான, ஈழத்துப் பூதன்தேவனார் காலந்தொட்டு தமிழ் இலக்கிய வரலாற்றுக்கமைந்துள்ள தொடர்பினை இலங்கைத் தமிழர்கள் பெருமையுடன் நினைந்து போற்றுகின்றனர்.

சேரன் செங்குட்டுவன், கண்ணகிக்கு நீர்ப்படை செய்தபோது சிங்கள மன்னனான கயவாகுவை அழைத்திருந்தான். அதுமுதல், கண்ணகி வழிபாடு, பத்தினி வழிபாடு எனும் பெயரில் சிங்களர்களாலும், இலங்கைத் தமிழர்களாலும் இன்றளவும் போற்றப்பட்டு வருகிறது. சிங்கள மன்னர்களில் சிலர், தமிழ்ப் புலவர்களைப் போற்றி புரந்தனர். 'பிரிவீனாக்கள்' எனப் பெறும் உயர் கல்வி நிலையங்களில் பௌத்த பிக்குகளுக்குக் கற்பிக்கப்பெற்ற மொழிகளில் தமிழும் இடம் பெற்றிருந்தது. கி. பி. 9 ஆம் நூற்றாண்டிற்குப் பிந்திய தமிழ்க் கல்வெட்டுக்கள் இங்கு ஏராளமாகக் கிடைத்துள்ளன. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்தே இலங்கையில், தமிழ் இலக்கியம்

வளம் பெற்றிருந்தமைக்கான சான்றாக இவற்றை ஏற்றுக் கொள்ளலாம்.

இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் வரலாறு கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து வரக்காணலாம். இலங்கையின் வடபுலம், பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து தனித் தமிழ் அரசாக நிலைபெறத் தொடங்கியமையால், அங்கே தமிழ் இலக்கியம் தழைக்கத் தொடங்கியது. யாழ்ப்பாண மன்னர்கள், தமிழ்க் கலைகளை வளர்த்தற்கெனத் தமிழ்க் கழகமொன்றை நிறுவியதாகச் சொல்லப்படுகிறது. போர்த்துக் கீசியர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்டபோது தமிழ்க் கத்தோலிக்க நூற்கள் சில எழுதப்பட்டன. போர்த்துக்கீசியர்களுக்குப் பின், டச்சுக்காரர்கள் யாழ்ப்பாணத்தை நூற்றைம்பது ஆண்டுகள், அதாவது பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை அரசு புரிந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டிறுதியில் இலங்கையின் வடபுலத்தை டச்சுக்காரர்களிடமிருந்து ஆங்கிலேயர்கள் கவர்ந்து கொண்டனர். இக்காலத்தே, பிரபந்தங்கள் எனப்பெறும் இலக்கியங்கள் ஏராளமாக ஆக்கப்பெற்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியும் இலங்கையில் தமிழ் இலக்கிய வரலாற்றிற்கும் தமிழ்ப் புலமைக்கும் பொற்காலமாய் அமைந்தன. இவற்றிற்கு முற்பட்ட காலங்களைப் போலன்றி, தமிழ் இலக்கியத் துறையிலும் புலமைப் பாங்கிலும் இலங்கை தனக்கேயுரிய செல்வாக்கினை இக்காலகட்டத்தே ஏற்படுத்தியது. இலங்கைத் தமிழ்ப் புலவர்களும் அறிஞர்களும் தமிழ்நாடு போந்து, அங்கே நெடுங்காலம் தங்கி தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர். இவ்வாறு இலங்கையிலும் தமிழகத்திலும் பதிந்த இலங்கைப் புலவர்கள் பலகூறுகளில் முன்னோடிகளாய்த் திகழ்ந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதலிருபதாண்டுகட்குள், பிரபலமான பல வேதபோதக சங்கங்கள், மதம் பரப்பும் நோக்குடன் இலங்கையில் நிறுவப்பெற்றன. தம் சமயப் பணிகட்கேற்றதொரு கருவியாக இச்சங்கங்கள் கல்விப்பணியைக் கைக்கொண்டன. இன்றைய யாழ்ப்பாணக் கல்லூரிக்கு

முன்னோடியாக, வட்டுக்கோட்டையில், புகழார்ந்த குருமட மொன்றினை அமெரிக்க வேதபோதக சபையினர் நிறுவினர். இக்குருமடத்தில், ஆங்கிலமொழி வழியே பல்கலை வகுப்புப் பாடங்கள் கற்பிக்கப்பெற்றன. இதற்குப் பல ஆண்டுகட்குப் பின்னரே சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்ட தென்பது கருதத்தக்கது.

சென்ற நூற்றாண்டில் ஏற்பட்டிருந்த தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆறுமுக நாவலர் காரணம் ஆவார். இவர் சென்னையிலும் யாழ்ப்பாணத்திலும் அச்சகங்களை நிறுவி, சமய 'இலக்கியங்களைப் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்டு, சைவத் தமிழ் இலக்கியங்களைச் செவ்விய உரைநடையில் எழுதிப் பரப்பினார். தமிழ்நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் சைவ சமயப் பயிற்சிநிலையங்களை நிறுவினார். வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, சுன்னாகம் குமாரசாமிப் புலவர், கதிரைவேற்பிள்ளை, பண்டிதமணி கணபதிப்பிள்ளை முதலிய பெரும் புலவர்கள் ஆறுமுக நாவலரைப் பின்பற்றினர். சி. வை. தாமோதரம்பிள்ளை பழந்தமிழ்ப் பனுவல்களையும் இலக்கணங்களையும் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இத்துறையில் இவரே முன்னோடியாகவும் திகழ்ந்தார். இடைகாலத் தமிழ் இலக்கண நூற்கள் சிலவற்றைக் குமாரசாமிப் புலவர் பதிப்பித்தார்.

இலங்கையில் தமிழ் மொழிப் பயிற்சிக்கு அமெரிக்க வேத போதகக் குருமடம் பேராதரவும் நல்லாக்கமும் நல்கி வந்தது. இந்நிறுவனத்தில் பயின்ற டேனியல் எல். காரல், சி.வை. தாமோதரம்பிள்ளை, நெவின்சு, சி.வை. கதிரைவேற்பிள்ளை ஆர்னால்டு ஆகிய புலவர்கள், தமிழ் இலக்கியத்திற்கும் அரும் பணியாற்றினர். உடலமைப்பியல், உடல்நூல், உடல்நல இயல் பற்றி கட்டர் என்பார் எழுதிய நூலினையும், டீவிட்டின் அறுவையியல், ஹூப்பரின் மருத்துவர் கையேடு, வெல்சின் வேதியியல், டால்கனின் உடல்நூல், வாரிங்கின் இந்திய

வாகடநூல் ஆகியவற்றையும் டாக்டர் சாமுவேல் பிஸ்க் கிரீன் தமிழில் மொழிபெயர்த்தார்.

நாற்பதாண்டுகட்கு முன்னர் நிறுவப்பெற்ற இலங்கைப் பல்கலைக்கழகம், மேலை நாட்டுக் கல்வி நிலையங்களோடு தொடர்ந்து உறவு பூண்டிருந்தது. மேற்கிந்தியப் பல்கலைக் கழகங்களில் பயிற்சி பெறுதற்குத் தம் ஆசிரியர்களை அனுப்பி வைக்கும் முறையினை இப்பல்கலைக்கழகம் பின்பற்றி வருகிறது. இலங்கைத் தமிழ்ப் பணிகள் புதிய துறைகளில் வளர்வதற்கு இதுவும் துணை செய்தது.

## இலங்கையில் தமிழ் வளர்ச்சி - 1965க்குப் பின்

இக்காலத்தில் பல கருத்தரங்குகள் நடைபெற்றன. அனைத்துலகத் தமிழ் ஆய்வுக் கழகம் (இலங்கைக் கிளை) பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையில், இரு மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் 1974இலும், 1976இலும் நடத்தியது. யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பெற்ற முதல் மாநாடு-கருத்தரங்கு, நான்காம் உலகத்தமிழ் மாநாடாகவே நடத்தப்பட்டது. பயன்தரும் பல்வேறு கருத்தரங்குகளும் நடத்தப்பெற்றுள்ளன முற்போக்கு எழுத்தாளர் மன்றத்தால் 1975இல் நடத்தப்பெற்ற தேசிய ஒற்றுமைக் கருத்தரங்கு, 1976இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த தமிழ்ப் புதினத்தின் நூற்றாண்டு நினைவு மாநாடு, 1979இல் கொழும்புவில் நடத்தப்பெற்ற நான்காம் உலக இசுலாமிய இலக்கிய மாநாடு, ஆறுமுகநாவலர், சுவாமி விபுலாநந்தர், சி. வை. தாமோதரம் பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர், பாவலர் துரையப்பபிள்ளை முதலியோர் நினைவு விழாக்கள்-என்பனவெல்லாம் பயனும் தரமும் உடைய கருத்துக்கோவைகளாக மலர்ந்தன.

### தமிழ் இலக்கிய ஆய்வுகள்

டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை எழுதியுள்ள **தமிழிலக்கியத்தில் காலமும் கருத்தும்** எனும் நூலில், தமிழர்களின் வரலாறு,

இலக்கியம், சமயம், தத்துவம் என்பன விளக்கப்பெற்றுள்ளன. பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் பிஎச். டி. பட்டத்திற்காக, தமிழ் வீரயுகப் பாடல் பற்றி ஆய்வெழுதிய பேராசிரியர் கைலாசபதி, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சக வெளியீடாக அதனைக் கொணர்ந்துள்ளார். இவர் எழுதிய மற்றொரு சிறந்த நூலான, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் என்பது இலக்கிய வரலாறு. சமயநெறி மார்க்சிய நெறி என்பன பற்றி விளக்குகிறது. ஒப்பியல் இலக்கியம் இரு மகா கவிகள், அடியும் முடியும், இலக்கியமும் திறனாய்வும், கவிதை நயம் என்பன இவ்வாசிரியர் எழுதிய பிற நூற்களாகும்.

சோழர்கால அரசவை இலக்கியம் எனும் ஆய்வேட்டினை நல்கி, சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம். லிட். பட்டம் பெற்றார் திரு. எஸ். தில்லைநாதன். என்றாலும் கூட. தமிழ் இலக்கிய வரலாறு எழுதும் தலைமை பெற்றுத் திகழ்ந்த புலவர்களைப் பற்றி வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை எனும் தலைப்பில் இவர் எழுதிய நூலே பல பதிப்புக்களில் வந்து பலராலும் எடுத்தாளப்பட்டுள்ளது. டாக்டர் (திருமதி) தியாகராசா சங்ககால, சங்க மருவிய காலத் தமிழ் இலக்கியத்தில் கேரளம் எனும் தலைப்பில் ஆய்வு செய்தார். ஒப்புரவு அல்லது வள்ளுவம் எனும் நூலெழுதிய கே. மகேசன் இக்காலப் பொருளியல் அரசியல் சிந்தனைகளுடன் திருக்குறளை ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். கம்பராமாயணப் பாத்திரப்படைப்பு பற்றி ஆராய்ந்த கே லட்சுமணன், கம்பனது கதாபாத்திரங்கள் எனும் நூலை வெளியிட்டுள்ளார். பேராசிரியர் கைலாசபதியின் சமூகவியலும் இலக்கியமும், பேராசிரியர் கே. சிவத்தம்பியின் தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி என்பன தமிழ் இலக்கிய ஆய்வுத் துறையில் பல புதிய ஆய்வுகளுக்கு வழியமைத்துத் தந்துள்ளன. டாக்டர் (செல்வி) ஏ. முத்துக்குமாரு, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக டி. பில். பட்டத்திற்கு, சீவகசிந்தாமணியின் காலம், அதன் பிராகிருத வடமொழி ஆக்கங்களோடு ஒப்பீட்டாய்வு எனும் தலைப்பில் ஆய்வு செய்துள்ளார்.

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இலங்கைத் தமிழ்ப் புலவர்கள், தமிழ் மொழி இலக்கியத்திற்கு ஆற்றிய குறிப்பிடத் தக்க முதன்மைப் பணிகளை எல்லாம் தொகுத்துச் சொல்லும் டாக்டர் பி. பூலோகசிங்கத்தின், **தமிழ் இலக்கியத்தில் ஈழத் தறிஞர்களின் பெரு முயற்சிகள்** எனும் நூல். இதுவரை வெளி வராத பல செய்திகளையும், வேண்டுமென்றே பிற புலவரால் அமுக்கி வைக்கப்பட்டிருந்த உண்மைகளையும் வெளிக் கொணர்ந்துள்ளது. இந்நூலாசிரியர், தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய முதன்மைப் படைப்பான **பாவலர் சரித்திர தீபகம்** எனும் நூலைப் பதிப்பித்தார்.

புலாலியூர் எம். கணபதிப்பிள்ளையின் **ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள்** இலங்கைத்தமிழர்களிடையே இருந்த புலவர்கள், உரையாசிரியர்கள், நூலாசிரியர்களின் வரலாறுகளைச் சொல்லுகிறது. கனக செந்திநாதனின் **ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி**, இருபதாம் நூற்றாண்டுச் செய்திகளை மட்டுமே விளக்குகிறது கா. சா. இரத்தினத்தின் **இலங்கையில் இன்பத்தமிழ்**, எப். எக். சி. நடராசாவின் **ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு** என்பன பயனுள்ள செய்திகளைக் கொண்டிருப்பதால், இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றறிவுக்கு இவையும் உதவக்கூடும். திரு எஸ். பரமேசுவரன், இலங்கைப் பல்கலைக் கழகத்து எம். ஏ. பட்ட ஆய்வுக்காக, 'நச்சினார்க்கினியரின் இலக்கியத்திறக் கோட்பாடு' எனும் தலைப்பினை 1975இல் மேற்கொண்டார்.

இத்துறையில் பண்டிதமணி எஸ். கணபதிப்பிள்ளை, கனக செந்திநாதன், பேராசிரியர் சதாசிவம் ஆகியோரும் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளனர். இலங்கைத் தமிழ் அறிஞர்களின் புலமைத்திறம் பற்றிப் பிற அறிஞர்களிடையே முதன் முதல் பரப்புதற்கு, பண்டிதமணியின் இலக்கிய வழியே கதவு திறந்து விட்டது **கந்தபுராண தட்சகாண்ட உரை** இவருடைய ஆழ்ந்த புலமைக்கும் பெருமைக்கும் என்றென்றும் சான்று பகர்கிறது. பாரம்பரியப் புலமைமிக்க இச்சான்றோ

ருக்கு, இலங்கைப் பல்கலைக்கழகம் கவுரவ டி. லிட் பட்டம் நல்கிப்பெருமைப்படுத்தியது. கனக செந்திநாதனின் பிரபந்தப் பூங்கா, தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் உள்ள சில பிரபந்த வகைகளை விளக்குகிறது. இலங்கை சாகித்திய மண்டலத்தின் சார்பாகப் பேராசிரியர் சதாசிவம் வெளியிட்ட ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தில், இலங்கைத் தமிழ்க் கவிஞர்களும் அவர்களுடைய படைப்புக்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கவிஞர்களின் பெயர்களை அகர வரிசையில் தருவதோடு, இலக்கிய வரலாற்றுப் போக்கில் அவர்களுடைய கவிதை களைச் சுட்டிக்காட்டுதற்கும் இந்நூல் முயன்றுள்ளது.

பேராசிரியர் வித்தியானந்தனின் தமிழியற் சிந்தனைகள் இலங்கைத் தமிழ்ப் பண்பாடு, இலக்கியம், நாடகம் கல்வி என் பனவற்றொடு சிங்களவரிடையே தமிழியலுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்களையும் விளக்குகிறது. பேராசிரியர் கே. சிவத்தம்பி யின் ஈழத்துத் தமிழ் இலக்கியம் இருபதாம் நூற்றாண்டின் இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்குப் பயன்தரும் ஒரு படைப் பாகும்.

டாக்டர் கே. எஸ். நடராசா எம் ஏ. பட்டத்திற்கு வையயப் பாடல் பற்றியும், இலங்கைப் பல்கலைக்கழகப் பிஎச் டி. பட்டத் திற்கு இலங்கைத் தமிழ்ப் பிரபந்தங்கள் பற்றியும் ஆய்வு செய் தார். திருமதி ஒய் கணேசலிங்கம் நாவலர் மரபு பற்றியும், திருமதி சண்முகதாஸ் சி. வை தாமோதரம்பிள்ளை பற்றி யும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்தனர்

இக்காலத் தமிழ் இலக்கியத்தினை திரு. கே அருணாசலம் நன்கு ஆராய்ந்துள்ளார். பேராசிரியர்கள் கைலாசபதியும் சிவத்தம்பியும் இக்காலத்தமிழ் இலக்கியத்திறனாய்வுக்கும் ஆக் கம் தந்துள்ளனர். தமிழ் நாவல் இலக்கியம் எனும் நூலெழுதிய கைலாசபதி இத்துறையில் முதல்வராக விளங்குகிறார். இவ ரைப் பின்பற்றி சிவத்தம்பி தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் எனும் நூலை எழுதினார். இவர் எழுதிய மற்று

மொரு நூல் நாவலும் வாழ்க்கையும். இக்காலத் தமிழ் இலக்கிய ஆய்வுகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளுதற்கு இப்படைப்புகள் வழியமைத்தன. திரு. ஆர். முருகய்யன், கவிதைக் கலையில் இக்கால இலக்கியத் திறனாய்வுப்பாங்கு பற்றி எழுதியுள்ளார்.

தமிழ்ப் புதினங்கள், சிறுகதைகளைப் பற்றிப் பொதுவாக வும், இலங்கைத் தமிழ்ப் புதினங்கள், சிறுகதைகள் பற்றிக் குறிப்பாகவும் இலங்கைத் தமிழ் அறிஞர்களில் இன்றும் பலர் ஆய்வுகள் செய்துள்ளனர். கனக செந்திநாதன் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி எனும் நூலொடு, ஈழத்துப் பேனா மன்னர்கள் என்னும் நூலையும் இலங்கைப் புதின சிறுகதை எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தியுள்ளார் என்றாலும், இலங்கைத் தமிழ்ப் புதின வரலாறு பற்றி முதலிரு வெளியீடு களாகக் கருதப்படுவன சில்லையூர் செல்வராஜனின் ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சியும், என். சுப்பிரமணியனின் ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியமே ஆகும்.

பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் உள்ளதைப்போலவே, இலங்கையிலும் கணிசமான அளவு நாடகங்கள் எழுதப்பட்டன. சுவாமி விபுலாநந்தா தமிழ் நாடகங்களை மேலைநாட்டு, வடநாட்டு நாடக மரபு களுடன் ஒப்பிட்டு எழுதியுள்ளார். இவ்விரண்டு மரபுகளிலும் பயிற்சி பெற்ற பேராசிரியர் வித்தியானந்தன் தமிழ் நாடகம் பற்றி அரிய கட்டுரைகள் சிலவற்றை அளித்துள்ளார். இலங் கைத் தமிழ் நாடக உலகின் மூத்த நடிகரான கலையரசு கே. சொர்ணலிங்கம், தாம் பெற்ற அனுபவங்களைளை யெல்லாம் பயன்படுத்திச் சிறந்த நூலொன்றினை எழுதியுள் ளார். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம் எனும் தனது ஆய்வுக்கட்டுரையில், தமிழ் நாடகங்களை எழுதி உருவாக்கி அரங்கேற்றுவதில் இலங்கைப் பல்கலைக்கழகத் தவர் ஆற்றியுள்ள பணிகளையெல்லாம் ஆர். சிவானந்தன்

புலப்படுத்தியுள்ளார். இலங்கைத் தமிழ் நாடக வளர்ச்சிகளை யெல்லாம், சொக்கன் நிரல்பட விளக்கியுள்ளார்.

பேராசிரியர் சிவத்தம்பி பர்மிங்காம் பல்கலைக்கழகம் பிஎச். டி. பட்டத்திற்கு பழந்தமிழ்ச் சமூக நாடகங்களைப் பற்றி ஆய்வு செய்தார்.

தமிழ் நாடகங்களைப் பற்றிப் பொதுவாகவும், இலங்கைத் தமிழ் நாடகங்களைப் பற்றிச் சிறப்பாகவும் பயனுள்ள பல கட்டுரைகளை எழுதினார். தமிழ் நாடகத்துறையில் குறிப்பிடத் தக்க ஆய்வு செய்திருப்பவர்களாக, எஸ். தில்லைநாதன், ஆர். முருகய்யன், ஏ. டி. பொன்னுதுரை, எஸ். மவுனகுரு, நெல்லை கே. பிரான் ஆகியோரைச் சொல்லலாம்.

தமிழ்க் கிராமிய நாடகங்களிலும், இலங்கையின் மூலை முடுக்குகளில் உள்ள கிராமியப் பாடல்களிலும் இப்போது பேரார்வம் கிளம்பியுள்ளது. டாக்டர் ஏ. சண்முகதாசு, எஸ். மவுனகுரு, வி. சி. கந்தய்யா, பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோர் இவ்வகையிலும் பயனுள்ள ஆய்வுகள் மேற்கொண் டுள்ளனர். இலங்கை நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றிப் பொதுவாகவும், இலங்கை இசுலாமியக் கிராமியப் பாடல் களைச் சிறப்பாகவும் சண்முகதாசு ஆராய்ந்திருக்கிறார். டாக்டர் ஈ. பாலசுந்தரம் இலங்கைப் பல்கலைக்கழக பிஎச். டி பட்டத்திற்கு பட்டிக்கோலா நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றி ஆய்வு செய்தார்.

இலங்கைத் தமிழர்கள் படைத்த புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், நாட்டுப்புறக் கலைகள் போல இலங்கைத் தமிழ்க் கவிதை பற்றி, குறிப்பாக, இருபதாம் நூற்றாண்டுக் கவிதை பற்றி, விளக்கமான மதிப்பீடேதும் இதுவரை செய்யப் படவில்லை. ஓரிரு கவிஞர்களைப் பற்றிய ஆய்வுகள் மட்டுமே உள்ளன. எஸ். தில்லைநாதனும், கலா பரமேசுவரனும் எழுதிய கட்டுரைகள். இலங்கைத் தமிழ்க் கவிதை பற்றிய சரியானதொரு மதிப்பீடு வேண்டுமென்பதை வலியுறுத்தி

யுள்ளன. திருமதி கே. சின்னய்யா நாவலியூர் சோமசுந்தரப் புலவரின் கவிதைகளை ஆய்ந்து எம். ஏ. பட்டம் பெற்ற தோடு, துரை. நீலவாணனின் கவிதைகளையும் திறனாய்ந் துள்ளார்.

மொழியியல் துறையில், பேராசிரியர்கள் தனஞ்சயராஜா சிங்கம், திரு. கந்தய்யா, டாக்டர்கள் எஸ். சுசீந்திரராஜா, ஏ. சண்முகதாசு ஆகியோர் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள் ளனர் காலஞ்சென்ற பேராசிரியர் தனஞ்சயராஜாசிங்கம், யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழின் பெயர்ச் சொல் வடிவ அமைப்பை ஆய்வு செய்து, எடின்பரோ பல்கலைக்கழகத்தில் 1972இல் பிஎச்.டி. பட்டம் பெற்றார். மொழியியல் துறை யிலே பணியாற்றிய ஒரே தமிழ் விரிவுரையாளரான டாக்டர் எஸ். சுசீந்திரராஜா, இலங்கைத் தமிழ் பற்றிய ஆராய்ச்சிக் காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பிஎச் டி. பட்டம் பெற்றார். யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு, பட்டிக்கோலா பேச்சுவழக்கு, இலங்கைப் பேச்சுத் தமிழிலும் இந்தியப் பேச் சுத் தமிழிலும் ஒப்பாய்வு, ஒலிப்புமுறை, தமிழ், சிங்கள மொழி களிடையே ஒன்றுக்கொன்று ஏற்பட்டுள்ள தாக்கங்கள் முதலிய பல்வேறு துறை சார்ந்த கட்டுரைகள் பலவற்றை இவர் எழுதியுள்ளார் பேராசிரியர் கந்தய்யாவும், டாக்டர் சண்முக தாசும், புதிய மாற்றிலக்கண முறையினைப் பின்பற்றித் தம் ஆய்வுகளைச் செய்தனர் இலங்கைத் தமிழ் அகராதிக்கலையில் ஈடுபட்ட பேராசிரியர் சதாசிவம், பேராசிரியர் பர்ரோவின் மேற்பார்வையில் செயலாற்றி 1973-74இல் முதற்பாகத்தை முடித்துள்ளார்

அமெரிக்க மொழியியல் பேராசிரியரான ஜேம்ஸ் டபிள்யூ கெயிர் எட்டால் **பேச்சுத்தமிழுக்கு ஓர் அறிமுகம்** எனும் நூலை எழுதினார்.

**தமிழ் வரலாற்றிலக்கணம்** எனும் நூலை ஆ. வேலுப் பிள்ளை வெளியிட்டுள்ளார். தமிழ் இலக்கண வரலாற்றிற்கும் தமிழ் மொழி வரலாற்றிற்கும் இடைப்பட்டதொரு நூலாக இது நிறைவு செய்கிறது.

தமிழ் இலக்கணம் பற்றிய இரு நூல்கள் இங்கே குறிப்பிடற்குரியவை. புறப்பொருள் வெண்பாமாலையின் முதலேழு இயல்களை விளக்கி, புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி எனும் நூலைப் புலவர் என். சிவபாதசுந்தரனார் வெளியிட்டுள்ளார். பண்டிதர் வீரகதி எழுதிய இலக்கண விளக்கம் எனும் சிறு நூல், தமிழ் இலக்கணத்தின் அடிப்படைக் கூறுகளை விளக்குகிறது.

இந்தியாவிலும் இலங்கையிலும் கிட்டியுள்ள இசுலாமியத் தமிழ் இலக்கியங்களில் பெரும்பகுதி இன்றும் நன்கு ஆராயப்படாமலே உள்ளது. இத்துறையில் ஆய்வு செய்வதற்கென, இலங்கையைச் சேர்ந்த அறிஞரான டாக்டர் எம். எம். உவைசு அவர்களை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அண்மையில் அழைத்திருக்கிறது.

கல்வெட்டிலும் தொல்பொருளியலிலும் மேற்கொள்ளப் பெற்ற ஆய்வுகள், இலங்கைத் தமிழர்களின் வரலாறு, பண்பாடு பற்றிய விளக்கங்களை மேலும் மேலும் அளிக்கின்றன. டாக்டர் ஆ வேலுப்பிள்ளை எழுதிய சாசனமும் தமிழும் எனும் நூல் தொல்லெழுத்துக்கலை, கல்வெட்டு மொழி, பண்பாடு, இலக்கியம், சாசனத் தமிழ் வழக்குகளும் இலங்கையும் ஆகியவற்றை விளக்குகிறது.

பேராசிரியர் கே. இந்திரபாலா, டாக்டர்கள் எஸ். பத்மநாதன், எஸ். குணசிங்கம், திருவாளர்கள் சிவகாமி, சிற்றம்பலம் ஆகியோர், கல்வெட்டிலும் தொல்பொருள் ஆராய்ச்சியிலும் வரலாற்று முறை ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். பேராசிரியர் இந்திரபாலா இலண்டன் பல்கலைக்கழக பிஎச். டி. பட்டத்திற்குச் செய்த ஆய்வில், இலங்கையின் புராதனத் தமிழ்க் குடியேற்றங்களும், யாழ்ப்பாண அரசுத் தொடக்கமும் என்பது பற்றி ஆராய்ந்துள்ளார்.

தமிழ்க் கல்வெட்டாய்வில் ஈடுபட்டுள்ள டாக்டர் எஸ் குணசிங்கம், இரண்டாம் பாண்டியப் பேரரசின் நிர்வாக முறை பற்றி எம். ஏ. பட்டத்திற்கும், சோழப் பேரரசுத் தொடக்க கால இந்து ஆலய அமைப்பும் அவற்றின் பணிகளும் என்பது பற்றி பிஎச். டி. பட்டத்திற்கும் ஆய்வு செய்து, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இவ்விரு பட்டங்களையும் பெற்றார். பிரசஸ்திகள் பற்றி ஆய்ந்த திரு. வி. சிவசாமி, வடமொழிப் பிரசஸ்திகளையும் தமிழ் மெய்க்கீர்த்திகளையும் ஒப்பிட்டெழு தியுள்ளார். திராவிடர் ஆதி வரலாறும் பண்பாடும், ஆரியர் ஆதி வரலாறும் பண்பாடும் எனும் நூல்களொடு, இன்னும் சில கட்டுரைகளும் எழுதியுள்ளார். திராவிட நாகரிகத் தொன்மை, திராவிடர்களின் வரலாறு, இந்து சமயம், இலங்கையின் புரா தன பிராமிக் கல்வெட்டுக்கள் ஆகிய தலைப்புக்களில் திரு கே சிற்றம்பலம் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

தமிழர்களே இலங்கையின் ஆதி குடிகளாயிருந்தனர் என் பதை இலக்கிய பூமி எனும் நூலில் ஜே. டி. சேவியர் நிறுவி யுள்ளார். திராவிடர்கள், சிந்துவெளியிலிருந்து புறப்பட்டு, இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் இலங்கையிலும் பரவி யிருந்தனர் என்றும், இந்தோ ஐரோப்பிய மொழியினர் இவர் கட்குப் பின்னரே போந்தனர் என்றும் கூறியுள்ளார். டி. ஜே. கனகரத்தினத்தின், தமிழர்களும் புராதன இலங்கையின் கலாச்சாரப் பன்மையும் எனும் நூல் வலுவான வரலாற்றுச் சான்றுகளைக் கூறுகிறது.

இந்து சமயம், சமண, பௌத்த சமயங்கள், தமிழ்ப் பண் பாடு, திராவிடக் கட்டிடக்கலை, சிற்பக்கலை, நடனம், இசை, மருத்துவம் ஆகியன குறித்துப் பொதுவகையாகவும், இலங் கைத் தமிழர்களின் வாழ்க்கைமுறை, பாரம்பரியம், சமய ஆசாரங்கள், பழக்க வழக்கங்கள், கல்விமுறை ஆகியன குறித் துச் சிறப்பாகவும் பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்ப் பண்பாட்டினைப் பரப்பும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தோர் திரு. எம்.டி. ராகவன், பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சுவாமி தனிநாயகம் ஆகியோராவர். திரு. எம்.டி. ராகவன் எழுதிய **இலங்கையில் தமிழ்ப் பண்பாடு** மானிடவியலடிப்படையில் மனித இனம் பரவிய வகையினை நுட்பமாக எடுத்துச்சொல்லும் நூலாக விளங்குகிறது.

**தமிழர் சால்பு** வின் ஆசிரியரான பேராசிரியர் எஸ். வித்தியானந்தன், தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு இயல் பற்றித் தொடர்ந்து எழுதிவந்தார். இக்கட்டுரைகளில் சில, **தமிழியற் சிந்தனைகள்** என அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. பேராசிரியர் தனிநாயகம், தமிழர்கள் உலகில் எங்கெங்கெல்லாம் கணிசமாயிருந்தார்களோ அங்கெல்லாம் போய்வந்து, தமிழாய்வுகளுக்கு உலகளாவிய நோக்கினை உருவாக்கித் தருவதில் பெரும் பொறுப்பேற்று, உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தை அமைப்பதில் முன்னோடியாய் விளங்கிய சிறப்போடு, பத்தாண்டுகட்கு முன்னரே **தமிழ்ப் பண்பும் நாகரிகமும்** எனும் அரிய நூலினையும் எழுதி வெளியிட்டார். சுவாமி தனிநாயகத்தின் இந்த அரும்பணியினை, யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த நான்காம் உலகத் தமிழ் மாநாட்டின்போது நிறுவப்பெற்ற உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் மேற்கொண்டுள்ளது. இவ்வியக்கத்தின் பொதுச்செயலரான குரும்பாசித்தி கனகரத்னம், உலகெங்கும் பரவிவாழும் தமிழர்களைப் பற்றிய செய்திகளையெல்லாம் தொகுத்து வெளியிடுவதில் முனைந்துள்ளார். 'அலைகடலுக்கு அப்பால் தமிழர்', 'உலகத் தமிழர்களின் ஐக்கியத்தை நோக்கி' 'ரியூனியன் தீவில் எங்கள் தமிழர்' என்பன அவருடைய நூல்களில் சில ஆகும்.

பட்டிக்கோலாத் தமிழ் இந்துக்களின் கண்ணகி வழிபாடு சிறப்பிடம் வகிக்கிறது இவர்களிடையே வழங்கும் கண்ணகி வழக்குரை காதை, சிலப்பதிகாரத்திலிருந்தும், தமிழ்நாட்டில் வழங்கும் கோவலன் காதை, யாழ்ப்பாணத்துக் கோவலனார் கதை ஆகியவற்றிலிருந்து பல வகையில் வேறுபட்டமைந்தது.

கண்ணகி பற்றிப் பல இலக்கியப் படைப்புக்களும் உள்ளன. இவ்வழிபாடு சார்ந்த விழாக்களும் கொண்டாட்டங்களும் இங்கு நடைபெறுகின்றன

இலங்கைத் தமிழர்களிடையே கல்வி வளர்ச்சி, இராம கிருஷ்ண சபையின் கல்வித் தத்துவங்கள் முதலிய துறைகளில், பல்கலைக்கழகக் கல்வியியல் துறையினரான பேராசிரியர் எஸ். முத்துலிங்கம், திரு. வி. ஆறுமுகம், திரு. பி. சந்திரசேகரம், திரு. எஸ். சந்திரசேகரம், திரு. கே. விசாகலிங்கம், திரு. வேலாயுதப்பிள்ளை ஆகியோர் பல ஆய்வுகள் செய்துள்ளனர்.

## பல்கலைக்கழகங்களில் தமிழ்

பரதேனியாப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் புலங்களிலும் தமிழ்வழிப் பயிற்சி உள்ளது. புதிதாக வளர்ந்துவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், 1977 இலிருந்துதான் தமிழ்வழிப் பயிற்சி தரப்படுகிறது. கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தமிழ்வழிப் பயிற்சி கிட்டத்தட்ட எல்லாப் பாடப் புலங்களிலும் உள்ளது. மொரத்துவாப் பல்கலைக்கழகம், தமிழ்வழிப் பயிற்சி மாணவர்களையும் சேர்த்துக்கொள்கிறது. துவக்கப்படவிருக்கும் மட்டக்களப்புப் பல்கலைக் கழகக் கல்லூரியில் தமிழ்வழிப் பயிற்சி மட்டுமே தரப்படும் எனக் கருதப்படுகிறது. தமிழ்ப் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் வழியமைக்கும் முதன்மை நிறுவனமாகப் பரதேனியாப் பல் கலைக்கழகமே விளங்குகிறது. புதிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பயிற்சிக்குரிய பெரியதொரு நிறுவனமாக வளரக்கூடும்.

கொழும்புத் தமிழ்ச் சங்கமும் சிறப்புறப் பணியாற்றி வருகிறது. இலங்கைத் தமிழர்களது பண்பாடு, வரலாறு சார்ந்த பல கருத்தரங்குகளை நடத்திவருகிறது. டாக்டர் பூலோக சிங்கத்தின் 'பாவலர் சரித்திர தீபகத்'தை வெளியிட உதவி செய்தது.

# 2. மலேசியாவில்

மலாயாவிற்கும் இந்தியாவிற்கும் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே அணுக்கமான தொடர்பிருந்ததாக வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். இத்தொடர்பு இராமாயண, மகாபாரத காலங்களிலிருந்து தெளிவாகத் தெரிவதாக அவர்கள் கணிக்கின்றனர். மலாயாவிற்கும் இந்தியாவிற்கும் உள்ள தொடர்பின் அடிப்படையில் இந்துக்கள் காலம் (Hindu Period), இந்துக்களுக்குப் பிற்பட்ட காலம் (Post Hindu Period), ஆங்கிலேயர் காலம் (British Period) என்றே மூன்று காலகட்டங்களாக வரலாற்றாசிரியர் பிரிப்பர்.

இந்து மதத்தை அடுத்துப் புத்தமதத் தொடர்புகளும் மலாயாவிற்கும் இந்தியாவிற்கும் உள்ள தொடர்புகளை மேலும் உறுதிப்படுத்துகின்றன. சென்ற நூற்றாண்டிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின்போது பல புத்தர் சிலைகள் இங்குக் கிடைத்துள்ளன.

புத்தர் சிலைகளே அன்றி, பல வடமொழிக் கல்வெட்டுக்களும் இவ்வகழ்வாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கெடாவிலும் வெல்லெஸ்லி மாநிலத்திலும் கண்டெடுக்கப்பட்ட சில வடமொழிக் கல்வெட்டுக்கள் கி. பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. வடமொழிக்கு இங்கு இருந்த செல்வாக்கை இவை காட்டும்.

இத்தொடர்பில் தமிழர்களுக்கும் பெரும் பங்குண்டு. அகழ்வாய்வுகள், வரலாற்று ஆய்வுகள், மொழி இலக்கிய ஆய்வுகள்

---

எழுதியவர் இரா. தண்டாயுதம்

முதலிய அனைத்தும் மலாயாவிற்கும் தமிழருக்கும் இடையே இருந்த பெருந்தொடர்பினை நினைவூட்டும் முறையிலேயே அமைந்துள்ளன. மலேசியாவின் தமிழாய்வின் தொடக்க காலம் இவற்றை வெளிப்படுத்தும் முறையிலேயே அமைந்துள்ளன. இவ்வகையில் அமைந்த தமிழாய்வினை முதன் முதலில் விளக்கும் கட்டுரையாகப் பேராசிரியர் சிங்காரவேலுவின் 'மலேசியாவில் தமிழியல்' என்ற கட்டுரை அமைந்துள்ளது பேராசிரியர் தனிநாயகம் அடிகள் 1968இல் தொகுத்தளித்த 'வெளிநாடுகளில் தமிழியல்' என்ற நூலில் காணப்படும் இக்கட்டுரை அகழ்வாய்வு, வரலாறு, மொழியியல், கல்வி, பண்பாடு முதலிய துறைகளில் நிகழ்ந்த தமிழாய்வுகளைப் பற்றிய செய்திகளையும், மலாயாப் பல்கலைக்கழக இந்தியப் பகுதியைப் பற்றிய செய்திகளையும் விளங்க உரைக்கின்றது.

மலாயாவோடு தமிழர்கள் கொண்ட நீண்ட நெடுங்காலத் தொடர்பை இரண்டு காலகட்டங்களாகப் பிரிக்கலாம். பினாங்கு ஆங்கிலேயர் ஆளுகைக்குட்பட்ட 1786ஆம் ஆண்டு இவ்விரு காலகட்டங்களையும் பிரிக்கும் எல்லைக்கோடாக நிற்கின்றது. முதலாவது காலகட்டத்தில் தமிழர்கள் மலாயாவோடு கொண்டிருந்த தொடர்பிற்கும், இரண்டாவது காலகட்டத்தில் கொண்டிருக்கும் தொடர்பிற்கும் எவ்வகையிலும் உறவே கிடையாது. இவ்விரு தொடர்புகளும் தனித்தனியே நிற்கின்றன. முதலாம் காலகட்டத்தில் இந்நாட்டிற்கு வந்த தமிழர்கள் ஒரு சிறந்த நாகரிகத்தின் தூதுவர்களாகவும், அரிதான பொருள்களையெல்லாம் விற்கும் வணிகர்களாகவும், அரசியல் தொடர்பாகவுமே வந்தனர். இரண்டாம் காலகட்டத்தில் இங்கு வந்த தமிழர்களில் பெரும்பான்மையினரோ அறியாமையிலும் வறுமையிலும் மூழ்கித் தோட்டப் புறங்களில் உழைக்கத் தொழிலாளராக வந்தவர்கள். மிகச் சிறுபான்மையான தமிழர்களே

தொழிலாளராக அல்லாமல் இங்கு வந்தவர்கள். அவ்வாறு வந்தவர்களின் சந்ததியினரே இப்போது இங்குள்ள தமிழர்கள்.

மலாயாவோடு தமிழர்கள் கொண்ட தொடர்பு இவ்விரு காலகட்டங்களில் அமைவதால், மலேசியாவில் தமிழியல் வளர்ச்சியையும் இவ்விரு காலகட்டங்களை ஒட்டிப் பார்ப்பது பொருந்தும்.

முதல் காலகட்டத்தைப் பற்றிய செய்திகள் இலக்கியங்கள். அகழ்வாய்வுகள், வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவற்றின் மூலம் தெரிய வந்துள்ளன. பட்டினப்பாலையில் காவிரிப்பூம் பட்டினத் துறைமுகத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது காழகத்திலிருந்து பல பொருள்கள் அத்துறைமுகத்திற்கு வந்ததாக ஒரு குறிப்பு வருகிறது. காழகம் என்பது கடாரம் என உரையாசிரியர் எழுதுகிறார். இக்கடாரமே இப்போதைய கெடா மணிமேகலையில் கூறப்படும் சாவக நன்னாடு, மலாயா, ஜாவா, சுமத்ரா ஆகியவற்றை உள்ளடக்கியது என்பது வரலாற்றாசிரியர் கருத்து. கி பி ஏழாம் நூற்றாண்டளவில் பல்லவர்களின் செல்வாக்கு இங்கு ஓங்கியிருந்ததாகத் தெரிகிறது பல்லவர்களின் கப்பல்கள் பல கெடாவுக்கு வந்துகொண்டிருந்ததாக வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றனர். தமிழகத்திற்கும் மலாயாவிற்கும் இருந்த வணிகத் தொடர்பினை உறுதிப்படுத்தும் முறையில் வணிகத் தொடர்பான பல தமிழ்ச் சொற்கள் மலாய் மொழியில் காணப்படுகின்றன. வாணிகம் (Berniaga), கடை (Kedai), கப்பல் (Kapal), முதல் (Model), கிடங்கு (Gedung) ஆகியவை அவற்றுட் சில.

வரலாற்றுக் குறிப்புக்களால் அறியப்படும் இத்தொடர்புகளின் அடிப்படையில் ஆராய்வதே மலேசியாவில் தமிழியல் ஆய்வுகளுக்கு வித்திட்டது எனலாம். ரோலண்ட் பிராடல் (Roland Braddell), ஆர்.ஓ. வின்ஸ்டெட் (R.O. Winstedt), ஆர். ஜே. வில்கின்சன் (R.J Wilkinson) முதலியோர் இத்துறையில் முன்னோடிகளாவர். ரோலண்ட் பிராடல் மலாயாவிற்கும் இந்தியாவிற்கும் குறிப்பாக – தமிழகத்திற்கும் - இடையில் நிலவிய

பல தொடர்புகளைத் தம்முடைய ஆய்வுகளில் விளக்கியுள்ளார். தம்முடைய ஒரு நூலில் (Lights of Singapore) அவர் பண்டைக்காலத்தில் மலாயா தீபகற்பத்திற்கு நாகரிகமளித்தது இந்தியாவே என்றும் தமிழர்களே கடல் கடந்து சென்ற முன்னோடிகளில் குறிப்பிடத்தக்கவர்' என்றும் கூறியுள்ளார். மேலும், 'தென்கிழக்கு ஆசியாவில் மேலைநாட்டு நாகரிகம் இன்று ஆதிக்கம் பெற்றிருப்பது போல கிறித்து சகாப்தத்திற்கு முன் தென்னிந்திய நாகரிகம் இப்பகுதிகளில் தலைசிறந்து விளங்கியது' என்று அவர் கூறும் ஒரு கருத்து நினைவில் கொள்ளத்தக்கதாகும். இவருடைய பல கட்டுரைகள் அன்றைய மலாயாவிற்கும் இந்தியா-தமிழகத்திற்கும் இடையில் இருந்த பல தொடர்புகளை விளக்கும் வண்ணமே அமைந்துள்ளன. ஆர்.ஓ.வின்ஸ்டட்டின் கட்டுரைகளும் இவ்வாறே அமைந்துள்ளன. தம்முடைய 'மலாயாவின் வரலாறு' என்ற நூலில் வரலாற்றுக் கால ஆதி வியாபாரிகள் பல்லவர்களே என்றும், கடல் வழியாக மலாயாவோடு இவர்கள் கொண்டிருந்த தொடர்புகளையும் அவர் விளக்கியுள்ளார். 'மலேசியாவில் தொடக்ககால இந்தியர்களின் செல்வாக்கு' என்ற ஆர்.ஜே. வில்கின்சன் கட்டுரையும் இவ்வகையில் வெளிவந்த கட்டுரைகளில் குறிப்பிடத்தக்க ஒன்று.

இதற்குப்பின் இத்துறையில் வெளிவந்த நூல்களில் பேராசிரியர் பால் வீட்லியின் 'கி.பி.1500க்கு முற்பட்ட மலாயாவின் வரலாற்றுப் பூகோள' நூலும், டி. தேவஹூடி (D. Devahuti) எழுதிய 'இந்தியாவும் பண்டைய மலாயாவும்' என்ற நூலும், பேராசிரியர் கர்னியால் சிங் சந்து எழுதிய தொடக்ககால மலேசியா' என்ற நூலும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இவையல்லாமல் தென்கிழக்காசியாவைப் பற்றிய சில வரலாற்று நூல்களிலும் இந்திய-மலேசியத் தொடக்ககாலத் தொடர்புகள் ஆராயப்பட்டுள்ளன.

வரலாற்றறிஞர்கள் கூறும் கருத்துக்களை நிருபிக்கும் வகையிலும், அவர்கள் கருத்துக்களை உருவாக்கும் வகை

யிலும் புதைபொருள் ஆராய்ச்சிகளும் தமிழியல் வளர்ச்சிக்கு இங்குத் துணைபுரிந்துள்ளன. இவ்வகழ்வாராய்வுகள் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கின. 1820ஆம் ஆண்டு ஸர். தாமஸ் ஸ்டாம்போர்டு ராபில்ஸ் (Sir Thomas Stampford Raffles) சிங்கப்பூரில் புதர்களுக்கிடையே ஒரு பழைய கல்வெட்டைக் கண்டுபிடித்தார். அதில் உள்ள எழுத்துக்கள் இந்திய மொழியொன்றைச் சார்ந்தது என அவர் நினைத்தார். ஆனால் ஒரு பொறியியலாளரின் கவனக் குறைவினால் அப்பாறை உடைக்கப்பட்டுவிட்டது. சர். ராபில்ஸ் கண்டெடுத்த இப்பாறையே இங்குப் புதை பொருளாராய்ச்சியின் தொடக்கம் என்று கருதப்படுகிறது. இதன்பின் 1840 ஆம் ஆண்டு அளவில் ஜேம்ஸ் லோ (James Low) என்ற அகழ்வாய்வாளர் கெடா, வெல்லெஸ்லி மாநிலம் ஆகிய இரு மாநிலங்களில் பல இடங்களில் அகழ்ந்து ஆராய்ந்து கண்டறிந்த இடங்களில் முக்கியமான ஒன்று கெடாவில் மெர்போ ஆற்றின் கழிமுகம் ஆகும். இங்கும் இன்னும் பல பகுதிகளிலும் இந்தியர்களின் குடியேற்றங்கள் இருந்ததற்கான சான்றுகளை அவர் கண்டறிந்தது, மலாயாவிற்கும் இந்தியாவிற்கும் இருந்த தொடர்புகளின் ஆய்வு வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்தது. இவருக்குப் பின் இத்துறையில் பணியாற்றியவர்களில் ஐ. எச். என். எவான்ஸ் (I.H.N. Evans), டாக்டர் வான் ஸ்டெய்ன் காலென்ஃபெல்ஸ் (Dr. Van StinCallenfels) ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர். முன்னவர் பேராக் மாநிலத்திலுள்ள லெங்கோங், வெல்லெஸ்லி மாநிலம் ஆகிய இடங்களில் பல ஆய்வுகளைச் செய்தவர். பின்னவர், தென்கிழக்காசியாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சிறப்புற ஆராய்ந்தவர்.

மலாயாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலுள்ள தொடர்புகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தும் வகையில் இத்துறையில் அடுத்துப் பணியாற்றிய டாக்டர் குவாரிட்ஜ் வேல்ஸ் (Dr. Quaritch Wales) 'பரந்த இந்தியா' (Greater India) ஆராய்ச்சிக் குழுவினரின் பொருளுதவியுடன் கெடா, பேராக்

மாநிலங்களில் தம்முடைய ஆய்வைத் தொடங்கினார். 1937 ஆம் ஆண்டில் இவர் தொடங்கிய ஆராய்ச்சியின் பயனாகப் பூசாங் ஆற்றின் பகுதியில் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட இந்தியக் குடியேற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தாம் மேற்கொண்ட புதைபொருள் ஆராய்ச்சி பற்றிய இவருடைய கட்டுரைகளும், 'பரந்த இந்தியாவ.வ உருவாக்கல்' என்ற நூலும் ஆய்வுத் துறைக்குக் கிடைத்த கொடைகள் என உறுதியாகக் கூறலாம். இதனைத் தொடர்ந்து மலாயாப் பல்கலைக் கழகமும் இத்துறையில் மிகுந்த ஈடுபாடு காட்டியது. 1953 இல் டாக்டர் டி.ஜி. சீவ்கிங் (Dr. de. G. Sieveking) மேற்பார்வையில் ஜோகூர் லாமாவில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் பல அரிய பொருள்கள் கிடைத்தன 1954இல் மலாயாப் பல்கலைக் கழகத்தில் புதைபொருள் ஆராய்ச்சிக் குழு ஒன்றும் உருவானது. 1957இல் டாக்டர் எம். சல்லிவன் (Dr. M. Sullivan) தலைமையில் கெடா மாநிலத்தில் புதைபொருள் ஆய்வை மேற்கொண்ட இக்குழு, பண்டைய இந்தியக் குடியேற்றங்கள் தொடர்பான பல அரிய பொருள்களைக் கண்டெடுத்தது. அதே ஆண்டு டாக்டர் எச்.ஏ. லாம்ப் (Dr. H. A. Lamb) மேற்பார்வையில் இப்பணியில் ஈடுபட்ட அதே குழு மேலும் பல அரிய பொருள்களை வெளிக் கொணர்ந்தது.

கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டிற்குப் பின்னரும் தமிழர் இங்குப் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்ததை வின்ஸ்டட் தம் நூலில் மிக விரிவாக விளக்கியுள்ளார். மவாக்கா சுல்தானாகிய மகமது ஷா (Muhammad Shah) ஒரு தமிழ்ப் பெண்ணை மணந்து கொண்டதையும், அரச பரம்பரையைச் சேர்ந்த பல தமிழ்ப் பெண்கள் அன்றிருந்ததையும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரண்மனை நிர்வாகத்திலும் ஆட்சி நிர்வாகத்திலும் இக்கால கட்டத்தில் தமிழர்களே மேலோங்கி இருந்தனர். இவருக்குப் பின்வந்த போர்த்துக்கீசியர் ஆட்சியிலும் தமிழர்கள் ஒரு முக்கிய இடம் பெற்றிருந்தனர். துன்ஹம்ஸா, நாசிம் முதலியார், நினாசத்து, ராஜா முதலியார் முதலிய பல தமிழர்களின் பெயர்

கள் இக்காலகட்டத்தில் காணப்படுகின்றன. இவர்களுள் ராஜா முதலியார் அக்காலத்தில் ஒரு புகழ்பெற்ற செல்வர். அனைத்துலக வணிகத்திற்கும் முக்கியமாய் விளங்கிய ஸ்ரீவிஜயப் பேரரசின் முக்கியத்துவம் இவர் காலத்தில் மலாக்காவிற்கு மாறிவிட்டதாக வரலாற்றாசிரியர் குறிப்பிட்டுள்ளனர். போர்த்துக்கீசியரிடமிருந்து பின்னர் டச்சுக்காரர்கள் மலாக்காவைக் கைப்பற்றிக்கொண்ட காலத்திலும் தமிழர்கள் செல்வாக்குக் குறையவில்லை. பல தமிழர்கள் இவ்வாட்சியில் 'கப்பித்தான்' என்ற சிறப்புப் பட்டங்களைப் பெற்றனர். டச்சுக்காரர்கள் இலவசமாகக் கொடுத்த இடத்தில் 1781இல் நிறுவப்பட்ட பொய்யாத வினாயகர் கோயில் இன்றும் உள்ளது. மலாக்காவிலேயே மிகப் பழைமையான கோயில் இதுதான்.

மலாக்காவைப் போலப் பேராக் மாநிலத்திலும் பல தமிழர்கள் செல்வாக்குப் பெற்றிருந்ததை வரலாற்றாசிரியர் குறித்துள்ளனர். அவர்களில் ஒருவர் கெச்சில் (Tamby Kechil) என்பவர். இவருக்குப் பேராக்கிலேயே ஒரு மனைவியும், இந்தியாவில் ஒரு மனைவியும் இருந்தனர். ஒருமுறை இந்தியாவில் உள்ள தம் மனைவியைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது ஒரு யானை வியாபாரியையும் தம்மோடு அவர் அழைத்து வந்ததாகப் பேராக் வரலாறு கூறுகிறது இவ்வாறே 1868இல் ஜோகூர் சுல்தான் பாபு ராமசாமி (Babu Ramasamy) என்ற தமிழரிடம் வரி வசூலிக்கும் பொறுப்பை ஒப்படைத்திருந்ததாகவும் தெரியவருகிறது.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டளவில் இந்தியர்களுக்கும் மலாயாவிற்கும் மற்றொருவகைத் தொடர்பேற்பட்டது. 'இந்தியாவின் சிட்னீகள்' (Sydneys of India) என வருணிக்கப்பட்ட சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா ஆகிய பகுதிகளுக்கு இக்காலகட்டத்தில் இந்தியக் குற்றவாளிகள் கொண்டுவரப்பட்டனர். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பென்கூலன் (Bencoolen) தீவிற்கு நாடு கடத்தப்பட்ட இந்தியக் கைதிகள், 1825இல் இத்தீவு டச்சுக்காரர் வசமான பின், முதலில் பினாங்கிற்கும் பின்பு அங்கிருந்து மலாக்காவிற்கும் சிங்கப்பூருக்கும்

அனுப்பப்பட்டனர். இக் கைதிகளால் சிங்கப்பூர் நகரே ஒரு புதிய அழகு பெற்றுவிட்டதாகச் சிங்கப்பூர் வரலாறு கூறுகிறது. காட்டை நாடாக்கியதுடன், அழகிய கட்டிடங்கள் பலவற்றையும் கட்டி முடித்தது இக் கைதிக் கூட்டமே. இக் கைதிகள் கூட்டம் சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு ஆற்றிய அரும்பணியை மெக்னர் (J.F.A. MC Nair) என்பவர் தம்முடைய தங்களைத் தாங்களே காத்துக் கொண்ட கைதிகள் (Prisonars their non Warders) என்ற நூலில் மிக விரிவாக எழுதியுள்ளார்.

இக்காலகட்டச் செய்திகளைச் சிறப்பாகவும், இந்தியாவிற்கும்-குறிப்பாகத் தமிழர்களுக்கும் மலாயாவிற்கும் இருந்த தொடர்பினைப் பொதுவாகவும் விளக்கும் கட்டுரைத் தொடர் ஒன்று 1935இல் சிங்கப்பூர் 'தமிழ் முரசி'ல் வெளியானது. ஆர். பி. கிருஷ்ணன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கமே இக்கட்டுரை. இதனைத் தமிழாக்கம் செய்தவர் வை. இராஜரெத்தினம் என்பவர். 'தொடுவாய்ப் பகுதியில் கி.பி. 1790-1873 ஆண்டுகளில் தமிழ்க் கைதிகளும் பிற இந்தியக் கைதிகளும்' என்ற பேராசிரியர் கர்னியால் சிங் சந்துவின் கட்டுரையும் இவ்வகையில் குறிப்பிடத்தகுந்த ஒரு சிறந்த கட்டுரையாய் அமைகிறது.

மலாயாவிற்கும் இந்தியாவிற்கும் இருந்த தொடர்புகளைச் சுருக்கமாகவும் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட மலாயாவைப் பற்றி மிகவிரிவாகவும் அமைந்த மற்றொரு நூல் பெ. நா.மு. முத்துப்பழநியப்பசெட்டியார்எழுதிய மலாயாவின் தோற்றம் என்னும் நூலாகும். 1938இல் வெளியான இந்நூல் அன்றைய மலாயாவை மிக விரிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. இதே போல இந்நாட்டிலேயே வெளிவந்துள்ள கெடா வரலாறு என்ற நூல், கெடாவைப் பற்றிய முழுமையான வரலாற்றையும், அதனோடு தமிழர்கள் கொண்டிருந்த தொடர்புகளையும் நன்கு விளக்குகின்றது. இதன் ஆசிரியர் ஃபகிர் முகம்மது (Faqir Muhammad) என்பவர்,

முதலில் பினாங்கும் பின்னர் மலாயாவின் மற்றப் பகுதி களும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்ட பிறகு தமிழர்கள் மலா யாவோடு கொண்ட தொடர்பின் இரண்டாம் காலகட்டம் தொடங்குகின்றது. முன்னர் பார்த்ததைப்போல இது பண்பாட் டுத் தொடர்போ அல்லது கைதிகளால் ஏற்பட்ட தொடர்போ அல்ல. இது மலாயாவின் பொருளாதார வளத்திற்காக உழைக்க வந்த இந்தியத் தொழிலாளிகளால் ஏற்பட்ட தொடர்பு. இந்தியத் தொழிலாளர்கள் என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டாலும் தமிழ்த் தொழிலாளர்களே இவர்களில் பெரும்பகுதியினர் 1941ஆம் ஆண்டு வரை இங்கு வந்த 3,823,812 இந்தியர்களில் 92.3 விழுக்காட்டினர் தென்னிந்தி யாவிலிருந்து வந்தவர்கள். 1951ஆம் ஆண்டு வரை வந்த 4,245,990 இந்தியர்களிலும் 91 3 விழுக்காட்டினர் தென்னிந் தியர், தென்னிந்தியர்களிலும் தமிழரே பெரும் பகுதியினர். வறுமையும் அறியாமையும் நிறைந்த தொழிலாளர் கூட்டத் தின் சந்ததியினரே இன்றும் இங்கு வாழும் தமிழர்களில் பெரும் பான்மையினர். முதல் காலகட்டத் தொடர்புகள் வரலாற்றுக் குறிப்புக்களாகவும், அகழாய்வுகளாகவும், பண்பாட்டுப் பாதிப் புக்களுமாகவும் மட்டும் நின்றுவிட, இவ்விரண்டாம் கால கட்டத் தொடர்புகள் இறுகிய நிலையில் தொடர்ந்து செல்லும் ஒன்றாக அமைந்துள்ளது.

தோட்டப்புறங்களில் வேலை செய்வதற்காக மட்டுமன்றி, பாதைகள், இருப்புப் பாதைகள் போடவும் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் இங்கு வந்துள்ளனர். மலேசியப் புகைவண் டித் துறை வரலாற்றுடன் தமிழ்த் தொழிலாளரின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளது. மலேசியாவின் முதலாவது புகை வண்டிப்பாதை 1816இல் போடப்பட்டது. புகைவண்டி வசதி கள் வளர்ச்சியுடன் தமிழ்த் தொழிலாளர் எண்ணிக்கையும் அன்று பிணைந்திருந்தது. அதே போல மலாயாவின் சாலை கள் அனைத்தும் தமிழ்த் தொழிலாளரின் உழைப்பை உட் கொண்டு பிறந்தவை.

இவ்வாறு மலாயாவின் வளர்ச்சியோடு தங்களைப் பின்னிப் பிணைத்துக்கொண்ட தொழிலாளரின் வாழ்க்கையோ இதற்கு நேர் எதிரிடையாக இருந்தது. 1930களிலும் இந்நிலையே நீடித்தது என்பதை 1936இல் 'தமிழ் முரசி'ல் 'மலேயாவில் நம்மவரின் நிலைமை' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை நன்கு தெளிவுபடுத்துகிறது: 'மலேயாவில் வாழும் தமிழ் மக்களை மூன்று பிரிவினராகப் பிரித்தால் ஒரு பகுதியினர் வியாபாரிகள்; அதாவது பணக்காரர்கள். மற்றோர் குழுவினர் மத்தியதர வகுப்பார்: அதாவது உத்யோகம் பார்ப்பவர்களும் மற்றும் சிலரும். பிறிதோர் கூட்டத்தார் கூலிகள். அதாவது பரம தரித்திரர்கள். தமிழ் மக்களில் நூற்றுக்கு 70 சதவிகிதம் மேற்கண்ட மூன்றாம் பகுதியிற் சேர்ந்தவர்கள். அவர்களுக்கென கவர்மெண்ட் மூலமாய் பல பாதுகாப்புகளிருந்தும் இன்னும் நிலைமை உயர்ந்தபாடில்லை'.

மலாயாவில் தமிழர்களின் வாழ்க்கை இவ்வாறு பிரச்னைகளுக்கு இடையிலேயே அமைந்திருந்ததால் அண்மைக்காலத் தமிழியல் ஆய்வுகள் யாவும் வரலாற்று, சமூகப் பொருளியல், கல்வி, பண்பாட்டு அடிப்படையில் இவற்றை அணுகுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. அதிலும் தோட்டப்புறத் தமிழ்ச் சமூகத்தைப் பற்றியே பல்வேறு ஆய்வுகளும் நிகழ்ந்துள்ளன-நிகழ்ந்து வருகின்றன. ஏனெனில் தமிழ்ச் சமுதாயம் எப்போதும் தோட்டப்புறங்களிலேயே பெரும்பகுதி இருந்து வந்துள்ளது. 1941ஆம் ஆண்டு வரை வந்த இந்தியர்களில் 72.5 விழுக்காட்டினர் தொழிலாளர்களே. இத்தொகை 1957ஆம் ஆண்டுவரை 85.3 விழுக்காடாகக் காணப்படுகின்றது. 1970 மக்கள்தொகைக் கணக்குப்படி தோட்டப்புறங்களில் வாழும் இந்தியர் 65 3 விழுக்காட்டினர். இவர்களில் 60 விழுக்காட்டினர் தமிழர். எனவே தோட்டப்புறத் தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றிய ஆய்வுகளே இரண்டாம் காலகட்ட ஆய்வுகளில் முதலிடம் வகிக்கின்றன.

தோட்டப்புறச் சமுதாயத்தைப் பற்றிய ஆய்வுகளிலும் இந்தியத் தொழிலாளரின் குடியேற்றம் தொடர்பான ஆய்வு

களே முதன்மை வகிக்கின்றன. என். இ. மார்ஜோரி பேங்க் ஸ்ூம், ஏ.டி. மரைக்காயரும் 1917இல் வெளியிட்ட இலங்கையிலும் மலாயாவிலும் குடியேறியுள்ள இந்தியத் தொழிலாளர் பற்றிய அறிக்கை, 1914இல் ஏ. ராய் வெளியிட்ட **பிரிட்டிஷ் மலாயாவில் இந்தியக் கூலி**, 1932இல் ஏ.வி. மூதேடின் வெளியிட்ட **மலாயாவில் நம் மக்கள்**, 1935இல் ஆர். கிருஷ்ணன் வெளியிட்ட **மலாயாவில் இந்தியச் சமூகம்**, 1938இல் நீலகண்ட ஐயர் வெளியிட்ட **மலாயாவில் இந்தியர் பிரச்னைகள்** ஆகிய நூல்கள் இத்துறையில் முன்னோடியான நூல்கள். மலாயாவில் இந்தியர்கள் குடியேற நேர்ந்த சூழல், இந்தியாவில் அவர்களுடைய வாழ்க்கைப் பின்னணி, அவர்கள் இங்குக் கொண்டு வரப்பட்ட முறை, இங்கு அவர்கள் எதிர்நோக்கிய பிரச்னைகள் முதலிய பலவும் இந்நூல்களில் நன்கு ஆராயப்பட்டுள்ளன.

இத்துறையில் வெளிவந்துள்ள ஒரு சிறந்த ஆராய்ச்சி நூல் கர்னியால் சிங் சந்து எழுதியுள்ள **மலாயாவில் இந்தியர்கள்** என்ற நூலாகும். 1686க்கும் 1957க்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த குடியேற்றத்தின் எல்லா அம்சங்களையும் இந்நூல் தகுந்த புள்ளி விவரங்களுடன் விவாதித்துள்ளது. இதனையடுத்துக் குறிப்பிட வேண்டிய ஒரு முக்கிய நூல் பேராசிரியர் அரசரத்தினம் எழுதிய **மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இந்தியர்கள்**. இவருடைய பிற கட்டுரைகளும் இக்கால மலேசிய இந்தியர்களின் சமூக வரலாற்றுக் கட்டுரைகளாகவே அமைந்துள்ளன. ஆர். என். ஜேக்ஸன் எழுதிய **குடியேறிய தொழிலாளரும் மலாயாவின் வளர்ச்சியும்**, சி. கோண்டபி எழுதிய **வெளிநாடுகளில் இந்தியர், 1838-1949**, ஜி. நெட்டோ எழுதிய **மலாயாவில் இந்தியர்கள் : வரலாற்று உண்மைகளும் புள்ளி விவரங்களும்**, என். பார்மர் எழுதிய **காலனித்துவ தொழிற்கொள்கையும் நிர்வாகமும்**, ஆர்.கே. ஜெயின் எழுதிய **மலாயாவின் தோட்டப்புறங்களில் தென்னிந்தியர்கள்**, உஷா

மஹாஜனி எழுதிய **பர்மாவிலும் மலாயாவிலும் சிறுபான்மை இந்தியர் பங்கு** ஆகிய நூல்களும் இவ்வகையில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற நூல்களாக விளங்குகின்றன. இவையல்லாமல் பல்வேறு பல்கலைக்கழகப் பொருளாய்வுகளும் இவ்வடிப்படையில் நிகழ்ந்துள்ளன ; நூல்களாக அல்லாமல் கட்டுரைகளாகவும் பல வெளிவந்துள்ளன. இவையனைத்தும் வரலாற்று ரீதியில் இந்தியத் தொழிலாளர் குடியேற்றத்தின் சகல அம்சங்களையும் ஆராய்கின்றன. பி. வீபீயும், மாரியப்பனும் எழுதி அண்மையில் வெளியிட்டுள்ள (1978) **மலேசிய இந்தியன் : தோட்டப்புறப் பார்வை** என்ற நூலும் ஒரு குறிப்பிடத்தக்க நூலாகவே அமைகிறது. கே. சுகுமாரன் குட்டியின் ஓர் ஆய்வு இந்தியர்களை எதிர்நோக்கும் வேலை அனுமதி தொடர்பான பிரச்னைகளை ஆராய்கிறது. இவையல்லாமல் தொழிலாளர் சங்கம் பற்றிய சில ஆய்வுகளும் இங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவையனைத்தும் தொழிலாளர் சமுதாயத்தைப் பல்வேறு கோணங்களில் காட்டும் ஆய்வுகளாக அமைந்துள்ளன.

தோட்டப்புறச் சமுதாயத்தை இவ்வாறு பொதுவான நிலையில் அல்லாமல் ஒரு குறிப்பிட்ட தோட்டத்தை ஆழமாக ஆராயும் முயற்சிகளும் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எஸ்.டி. அப்பாதுரை, ஆர்.கே. ஜெயின், சூன் தியோங் இங், கே. ராதாகிருஷ்ணன்பிள்ளை, செய்கு மைதின் சையத் அமாட் முதலியோருடைய ஆய்வுகள் இவ்வகையில் அமைந்துள்ளன. தோட்டப்புறத்தைப் பொதுவாகவும், குறிப்பாகவும் ஆயும் அவ்வாய்வுகள் யாவும் பொருளாதாரம், கல்வி முதலிய பல்வேறு பிரச்னைகளையும் தொட்டே பேசுகின்றன.

மலேசியத் தமிழர்கள் எதிர்நோக்குகின்ற ஒரு முக்கியமான பிரச்னை கல்விப் பிரச்னையாகும். 1816ஆம் ஆண்டிலிருந்தே தமிழ்த் தொடக்கப் பள்ளிகள் இந்நாட்டில் இருந்ததற்குச்

சான்றுகள் இருப்பினும், அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்க் கல்வி பல தடைகளை எதிர்நோக்கியே இருந்து வந்துள்ளது. அன்றைய ஆங்கில அரசாங்கம் தொடக்கக் கல்வியைத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தருவதைத் தன் கடமையாகக் கருதாததால் தமிழ்க் குழந்தைகள் பல இடர்ப்பாடுகளை அடைந்தனர். அவ்வாறு அடைந்த இடர்ப்பாடுகளையும், படிப் படியாகத் தமிழ்க் கல்வி வளர்ந்த வளர்ச்சியினையும், இன்று அது எதிர்நோக்கும் பிரச்னைகளையும் விளக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகளும் இங்குக் குறிக்கத்தக்கன. டி.எஸ். தாஸ் மேற்கொண்ட 'மேற்கு மலேசியா-சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி, 1860-1970' என்ற ஆய்வும், ஜெ. பி. மாலிய மௌர் மேற்கொண்ட 'தோட்டத் தொழிலாளர் கல்வியைப் பற்றிய சில பார்வைகள்', என்ற ஆய்வும் இவ்வகையில் குறிப் பிடத்தக்கவை. மலேசிய சமூகவியல் ஆய்வு நிறுவனம் (Malaysian Sociological Research Institute) வெளியிடும் INTISARI என்ற காலாண்டு இதழ், தோட்டப்புறத் தமிழர்களின் கல்வியைப் பற்றி வெளியிட்ட சிறப்பு இதழ், தோட்டப்புறக் கல்வி நிலையின் பல்வேறு அம்சங்களையும் தெளிவு படுந்தும் நிலையில் அமைந்துள்ளது. டாக்டர் டி. மாரிமுத்து எழுதியுள்ள சில கட்டுரைகள் ஒரு கல்வியாளரின் பார்வையில் இப்பிரச்சனையை அணுகுகின்றன. மலேசியாவில் தமிழ்ப் பள்ளியும் தமிழ்க் கல்வியும் என்ற அ. கந்தனின் நூலும் இங்குக் குறிப் பிடத்தக்கது.

மலேசிய இந்தியர்களின் அரசியல் நிலையையும், தலைமைத்துவத்தையும், மலேசிய இந்தியன் காங்கிரஸையும் ஆராயும் சில ஆய்வுகள், மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தின் அரசியல் பங்கினைத் தெளிவாக்கும் முறையில் அமைந்துள்ள பேராசிரியர் அரசரத்தினத்தின் சில கட்டுரைகளும், வேறு சில ஆய்வுகளும் இங்கு குறிப்பிடத்தக்கவை

மலேசியா இந்து சமயத்தோடு கொண்டிருந்த தொடர்புகள் பற்றிய ஆய்வுகளும், இன்று மலேசிய இந்துக்கள் சமய நிலையைப் பற்றி எழுந்துள்ள ஆய்வுகளும் மலேசியத் தமிழியலில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றன. கி. பி. 414 இல் இந்நாட்டிற்கு வந்த பாஹியான் இந்நாட்டில் இந்து மதத்தைச் சார்ந்த பல துறவிகளையும் மக்களையும் கண்டதாக எழுதியுள்ளார். கி.பி. 1414 வரை மலாயாவில் இந்து மன்னர்கள் ஆட்சி இருந்ததாக வரலாறு குறிக்கின்றது. இவ்வாறு மலாயாவோடு இந்து சமயம், கொண்டுள்ள தொடர்புகளை விளக்கும் ஆர். ஓ. வின்ஸ்டட்டின் 'மலாய்ப் பழக்க வழக்கங்களில் இந்து பழக்க வழக்கங்கள்' என்ற கட்டுரையும், 'மலாய் நாட்டுப்புற நம்பிக்கைகளில் காணப்படும் இந்து-இஸ்லாமியக் கூறுகள்' பற்றிய பேராசிரியர் முகம்மதுதாயுப் ஒஸ்மான் பொருளாய்வும் ஆர். சி. மஜூம்தாரின் தூரகிழக்கில் இந்துக் காலனிகள் என்ற நூலும் குறிப்பிடத்தக்கவை. பேராசிரியர் சிங்காரவேலுவின் 'கி. பி. 1500 க்கு முற்பட்ட தென்கிழக்கு ஆசியாவில் இந்துசமயம் பற்றிய ஒரு சுருக்கமான மதிப்பீடு' என்ற கட்டுரையும், 'தென்னிந்தியாவிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் நாக இளவரசியைப் பற்றிய கதைகள்' என்ற கட்டுரையும் மலேசியாவிற்கும் இந்து சமயத்திற்கும் இடையில் உள்ள தொடர்புகளைச் சிறப்பாக விளக்கி நிற்கின்றன. மலேசியாவில் உள்ள கோயில்கள் அவ்வப்போது வெளியிடும் திருக்குடமுழுக்கு மலர்களும் மலேசியாவில் தற்போதுள்ள கோயில்களைப் பற்றியும், இந்து சமயத்தைப் பற்றியும் பல அரிய செய்திகளைத் தருகின்றன. மலேசியத் தமிழ் மக்களிடம் காணப்படும் சமய நம்பிக்கைகள், சடங்குகள் பற்றிய ஆர். ராஜூவின் பொருளாய்வு இன்று தமிழர்களின் சமய நிலையைத் தெளிவாகப் புரிந்துகொள்ளத் துணைசெய்யும் ஓர் ஆய்வாகும்.

மலேசியத் தமிழியல் வளர்ச்சிக்குத் தமிழ்ப் பத்திரிக்கைகளும் ஒரு பெரும் பங்காற்றியுள்ளன. மலேசியாவில் தமிழ்ப்

பத்திரிகைகளின் வரலாறு ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேற்பட்டதாகும். 1878 ஆம் ஆண்டே பினாங்கிலிருந்து 'தங்கை நேசன்' என்ற பெயரில் ஒரு மாதமிருமுறை இதழ் வெளிவந்ததாகத் தெரிகிறது. எனினும் இப்பத்திரிகையின் இதழ்கள் இன்று கிடைக்கவில்லை. 1887 இல் சிங்கையி லிருந்து வெளிவந்த 'சிங்கை நேசன்' என்ற வார இதழே இப் போது காணக்கிடைக்கும் முதல் தமிழ்ப் பத்திரிகை. இதன் முதல் தலையங்கம், ஏற்கெனவே நடந்து நின்றுபோன 'சிங்கை வர்த்தமானி', 'தங்கை நேசன்', 'ஞான சூரியன்' ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளைக் குறிப்பிடுகிறது. ஆயினும் இவை கிடைக்க வில்லை. இதனைத் தொடர்ந்து மலேசியத் தமிழ்ப் பத்திரிகை யுலகம் பல நாளிதழ்களையும், கிழமை-திங்கள் இதழ்களையும் கண்டுள்ளது. தமிழன் (1933), தேசநேசன் (1933), தேசாபி மானி (1937), ஜெயமணி (1941), சுதந்திர இந்தியா (1942), ஜனநாயகம் (1946), தேசபக்தன் (1954), மலைநாடு (1958), தேசதூதன் (1962) ஆகிய நாளிதழ்களும்; இந்திய மித்திரன் (1929), மலாய்நாடு (1930), முன்னேற்றம் (1931), ஜனவர்த் தமானி (1934), பாரதமித்திரன் (1934), சுதந்திரோதயம் (1942), சிறம்பான் செய்தி (1942), யுவபாரதம் (1942), புது உலகம் (1943), சேவிகா (1945), மலாயா வர்த்தமானி (1946), ஜனோபகாரி (1948), மலைமகள் (1956), முதலிய வார இதழ் களும்; சீர்திருத்தம் (1935), தமிழ்க்கொடி (1939), நவயுகம் (1946), தமிழ்ச்சுடர் (1948), சோலை (1951), நாகரிகம் (1952), சிந்தனை (1955), தமிழ்க்குயில் (1956), திருமுகம் (1955), மாதவி (1959), நவரசம் (1958), பொன்னி (1966) முதலிய திங்கள் இதழ்களும் இவற்றில் குறிப்பிடத்தக்கவை. போதிய பொருளாதார வசதியும், வாசகர் கூட்டமும் இன்மை யால் இவை தொடர்ந்து நடைபெற இயலவில்லை. 1923இல் 'தமிழ்நேசன்' நாளேடும், 1963இல் தொடங்கிய 'தமிழ்மலர்' நாளேடும் தொடர்ந்து வெளிவந்து கொண்டுள்ளன. இவற்று டன் 'சங்கமணி'யும், 'வானம்பாடி' என்னும் வார ஏடும், 'உத யம்', 'புதிய சமுதாயம்' ஆகிய திங்கள் இதழ்களும் இப்போது

வெளிவந்து கொண்டுள்ளன. தமிழியல் பற்றிய பல கட்டுரைகள் இவ்விதழ்களில் அவ்வப்போது வெளிவந்து கொண்டுள்ளன மலேசியப் பத்திரிகை உலகில் 1935 தொடங்கி வெளிவந்த 'தமிழ்முரசு' சில ஆண்டுகளுக்கு முன் நின்றுவிட்டாலும், அதன் செல்வாக்கை இன்னும் காணலாம்.

மலேசியத் தமிழியல் வரலாற்றில் இலக்கியப் படைப்புக்களும் ஒரு முக்கிய இடம் பெறுகின்றன. 1887இல் வெளிவந்த சி. ந. சதாசிவப்பண்டிதர் இயற்றிய *வண்ணையந்தாதி, வண்ணைநகரூஞ்சல், சிங்கை நகரந்தாதி, சித்திரகவிகள்* ஆகியவையே இங்கு வெளிவந்த முதல் நூல்களாகத் தெரிகின்றன. 1917இல் *கருணாசாகரன் அல்லது காதலின் மாட்சி* என்ற முதல் நாவல் வெளிவந்தது. 1930களில் சிறுகதை இலக்கியம் இங்கு அரும்பியது. இவற்றைத் தொடர்ந்து பல கவிதை நூல்களும், நாவல்களும், சிறுகதைத் தொகுப்புக்களும் இங்கு வெளிவந்துள்ளன. இன்னும் ஆண்டுதோறும் பல புத்திலக்கியப் படைப்புக்கள் வெளிவந்து கொண்டுள்ளன. 1963 வரை வெளிவந்த இலக்கியப் படைப்புக்களையும் பத்திரிகைகளையும் பற்றிய குறிப்புக்களை டாக்டர் இராம. சுப்பையா தொகுத்து **தமிழ் மலேசியானா** என்ற பெயரில் ஒரு நூல் வெளியிட்டுள்ளார். மலேசியத் தமிழ் இலக்கிய-பத்திரிகை வரலாற்றில் இந்நூல் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. இலக்கியப் படைப்புக்களே அன்றித் திறனாய்வு முயற்சிகளும் இப்போது பெருகி வருகின்றன.

தமிழோடு தொடர்புடைய மொழியியல் ஆய்வுகளும் தமிழியலில் ஒரு பகுதியாக அங்கம் வகிக்கின்றன. பேராசிரியர் அஸ்மா ஹாஜி ஓமார் எழுதிய 'மலாயில் காணப்படும் தமிழ்ச் சொற்களின் இயல்பு' என்ற கட்டுரை மலாய் மொழியில் காணப்படும் தமிழ்ச் சொற்களை விளக்க, டாக்டர் இராம. சுப்பையாவின் 'தமிழ் பேசுவோரிடம் காணப்படும் மலாய்ச் சொற்கள் என்ற கட்டுரை தமிழர் பயன்படுத்தும் மலாய்ச் சொற்களை விளக்குகிறது. தமிழையும் மலாயையும் ஒப்பிட்டு டாக்டர் திண்ணப்பன் எழுதிய ஒரு கட்டுரையும்; திலகவதியின் 'தமிழ்

பேசுவோரிடம் காணப்படும் மலாய் மொழி பற்றிய மொழியியல் ஆய்வு', பாலசுப்ரமணியத்தின் 'தமிழர் அல்லாதாருக்குத் தமிழை இரண்டாம் மொழியாகப் போதித்தல்' பற்றிய பொருளாய்வுகளும்; டாக்டர் இராம. சுப்பையாவின், கீழ்ப்பேரா தமிழைப் பற்றிய ஆய்வும் இத்துறையில் வெளிவந்த பிற குறிப்பிடத்தக்க ஆய்வுகள் ஆகும்.

மலேசியத் தமிழியல் வரலாற்றிலும் வளர்ச்சியிலும் ஒரு திருப்புமுனையாக அமைந்த ஆண்டு 1956 எனலாம். இவ்வாண்டில்தான் மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்தியப் பகுதி (Department of Indian Studies) அமைந்தது. தமிழியல் தொடர்பான பாடங்களைப் போதிக்கவும், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் மலேசியாவில் பல்கலைக்கழக அளவில் அமைந்த ஒரே துறை இதுதான். தமிழ் இலக்கணம், இலக்கியம், மொழியியல் ஆகியவற்றைத் தமிழிலும்; பண்பாடு, சமூகவியல், மொழியியல், சமயம், இலக்கிய மரபுகள் முதலியவை மலாய்-ஆங்கில மொழிகளிலும் இங்குப் போதிக்கப்படுகின்றன. தமிழரும், தமிழரல்லாத பிற இனத்தவரும் தமிழியலின் பல்வேறு துறைகளையும் கற்றுத் தெளிய இப்பாடங்கள் பயன்படுகின்றன.

பாடங்களைப் போதிப்பதோடு நில்லாது, இந்தியப் பகுதியின் ஆசிரியர்கள் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சியும் செய்து வருகின்றனர். இந்தியாவிலும் தென்கிழக்காசியாவிலும் காணப்படும் இராமாயணங்களை ஒப்பிட்டுப் பேராசிரியர் சிங்காரவேலு எழுதிய கட்டுரைகள், இராமாயண ஆராய்ச்சியில் பல புதிய உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளன. தமிழிலக்கியம் பற்றிய பொதுவான ஆய்வுகளுடன், மலேசியத் தமிழியல் பற்றிய பல சிறப்பான ஆய்வுகளும் இங்கு நடந்து வருகின்றன. மலேசியத் தமிழர்களிடம் காணப்படும் சாதியுணர்வு பற்றிய ஆர். ராஜகிருஷ்ணனின் பொருளாய்வும், ஜே. ஆர். டேனியலின் தோட்டப்புற இந்தியர்களின் சமூகப் பொருளியல் நிலைகள் பற்றிய பொருளாய்வும் அண்மையில் முழுமையடைந்த இரு மலேசியத் தமிழியல் தொடர்பான

ஆய்வுகள் ஆகும். ந. சுப்ரமணியத்தின் மலேசியத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி பற்றிய ஆய்வும் இப்போது முற்றுப் பெற்றுள்ளது. மலாயாப் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிதி யுதவியுடன் இக்கட்டுரையாளர் மேற்கொண்ட மலேசியத் தமிழ் நாட்டுப்பாடல்கள் பற்றிய ஆய்வும் நிறைவுபெறும் நிலையில் உள்ளது. இந்தியப் பகுதியின் மாதாந்திரக் கருத் தரங்குகளில் வா சிக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் இங் குக் குறிப்பிடத் தக்கன. 1978ஆம் ஆண்டில் தேசிய அளவில் மலேசியத் தமிழ்ச் சிறுகதைக் கருத்தரங்கு ஒன்றினையும் இந்தியப் பகுதி நடத்தியுள்ளது

மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை ஆண்டு தோறும் வெளியிடும் 'தமிழ் ஒளி' தமிழியல் தொடர்பான பல அரிய கட்டுரைகளைத் தாங்கி வருகிறது. இலக்கியம், பண்பாடு, வரலாறு, சமூகவியல், மொழியாக்கம் முதலிய பல துறைகளைச் சார்ந்த கட்டுரைகளும் இவ்விதழில் இடம் பெறுகின்றன. 1972—73 'தமிழ் ஒளி' இதழை மலேசியத் தமிழிலக்கிய மலராகவே தமிழ்ப் பேரவை கொண்டு வந்துள் ளது.

மலேசியத் தமிழியல் பரப்பையும், அதில் மேற்கொள்ளப் பட்டுள்ள ஆய்வுகளையும் ஒருசேரக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, இன்னும் புதிய புதிய ஆய்வுகளுக்கு வழி யிருப்பதை நன்குணர முடியும். எதிர்காலம் இவ்வாய்வு களுக்கு உரிய வாய்ப்பளிக்கும்.

---

எந்த நாட்டினரும் பெருமை கொள்ளக்கூடிய இலக்கியம்
தமிழ் இலக்கியம்

— எப். எம். கெல்லட்

## 3. சிங்கப்பூரில்

சிங்கப்பூர் அரசியற் சட்டப்படி நாட்டில் ஆட்சி மொழி களுள் தமிழும் ஒன்றாக ஏற்கப்பட்டுள்ளது. 1819இல் ஆங்கி லேயர்களின் வணிக நிலையமாக நிறுவப்பெற்ற சிங்கப்பூரில், தென்கிழக்காசியா, சீனா, இந்தியத் துணைக்கண்டம் ஆகிய வற்றிலிருந்தெல்லாம் வந்த மக்கள் குடியேறத் தொடங்கினர். பொருளாதார ஏற்றம் கருதியோ, தத்தம் நாடுகளில் நிலவிய போரிலிருந்தும் பஞ்சத்திலிருந்தும் தப்புவதற்கோ அல்லது தம் வாழ்வில் மாற்றம் கருதியோ அவர்கள் இங்கே வந்தனர். எனவே குடியேறிய இடத்தில் என்ன இடர்ப்பாடு இருப்பினும் அங்கே அரும்பாடுபட்டுத் தம்மை உயர்த்திக்கொள்ள வேண்டு மெனும் மனத்துணிவுடன் அங்கே வாழத் தலைப்பட்டனர்.

இவர்களுள் பலர் வேளாண்மைப் பணிக்கும் பிற தொண் டூழியங்கட்கும் என வெள்ளையர்களால் நேரடியாக இங்குக் கொணரப்பட்டன்ர்; சிலர் மலேயாவிலிருந்து கடந்த 80ஆண்டு களில் வந்து குடியேறினர்; இன்னும் சிலர் தம் தாயகம் விட்டுப் பொருளாக்க வளம்தேடி இங்குப் புறப்பட்டு வந்தனர்.

இங்கு தமிழ் மொழியும் தமிழியல் துறைகளும் வளர்ந்துள் ளமை, அரசியல் பின்னணியோடும் தமிழ் நாகரிகம் பண்பாடு எனுமிவற்றோடு உறவுடைய தொடர்புகளோடும் ஆராயப் படும்.

### சிங்கப்பூரில் தெற்காசிய மக்கள் குடியேற்றம்

1819லிருந்து சிங்கப்பூரில் தெற்காசிய மக்கள் குடியேறத் தொடங்கினர். (i) குற்றவாளிகள் குடியேற்றம், (ii) கட்டுப்

எழுதியவர் ஏ. மணி, (தமிழாக்கம் சு. குழந்தைநாதன்)

படுத்தப்பெற்ற குடியேற்றம், (iii) தாமாக வந்த குடியேற்றம் என மூன்று பிரிவில் இக்குடியேற்ற வரவு அமையும். இக்குடியேற்றங்கள் ஒன்றற்குப்பின் ஒன்றாகவோ அல்லது மூன்றுமே ஒரு காலகட்டத்திலோ நிகழ்ந்துள்ளன.

திரு ஆர்.பி. கிருஷ்ணன் எழுதியுள்ளபடி, தெற்காசியக் குடியேற்றத்தின் புதுக்காலம் 1933இலிருந்து, அதாவது ஆங்கிலப் பேரரசு முழுவதிலும் அடிமை முறை ஒழிக்கப்பட்ட நாளிலிருந்து தொடங்குகிறது. மலாக்கா, பினாங்கு போல, 'இந்தியாவின் சிட்னி' எனக் கருதப்பட்ட சிங்கப்பூரின் தொடக்க நிலை வளர்ச்சிக்கு இந்தியர்கள் பெரிதும் உதவினர். குற்றவாளிகளின் உழைப்பால் உருவாக்கப்பட்ட இந்த மூன்று துறைமுகங்களும் முதலில் கிழக்கிந்தியக் கம்பெனியின் கீழும் பின்னர் பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் கீழும் வந்தன. இந்தோனேசியச் சுமாத்ராவில் இப்போதுள்ள பெங்கூளு எனுமிடத்தில்தான் முதன்முதலில் இவர்கள் வைக்கப்பட்டிருந்தனர். 1825இல் இடச்சுக்காரர்களுக்கு உரிமையானதால், அங்கிருந்த குற்றவாளிகள் பினாங்கிற்கும், அங்கிருந்து சிங்கப்பூர், மலாக்காப் பகுதிகட்கும் மாற்றப்பட்டனர். இவ்வாறு சிங்கப்பூருக்குக் கொணரப்பட்ட இந்தியர்கள் தமது அரிய உழைப்பால் சிங்கப்பூரை உருவாக்கினர். அதன் நெடுஞ்சாலைகளை அமைத்துத் தந்ததோடு துப்புரவுப் பணிகளையும் மேற்கொண்டனர் சதுப்பு நிலங்களைத் தூரார்த்துப் பாலங்களைக் கட்டி வியர்வை சிந்தி உழைத்தனர். சிங்கப்பூரில் உள்ள பழமையான தமிழ் இந்து ஆலயமான மாரியம்மன்கோவிலை இக்குற்றவாளிக் குடியேற்ற வாசிகளே 1828இல் அமைத்தனர். சீனநாட்டுப் பாட்டாளிகளைவிட இவர்கள் குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்தனர். 1867இல் தீபகற்பக் குடியேற்றங்கள், காலனி அலுவலகக் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டமையால், குற்றவாளிகளைக் குடியேற்றி அவர்கள் உழைப்பைச் சுரண்டும் போக்கு மறையலாயிற்று.

தீபகற்பக் குடியேற்றப் பகுதிகளில் கரும்புத் தோட்டங்களிலும், மிளகு, தென்னந்தோப்புக்களிலும் வேலை செய்தற்காக

வங்க விரிகுடாவைக்கடந்து 1800இலிருந்து தென்னிந்தியர்கள் வரத்தொடங்கினர். தமிழர்களும் பிறரும் தாமாக இங்கு குடியேற வந்தமை 1857 வரை நீடித்தது. அதன்பின்னர் கப்பலில் நெரிசலைத் தவிர்ப்பதற்காகச் சில கட்டுத்திட்டங்களை அப்போதைய இந்திய அரசு கொணர்ந்தது. இதனால் பயணிகள் தொகை குறைந்து, கப்பல்கள் வருமானத்தை இழந்தன.

1890ஆம் ஆண்டளவில், ஒப்பந்தப் பிணைப்புக்கு உட்படாத உழைப்பாளத் தமிழர்கள் கணிசமான அளவுக்கு அங்கு குடியேறிவிட்டனர். மலேயாப் பகுதிகட்குச் சட்டமுறைக் கூலிகளாக உழைக்க வந்தோர், அவ்வொப்பந்தக் கெடு முடிந்த பின்னரும், நீடித்துத் தங்க முற்பட்டனர். அவர்கள் வமிசத்தினரும் அங்கேயே வளரத் தொடங்கினர்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, இவ்வாறு உழைக்க வருவோர்க்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டமையாலும் அவர்களுடைய வேலை நிலைமைகளில் பல வளர்ச்சி முறைகள் அமைந்தமையாலும் 1913இல் குடியேற வரும் தமிழர்கள் தொகை மும்மடங்காகிவிட்டது. சிங்கப்பூரை மலேயாவுடன் இணைக்கும் ஜோகோர் பாலம், செம்பாவாங் துறைமுகத்தலம், கல்லாங் விமான நிலையம் எனச் சிங்கப்பூர் பெற்ற வளர்ச்சிக்கெல்லாம் தமிழர்களின் அரும்பாடுகளே அடிப்படையாயின.

நாளடைவில் படித்த தென்னிந்தியர்களும், வட இலங்கைத் தமிழர்களும் பிரிட்டிஷ் நிருவாக அமைப்பில் பணியாற்ற இங்கு வந்துசேர்ந்தனர். அலுவலக எழுத்தர்கள், மேற்பார்வையாளர்கள், வழக்கறிஞர்கள், பொறியியலாளர்கள் என்றெல்லாம் பல்வேறு அலுவல்களில் அமர்ந்தனர். கல்விப் பணியிலும் போலீசுத் துறையிலும் அவர்களே நிறையத்தொடங்கினர். ஆரம்பகாலத்தில் கிறித்தவ மிஷனரிகளும் அரசாங்கமும் நடத்திய பள்ளிகளில் இந்தியர்களே ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டனர். போலீசுக்காரர்களாக, சீக்கியர்களும் தமிழர்களுமே பெரும்பாலும் இடம்பெற்றனர். சிங்கப்பூரில் அந்தக்காலத்தில்

போலீசுக்காரர்களாய் இருந்தவர்கள் அனைவரும் தமிழர்களே யாவர்,

இருபதாம் நூற்றாண்டிலிருந்து, தெற்காசிய மக்கள் அங்கேயே தங்கிவாழ விரும்பியதால் அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கிற்று.

இவ்வாறு குடியேறிய இந்திய மக்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினராயிருப்பினும், அரசியல், தொழிற் சங்க வளர்ச்சிகளில் எல்லாம் முக்கிய பங்கேற்றிருந்தனர்.

## சிங்கப்பூரில் தமிழ்மொழி வளர்ச்சி

1887 இல் 'சிங்கை நேசன்' எனும் தமிழ்ச் செய்தித்தாள் வெளிவரத் தொடங்கியது. அதற்கு முன்னரே 1876 இல் 'சிங்கைவர்த் தமானி' எனும் பத்திரிகை வந்தமைக் காக விவரம் கிடைத்துள்ளது யாழ்ப்பாணம் சதாசிவப் பண்டிதர். சிங்கை நகர் அந்தாதி, சித்திரக்கவிகள் எனும் இரு நூல்களை 1887 இல் வெளியிட்டார். ஈ. ரெங்கசாமி தாசனின் குதிரைப் பந்தய லாவணி, பொன்னுசாமி பிள்ளை யின் சல்லாப லாவணி, கே. வி. வேலுப்பிள்ளையின் முருகேசர் பதிகம், முகமது அப்துல் காதரின் கீர்த்தனைத் திரட்டு என்பனவும் அச்சமயத்தில் வெளிவந்தன. 19ஆம் நூற்றாண்டின் பிற்காலத்திய சிங்கப்பூரின் சமூக வாழ்வினைக் குதிரைப் பந்தய லாவணி விளக்குகிறது.

1930 ஆம் ஆண்டளவில் சிங்கப்பூரில் தமிழகச் சிறுகதை இலக்கியம் வேரூன்றியது. பிரிட்டிஷ் இந்தியாவின் சென்னை மாநிலத்தில் நிலவிய அரசியல் உணர்வுகளும் சமூகச் சர்ச்சை களும் சிங்கப்பூர்த் தமிழர்களிடையே தமிழிதழ்கள் வழியாகப் பரவின. 'சுதேசமித்திரன்', 'தேசபக்தன்', 'தினமணி', 'தமிழ் நாடு' முதலிய பத்திரிகைகள் அங்கு பிரபலமாயின. 'விடுதலை' இதழ் சுயமரியாதை இயக்கத்தைப் பரப்பியது அதனைப் பின்பற்றிச் சமூக சீர்திருத்தத்தை விழையும் ஏடுகளாக, 'தமிழ்

முரசு', 'சீர்திருத்தம்', 'முன்னேற்றம்', 'தமிழன்', 'ஜோதி' என்பன சிங்கப்பூரில் வெளியிடப்பட்டன.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் 'தமிழ்முரசு ஆற்றி யுள்ள பணிகளைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். 1932 இல் திரு. ஜி. சாரங்கபாணியால் துவக்கப்பட்ட இவ்விதழ் சிங்கப்பூரிலும், மலேயாவின் இதரப்பகுதிகளிலும் நற்பணி யாற்றியது. சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்களில் பெரும்பா லோர் தமிழ் முரசால் அறிமுகம் ஆனவர்களே ஆவர் திரு. ஜி. சாரங்கபாணி, 1952 இலிருந்து தமிழ் விழாவை ஆண்டு தோறும் நடத்துதற்கும் அடித்தளமிட்டார். இவ்விழாச் சமயத்தே தமிழ் மொழி இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட் டன. தமிழ் முரசு, 1935-1941 ஆம் ஆண்டுகளில், சமய, சமூக சீர்திருத்தத் துறைகளில் பணியாற்றியதோடு தமிழர் களின் ஒற்றுமைக்கும் வழியமைத்தது. 1950-1960 ஆம் ஆண்டுகளில் தமிழ் மொழி வளர்ச்சியில் நாட்டம் கொண்டது.

தமிழ் நேசன், தமிழ் மலர் என்னும் இதர இதழ்கள், மலே சியத் தமிழர்களின் தேவைகளைப் பிரதிபலித்ததோடு, சிங்கப் பூர்த் தமிழர்களின் படைப்புக்களுக்கும் இடம் அளித்தது. தமிழ் மலரின் சிங்கப்பூர்ப் பதிப்பு பின்னர் வெளிவந்தது.

லீக்வான் யூ அவர்களைப் பிரதமராகக் கொண்டு 1959 இல் ஆட்சிக்கு வந்த மக்களியக்கக்கட்சி, நான்கு தேசீய மொழி களுள் ஒன்றாகத் தமிழுக்கும் உயர்விடம் தந்து, எல்லா ஆங் கிலவழிப் பள்ளிகளிலும் தமிழை இரண்டாம் மொழியாகக் கற் பிக்க வழியமைத்துத் தந்தது. தமிழாசிரியர்களின் ஊதியங் களை உயர்த்தியதோடு, அவர்கள் கல்வித் தகுதிகளை மேம் படுத்திக் கொள்ளவும் வாய்ப்பளித்தது. என்றாலும் தமிழ்வழிப் பயிற்சியளிக்கும் உயர்நிலைப் பள்ளிகள், ஆங்கில மொழிப் பள்ளிகளோடு போட்டியிட முடியவில்லை. ஆங்கிலவழிப் பள்ளி களையே பெரும்பாலோர் நாட முற்பட்டனர். சிங்கப்பூர்

உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியில்கூடப் போதிய அளவுக்கு மாணவர்கள் சேருவதில்லை. ஆனால் தமிழை இரண்டாம் மொழியாகப் பயில்வது குறையவில்லை. 1970இல் தமிழ்மொழிப் பாடம் பயின்றவர்களின் தொகை குறிப்பிடத் தக்க அளவு உயர்ந்தது. போதுமான தமிழாசிரியர்கள் கிட்டாத நிலை ஏற்படும் அளவுக்கு இந்த எண்ணிக்கை இருந்தது. தமிழாசிரியர்க்குப் பிற ஆசிரியர்களைப் போலவே தரமான ஆசிரியப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. என்றாலும்கூடக் கல்வி அமைச்சகம் வரையறுத்துள்ள கல்வித் தகுதிகளையுடைய தமிழாசிரியர்கள் கிட்டுவதில்லை. சிங்கப்பூர் வானொலித் தமிழ் ஒலிபரப்புப் பிரிவு, கல்வித்துறை, உயர்பள்ளி, புகுமுக வகுப்புகள் என்பனவற்றில் பணிபுரியத்தக்கவர்கள் போதுமான அளவு கிடைப்பதில்லை.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில், மாண்டரின், மலாய், ஆங்கிலம் முதலியவற்றிற்கு மொழித்துறைகள் இருக்கையில், தமிழுக்கும் உயர்நிலைப் பயிற்சித்துறை இல்லாமையினால்தான் இந்த இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது.

## சிங்கப்பூரில் தமிழியல் வளர்ச்சி

1952இல் துவக்கப்பட்ட தமிழ் விழாவில் பங்கேற்கத் தமிழ் நாட்டிலிருந்து பேச்சாளர்கள் வந்தனர். சிங்கப்பூரிலும் மலேயாவிலும் ஆங்காங்கு பல இடங்களில் உரையாற்ற அழைக்கப் பட்டனர் 1968 வரை இவ்வாறு ஆற்றிய உரைகள் தமிழ் முரசில் வெளியிடப்பட்டாலும் அவை நூல்வடிவம் பெறவில்லை.

சிங்கப்பூர்த் தமிழ் ஒலிபரப்புப் பிரிவில், தமிழ் நாட்டிலிருந்து வருகை தரும் பேச்சாளர்களின் உரைகள் பதிவு செய்து ஒலிபரப்பப்பட்டன இவையும் நூல் உருப்பெறாமல் காற்றோடு போய்விட்டன.

1956இல் சிங்கப்பூரிலிருந்த மலேயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய ஆய்வுத்துறை (தமிழ் மொழி இலக்கிய ஆய்வுகளுடன்) தொடங்கப்பெற்றது. 1959இல் கோலாலம்பூரில் மலேயாப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபின், இந்திய ஆய்வுத்துறையும் அங்கிருந்த தமிழ் நூல்களும் கோலாலம்பூருக்கு மாற்றப்பட்டன. 1972 வரை உயர்நிலைத் தமிழாய்வுக்குரிய வாய்ப்பு இங்கு நீடித்தது. அதன் பின்னர், மலாய் மொழியே அங்கு பல்கலைக்கழகத் தலைமை பெற்றதால், மலாய் மொழி பேசாதவர்கள் தமிழ் பயிலச் செய்வது அருகிவிட்டது. சிங்கப்பூர், நான்யாங் பல்கலைக்கழகங்களில் சீன, மலாய் மொழிகளுக்குத் தனித்துறைகள் ஏற்பட்டிருக்கத் தமிழ் மொழிக்கு மட்டும் தனித்துறை அமையவில்லை.

இக்குறையைக் களையும் வகையில் சிங்கப்பூர்த் தமிழ் ஆசிரியர் மன்றமும் தோழமை அமைப்புக்களும் ஒன்றுசேர்ந்து 25 வாரத் தமிழ் இலக்கியப் பயிற்சி வகுப்புக்களை நடத்தின. கொழும்புத் திட்டத்தின்கீழ் இந்தியாவிலிருந்து இரு பேராசிரியர்கள் உரையாற்ற வரவழைக்கப்பட்டனர். 1971இல் 'ஆங்கில மொழிப் பள்ளிகளில் தமிழ் மொழியைக் கற்பித்தல்' பற்றிய கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. 1975இல் சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களால் தொடங்கப்பெற்ற தமிழ்மொழிக் கழகம், சிங்கப்பூரில் தமிழை ஆக்கமுற வளர்த்தற்கான வழிகளில் நாட்டம் செலுத்துகிறது மாநாடு நடத்தி, சிங்கப்பூர்த் தமிழியலுக்குத் தனியிடம் உண்டு எனப் புலப்படுத்தியிருக்கிறது. 1977 இலிருந்து இக்கழகம், தமிழ்ப் பேரவை எனும் ஆண்டு இதழை நடத்திவந்தது. இதில் தமிழியல் சார்ந்த தரமான ஆய்வுக்கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இக்கழகம் ஆற்றிவரும் பணிகள், சிங்கப்பூரில் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் புத்துயிரூட்டியிருப்பதாகச் சொல்லலாம்.

# 4. இந்தோனேசியாவில்

மூவாயிரம் தீவுகளைக் கொண்டமைந்த இந்தோனேசியா வில் பல்வேறு இனவழி மக்களும் மொழிவழி மக்களும் கூடி வாழ்கின்றனர். இத்தீவுகட்கும் இந்தியாவுக்கும் தொன்மைக் காலந் தொட்டே தொடர்பிருந்தமையை இராமாயண, மகா பாரதக் கதை மரபுகள் அங்கு பரவியிருப்பதிலிருந்து நன்கறிய லாம். தமிழகத்திற்கும் சாவகத்திற்கும் பழங்காலத்திலிருந்தே இருந்த உறவுகளை வரலாற்றுச் சான்றுகளிலிருந்து தெளிய லாம்.

இந்தோனேசிய வரலாற்றில் இந்து - இந்தோனேசிய காலம்-என்றே ஒரு தனிச் சகாப்தம் உண்டு. இந்து சமயமும் பௌத்த சமயமும் நன்கு பரவியிருந்தன. இந்து சமயக் கலைப் படைப்புக்களைச் சாவகமெங்கும் காணலாம். தென்னிந்தியா வுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையே நிலவிய தொடர்பு களை விளக்குதற்குப் பல கல்வெட்டுச் சான்றுகள் கிட்டியுள் ளன; இந்தோனேசியாவில் உள்ள பௌத்தச் சிலைகள் எல் லாம் இந்திய மரபு தழுவிச் செய்யப்பட்டவை என்றும் நிரூபிக் கப்பட்டுள்ளன.

மணிமேகலைக் காப்பியத்தில் சாவகம் பற்றிய செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. பத்து, பதினோராம் நூற்றாண்டிலி ருந்து, அதாவது பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தே இரு நாடுகளுக்குமிடையே வலுவான தொடர்பிருந்தமைக்கான பல சான்றுகள் உள்ளன. ராஜராஜன் (985-1016) சைலேந்திர மன்னர்களுடன் நட்புப் பூண்டிருந்தான். சூளாமணிவர்மன், நாகப்பட்டினத்தில் புத்த விகாரத்தைக் கட்டியதாகக் கல்வெட்

எழுதியவர் செ. வை. சண்முகம்

டில் காணப்படுகிறது. இதற்கு ராஜராஜன் ஒரு ஊரையே தானமாக அளித்திருந்தான். ராஜேந்திர சோழனும் (1012-1044) இதற்குத் தானமளித்துச் சாசன அறிவிப்புச் செய்திருந்தான். பின்னர் ராஜேந்திர சோழன் படையெடுத்துச் சென்று கடாரம் கொண்டான். வீரராஜேந்திரன் (1063-70) மறுபடியும் படையெடுத்துக் கடாரத்தை வென்றான். இது பற்றிய தமிழ்க் கல்வெட்டுக்கள், சுமத்ராவில் கிட்டியுள்ளன. இங்கு தமிழ் வாணிகக் குடியிருப்புக்கள் நிலைபெற்றிருந்தமைக்கான சான்றிருப்பதாக வரலாற்றுப் பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி எழுதியிருக்கிறார். 1500 பேர் இவ்வணிகக் கூட்டமைப்பில் இருந்தது புலப்படுகிறதென்றும், 11ஆம் நூற்றாண்டில், சுமத்ராவில் அரசாவணங்களில் தமிழும் இடம் பெற்றிருந்ததென்றும் மேலும் ஆராய்ந்தால் பல உண்மைகள் விளங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுபோல, இந்தோனேசியாவில் உள்ள பழம் சுவடிகளில் தென்னிந்தியாவைப் பற்றிய பல செய்திகள் உள்ளன. கிழக்குச் சாவகத்தை ஆண்ட அயிர் லிங்கா (1019-49) வின் காலத்தே சாவகத்தில் வணிகம் செய்ய வந்தவர்களின் பட்டியலில், கலிங்க, சிங்கள, திராவிட, கர்நாடக நாட்டவர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்.

இராஜசனாகர மன்னன் அவைக்களப் புலவரான பிரபஞ்சர் எழுதிய நகர கிருத்தாகமம் எனும் நூலில் (1365) காஞ்சிபுரத்தில் வாழ்ந்த புத்தாதித்தியர், சாவக மன்னனைப் பற்றி எழுதிய பாடல்கள் பாராட்டிச் சொல்லப்பட்டுள்ளன.

ஜெயனாகர மன்னன் என்பவன் (1309-28) முடி சூடிய போது சுந்தரபாண்டியன் எனும் பெயரை வைத்துக்கொண்டதோடு பாண்டிய இலச்சினையையும் தனது மீனாத்வயமாகத் தேர்ந்துகொண்டானாம்.

17 ஆம் நூற்றாண்டில் ஆட்சியைக் கவர்ந்த டச்சுக்காரர்கள் மலபார் (தமிழ்) மொழியிலும் தெலுங்கு மொழியிலும் தம்

கடிதக் குறிப்புக்களை எழுதிவைக்க வேண்டியிருந்தது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை, மலாக்காத் துறைமுகப் பகுதிகளில் தமிழிலேயே கணக்குகளை எழுதிவரும் வணிக முறையே நீடித்தது. இங்கிருந்த தென்னிந்தியர்கள், கெலீன் அதாவது தமிழர்கள் என்றே பொதுவாக அழைக்கப்பட்டு வந்தனர்.

இவ்வாறு பல நூற்றாண்டுக் காலமாக ஏற்பட்டிருந்த அரசியல், வணிகத் தொடர்புகளால், பல தமிழ்ச் சொற்கள் இந்தோனேசிய மொழிகளில் இடம்பெற்றுள்ளதை அறியலாம். கூயில் (கோயில்), காவலர், தோழன், இடம், வட்டில் எனப் பல தமிழ்ச் சொற்கள் இன்றும் வாழ்கின்றன. அதுபோல, 'சாகோ' அரிசி என்பது சவ்வரிசியாகவும் 'கெடுங்' என்பது கிட்டங்கியாகவும் தமிழுக்கு வந்துள்ளன. மலாய் மொழியில் மட்டும் 105 தமிழ்ச் சொற்கள் கண்டறியப்பட்டுள்ளன.

சுமத்திரா, சாவக மக்களிடையே வழங்கும் பாரத இராமாயணக் கதைகள், பாலைக் கூத்துகள், சிவன், நந்தி, அகத்தியர் சிலைகள், அழிந்துகிடக்கும் ஆலயக் கட்டமைப்புக்கள் எனுமிவையெல்லாம் தமிழ் நாட்டுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையே நிலவிய பண்பாட்டு உறவுகளை விளக்கி நிற்கின்றன

தென்னிந்தியக் கலாச்சாரத்தோடும், தமிழ் நாட்டோடும் இவ்வளவு தொடர்பு பூண்டிருந்த இந்த நாட்டில், தமிழ்க் கல்விக்கு இப்போது வாய்ப்பு வசதிகள் இல்லை.

---

தமிழ் மிகப் பண்பட்ட மொழி; தனக்கே உரியதாக, இயல்பாக வளர்ந்த சிறந்த இலக்கியச் செல்வமுள்ள மொழி

— மாக்ஸ் முல்லர்

# 5. மோரீசில்

## தீவு வரலாறு

பம்பாயிலிருந்து கீழ் நோக்கி ஒரு நேர்கோடு வரைவோமாயின், 7,000 கிலோமீட்டர் தொலைவில் இந்தியப் பெருங் கடலில் ஒரு சிறு தீவைத் தொடுவோம். இத்தீவின் பெயரே மொரீசியசு. இது பதினேழாம் நூற்றாண்டில் ஒல்லாந்து நாட்டினரால் கண்டுபிடிக்கப்பெற்று 'மொரீசு' ( Maurice ) என்னும் பெயரிடப் பெற்றது. ஒல்லாந்தர் இத்தீவை விரைவில் கைவிடவும் ஃபிரஞ்சு நாட்டினர் அடுத்துப் புகுந்தனர். அவர்கள் முதலில் இந்நாட்டை 'இல் தே பிரான்சு' (ILE DE FRANCE) என்று அழைத்தனர். பின்னர் ஒல்லாந்தர் தந்த பெயரையே ஏற்றுக் கொண்டனர். ஃபிரஞ்சு ஆட்சியில் மொரீசியசு காலனி நாடாயிற்று. இன்று நாட்டின் முக்கிய வருவாயைத் தேடித்தரும் கரும்புப் பயிர் இந்த ஆட்சிக் காலத்தில்தான் தீவிர சாகுபடி செய்யப்பெற்றது. இந் நாட்டைப் பெருமளவில் திருத்தி அமைத்தவர் 'மாகே தே லபூர்தொனெ' (Mahe' de Labourdonnais) என்னும் பிரஞ்சு ஆளுநர். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் ஆங்கிலக் கும்பெனியாரும் பிரெஞ்சுக் கும்பெனியாரும் தமிழ்நாட்டில் மோதிக் கொண்டனர். அப்போது புதுச்சேரி ஃபிரஞ்சு ஆட்சியில் இருந்தது. அப்போருக்குப் போர்வீரர்

எழுதியவர் அ. புட்பரதம்

களையும் கப்பல்களையும் அனுப்பி உதவியவர் லபூர்தொனெ ஆவார். அவர் ஆட்சிக் காலத்தில்தான் தமிழர் இத்தீவில் குடியேறலாயினர்.

## தமிழர் வருகை

தமிழரின் வருகை ஃபிரஞ்சு ஆட்சிக் காலம் முதற் கொண்டே தொடங்குகிறது. இதில் வியக்கத்தக்க செய்தி என்னவென்றால் ஏனைய அயல் நாடுகட்குச் சென்ற தமிழர் கூலி வேலை செய்து பிழைக்கச் சென்றனர். ஆனால் மொரீசியசுக்கு முதன்முதலில் வந்த தமிழர்கள் வாணிகம் செய்ய வரவழைக்கப்பட்டனர், பிள்ளைமாரும் செட்டிமாரும் வணிகராய் வந்தனர். அதன் பின்னர் கட்டட வேலைகளுக்கும் தமிழரே வரவழைக்கப்பட்டனர். ஆங்கில ஆட்சி ஏற்பட்ட போதுதான் (பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி) தமிழர்கள் கரும்புத் தோட்டங்களில் வேலைசெய்ய வரவழைக் கப்பட்டனர். மொரீசியசு வாழ் தமிழரைப் பொறுத்த அளவில் இது வரலாற்று முக்கியம் உடையது. பிரஞ்சு ஆட்சிக் காலத் திலேயே தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் இங்கொன்றும் அங்கொன் றுமாக நடத்தப்பெற்று வந்தன.

## அவல நிலை

இப்போது ஃபிரஞ்சு ஆட்சியில் உள்ள மார்டினிக்கு, குவா டலூப்பு (தென் அமெரிக்காவில் உள்ளவை), மொரீசியசுக்கு மிக அண்மையில் உள்ள இரெயூனியன் தீவு ஆகிய தீவுகளிலும் தமிழர் ஆயிரக்கணக்கில் வாழ்ந்து வருகின்றனர். ஆனால், இவர்கள் எல்லாரும் தமிழ் மொழியை மறந்து, பண்பாட்டை இழந்து, சமயத்தைக் கைவிட்டு, தமது பெயரைத் திரிபுற உணர்ந்து வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் மொரீசிய சிலும் பிரஞ்சு ஆட்சிக் காலத்திலேயே இன்றைய அவலநிலை வித்திடப்பட்டிருக்க வேண்டும்.

## இந்திய மொழி வழியினர்

இன்று மொரீசியசு உரிமை பெற்ற நாடு. பல இன மக்கள் கூடிவாழும் நாடு. பிரஞ்சு வழி வந்தவர் (வெள்ளையர்),

ஆப்பிரிக்க இன வழி வந்தவர் (கறுப்பர்), சீன இனவழி வந்தவர், இந்திய இனவழி வந்தவர் என நான்கு பெரும் பிரிவினர் கூடி வாழ்கின்றனர். இந்தியருள், பீகாரிலிருந்து வந்த பீகாரிகள் பெருந்தொகையினராய் வாழ்கின்றனர். அடுத்து இந்திய இசுலாமியர், தமிழர், தெலுங்கர், மராத்தியர், குசராத்தியர் என்னும் பிரிவினர் வாழ்ந்து வருகின்றனர். பீகாரிகள் கரும்புத் தோட்டங்களிலும் வணிகத் துறையிலும் உள்ளனர். இசுலாமியர் வணிகத்துறையில் ஈடுபட்டுள்ளனர். ஒரு காலத்தில் முதன் முதலில் வணிகம் நடத்திக் காட்டிய தமிழர் இன்று வணிகத் துறையில் ஈடுபடாமை ஒரு பெருங் குறையே; இவர்கள் சிற்றேவல்கள் செய்து பிழைக்கும் அளவுக்கு வந்துவிட்டமை வருந்தத்தக்கது.

## தமிழர் எண்ணிக்கை

மொரீசியசு ஒன்பது மாவட்டங்களை உடையது. மிகப் பெரியது. பிளென் வில்லியம்சு; மிகச் சிறியது போர்டு லூயிசு (தலைநகரம்). தமிழர்கள் மிகப்பெரும் அளவில் தலைநகரத்திலும், வடக்கு மாவட்டங்களிலும், தென்கிழக்கு மாவட்டங்களிலும் வசித்து வருகின்றனர். இன்றைய மொரீசியசின் மக்கள் தொகை 911, 499. 1972 ஆம் ஆண்டின் மக்கள் கணக்கெடுப்புப்படி தமிழர் தொகை ஏறத்தாழ 50,000 ஆகும். ஆனால், இது உண்மையான நிலையல்ல. தமிழர் 70,000க்கும் மேற்பட்ட அளவில்தான் உள்ளனர் என்பது அனைவரும் அறிந்த செய்தி. எனினும் தனியார் நிறுவனங்கள் சில தனிப்பட்ட முறையில் கணக்கெடுப்பு எடுக்கத் திட்டமிட்டுள்ளன.

மொரீசியசு தமிழரை மலேசியா, சிங்கப்பூர், ஈழம் நாட்டுத் தமிழரோடு ஒப்பிட முடியாது. இந்நாடுகளில் வாழும் தமிழர் பெருந் தொகையினராயும், மொழிச்சிந்தனை உடையவராயும் இனப்பற்றும் விழிப்புணர்ச்சியும் மிக்கவராயும் வாழ்கின்றனர். நூற்றுக்கணக்கான தனியார் இயக்கங்கள் மொழி, இலக்கிய, சமய, சமுதாயப் பணிகளை ஏற்று நடத்துகின்றன. இந்நாட்டுத் தமிழரோ கூழுக்கும் மீசைக்கும் ஆசையுடைய

ராய் வாழ்கின்றனர். அண்மைக் காலம் வரை 'மதராஸ்' என்றே தம்மை அழைத்து வந்தனர். இன்று அச்சொல் மதிப் பிழந்து விட்டது. தமுள்', 'தமிழன்' என்று பெருமை யோடு கூறிக்கொள்ளும் அளவுக்கு விழிப்புப்பெற்று வருகின் றனர்.

பழந்தமிழ்ப் பெயர்களான சுப்பையா, சந்நியாசி, சங்கிலி போன்ற பெயர்கள் வழக்கில் உள்ளன. அதேபோது, தூய தமிழ்ப் பெயர்களான நம்பி, வெள்ளிவீதி, நக்கீரன், மங்கை யர்க்கரசி, மணிமேகலை, கண்ணகி, மாதவி, சிவகாமி, மீனாட்சி போன்றவையும் வழக்கில் வந்துள்ளன. பிரஞ்சு மொழியின் செல்வாக்கு ஆல விழுது போன்று யாண்டும் ஆதிக் கம் செலுத்தி வருவதால் நல்ல தமிழ்ப் பெயர்கள் திரிந்து வழங்குகின்றன. முத்தையா - முச்சியா, முருகன் - மூகன், திருவேங்கடம்-தீரூவேங்கடும், வீரப்பன்-வீர்லப்பென் போன்று வழங்குவதைக் காணலாம்.

சில சமயச் சடங்குகள் திடுக்கிட வைப்பவை. சில காளி, மாரியம்மன் கோயில்களில் இரத்த பலி இடப்பட்டு வருகின் றன. தைப்பூசக் காவடியே மிகப் பெரிய திருவிழா. இது பொது விடுமுறை நாளும் ஆகும். கொடியேற்றம் தொடங்கி பத்து நாளும் விரதம் இருந்து காவடி எடுப்பதுண்டு. காவடி யோடு, மாவிளக்கு, பால்குடம் எடுப்போரும் உண்டு. பெண் கள் மஞ்சள் ஆடையும், ஆண்கள் காவி நிற ஆடையும் அணிந்து காவடி எடுப்பர். பெண்டிரும் ஆடவரும் வாயில், நாக்கில் அல குகளைக் குத்தியும், ஆடவர் உடம்பெல்லாம் அலகுகளைக் குத்தியும், சிலர் காலில் ஆணி நிறைந்த காலணிகளை அணிந்தும் ஊர்வலமாக நடந்து போவார்கள். வழிநெடுகிலும் முருகக் கடவுள் பாடல்களையும், காவடிப் பாடல்களையும் பாடிக்கொண்டும் 'வேல், வேல்', 'அரோகரா' என்றும் பலவாறாக ஒலித்துக் கொண்டும் செல்வர். காவடிகள் மிக அழ காக மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கும். இக் காவடி விழாவைக் காண பிரான்சு நாட்டிலிருந்து தொலைக்காட்சி

படப்பிடிப்புநர்கள், சுற்றுலா பயணிகள் வருவதுண்டு சித்திரை பௌர்ணமியிலும் காவடி எடுப்பதுண்டு. தமிழர்கள் மிகத் தீவிர முருக பக்தர்களாய் இருந்தும், கந்த சஷ்டி, பங்குனி உத்திரம் போன்ற திருவிழாக்களை உணராது இருக்கின்றனர். இப் போது தலைநகரத்தில் உள்ள ஒரே ஒரு கோயிலில் (அருள்மிகு மீனாட்சி-சொக்கலிங்கம்) மட்டும் இலங்கை அர்ச்சகர் ஒருவர் இருக்கிறார். ஏனைய கோயில்களில் (125) உள்நாட்டுப் பூசாரி களே பூசை முதலியவற்றை நடத்துகின்றனர். இப் பூசாரி களில் பெரும்பாலோர் சமய அறிவோ, சடங்குகளைப் பற்றியோ அறியாதவர்கள். எனினும், இப் பூசாரிகளுக்குச் சமய அறிவு புகட்ட வேண்டும் என்னும் எண்ணம் இப்போது மேலோங்கி வருகிறது.

தைப்பூசக் காவடிக்கு அடுத்து மிகச் சிறப்பாகக் கொண் டாடப்பெறுவது புரட்டாசி விரதம் இதனை இங்கு 'கோவிந் தன்' என்னும் பெயரில் கொண்டாடுகின்றனர். ஆடித் திங் களில் பதினெட்டாம் நாளன்று திருமணம் ஆன மகளிர் தத்தம் தாலிக்கயிற்றைப் புதுப்பித்துக்கொள்ளும் விழாவும் கொண்டா டப்பெறுகிறது. தமிழ்ப் புத்தாண்டினையும் மிக விமரிசையாகக் கொண்டாடுவர்.

இந்நாட்டுத் தமிழரிடம் அண்மைக்காலம் வரை மொழி உணர்ச்சி இல்லாமலே இருந்தது. ஆனால், இப்போது அர சாங்கத்தின் ஆதரவாலும் தனியார் சிலரின் இடைவிடா முயற் சியாலும் தமிழ்மொழி பரவி வருவது மகிழத்தக்க செய்தி. கல்வி அமைச்சின்கீழ் உள்ள தொடக்கப்பள்ளிகளில் முதல் வகுப்புத் தொடங்கி ஆறாம் வகுப்பு முடிய முறையான தமிழ் மொழிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் போதிக்கப்படுகிறது. ஏறத்தாழ 125 ஆசிரியர்கள் இன்று பணிபுகின்றனர். இவ்வா சிரியருள் சிலர் மொழியார்வம் மிக்கவராயும் மொழியில் நல்ல திறமை பெற்றவராயும் விளங்குகின்றனர். இவர்களுக்கு 'மேற் பார்வையாளர்' ஒருவரும் இருக்கிறார். கல்வியமைச்சு நடத்

தும் 'ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி'யில் (Mauritius College of Education) எல்லா ஆசிரியர்களும் பயிற்சி பெறுகின்றனர். 1979 ஆம் ஆண்டுமுதல் குறுகிய ஓராண்டுப்பயிற்சி ஈராண்டுப்பயிற்சி யாக்கப் பெற்றுள்ளது. இப்பயிற்சியில் மொழி, இலக்கியம், முறை, கல்விக் கொள்கை, உளவியல் முதலியவை தமிழிலேயே கற்பிக்கப்பெறுகின்றன. ஆண்டு இறுதித் தேர்வில் தேர்ந்த வர்கள் கல்வி அமைச்சின் பொறுப்பில் வேலைக்கு அமர்த்தப் பெறுகின்றனர். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவரும் இந்நாளில் வேலை பொருட்டு மொழி கற்க முன்வருகின்றனர். பயிற்சிக் கல்லூரியில் தமிழ் கற்று பட்டம்பெற்ற இருவர் பணி புரிந்து வருகின்றனர். தொடக்கப்பள்ளியில் மட்டும் அன்றி, இன்று 'மகாத்மா காந்தி நிறுவனம்' (Mahatma Gandhi Institute) எனப்படும் நிறுவனத்திலும் உயர்நிலையில் தமிழ் கற்பிக்கப் பெறுகிறது. இதுகாறும் முதிர்ந்த அறிவு பெற்ற ஒருவர் இந்நிறுவனத்தில் பணிபுரிந்து வந்துள்ளார். இனி, விரைவில் பட்டம் பெற்ற ஒருவர் நியமிக்கப்பெறவிருக்கிறார்

மகாத்மா காந்தி நிறுவனம் எல்லா இந்திய மொழிகளுக் கும் பண்பாட்டிற்கும் தாயகமாக விளங்குகிறது. இந்நிறுவனம் இந்திய அரசின் ஒத்துழைப்பாலும் உதவியாலும் நிறுவப் பெற்றது. இங்கு இந்திய இசை, நடனம் முதலியவையும் கற் பிக்கப்பெறுகின்றன. இந்நிறுவனம் இந்திய அரசின் உதவி பெற்று இந்திய மொழிகளில் தகுந்த பாடநூல்களை எழுதி வெளியிட ஆவனசெய்து வருகிறது. தமிழ்ப் பாடநூல் வரிசை இப்போது எழுதி முடிக்கப்பெற்று, அச்சேற்றுதற்கு ஆயத்த மாகிவிட்டது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

மொரீசியசு பல்கலைக்கழகம் ஒரு புதிய அடிப்படையில் இயங்கி வருகிறது. இங்கு கலைத் தொடர்பான (B.A. M.A.) படிப்புகளுக்கு இடமில்லை. எல்லாப்படிப்பும் தொழில் தொடர் பான (Technology) படிப்பாகவே உள்ளன. பெரும்பாலும் நாட்டுத் தேவை எங்கு மிகுந்து காணப்படுகிறதோ, அத் தேவைக்கு ஏற்ப பாடம் நடத்தப் பெறுகிறது. தேவை நிரம்பி யதும் அப்படிப்பு நிறுத்தப் பெறுகிறது.

கல்வி தொடர்பான எல்லாப் பொறுப்பினையும் ஏற்று நடத்துவது ‘கல்வி நிறுவனம்’ (Mauritius Institute of Education) இங்கு உயர்நிலைக் கல்விக்குப் பயிற்சியும் அளிக்கப் பெறுகிறது. ஆப்பிரிக்க நாடுகளிலேயே மொரீசியசு கல்வித் தரம் மிக உயர்ந்தது. எழுதப்படிக்கத் தெரியாதார் எண்ணிக்கை மிகக் குறைவு. தொடக்கக் கல்வி முதல் உயர்நிலை இறுதிப் படிப்பு வரை இலவசமாக அரசு பொறுப்பு ஏற்றுக் கொள்கிறது. தனியார் நடத்தும் சில உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களது சம்பளம் அரசு பொறுப்பு ஆகும்.

மொரீசியசு தமிழ்க் கல்வித் தரத்தை மலேசிய, ஈழக் கல்வித் தரத்தோடு ஒப்பிடலாகாது. இங்குள்ள தமிழ்க் கல்வித்தரம் இந்நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ப அமைந்துள்ளது. எனினும், தனியார் சிலரின் பெருமுயற்சியால் மாலை, வார வகுப்புகளின் மூலம் உயர்நிலைக் கல்வி போதிக்கப்பெற்று வருகிறது. நல்லெண்ணமும் ஆர்வமும் ஊக்கமும் உடைய இளைஞர் பெருமக்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தமது ஓய்வு நேரங்களை எல்லாம் மொழிப்பணிக்கே செலவிடுகின்றனர். தனியார் நடத்தும் தேர்வுகள் யாவும் ‘அனைத்து மொரீசியசு தமிழ்த் தேர்வுக் குழு’ (All Mauritius Tamil Examinations Syndicate) பொறுப்பில் நடத்தப்பெறுகிறது. முதல் வகுப்பு தொடங்கி ஆறாம் வகுப்பு முடியவும், முதல் படிவம் தொடங்கி ஐந்தாம் படிவம் முடியவும் தேர்வுகள் நடத்தப்பெறுகின்றன. ‘தமிழ் மணி’ என்னும் மூன்றாண்டு பட்டத்தேர்வு சென்னை மாணவர் மன்றச் சார்பில் நடத்தப்பெறுகிறது. சமயக் கல்வி போதனை பொறுப்பை ‘மொரீசியசு மணிமன்றம்’ ஏற்றுள்ளது. விரைவில் சமயத் தேர்வும், இளஞ்சைவப்புலவர் பட்டமும் பெறுதற்குச் ‘சைவசித்தாந்த சமாசம்’ மூலம் ஏற்பாடு செய்யப்பெற்று வருகிறது.

# 6. சப்பானில்

சப்பானில் உள்ள சென் புத்தமதம் காஞ்சி இளவரசன் புத்தவர்மனால் உருவாக்கப்பட்டதாகச் செய்தி உண்டு.

சப்பான் நாட்டில் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் பௌத்த சமயத்தைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து இந்திய இயல் ஆய்வும் தொடக்கம்பெற்றது. எனவே பௌத்த சமயம், வடமொழி இலக்கியம், சமய தத்துவம் எனுமிவற்றை அறியும் வட இந்தியவியல் ஆய்வாகவே அது அமைந்திருந்தது.

கடந்த இருபதாண்டுகளாகத் தென்னிந்தியவியல் ஆய்வுகளும், சிறப்பாகத் தமிழியல் ஆய்வுகளும் போற்றப்படுகின்றன. வரலாற்று ஆசிரியர்கள் மேற்கொண்ட ஆய்வு, இப்போது தமிழ்ப் பண்பாடு, மொழி இலக்கியம் எனுமிவற்றைக் கண்டறியும் நாட்டமாக வளர்ந்துள்ளது. சப்பானியப் பல்கலைக்கழகத்தின் இந்தியவியல் துறைகள் இவ் ஆய்வுகளுக்கு ஆக்கம் தருகின்றன.

டோக்கியோ பல்கலைக்கழகத்தின் தெற்காசிய வரலாற்றியல் பேராசிரியர் நொபொரு காரசீமா, சோழர் வரலாறு பற்றியும் தமிழ்ப் பண்பாடு பற்றியும் ஆராய்ந்து பல கட்டுரைகள் எழுதியுள்ளார். சப்பானில் தமிழியல் ஆய்வுகளை இவரே அறிமுகப்படுத்தினார் எனலாம். பேராசிரியர் தோரு மாட்சூயி (டோக்கியோ பல்கலைக்கழகம்), பேராசிரியர் சிஞ்சி சிகேமாட்சூ (நகோயா பல்கலைக்கழகம்), பேராசிரியர் ஹருகா

யானசிசவா (யோகமாமா பல்கலைக்கழகம்), திரு. ஹிசாசி (ஆராய்ச்சி மாணவர்) திரு தூகாசா மிசுசீமா (டோக்கியோ பல்கலைக்கழகம்)ஆகியோருடன் இன்னும்சிலரும், தமிழ்நாட்டு சமூக பொருளாதார வரலாறுகள் பற்றிப் பல்வேறு ஆராய்ச்சி களில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் மொழி இலக்கியம் பற்றிய சீரிய ஆய்வு அண்மைக் காலத்தில்தான் வந்துள்ளது. அறிஞர் சிலர் இதில் ஈடுபட்டுள் ளனர். தமிழ்மொழி விரிவாக்கப் பொழிவுகட்குப் பல பல்கலைக் கழகங்களில் வாய்ப்பளிக்கப்பட்டது. டாக்டர் முனியோ டொகுனகா (கியாட்டோ பல்கலைக்கழகம்), டாக்டர் சோக்கி மாட்சு மாட்டோ (டாக்காசகி பல்கலைக்கழகம்), திரு. தக்காசி (டோக்கியோ பல்கலைக்கழகம்) திரு. சூ ஹிக்கோசகா (சென்னைப் பல்கலைக்கழகம்) ஆகியோர் இப்புதிய வாய்ப்பு களைப் பயன் கொண்டுள்ளனர். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ் பயில்வதற்கும் சிலர் முன்வந்துள்ளனர். இவர்களுடைய ஆய்வு நலன்கள் பலன்தரச் சிறிது காலம் ஆகக்கூடும்.

ஆராய்ச்சி, வாணிபம், அரசுப் பணி காரணமாகத் தமிழர் கள் ஓரளவு சப்பானில் வாழ்கிறார்கள். டோக்கியோவில் உள்ள ஆசிய ஆப்பிரிக்க மொழிப் பண்பாட்டு நிறுவனத்தில் தமிழ்க் கல்விக்கு வாய்ப்பு உளது. இங்குத் தமிழ் நூல்களும், தமிழ் மொழி, பண்பாடு பற்றிய பிறமொழி நூல்களும் உள் ளன. டோக்கியோ, கியாட்டோ பல்கலைக்கழகங்களிலும், ஓரியண்டல் லைப்ரரியிலும் தமிழ் நூல் பிரிவு உள்ளது. இலங்கைத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வும் மேற்கொள்ளப் பட்டது.

ஆசிய ஆப்பிரிக்க மொழிப் பண்பாட்டு நிறுவனம், பேரா சிரியர் மண்டாரோ ஹாசிமாடோ மேற்பார்வையில் கம்ப் யூட்டர் உதவியுடன் தமிழ் - சப்பானிய அகராதியினைத் தொகுக்கும் பணியில் முனைந்துள்ளது.

அண்மையில், சப்பானிய மொழிக்கும் செந்தமிழ் மொழிக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதற்கான ஆதாரங்கள் பற்றிய செய்தியொன்று எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்ததைத் தொடர்ந்து, ஒரே நாளில், ‘தமிழ்’ எனும் சொல் சப்பான் நாடெங்கும் பரவிவிட்டது

இரு மொழிகட்கும் பொதுவாக 300க்கும் மேற்பட்ட சொற்கள் இருப்பதாகவும், 500 சொற்கள் ஒரே பொருள் தருவதாக இரு மொழிகளிலும் இய்ங்கி வருகின்றன என்றும் சப்பானிய மொழியியல் அறிஞர் சு. சுமு ஓனோ சொல்லி வருகிறார்

தென்னாட்டுத் திராவிட மொழியிலிருந்து சப்பான் மொழி தோன்றியதென்று புங்கி உத்தமர் கூறுகின்றார்

- உலோ கோபசாரி

# 7. கீழ்திசைப் பிறநாடுகளில்

## சீனா

பௌத்த சமய வழியால் இந்தியாவோடும், கடல் வாணி பத்தால் தென்னிந்தியாவோடும், தாவோயிசம் முதலிய ஞான நெறியால் தமிழகத்தோடும் தொன்மைத் தொடர்புடைய சீனாவில் தமிழியல் உறவுகள் மலர்ந்துள்ளன.

ஏறக்குறைய 17 ஆண்டுகளாகத் தமிழ் ஒலிபரப்பி வரும் பீகிங் வானொலி இப்போது தமிழிலக்கிய ஆய்வுக்குழு ஒன்றை அமைத்துள்ளது. இந்த ஆய்வுக்குழுவின் உறுப்பினர் கள் சீனப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றுப் பட்டம் பெற்றவர்கள். நெடிது காலமாகத் தமிழ் ஒலி பரப்பாளராகப் பணிபுரிந்து வரும் சுங்கோஷியான் இதன் பொறுப்பாளராக உள்ளார். இவர் இலங்கை வித்தியாலங் காரப் பல்கலைக்கழகத்தில் இரண்டாண்டுகள் தமிழ் பயின் றார். பண்டைத்தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து அவை பற்றிச் சீன மக்களுக்கு எடுத்துக்கூறுவதை நோக்கமாகக் கொண்டது. தமிழிலக்கிய ஆய்வுக்குழு, இந்தக் குழுவினர் தமிழ் இலக்கிய வரலாறு, திருக்குறள், சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம், பாரதியார் கவிதைகள் முதலியன பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். கல்கி, மு.வ., அகிலன், ஜெய காந்தன், நா. பார்த்தசாரதி, தி. ஜானகிராமன், செ. கணேச லிங்கம் முதலிய இந்திய, இலங்கைத் தமிழ் எழுத்தாளர் களின் படைப்புக்களைச் சீன மொழியாக்கம் செய்ய முனைந் துள்ளார்கள். தமிழ் இலக்கிய ஆராய்ச்சிப் பணிக்குத் தேவைப்

படும் நூல்களைத் தந்துதவுமாறு பீகிங் வானொலித் தமிழ் ஆய்வுக்குழு கேட்டுள்ளது. இத் தமிழ் ஒலிபரப்புப் பிரிவில், இலங்கை வீ. சின்னத்தம்பி பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்.

## பர்மா

இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரு பகுதியாயிருந்த பர்மா, பன்னெடுங்காலமாகத் தமிழ்ப் பண்பாட்டொடு தொடர்புடையது. இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் இங்கே வாழ்கிறார்கள். 50க்கும் மேற்பட்ட பள்ளிகள் தமிழ் மொழியிலேயே கற்பிக்கின்றன. 'ரசிக ரஞ்சனி', 'தொண்டன்' எனும் தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவந்தன. ரெங்கூனில் பல தமிழ்ப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. பல ஊர்களில் தமிழ்ப் புத்தகக் கடைகள் உள்ளன. கல்லூரி அளவில், ரெங்கூன் தாகூர்க் கல்லூரியில் தமிழ் பயில வாய்ப்புண்டு. பர்மாப் பகுதிகளில் 40க்கும் மேற்பட்ட இந்துக் கோயில்களும் சில தமிழ்க் கத்தோலிக்க ஆலயங்களும் உள்ளன. நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் 32 ஊர்களில் தண்டாயுதபாணி கோயிலைப் பராமரிக்கிறார்கள். அரசியல் மாற்றங்கள் காரணமாகத் தமிழ் மொழி வளர இங்கு போதிய ஆக்கமில்லை.

## பிஜி

பீஜித் தீவுகளில் வாழும் தென்னிந்தியர்களில் தமிழர்கள் கணிசமான அளவு உள்ளனர். 1926இல் தென்னிந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம், தமிழிலக்கியம், தமிழ்க் கல்வி, பண்பாடு ஆகியவற்றின் ஆக்கத்திற்காக இங்கு அமைக்கப்பட்டது. அச்சங்கத்தின் கொடியில் ஓம், சிலுவை, பிறை அடையாளங்கள் இடம்பெற்றன. சங்கம், தொடக்கப் பள்ளிகளை நடத்தித் தமிழ் கற்பிக்கிறது. நல்ல நூலகமொன்றை வைத்துள்ளது. இங்குள்ள இராமகிருட்டிண மடத்தின் சார்பில் தமிழ் மாத இதழ் ஒன்றும் நடத்தப்பட்டது.

இங்குள்ள தமிழர்கள் ஆசிரியர்களாகவும், மருத்துவர் களாகவும், தொழில் நுணுக்கத் தொழிலாளர்களாகவும் உள்ள னர். தமிழ் கற்பிக்கத்தக்க ஆசிரியரை அனுப்புதற்குத் தமிழக அரசு முன்வந்தது. தமிழிசை, நடனம் முதலிய கலைகள் இங்கு நல்ல வரவேற்பைப் பெறுகின்றன. தைப்பூசம், பங்குனி உத்திரம், ஆண்டுப்பிறப்பு, கார்த்திகை விளக்கு முதலிய திரு நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. நாற்பது கோயில்களில் தீ மிதிப்பு ஆண்டுதோறும் நடக்கிறது; தெருக் கூத்துக்கள் தமிழ் மரபு தழுவி நடத்தப்படுகின்றன.

## கம்போடியா

பழங்காலத்தில் தென் கம்போடியாவும் தென் வியட்நா மும் இந்தோனேசியாவும் தென்னிந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு பூண்டிருந்தன. இந்திய இளவரசன் ஒருவன் கம் போடியாவில் ஒரு அரச வரிசையையே ஏற்படுத்தி வைத்தான். அவ்வரசர்களின் முடிசூட்டு விழாக்களில் தமிழ் ஓதப்பட்டது. மிகப் பிற்காலத்தில், இந்த நாடுகள் சீனப் பண்பாட்டை ஏற்க வேண்டியதாயிற்று. எனினும் பழந்தமிழ் உறவுக்கான சுவடு கள், அங்குள்ள ஆலயங்களிலும் அரண்மனைச் சிதைவுகளி லும் அன்றாட வாழ்க்கைப் போக்கிலும் பதிந்தேயுள்ளன.

## தாய்லாந்து

சயாம் நாட்டில், சோழப் பேரரசின் செல்வாக்கு ஓங்கி நின்றதற்கான வரலாறு உண்டு. மன்னர்களின் முடிசூட்டு விழாவில் தமிழ்ப் பாடல்களைப் பாடும் வழக்கம் இங்கும் உண்டு. தை மாதத்தில் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் பாடப்படுகின்றன. மணிமேகலைத் தெய்வ வழி பாடு பரவியிருந்தது. இங்குள்ள மாரியம்மன் கோயில் சர்வ சமயக் கோயிலாக விளங்குகிறது. மந்திரங்கள் தமிழிலேயே சொல்லப்படுகின்றன. அறுவடைத் திருநாள் (பொங்கல்) தீப விழா (கார்த்திகைத் தீபம்) என்பன தமிழ்ச் சாயலொடு நடத்தப்படுகின்றன.

வட, தென் கொரிய நாடுகளில் வழங்கும் மொழிகளோடு தமிழ் மொழிக்குள்ள ஒற்றுமைகள் பற்றிய ஒப்பியல் ஆய்வுக்கும், ஆஸ்திரேலிய, நியூஜிலாந்துப் பல்கலைக்கழகங்களில் தென்னிந்தியப் பண்பாட்டியல் பற்றிய ஆய்வுக்கும் வழி பிறந்துள்ளது. ஆஸ்திரேலிய மாணவர்கள் அருந்தமிழ் கற்கத் தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்கட்கு வர விழைந்துள்ளனர்.

தமிழ், நிறைந்து தெளிந்து ஒழுங்காயமைந்துள்ள
மொழிகளுள் மிகவும் சிறந்த ஒன்று

- டாக்டர் ஜி.யு. போப்

# 8. சோவியத் யூனியனில்

ருசிய மக்கள் 14 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தே இந்தியாவைப் பற்றி அறிவதில் ஈடுபாடு கொண்டிருந்ததை நிகிதின் என்பாரின் கடற் பயண நூல்கள் குறித்துள்ளன. இவர் குதிரைகளை விற்பதற்காகத் தென்னிந்தியாவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் தங்கிப் பல இடங்களுக்குச் சென்றுள்ளார். அவருடைய பயண நூலில், பணம், சந்தால் (சந்தனம்), குருந்தம், இஞ்சி முதலிய தமிழ்ச் சொற்கள் பல இடம்பெற்றுள்ளன. 18ஆம் நூற்றாண்டில் பேயர் (Bayer) என்பவர், தமிழ் மொழியொடு, பிற இந்திய மொழிகளையும் கற்றார். லெபதேவ் (Le be deff) என்பவர் சென்னைக்கு வந்து இங்கேயே தங்கித் தமிழைக் கற்றறிந்தார். மாஸ்கோ பல்கலைக்கழகப் பேராசிரியராயிருந்த புலீச் (Bulich) கொடுந்தமிழ் பற்றிப் பல கட்டுரைகள் எழுதிப்பரப்பினார். அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் இந்தியக் கலை மரபுகளில் பரவலான ஆர்வம் வளர்ந்தது. லெனின் கிராடில் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகத் தமிழ் ஒரு சிறப்புப் பாடமாகப் பயிலப்பட்டு வந்தது. இங்கே ஐந்தாண்டுகள் தமிழ் பயிலும் மாணவர்கள் பாரதியின் பாடலை மனப்பாடமாகச் சொல்வார்களாம். 1929இல் பேச்சுத் தமிழ் அகராதி ஒன்று ருசிய மொழியில் மெர்வர்த் என்பவரால் வெளிடப்பட்டது. ஆண்ட்ரோனோவ் தமிழியல் ஆய்வுகளில் ஈடுபாடு கொண்டு, சென்னைப் பல்கலைக்கழகத்தில் பயின்று பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

---

எழுதியவர் சு. குழந்தைநாதன்

1965இல் ருசிய-தமிழ் அகராதி (23000 சொற்கள்) வெளி வந்தது. இதனைத் தமிழக அறிஞர்கள் மேற்பார்வையிட்டுத் தந்தனர். பின்னர் ருசிய மொழி இலக்கணம் பற்றித் தமிழிலும் தமிழ் மொழி இலக்கியம் பற்றி ருசிய மொழியிலும் நூற்கள் வந்தன. செம்பியன் ரூதின் சிறந்த தமிழறிஞராக விளங்கிய தோடு, சிறந்த பல நூல்களையும் எழுதினார். லெனின் கிராட் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பேற் றார். தமிழ் மொழிக்கு ஆற்றிய சிறந்த பணிக்காகத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் பாராட்டிப் பதக்கம் அளிக்கப்பெற் றார். 1962இல் கிளாசோவ் (கண்ணன்) என்பவர் டாக்டர் பட்டத்திற்குத் திருக்குறளை ஆராய்ந்தார். இவர் ருசிய மொழி யில் திருக்குறளை மொழிபெயர்த்தார். மாஸ்கோவில் பணி யாற்றச் சென்ற தமிழறிஞர்கள், மொழிபெயர்ப்புத் துறையில் நாட்டம் செலுத்தி ஏராளமான ருசிய நூல்களைத் தமிழாக்கித் தந்தனர். 1959இல் சிறந்த தமிழ்ச் சிறுகதைகளும் புதினங் களும் ருசிய மொழியில் பெயர்த்து வெளியிடப்பட்டன. புதுமைப்பித்தன், கல்கி, ஜெயகாந்தன் முதலியோரின் நூல் களும், பாரதியாரின் பாடல்களும் பெரிதும் போற்றப்படுகின் றன. சிலப்பதிகாரம், முக்கூடற்பள்ளு, குற்றாலக் குறவஞ்சி, பழமொழிகள் என்பன ருசிய மொழியில் வந்துள்ளன. இப்ராகி மோவ் என்பவர் செய்யுள் வடிவிலேயே குறளை ருசிய மொழி யில் ஆக்கியுள்ளார். மாஸ்கோ வானொலியில் தமிழ் ஒலிபரப் புக்குச் சிறப்பிடம் தரப்படுகிறது.

இப்போது மாஸ்கோவிலும் லெனின் கிராடிலும் திராவிட மொழியியல் துறை ஆராய்ச்சி நடத்தப்படுகிறது. மாஸ்கோ, லெனின் கிராட் பல்கலைக்கழகங்களிலும், சர்வதேச உறவுக் கழகத்திலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகம் நூற்றுக்கணக்கான தமிழ் நூல்களை வெளியிட்டு வருகிறது.

# 9. செனகாலில்

செனகால் நாடு, மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு சிறு நாடு. பிரஞ்சு பேசப்பெறும் ஆப்பிரிக்க நாடுகளுள் இந் நாடு தலைமை வாய்ந்தது. 201,000 ச.கி. மீட்டர் பரப்பளவு உடைய இந்நாட்டில் 55 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். இவர்களுள் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் அயல் நாட்டினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கோர், பிரஞ்சுக்காரரும் லெபனான் நாட்டினரும் ஆவர்.

இந்நாடு 1960 ஏப்பிரல் 4 இல், பிரான்சிடமிருந்து தன்னாட்சி உரிமை பெற்றுத் தழைக்கத் தொடங்கியது நாட்டு விடுதலைக்கெனப் பிரஞ்சுப் பேராசிரியர்ப் பொறுப்பினின்று விலகி உழைத்து வெற்றிபெற்ற லியோபோல்டு செதார் செங்கோர் என்ற அறிஞர் முறையான தேர்தல் வழி, முதல் குடியரசு. அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். தொடர்ந்து நடந்த நான்கு தேர்தல்களிலும் வெற்றி பெற்று இவரே இன்றும் தொடர்ந்து நாட்டின் அதிபராக இயங்கி வருகிறார்.

அதிபராக இன்று விளங்கும் செங்கோர், மிகப் புகழ்பெற்ற பிரஞ்சுப் பாவலர்; பிரஞ்சு மொழி இலக்கணத்தில், 'அக்ரிசே' எனப்படும் பிரஞ்சுப் பல்கலைக்கழக மிகு உயர் தகுதி பெற்றவர். இவர்தம் ஆர்வமே செனகாலில் தமிழ்க் கல்வியும் ஆராய்ச்சியும் இடம்பெற அடிப்படையாகும். அவர், தம் ஆர்வத்தால், செனகால் நாட்டுத் தலைநகரான டக்காரில் புகழ் பெற்ற அரசுக் கல்லூரி ஒன்றில் இணை முதல்வராகப் பணி

எழுதியவர் தாயம்மாள் அறவாணன்

யாற்றிக் கொண்டிருந்த சேக் திதியான் ஞ்யாய் என்பவரைத் தமிழ்-ஒலாப் (ஆப்பிரிக்க மொழி ஒப்பாய்வில் பிஎச். டி. க்கென அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தார். அவர்தம் வேண்டுகோளுக்கிணங்க, இந்திய அரசு சமஸ்கிரு தமும், மொழியியலும் பயின்ற உ. பி. உபாத்தியாயா என்ற கன்னட நாட்டுப் பேராசிரியரை ICCR வழி, செனகாலுக்கு 1973இல் அனுப்பி வைத்தது. இத்துறையில் தொடர்ந்து இவர், ஆய்வு நிகழ்த்தி வருகின்றார். அண்ணாமலைப் பல் கலைக்கழகத்தில் தம் ஆய்வை முடித்து டாக்டர் பட்டம் பெற்றுத் திரும்பிய, சேக் திதியான் ஞ்யாய தற்போது டக்கார் திரும்பி, ஆப்பிரிக்க அடிப்படை ஆய்வக மொழியியல் துறை யில் ஆய்வாளராகப் பணியாற்றி வருகிறார்.

1974 மே திங்களில், அதிபர் செங்கோர் இந்தியாவிற்கு வருகை தந்தார். குறிப்பாக, தமிழ் நாட்டின் தலைநகராகிய சென்னைக்கு வருகை அளித்தார். திராவிட மொழிக் கல்வி மீதும், திராவிடப் பண்பாட்டின் மீது தமக்குள்ள ஆர்வத்தை 1974 மே 23இல் சென்னை இராசாசி மண்டபத்தில் நிகழ்ந்த வரவேற்புரையில் எடுத்துரைத்தார். தமிழகம்வாழ் தமிழறிஞர் களைக் கிண்டி ஆளுநர் மாளிகையில் கூட்டிவைத்துக் கலந் துரையாடினார்.

இதன்பின், 1975இல் அதிபர்தம் நேர் அழைப்பு சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த டாக்டர் க.ப. அறவாணனுக்கு அனுப்பப்பட் டது. இவ்வழைப்பிற்கிணங்க 1977 சனவரியில் டாக்டர் க. ப. அறவாணன், தக்கார் பல்கலைக்கழக இணைவான ஆப் பிரிக்க அடிப்படை ஆய்வகத்தில் இணைந்தார். திராவிட ஆப் பிரிக்கரிடையே பண்பாட்டுப் பழக்க வழக்க ஒற்றுமைகளை ஆராய்ந்து வருகிறார் இவர். இத்துறையில் இவர்தம் அண்மை (1980) நூல் வெளியீடு 'Anthropological Studies on the Dravido-Africans' என்பதாகும்.

அதிபர் செங்கோர்தம் ஆர்வத்தின் தொடர் விளைவாக, 1979 ஆம் கல்வியாண்டில், தமிழ் தக்கார் பல்கலைக் கழகத்தில், இரண்டாவது மொழிகளுள் ஒன்றாக அறிமுகப்படுத்தப் பட்டது. ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள ஐம்பத்து மூன்று நாடுகளில், செனகால் ஒன்றே முதன் முதலாகத் தமிழைப் பல்கலைக்கழக அளவில் அறிமுகப்படுத்தியுள்ளது. அன்றியும் பிரஞ்சு பேசப்பெறும் உலக நாடுகளிலேயே செனகால்தான் முதன் முதலாகத் தமிழைப் பல்கலைக்கழகத்தில் ஏற்றிப் போற்றியுள்ளது இன்னும் குறிப்பிடத்தக்கது. தமிழர் தொகை யாக இல்லாத செனகால் நாட்டில், ஆர்வம் ஒன்று கருதியே தமிழ் அரியணை ஏற்றப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிற்றும் இணைப்பேரா சிரியராக டாக்டர் தாயம்மாள் அறவாணன் அமர்த்தப்பெற் றுள்ளார்.

பயிலும் மாணாக்கர் அனைவரும் ஆப்பிரிக்கரே, பிரஞ்சு மொழி வழியாக பல்கலைக்கழக அளவில் தமிழ் இங்குதான் அயல் நாட்டார்க்குப் பயிற்றுவிக்கப்படுகிறது என்பது சிறப் பாகக் குறிப்பிடத்தக்கது.

---

தமிழ் உலகிலுள்ள பண்பட்ட மொழிகளுள் ஒன்று; உயர் தனிச் செம்மொழி எனும் சிறப்பும் இன்றும் பேச்சு மொழியாக வழங்கும் பெருமையும் உடையது

கபில் சுவலபில்

# 10. பிரான்சில்

பன்னெடுங்காலமாக இந்தியாவுக்கு வந்து சென்ற பயணிகள், சமயபோதகர்கள், அறிவியலார்வலர்கள், அறிஞர்கள் எழுதிவைத்த குறிப்புக்களிலிருந்து இந்து சமயம் பற்றிப் பொதுவாகவும், தென்னகம் பற்றிச் சிறப்பாகவும் அறிய வேண்டுமென்ற ஆர்வம் 18ஆம் நூற்றாண்டிலிருந்தே பிரான்சில் வலுப்பெறத் தொடங்கிற்று.

இந்தியாவுக்கு வந்த கிறித்தவ சமய போதகர்கள் குறிப்பாக இயேசு சபையினர் கி. பி. 1542 இலிருந்து 1773 ஆம் ஆண்டிற்குள் எழுதிய நிருபங்கள் ஏராளமாகத் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன (புனித சவேரியார் காலத்துக் கடிதங்கள் (1538-1552) மட்டும் இதில் 6000க்கு மேற்பட்டவை.) இவற்றுள் சில மட்டுமே பதிப்பிக்கப்பட்டன. இக்கடிதங்களை ஆதாரமாகக் கொண்டு, சுவாமி காஸ்டெட் எழுதிய 'தென்னிந்திய வரலாற்றுக் குறிப்புக்கள்', ஆர். சத்தியநாதர் எழுதிய '17 ஆம் நூற்றாண்டுத் தமிழகம்' என்பன வெளிவந்தாலும், அவை அக்கடிதங்களில் உள்ள செய்திச் செல்வங்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு விட்டதாகச் சொல்லமுடியாது. சுவாமி பெர்ட்ரண்ட் என்பவர் 1838-1860 ஆம் ஆண்டுகட்கு இடைப்பட்ட மதுரை மிஷன் செய்திகளை இரு பெரிய தொகுதிகளாக வெளியிட்டமைகூட ஓரளவு விவரங்களாகவே தருகின்றன. பாரிஸ் மாநகரத்தில் இயேசுசபைப் பழஞ்சுவடிச் சாலையில் தொகுத்துப் பேணப் பெறும் ஆவணங்களை

---

எழுதியவர் எப். குரோ, (தமிழாக்கம் சு. குழந்தைநாதன்)

ஆராய்ந்தறிய சுவாமி விக்கி என்பார் மேற்கொண்ட முயற்சிகள் தொடரவேண்டும். தத்துவபோதகர், வீரமாமுனிவர் போலத் தமிழிலும் இந்து சமய சாத்திரங்களிலும் புலமைமிக்க படைப்புக்களை பிரஞ்சு எழுத்தாளர்கள் உருவாக்கித் தரா விட்டாலும், அவர்கள் எழுதிய குறிப்புக்கள் தமிழகத்தின் பொதுவான வாழ்க்கை முறைகளைப் படம்பிடித்துக் காட்டி யுள்ளன. எனவே அந்த அளவுக்கு அவை பயனுடையன என லாம்.

1699-1720ஆம் ஆண்டுகளில் புதுச்சேரிப் பகுதியில் சமயப் பணி பற்றிய ஜீன்ஜாக்கஸ் டெஸ்ஸியர் எழுதி வைத்தவை யும், தாமஸ் டி பாயிட்டியர் என்பவர் மலபார்ப் பகுதியிலும் தமிழகத்திலும் நிலவிய வழிபாடுகள் பற்றி எழுதிவைத்த குறிப்புக்களும் பிற்கால ஆராய்ச்சிக்கு உதவியுள்ளன. கீழ்த் திசை இந்திய வரலாறு (அப்பே கயான்) 1778இல் பதிப்பிக்கப் பட்டது. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தமிழ்ப் பண்பாடு, வாழ்வியல் பற்றிய பல கட்டுரைகள் வெளிவர ஆரம்பித்தன.

1761 இல் திருக்குறளின் பிரஞ்சு மொழியாக்கம் வந்து விட்டது. ஜீகன் பால்குவின் பணிகளின் விளைவாக, குறள், நாலடியார், நீதிவெண்பா என்பனவற்றில் சில பகுதிகள் மொழிபெயர்க்கப்பட்டு (1783) விரிவுரைக் குறிப்புக்களோடு வெளியிடப்பட்டன.

தரங்கம்பாடியில் டேனிஷ் மிஷனை நிறுவிய சீகன் பால் குவும் அவரதுகரியன. சகாக்களும் ஆற்றியுள்ள பணிகள் அள விடற் 1700 இலிருந்து டேனிஷ் மிஷினிலிருந்து எழுதப்பட்ட கடிதத் தொகுதிகள் (4 தொகுதிகள் ஒவ்வொன்றும் 1000 பக் கங்கள்) தமிழ்நாடு பற்றிய பல செய்திகளடங்கிய களஞ்சியங் களாகக் கருதப்படுகின்றன.

தமிழ்ப் பாகவதம், 1788இல் பிரஞ்சு மொழியில் வந்தது. பிரஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் மொழிபெயர்ப்பாளராக விளங்கிய மரியதாஸ் பிள்ளை இதனை எழுதி அனுப்பினார். 1736 வரை 18ஆம் நூற்றாண்டு முழுவதும் இவ்வாறு தென்

னிந்தியாவின் பிரஞ்சுப் பகுதியிலிருந்து எழுதி அனுப்பப் பெற்ற குறிப்புக்கள் இன்றும் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆராய்ந்து பல உண்மைகளை அறியலாம்.

1867இல் தமிழ்ச் செய்யுட்களிலிருந்து திரட்டிய மொழி பெயர்ப்பொன்று வெளிவந்தது. காரைக்காலில் நீதிபதி யாகப் பணிபுரிந்த ஆடம் என்பவர், 1880இல் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி முதலியவற்றை மொழிபெயர்த்தார்.

புதுச்சேரிப் பகுதியில் பணிபுரிந்த நீதிபதிகள், மருத்துவர் கள், அரசதிகாரிகள் ஆகியோர் தமிழிலக்கியத்திலும் பண்பாட் டாய்விலும் தொடர்ந்து பேரார்வம் காட்டிப் பல கட்டுரை களை எழுதிவந்தனர் இந்திய வரலாறு, இந்துச் சட்டவியல் முதலியவை பற்றிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. திரு. லெம் பசாத் காரைக்காலம்மையார் பற்றி எழுதினார். காரைக்கா லம்மையார் பாடல்களை லியோன் செயின்ட் ஜீன் 'கார வேலன்' எனும் புனைபெயரில் மொழிபெயர்த்தார். 1956 இலிருந்து புதுச்சேரியில் உள்ள பிரஞ்சுமொழி நிறுவனம் பல நூல்களை வெளியிட முற்பட்டது.

ஞானதியாகு எனும் பிரஞ்சு நீதிபதி (காரைக்கால்), குறள், கம்பராமாயணப் பகுதிகளையும் நீதி இலக்கியங்களை யும் மொழிபெயர்த்தார். ஏரியல், ஜுலியன் வின்சன், துப் ரேல் எனும் அறிஞர்கள் ஆற்றிய பணிகள் குறிப்பிடற்குரியன. ஏரியல் என்பார், குறட்பகுதிகளையும் திருக்கோவையாரை யும் பிரஞ்சு மொழியில் கொணர்ந்தார். தம் வாழ்நாள் முழுதும் திராவிட மொழியியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அரிய குறிப்புக்களையும் சுவடிகளையும் தொகுத்து வைத்துள்ளார். இவையெல்லாம் இப்போதைய ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன.

பாரிசில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய ஜுலியன் வின்சன் ஏராளமான தமிழ் நூல்களைத் தொகுத்துப் பட்டிய லிட்டுத் தந்தார். தமிழ் இலக்கணம் பற்றி எழுதியதோடு,

ஆனந்தரங்கம் பிள்ளையின் தினப்படி சேதிக்குறிப்பையும் தமிழிலிருந்து மொழி பெயர்த்தார் (1894). தமிழில் இசுலாமிய இலக்கியம், கல்வெட்டியல், தொல்பொருளியல் முதலியன போர்த்துக்கீசிய அகராதி ஒன்றினை முதன்முதலில் தேடி வெளியிட்டார்.

துப்ரேல், புதுச்சேரியில் உள்ள பிரஞ்சுக் கல்லூரியில் பணியாற்றியபோது, தென்னகமெங்கும் சுற்றித் தொல் பொருளியல், கல்வெட்டியல், கட்டிடக்கலையியல் என்பன பற்றி ஆய்வு செய்து அரிய செய்திகளைத் திரட்டியுள்ளார். சோழர்காலக் கோயில்களைப் பற்றிய நான்கு தொகுதிகள் (எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்)பயனுள்ள கருவூலங்கள் ஆகும். புதுச்சேரியை 'வேதபுரியா'க் கொண்டு அவர் திரட்டியுள்ள குறிப்புக்கள், புதுச்சேரி வரலாற்று நிறுவனத்தால் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன.

1954 இல் இந்தியவியல் பற்றி பிரஞ்சு நிறுவனம் புதுச் சேரியில் அமைக்கப்பட்டது. ஜுல்ஸ் புனோச், திராவிட மொழியியல் ஆர்வமுடைய ஆராய்ச்சியாளராக விளங்குகிறார் புதுச்சேரி நிறுவனத்தை அமைத்த பேராசிரியர் பிலியோசா மருத்துவ இயல் முதல் கலையியல் வரை பல துறைகளில் வல்லுநராகத் திகழ்கிறார். திராவிட மொழி ஒப்பிலக்கணம் செய்ததோடு, தமிழ்ப் பண்பாட்டையும் கலைத்துறையையும் உலகக் கண்ணோட்டத்தோடு ஆய்ந்துள்ளார். சீன, திபேத்திய மருத்துவ முறைகளோடு தமிழ்த் தொன்மை மருத்துவமுறை களை ஒப்பிட்டுச் சொல்லியுள்ளனார். திருப்பாவை, திருமுரு காற்றுப்படை முதலியவற்றை மொழிபெயர்த்திருப்பதோடு, தமிழ்ப்பண்பின் தனிச்சிறப்பையும், தென்கிழக்கு ஆசியாவில் அது பெற்றிருந்த செல்வாக்கையும் விளக்கி எழுதி, இந்துக் கலாச்சாரப் பரப்பில் தமிழர்கள் ஆற்றிய பணியினைப் போற்றி யுள்ளார்.

லூயிமோஸ்ட், மாடலின் பியார்டோ முதலிய மானிட வியலாய்வினர்,திராவிடப் பண்பாட்டுச் செல்வங்களைக் கண்ட

றிந்து எழுதியுள்ளனர். தென்னாட்டுச் செப்புப் படிமங்கள் பற்றி ரீத்தா ரெயினரும், ஆயுர்வேத மருத்துவம் பற்றி ஜீம்மெர் மான், ஹெலனா ஸ்டோர்க் ஆகியோரும் ஆய்ந்துள்ளனர்.

இந்தியவியல் பற்றிய பிரஞ்சு ஆராய்ச்சி நிறுவனம் 1954 இல் புதுச்சேரி இணைப்பிற்குப்பின் அமைக்கப்பட்டு, அரிய பணிகளைச் செய்து வருகிறது. கடந்த 25 ஆண்டு களாக, கீழ்த்திசைக் கலை, வரலாறு, பண்பாட்டியல் ஆய்வு களைத் தொடர்ந்து மேற்கொண்டு, தமிழ் நாட்டெல்லையையும் கடந்து புகழ் பரப்பி வருகிறது.

தமிழ்ப் பண்பாடு, இலக்கியம், வரலாறு எனுமிவற்றை ஆராய்வது இந்நிறுவனத்தின் பல்வேறு வேலைத் திட்டங் களில் ஒரு பகுதியே ஆயினும், அத்துறைகளில், உலகக் கண் ணோட்டத்தை உருவாக்கித் தந்திருப்பது நினைவிற் கொள்ளு தற்குரியது. சைவ ஆகமங்கள், மகாபாஷ்யங்கள், இந்தியத் தத்துவங்கள், மத்துவாச்சாரியாரின் தத்துவங்கள், மருத்துவ முறைகள் - பற்றியெல்லாம் ஒப்பீட்டாராய்ச்சி செய்யப்பட் டுள்ளன.

தொல்பொருளாய்வுத் துறையில் பெரும்பணி நடந்திருக் கிறது. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட புகைப்படங்கள் எடுத்து ஆராயப்படுகின்றன. உத்தரமேரூர் வரலாற்றுச் சாசனங்கள் (பேராசிரியர் குரோ, ஆர். நாகசாமி), பல்லவர் காலக் கோயில் அமைப்பு (டுமார்க்கே, ஹெர்னால்ட்) என்பன அரிய படைப் புக்கள். தாராசுரம், கங்கை கொண்ட சோழபுரம், கீழையூர், நார்த்தாமலை பற்றிய நூல்கள் வர இருக்கின்றன. டாஜென்ஸ் என்பாரும், திருமதி புரூனரும் தமிழக ஆகம வழிபாட்டு நெறி கள் பற்றி ஆய்வு செய்துள்ளனர்.

காரைக்காலம்மையார் பாடல்களைப் பிரஞ்சு மொழியாக் கம் செய்தது இந்நிறுவனத்தின் முதல் தமிழ்ப் பணியாகும் (1956). பின்னர், பேராசிரியர் குரோ பரிபாடலையும், பேராசி ரியர் பிலியோசா திருப்பாவை, திருமுருகாற்றுப்படை முதலி யவற்றையும் மொழிபெயர்த்தனர். நாலாயிரப் பிரபந்தமும், தேவாரமும் மொழிபெயர்க்கப்படுகின்றன.

சோழர் காலத் தமிழ் இலக்கியங்கள் மொழி பெயர்த்து ஆராய்ச்சி செய்யப்படுவது ஒருபுறமிருக்க, தமிழ்ச் சொற் களஞ்சிய ஆக்கமும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. திரு. கந்த சாமிபிள்ளை, எஸ். கோபாலய்யர் ஆகியோர் இதில் ஈடுபட்டுள்ளனர்.

1977இல் சோர்போன் பல்கலைக்கழகத்தில் தென்னிந்திய மொழியியல் ஆய்வுக்கான தனிப் பேராசிரியத் துறையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்குத் தமிழைக் கற்பிக்கத் தக்க வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் குரோ இங்குப் பணியாற்றுகிறார். பாரிஸ் பல்கலைக்கழகத்தில் திராவிட இயல் பற்றிய ஆய்வுகள் நடக்கின்றன. திரு. எம். என். காசி இங்கு தமிழ் கற்பிக்கிறார். திரு. யாகப்பன் (முதல் மூன்று ஆழ்வார்கள்), திரு. சுப்பிரமணியன் (முருகன் ஆலயங்கள்), திரு. முருகய்யன் (புதுச்சேரியில் இருமொழியியல்) திரு. காசி (அருணகிரிநாதர்) ஆகியோரின் அறிஞர் பட்ட ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன. செல்வி எலிசபெத் பார்னோ (மதுரை) திரு. தாராபோட் (திருவனந்தபுரம்) ஆகியோர் தென்னிந்தியாவில் கள ஆய்வு செய்கின்றனர்.

இக்காலத் தமிழ் இலக்கியங்கள் பற்றியும் பிரஞ்சு மொழியில் புத்தாக்கங்கள் வந்துள்ளன. சுப்பிரமணிய பாரதியார் பாடல்களைக் காரவேலன் மொழிபெயர்த்தார். பாரதிதாசனின் 'கடல்மேற் குமிழி'களை காஸ்கா மொழி பெயர்த்தார். புதுமைப் பித்தன், கி. வா. ஜ., ஜானகிராமன், ஜெயகாந்தன் நூல்களொடு புதுக்கவிதைகளும் பிரஞ்சு மொழியாக்கம் பெற்றுள்ளன. இக்காலத் தமிழ்க் கவிதைத் தொகுப்பினைத் திரு. ஸ்ரீராம் என்பவர் பிரஞ்சில் மொழிபெயர்த்து வருகிறார். அதுபோலப் பிரஞ்சு இலக்கியங்கள், நாடகங்கள் என்பனவும் தமிழில் வரத்தொடங்கியுள்ளன. ரியூனியன் தீவில் வாழும் தமிழினத்தவர், மோரிசுத் தீவில் வாழும் தமிழர்கள் ஆகியோருடன் எல்லாம் பண்பாட்டுத் தொடர்பு பூணும் முயற்சிகள் அரும்பி வருகின்றன.

# 11. இங்கிலாந்தில்

ஆங்கிலேயர் இந்தியாவோடு கொண்டிருந்த வணிக உறவு, இங்கிலாந்து கிறித்தவ சமய ஊழிய நிறுவனங்களினால் தென்னிந்தியாவிற்கு அனுப்பப்பட்ட சமய போதகர்களின் நடவடிக்கைகள், இரு நூற்றாண்டுக்கும் மேலாக இந்தியத் துணைக் கண்டத்தில் ஆங்கிலேயர் செலுத்திவந்த ஆதிக்கம் ஆகியவற்றின் நேரடி விளைவாகவே இங்கிலாந்தில் தமிழியல் ஆய்வின் தொடக்கம் ஏற்பட்டது. இவற்றுள் ஏதாவதொரு காரணத்திற்காக இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் தமிழ்ப்பகுதிகளுக்குச் சென்ற பெரும்பாலானோர் தென் ஆசியாவை வந்தடைந்ததும் தமிழைக் கற்றனர். கப்பலில் ஏறுவதற்கு முன்னரே மொழியின் சில அடிப்படைகளையாவது கற்றுக்கொள்வது எவ்வளவோ நன்மை பயக்கவல்லது என்ற உண்மை இறுதியில் சமயபோதகர்கள், அரசு அலுவலர்கள், வணிகர்கள் ஆகியோருக்குப் புலனாகிறது.

எனவே, தமிழ்ப்பயிற்சி வகுப்புக்களைத் தொடங்கியதன் அடிப்படை நோக்கம் ஒரு பயன்பாட்டுத்தேவை கருதியேயன்றி ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களில் சமஸ்கிருதப்படிப்புக்களுக்குக் காரணமாக அமைந்திருந்த தனி அறிவு வேட்கை கருதியல்ல. இங்ஙனம், சமஸ்கிருதப் படிப்பிற்கான பதவிகளை நிரப்புவதற்கான பயிற்சி பெற்ற அறிஞர்களை மொழிநூலார் குழுக்கள் அளிக்க முடிந்தபோது, தமிழ் மற்றும் ஏனைய திராவிட

---

எழுதியவர் ஆர்.இ.ஆஷர் (தமிழாக்கம் : ஜெ. நீதிவாணன்)

மொழிகளை ஓய்வுபெற்ற சமயபோதகர்களும், அரசு ஊழியர் களுமே கற்றுத்தரமுடிந்தது. கல்வித்துறையைச் சார்ந்த நுட்ப வல்லுநர்களாக இல்லாவிட்டாலும், பிற துறைகளைச் சார்ந் திருந்த இவர்கள் தமது அறிவு வேட்கையிலோ அனுபவத்தி லோ சற்றும் குறைந்தவர்களல்லர் என்பது மகிழ்வுக்குரியது. இன்னும், முழுநேர நுட்பவல்லுநர்கள் வியந்து பாராட்டும் வண்ணம் சிறந்த புலமை மிக்க நூல்களை ஆக்குவதற்கான காலமும் ஆற்றலும், தங்களது பல்வேறு பணிகளுக்கிடையேயும் இவர்களுக்குக் கிட்டியிருந்தது.

1884 முதல் 1896 வரை ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத் தில் தமிழ்-தெலுங்கு மொழி விரிவுரையாளராக விளங்கிய டாக்டர் ஜி.யு.போப் அவர்களையே அத்தகையோருள் மிகச் சிறந்தவர் எனலாம். அதற்குச் சற்று முன்னதாக, தற்கால எழுத்துத்தமிழ் மொழியைப் புரிந்து கொள்ளச் சிறப்பாகப்பயன் படக்கூடிய விளக்க நூலாகிய பொதுத்தமிழின் வளர்ச்சி இலக் கணம் எனும் நூலை எழுதிய மறைத்திரு ஏ. எச். ஆர்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பத்து ஆண்டுகளாக அத்த கையதோர் பதவியிலிருந்தார்.

1916இல் கீழ்த்திசைப் படிப்புப் புலம் நிறுவப்பட்டது வரை, லண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்பதற்கான வகுப்புக்கள் எதுவும் இருக்கவில்லை என்றே தோன்றும். (இப் புலமே பின்னர் 1938இல் கீழ்த்திசை மற்றும் ஆப்பிரிக்கப் படிப்புப் புலமாக மாறியது). அதனுடைய பழந்தொடக்க காலத்திலிருந்தே இப்பள்ளியில் ஏதாவது ஒரு திராவிட மொழிக் கான விரிவுரையாளர் யாராவது இடையறாது தொடர்ந்து பணியாற்றி வந்துள்ளனர் 1955 வரையிலும் ஏறக்குறைய முப்பதாண்டுகளுக்கு, சி.எஸ்.கே. பதி தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டையும் கற்பித்தார். இந்திய ஆட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற எம்.எஸ்.எச். தாம்சன் 1947க்கும் 1952க்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழுக்கென ஏற்படுத்தப்பட்ட இரண் டாவது பதவியை ஏற்றார். போர்க்காலத்தில் கேப்டன் பதி ராணுவத்தில் பெரும்பணியாற்றிக் கொண்டிருந்தபோது முன்

னர் சென்னை கிறித்தவக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரிய ராக இருந்த மறைத் திரு. கார்டன் மேத்யூஸ் தற்காலிகத் தமிழ் விரிவுரையாளராகப் பதவியேற்றார். 1940க்கும் 50க்கும் இடைப்பட்ட காலத்தின் முற்பகுதியில்தான் திராவிட மொழி களைக் கற்பிக்கும் விரிவுரையாளர்களின் எண்ணிக்கை அதன் உச்ச அளவாகிய ஏழினை எட்டியது. அக்கூடுதல் விரிவுரை யாளர்களுள் டி.என். மேனன் மற்றும் கேட் எம். ரிச்சர்ட்ஸ் ஆகிய இருவரும் மலையாளத்திற்கெனவும், ராவ்சாகிப் சி. ரங்கநாதா மற்றும் ஏ.என்.பி. நரசிம்மய்யா ஆகிய இரு வரும் கன்னடத்திற்கு எனவும், பி.வி. சுப்பாராவ் தெலுங்கிற் கெனவும் பணியாற்றினர். தற்சமயம் இப்புலத்தில் தமிழ் கற்பிப்பதற்கென ஒரு பதவி உள்ளது; 1955 முதல் இந்திய இசை விரிவுரையாளராகவும் உள்ள டாக்டர். ஜெ.ஆர். மார் இப்பதவியை வகித்து வருகிறார். 1957 முதல் தமிழுக்கென அமைந்த இரண்டாவது விரிவுரையாளர் பதவியை ஆர்.இ. ஆஷர் 1965இல் எடின்பரோ. பல்கலைக்கழகத்தில் மொழி யியல் துறையில் தாம் ஒரு பதவியை ஏற்கச் சென்றது வரை யிலும் வகித்து வந்தார்.

கீழ்த்திசை மற்றும் ஆப்பிரிக்கப் படிப்புப் புலத்தில் திரா விட மொழிப்பணிகள் இந்தியவியல் துறையோடு மட்டும் நின்றுவிடவில்லை. 1956 வரையிலும் பன்னிரண்டு ஆண்டு கள் ஒலியியல் மற்றும் மொழியியல் துறைத்தலைவராகவும் பொது மொழியியற் பேராசிரியராகவும் விளங்கிய ஜெ.ஆர். ஃபிர்த், தாமே தமிழ் மொழியில் மிகுந்த ஆர்வங் காட்டினார். (அதோடு தமிழ் ஒலியியல் பற்றி வெளியிடப் பட்டுள்ளவற்றுள் சிறந்ததாக இன்றும் கருதப்படும் விளக்கவுரையை எழுதி னார்). அவரது துறையைச் சார்ந்தவரும் 1977-இல் ஒலியியல் இணைப்பேராசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவருமான திருமதி. இ. எம். விட்லே திராவிட மொழிகளின் ஒலியியலைக் கற்பிப்பதிலேயே மிகுந்த அக்கறை காட்டியதோடு, மலை யாளம், தமிழ், கன்னடம் ஆகியவற்றைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பணியாற்றியுள்ளார்.

தற்சமயம் இங்கிலாந்தில் பட்டப்படிப்பு நிலையில் தமிழ் மாணவர்கள் மிக அதிகமில்லை. தமிழ்ப்பட்ட வகுப்பிற்காகச் சேரக்கூடிய ஒரே பல்கலைக்கழகம் லண்டனாகும்; அதனுடைய கீழ்த்திசை மற்றும் ஆப்பிரிக்கப் புலத்தில் இவ்வாய்ப்பு உண்டு. அங்கு, தெற்காசியப் படிப்பில் கலை இளவல் (சிறப்பு) பட்ட நிலையில் தமிழைக் கற்க முடியும். மற்றொரு இந்திய மொழியுடனோ, அரசியல், மாந்தனூல், அல்லது வரலாற்றுடனோ, சேர்ந்தும் தமிழைக்கற்க முடியும். எடின்பரோ பல்கலைக்கழகத்தில் மொழியியல் கலை முதுவல் பட்டப்படிப்பில் 'தமிழின் கட்டமைப்பு' 'ஒரு விருப்பப்பாடமாகும் (இவ்வாண்டு இவ்வகுப்பில் பதினோரு மாணவர்கள் உள்ளனர்).

இவ்வாறு தமிழில் பட்டப் படிப்பிற்கான வாய்ப்புக்கள் இங்கிலாந்தில் மிகக் குறைவாக இருந்த போதும் பட்டமேற் படிப்பு ஆய்வினைப் பொறுத்த வரையில் இவ்வாறான நிலை இல்லை. கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் அல்லது தொடர்புடைய படிப்பு பற்றிய ஆராய்ச்சி நூல்கள் பன்னிரெண்டிற்கும் மேற்பட்ட ஆங்கிலேயப் பல்கலைக் கழகங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. ஆய்வுத் தலைப்புகள் திராவிட மொழிகள் மற்றும் இலக்கியங்களை மட்டும் உள்ளடக்கியதாக இல்லை; அவை தென்னிந்திய மற்றும் இலங்கை மாந்தனூல், கைத்தொழில்கள், பொருளியல், கல்வி, புவியியல், நிலவியல், வரலாறு, மதம், மற்றும் சமூகவியல் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். தம்முடைய கல்வி வாழ்க்கையின் பெரும்பகுதியை இத்தகைய படிப்புக்களிலேயே செலவழித்துள்ள அறிஞர்கள் எந்தப் பல்கலைக் கழகங்களில் இருக்கின்றார்களோ அங்கேயே திராவிட இயலில் ஆர்வமுடைய ஆய்வு மாணவர்கள் பெருமளவில் செல்வது என்பது தவிர்க்கப்பட முடியாத ஒன்று என்பதில் அய்யமில்லை. கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் எம். பி. எமனோவுடன் இணைந்து பேராசிரியர் டி. பரோ செய்துள்ள குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மிக இன்றியமையாத பணியின் காரணமாக (இருவரும் தற்சமயம் ஒய்வு

பெற்றுவிட்டனர்; ஆனாலும் இருவரும் இன்னும் மிகுந்த துடிப் போடு விளங்குகின்றனர் என்பது மகிழ்தற்குரியது.) ஆக்ஸ்ஃபோர்டு அதிக மாணவர்களைத் தன்பால் ஈர்க்கும் ஆற்றலைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்க எண்ணிக்கை அளவில் லண்டன், கேம்பிரிட்ஜ், எடின்பரோ, சசெக்ஸ் பல்கலைக்கழகங்களுக்கும் மாணவர்கள் சென்றுள்ளனர், குறிப்பிட்ட நிலப்பரப்பில் அல்லாமல் குறிப்பிட்ட துறைகளில் புகழ் வாய்ந்த அறிஞர்களின் மூலமாக ஏனைய பல்கலைக்கழகங்கள் பட்டமேற்படிப்பு மாணவர்களைக் கவர்ந்திருக்கின்றன. இம்மாணவர்கள் எங்கெல்லாம் தம்முடைய ஆய்வுப் பயிற்சிக்காகச் சென்றிருந்த போதிலும் இவர்களே தற்சமயம், இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்க நாட்டுப் பல்கலைக்கழகப் பதவிகளை வகிக்கிறார்கள் என்பதனையும் பெரிதும் மதித்துப் போற்றற்குரிய பணியில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதனையும் எண்ணும் போது மனதிற்கு இனிமையாக உள்ளது.

தமிழ் மற்றும் ஏனைய திராவிட மொழிகள் பற்றிய ஆய்வு, இத்துறைகளில் இங்கிலாந்து நூல் வெயீட்டாளர்களால் வெளியிடப் பட்டுள்ள நூல்களின் வாயிலாகத் தெளிவாகப் புலனாகிறது. இந்தியாவோடு ஆங்கிலேய உறவு தொடங்கிய காலந் தொட்டே வெளிவந்துள்ள ஏராளமான எண்ணிக்கையில் அமைந்த அத்தகைய தலைப்புக்களை இங்கு பட்டியலாகத் தருவதற்கு இத்தகைய ஒரு நூலில் இடம் போதாது. எனினும் இங்கிலாந்தில் தென்னிந்தியாவைப் பற்றிய ஆர்வம் தொடர்ந்து காணப்பட்டு வருகிறது என்பதன் அடையாளமாகச் சில நூற்களை, குறிப்பாக மொழி மற்றும் இலக்கியம் ஆகியவற்றைப் பற்றி இந்தியா தன்னுரிமை அடைந்தது முதல் வெளிபிடப்பட்டுள்ள நூல்களைக் காணும்போது உணர முடிகின்றது.

# 12. மேற்கு ஜெர்மனியில்

## தரங்கை வளர்த்த தமிழியல்

தரங்கம்பாடிக் கடற்கரையில் 1706 ம் ஆண்டு ஆனித் திங்கள் சீகன்பால்கு (Bartholomaeus Ziegenbalg) கால் வைத்த அன்றே ஜெர்மனிக்கும் தமிழுக்குமிடையே உறவென்னும் வித்து ஊன்றப்பட்டுவிட்டது. சமயப் பணிகளை ஆற்றுதற்கேற்ற நிறுவனம் ஒன்றை நிர்மாணிக்கும் பொறுப்பேற்று வந்த சமயப்போதகர் சீகன்பால்கு, தமிழில் ஆர்வமுற்று முறையாக அதைக் கற்கத் தலைப்பட்டதே விதியின் விளையாடல் போலும்! இல்லையென்றால் லூதரன் மிஷனைத் தமிழகத்தில் தொடங்கும்போதே தமிழியலின் தொடக்கத்திற்கும் சீகன்பால்கு கால்கோள் செய்திருப்பாரர? இவ்வாறு கிறித்தவ மதத்திற்கும் தமிழியற் கல்விக்கும் ஒரே சமயத்தில் தூதுவராக விளங்கிய அந்தப் பெருமகன் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு துவக்கிவைத்த தமிழியல், அரசியல் மாற்றங்களினாலும் உலகப்போர்களினாலும் இடையிடையே சிறிது தொய்வுற்றாலும் இன்றளவும் ஜெர்மனியில் செயல்பட்டுவருகிறது என்ற உண்மையை நன்றியுணர்வோடு குறிப்பிட்டாக வேண்டும்.

தமிழ் மக்களிடையே தாம் செய்ய வேண்டிய சமயப்பணிகளுக்காகச் சீகன்பால்கு தமிழ்மொழியை விரைந்து கற்றுக் கொண்டது வியப்புக்குரியது அல்ல. ஆனால் அத்துறையில் மென்மேலும் ஈடுபட்டுத் தமிழை ஆழமாகக் கற்றுத் தேர்ந்து

---

எழுதியவர் அ. தாமோதரன்

உலகநீதி, கொன்றைவேந்தன், நீதிவெண்பா முதலிய தமிழ் நூல்களை மொழிபெயர்த்தது-ஓலைச்சுவடிகளாக இருந்த தமிழ் நூல்களைத் தேடித் தொகுத்து ஒரு நூலகத்தை நிறுவிக் கொண்டது-தமிழ்ச் சுவடிகளுக்கு ஒரு விளக்கப் பட்டியலை அமைத்துக் கொண்டது-தமிழைப்பயிலும் போதே அகராதிகளைத் தொகுக்கத் தொடங்கியது-தமக்குப் பின் தமிழைக் கற்போருக்கும் பயன்படுமாறு தமிழ் இலக்கணம் ஒன்றை வரையறுத்தது-தமிழ்த் தெய்வங்களின் மரபுமுறையை விளக்கிக் காட்டியது-தமிழ் மக்களைப் பற்றிய கலைக் களஞ்சியம் ஒன்றை உருவாக்கியது போன்ற தமிழ்ப் பணிகளை இவர் நிறைவேற்றியது வியப்புக்குரியதேயாகும். தொலைநோக்கோடு செயலாக்கப்பட்ட இப்பணிகளின் மூலமாகத் தமிழியலுக்கு வலிவான அஸ்திவாரத்தை அமைத்துவிட்டதோடு தமிழியல் வரலாற்றில் புது மரபொன்றையும் இவர் உருவாக்கிவிட்டார்.

இவருக்குப் பின் சமயத் தொண்டாற்றத் தமிழகம் வந்த வால்தர் (Walther), பப்ரிஸியுஸ் (Fabricius), ப்ரைட் ஹவுப்ட் (Breithaupt), பைஸன் ஹெர்ட்ஸ் (Beisnhers), கிரவுல் (Graul), ரேனியஸ் (Rhenius), பைத்தான் (Beythan), ஷொமேருஸ் (Schomerus), லேமன் (Lehmann) போன்ற பேரறிஞர்களும் சீகன்பால்கின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழியலை வளர்த்தனர். இலக்கணம், மொழிபெயர்ப்பு, சமயம் முதலிய துறைகளில் தரமான நூல்களை வழங்கி ஜெர்மன் பல்கலைக் கழகங்களில் கற்பிக்குமளவு தமிழை நாடறியச் செய்தனர். இதன் விளைவாக இந்தியவியலோடு தமிழியலும் இணைந்து செயல்படத் தொடங்கியது. தொடக்க காலத் தமிழியலுக்கு ஜெர்மானியர்கள் ஆற்றிய தொண்டுகளைப் பற்றி விரிவான நூல்களும் கட்டுரைகளும் முன்பே வெளிவந்துள்ளன. பேராசிரியர் தனிநாயகம் தொகுத்து வழங்கிய வெளிநாடுகளில் தமிழியல் : ஒரு கட்டுரைத் தொகுதி (Xavier S. Thaninayagam, Tamil Studies Abroad : a symposium, 1968.) எனும் நூலில் டாக்டர் ஆல்ப்ரெஹ்ட் வெட்ஸ்லர் (Dr. Albrecht Wetzler), டாக்டர் அர்னோ லேமன் (Dr. Arno Lehmann) ஆகிய இருவரும் எழுதியுள்ள கட்டுரைகளில் அவற்றை விரிவாகக் காணலாம்.

சீகன்பால்கு தொடங்கிவைத்த இப்பெரு மரபு இரண்டாம் உலகப்போர் வரையில் தொடர்ந்தது. போர்க்கால நெருக்கடிகள் மற்ற துறைகளைப் போலவே கல்வித் துறைகளையும் பேரளவில் பாதித்துவிட்டதாலும் போரின் முடிவில் ஜெர்மனி இரு வேறு நாடுகளாகப் பிரிந்துவிட்டதாலும் தமிழ்க் கல்வி தற்காலிகமாக நிறுத்தப்பட்டு விட்டதாகவே தோன்றுகிறது. போர்க்கொடுமைகளிலிருந்து நாடு மெல்ல விடுபட்டுத் துறை தோறும் வளர வளரத் தேக்கநிலை பெற்றிருந்த கல்வித்துறைகளும் ஒவ்வொன்றாகப் புத்துயிர் பெறத்தொடங்கின. பல்கலைக்கழகங்களில் கீழ்த்திசை மொழிகள் ஆங்காங்கே இடம் பெறலாயின.

இந்தியவியல் என்றால் வடமொழியையும் வேதங்களையும் மட்டுமே கற்பது-கற்பிப்பது என்ற பாரம்பரியத்தை மாற்றி அமைக்கும் நோக்கம் ஜெர்மன் இந்தியவியல் அறிஞர்களிடையே முகிழ்க்கத் தொடங்கியது. வடமொழியோடு மற்ற இந்திய மொழிகளையும் திராவிட மொழிகளையும் சேர்த்து இந்தியவியலின் பரப்பை விரிவாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் போக்கு தமிழியலுக்கு ஜெர்மனியில் மீண்டும் வாய்ப்பை ஏற்படுத்தியது.

மேற்கு ஜெர்மனியில் மேற்கு பெர்லின் (West Berlin), மார்புர்க் (Marburg), ப்ரேமன் (Bremen) ஆகிய நகரங்களிலுள்ள பல்கலைக் கழகங்களில் அவ்வப்போது தமிழ் கற்பிக்கப் பட்டிருந்தாலும் ஹாம்புர்க் (Hamburg), ஹைடல்பெர்க் (Hidelberg), கொலோன் (Koeln) ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களில் மட்டுமே தொடர்ந்து தமிழ் கற்பிக்கப்படுகிறது எனலாம். இவற்றுள்ளும் ஹாம்புர்க் பல்கலைக்கழகத்தில் 1978ம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் கற்பித்தல் முன்போலத் தீவிரமாக இயங்கவில்லை. கொலோன் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்பித்தலை விட நூலடங்கல் (Bibliography), அகராதி முதலியவற்றைத் தொகுக்கும் நீண்டகாலத் திட்டங்களுக்கே கடந்த நான்காண்டுகளாக முதலிடம் கொடுக்கப்படுகிறது. ஆகவே மேற்கு ஜெர்மனியில் ஹைடல்பெர்க் பல்கலைக் கழகத்தில் மட்டுமே

தமிழைப் பயிற்றுவித்தல் இப்போது சுறுசுறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று குறிப்பிடவேண்டியிருக்கிறது.

## ஹைடல்பெர்க் பல்கலைக்கழகம்

வளரும் நாடுகளில் காணப்படும் தற்காலப் பிரச்சனைகளை இந்தியவியலோடு ஒருங்கிணைத்து மேற்கு ஜெர்மனிக்கும் வளரும் நாடுகளுக்குமிடையேயுள்ள உறவை வளப்படுத்தும் நோக்கத்தில் 1962ல் உருவான கல்வி நிறுவனமே தெற்காசியக் கழகம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளைப் பற்றி இக் கழகத்தில் ஆராய்ச்சிகள் நடந்தாலும் இந்தியாவைப் பற்றிய ஆராய்ச்சிகளே மிகுதியாக (இங்கு) நடைபெற்று வருகின்றன. இந்தியவியல், வரலாறு பொருளாதாரம், அரசியல், புவியியல், இனவியல். சாகுபடி நிலக் கொள்கை - கிராமிய முன்னேற்றம் பற்றிய துறை, வெப்ப நாடுகளின் சுகாதாரம் பற்றிய துறை என்று ஒன்றோடொன்று தொடர்புடைய எட்டு பெருந்துறைகளைக் கொண்ட கல்விக் கழகம் இது. மொழித்துறை, தத்துவம், கலை, சட்டம், சமுதாயவியல் போன்ற மற்ற துறைகள் இப்பெருந்துறைகளின் உட்பிரிவுகளாக அடக்கப்பட்டுள்ளன என்பது அறியத் தக்கது.

பேராசிரியர் ஹெர்மன் பெர்கர் (Herman Berger) தலைமையில் இயங்கும் இந்தியவியல் துறை பண்டைய இந்தியவியல் (Classical Indology), மொழிகளும் இலக்கியங்களும் (Modern Languages and Literatures), சமய வரலாறும், தத்துவமும் (History of Religion and Philosophy) என்ற மூன்று உட்பிரிவுகளை உள்ளடக்கியதாகும். இவற்றில் எதையும் தலைமைப் பாடமாகவோ (Main Subject) அல்லது துணைப் பாடமாகவோ (Subsidiary Subject) தேர்ந்தெடுத்துக்கொள்ளவும் அல்லது வரலாறு, பொருளாதாரம் போன்ற மற்ற பாடங்களோடு அவற்றை இணைத்துக் கொள்ளவும் பாடத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. எனவே தமிழைத் தலைமைப் பாடமாக எடுத்து எம். ஏ., அல்லது டாக்டர் பட்டம் வரையில் கற்கும் வாய்ப்பு தெற்காசியக் கழகத்தில் மட்டுமே உண்டு.

தமிழுக்கெனத் துணைப் பேராசிரியர் பதவியொன்று நிலையாகவுள்ள இந்த நிறுவனத்தில் திரு. மா. சேசையா என்பவர் 1964ல் தமிழைத் தொடங்கி வைத்து இரண்டாண்டு கள் பணியாற்றினார். அவர் இந்த நிறுவனத்திலிருந்து விலகி இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் 1968 ஜுலை முதல் இக் கட்டுரையாளர் தமிழ்த் துணைப் பேராசிரியராகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். அன்றியும் பேராசிரியர் கமில் சுவலபில் (Professor Kamil V. Zvelebii) கோடையில் மாதமிரு முறை வந்து 'பழந்தமிழில் தெய்வீகக் கோட்பாடுகள்' தமிழ்த்தெய்வம் முருகன்', 'ஆடும் தெய்வம் நடராஜர்', 'தமிழில் இலக்கிய வகைகள்' போன்ற தலைப்புகளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றி வருகிறார்.

தொடக்க நிலை வகுப்பு முதல் இறுதி நிலை இலக்கிய வகுப்பு வரையில் எல்லா நிலைகளிலும் இங்கே தமிழ் கற்பிக் கப்படுகிறது. இலக்கண இலக்கியங்களோடு பேச்சுத் தமிழ், மொழிபெயர்ப்பு முதலியனவும் மாணவர்களின் தரத்திற் கேற்பப் பாடத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. மூன்றாண்டு கள் மொழியைக் கற்ற பிறகு குறிப்பிட்ட பொருளில் எம் ஏ., அல்லது டாக்டர் பட்டத்திற்கான ஆராய்ச்சியில் மாணவர்கள் ஈடுபடுகிறார்கள். சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி ஆராய்ந்து எம்.ஏ. பட்டம் பெற்ற ஒரு மாணவி இப்போது திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் வரலாற்றையும் கொள்கைகளையும் டாக்டர் பட்டத்திற்காக ஆராய்ந்து வருகிறார். ஜெயகாந்தன் சிறு கதைகளில் எச்சங் களின் அமைப்பைப் பற்றி ஒருவரும் அவருடைய நாவல்களில் தமிழ் இலக்கண அமைப்பைப்பற்றி வேறொருவரும் ஆராய்ந்து வருகின்றனர். ரமண மகரிஷியைப் பற்றி ஒரு மாணவரும் மலையனூர் அங்காளம்மனைப் பற்றி இன்னொரு மாணவியும் சித்தர் பாடல்களில் ஆன்மீகக் கொள்கை பற்றி ஒரு மாணவி யும் இப்போது ஆராய்ந்து வருவது இங்குள்ள தமிழியலின்

போக்கைத் தெளிவுபடுத்தும். சமயம், தத்துவம், வரலாறு போன்ற தொடர்புடைய துறைகள் ஒரே நிறுவனத்தில் இருப்ப தால் தமிழியற் கல்வியை வெவ்வேறு கோணங்களில் மாணவர் கள் அணுகுவது எளிதாக இருக்கிறது எனலாம். மாணவர் களின் தேவைக்கேற்ற ஒரு பெரிய நூலகம் இங்கே இருப்பது இந்தக் கழகத்தின் பெருமையை நிலைநாட்டுவதாகும்.

தமிழைக் கற்பித்தலோடு தமிழில் தொடர்பான நூல் களை வெளியிடவும் தெற்காசியக் கழகம் ஊக்கம் தருகிறது. இதன் பயனாக இதுவரையில் திருக்குறள் மேற்கோள் விளக்கம் (*1970*) திருக்குறள் இலக்கணம் (A grammar of Tirukkural, 1970) 'தமிழில் அகராதிகள் : ஒரு நூலடங்கல் (Tamil Dictionaries : A Bibliography, 1978), நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும் (1980) என்ற நான்கு நூல்கள் இக்கழகத்தின் உதவியோடு வெளியிடப்பட்டி ருக்கின்றன. தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் மறைந்துவிட்டதென உறுதியாக நம்பப்பட்டு வந்த கூழங்கைத் தம்பிரானின் நன்னூல் காண்டிகையுரையைக் கண்டுபிடித்துக் காலந்தாழ்த்தாது தமிழுலகுக்கு வழங்கியதை ஒருபெருமை யாகவே தெற்காசியக் கழகம் கருதுகிறது. இதுபோலவே பல ஆண்டுகளாகக் கையெழுத்துப் பிரதியாக முடங்கிக் கிடந்த சிவஞான சித்தியாரின் ஜெர்மன் மொழிபெயர்ப்பை வெளியிட்ட பெருமையும் இக்கழகத்திற்கு உண்டு.

இருநூற்றுக்கு மேற்பட்ட இரு மொழி அகராதிகளும் சொல் மாலைகளும் தமிழில் காணப்பட்டாலும் அவற்றில் ஒன்றுகூட ஜெர்மன் மொழியோடு இணைந்ததாக இல்லாத குறையை நீக்க ஒரு அகராதித் திட்டமும் ஐரோப்பிய நூல கங்களில் காணப்படும் தமிழ்ச்சுவடிகளுக்கு ஒரு விளக்கப் பட்டியலைத் தொகுக்கும் திட்டமும் நீண்ட காலத் திட்டங் களாக இங்கே மேற்கொள்ளப்பட்டிருப்பது தமிழியலுக்கு வளமை தருவதாகும். இப்போதுள்ள வளர்ச்சியை விட

எதிர்காலத்தில் இங்கே தமிழியல் மேலும் வளருமென உறுதி கூறலாம். காரணம் தமிழ் பயிலும் மாணவர்களின் தொகை நாளுக்கு நாள் பெருகி வருவதேயாகும்.

## கொலோன் பல்கலைக்கழகம்

பேராசிரியர் யானர்ட் (K.L. Janert) அவர்களின் தலைமையில் இயங்கி வரும் இந்தியவியல் துறை 1968 ம் ஆண்டு முதல் தமிழ் கற்கும் வரய்ப்பைக் கொலோன் பல்கலைக் கழகம் மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. இந்தியவியலின் உட்பிரிவாகத் தமிழ் அங்கே நிலைத்திருப்பதற்குக் காரணம் பேராசிரியர் யானர்ட்டின் பெருமுயற்சியேயாகும். 1968 செப்டம்பர் முதல் இரண்டாண்டுகள் திருமதி மேரிமாசிலாமணி அம்மையார் தமிழ் பயிற்றுவித்தார். இரண்டாண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் 1972 முதல் டாக்டர் பா. ரா. சுப்பிரமணியன் தமிழ்த் துணைப்பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். பேராசிரியரின் முழு ஆதரவும் நல்ல நூல் நிலையமும் தகுதியுள்ள தமிழாசிரியரும் இருந்தும் மாணவர்களிடையே தமிழைக் கற்பதற்குரிய ஆர்வம் போதிய அளவு இல்லாததால் தமிழைக் கற்பிப்பதை விட ஆராய்ச்சித் திட்டங்களுக்கே இப்பொழுது அங்கே முதலிடம் கொடுத்து வருகின்றனர்.

பிற மொழியாளர்கள் தமிழைக் கற்பதோ அல்லது அவர்களுக்குத் தமிழைக் கற்பிப்பதோ இன்றைய சூழ்நிலையில் எளிதில்லை, இதற்குப் பல காரணங்கள் உண்டென்றாலும் கற்பித்தற்குத் தேவையான நல்ல பாடநூல்கள், இருமொழி அகராதிகள் முதலியவை இல்லாமையே தலையாயதாகும். இருமொழி அகராதிகள் தமிழில் தோன்றத் தொடங்கி முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகியும் இக் குறைபாடு நீங்காமல் இருப்பது வியப்பிற்குரியதேயாகும், ஓரிரு நல்ல அகராதிகள் வெளிவந்திருப்பினும் அவை எளிதில் கிடைப்பதுமில்லை. இந்

நிலைமையை நன்குணர்ந்த பேராசிரியர் யானர்ட் அகராதி வெளியிடும் திட்டத்தை மேற்கொள்ளலானார். இதன் முதற் கட்டமாக வின்ஸ்லோ பாதிரியார் அரிதின் முயன்று தொகுத்த தமிழ் ஆங்கில அகராதியைத் (M. Winslow a Comprchen sive Tamil and English Dictionary of High and low Tamil 1862) தேர்ந்தெடுத்து அதற்கு ஒரு மறுபதிப்பைப் (reprint) பேராசிரியர் யானர்ட் வெளியிட்டுதவினார்.

இன்றைய தமிழை முழுமையாக விளங்கிக்கொள்ள இந்த அகராதியும் ஓரளவே உதவ முடியும் என்பது தெளிவானதும் புதிதாக ஒரு தமிழ் ஆங்கில அகராதியை உருவாக்கும் திட்டத்தை மேற்கொண்டார். இந்த அகராதித் திட்டத்தில் டாக்டர் சுப்பிரமணியனுடன் பணியாற்றக் கேரளப் பல்கலைக் கழகத்திலிருந்து உதவியாளர்களை அழைப்பதையும் ஈண்டுக் குறிப்பிட்டாக வேண்டும். இதன் படி 1979 ஏப்ரல் முதல் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் டாக்டர் கி. நாச்சிமுத்து இப்பணியில் உதவிவருகிறார். இவருக்கு முன்னர் திரு A. தசரதன் என்ற ஆராய்ச்சி மாணவர் சில மாதங்கள் இத் திட்டத்தில் பணியாற்றியதாகவும் தெரிகிறது. நான்கைந்து ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் இத்திட்டம் இன்னும் சில ஆண்டுகள் தொடருமென்று உறுதியாகக் கூறலாம்.

அகராதிகளைப் போலவே தமிழியலில் பின்தங்கியுள்ள மற்றொன்று நூலடங்கல் துறையாகும். கொலோன் பல்கலைக் கழகம் இந்தத் துறையிலும் பணியாற்றத் தொடங்கியுள்ளது வரவேற்கத் தக்கது. இத்துறையின் முதற்பணியாக மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிடும் 'செந்தமிழ்' பத்திரிகைக்குத் தொடக்கம் முதல் ஒரு அடைவினை விளக்கக் குறிப்புகளோடு டாக்டர் சுப்பிரமணியன் தொகுத்துள்ளார். அச்சேறும் தறுவாயிலிருக்கும் இந்த அடைவு விரைவில் வெளியானால் தமிழியல் மாணவர்களுக்கு மிகவும் பயன்படும் என்பது உறுதி.

## ஹம்பர்க் பல்கலைக் கழகம்

1970 ம் ஆண்டு டாக்டர் ஹெல்கா அன்டோன் (Dr Helga Anton) இந்தியக் கலை-வரலாற்றுத் துறையில் பணியேற்ற பிறகே தமிழ் கற்பித்தல் சிறப்பாக அங்கு ஊக்குவிக்கப்பட்டது. இதற்கு முன் அங்கே வடமொழித் துணைப்பேராசிரியராக உள்ள டாக்டர் சீனிவாசன் பழந்தமிழ்ச் செய்யுட்கள் சிலவற்றை மாணவர்களின் ஆர்வத்தைப் பொறுத்து அவ்வப்போது அறிமுகப்படுத்திவந்தார். மகாகவி பாரதியாரைப் பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் அன்டோன் தமிழகத்தில் தங்கிப் பேச்சுத் தமிழையும் தமிழறிஞர் கி.வா. ஜகந்நாதன் அவர்களிடம் இலக்கியத் தமிழையும் பயின்றவர். ஆரம்ப வகுப்பு முதல் இலக்கிய வகுப்புவரை அனைத்து நிலைகளிலும் தமிழை அறிமுகப்படுத்தி ஹம்புர்க் பல்கலைக்கழக மாணவர்களிடையே தமிழார்வத்தைத் தூண்டிய பெருமை திருமதி அன்டோன் அவர்களையே சாரும்.

இவர் அங்கே பணியாற்றிய ஏழு ஆண்டுகளில் **பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழிலக்கிய வளர்ச்சி வரனொலி பத்திரிகை முதலிய செய்தித் துறைகளில் பயன்படுத்தப்படும் தமிழ் நடை** ஆகிய தலைப்புகளில் சிறப்புரையாற்றியது பாராட்டத் தக்கது. பத்திரிகைத் தமிழைத் தொடர்ந்து கற்பித்த அனுபவம் காரணமாக 1975ல் தம் மாணவி திருமதி D. ஹெல்மன் (Mrs. D. Hellman) என்பவரோடு இணைந்து 'Tamil Usage in Mass Media' என்னும் நூலொன்றைத் தமிழியலுக்கு வழங்கியுள்ளார்.

தமிழுக்கும் பிற திராவிட மொழிகளுக்கும் சேர்த்து ஹம்புர்க் பல்கலைக்கழகத்தில் நிலையாக ஒரு பதவியை ஏற்படுத்தி நாளடைவில் திராவிட மொழிகளுக்கெனத் தனித் துறை ஒன்றினை உருவாக்க டாக்டர் அன்டோன் பெரிதும் முயன்றார். அவருடைய முயற்சிக்குப் போதிய அளவு நல்லாதரவு உடனா

சிரியர்களிடமே இல்லாமையால் மனம் நொந்த திருமதி அன்டோன் இறுதியில் அந்த முயற்சியைக் கைவிட்டு விட்டதாகத் தெரிகிறது. இந்த நன்முயற்சி பலனளிக்காமற் போனது எதிர் காலத் தமிழியலுக்கு ஒரு இழப்பேயாகும். இந்தியக் கலை - வரலாற்றுத் துறையை விட்டு 1978ல் டாக்டர் அன்டோன் விலகிய பின்னர் அங்கே படிப்படியாகத் தமிழ்க் கல்வி குறைந்து நின்றுவிட்டது. அந்த இழப்பை இப்போதே உறுதிப்படுத்து கிறது.

சீகன்பால்கு, க்ருண்ட்லெர் (Rev J.E. Gruendler) போன்ற ஜெர்மன் பாதிரிமார்கள் விரும்பிய அளவு தமிழ்க் கல்வி ஜெர் மனியில் வளரவில்லையாயினும் இப்போதுள்ள வளர்ச்சி புறக் கணித்தற்கு உரியதல்ல. இந்தியாவில் மாணவர்களிடையே இன்றுள்ள தமிழார்வம் தொடர்ந்து நீடித்தால் மேற்கு ஜெர் மனியில் தமிழியலுக்கு நல்ல எதிர்காலம் உண்டென்பதில் ஐய மில்லை. **'தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்'** என்ற பாரதியின் திருவாக்கு பொய்யா மொழி அல்லவா?

# 13. இத்தாலியில்

உரோமைப் பேரரசுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே கி. பி. முதலிரண்டாம் நூற்றாண்டுகளில் நிலவிய வாணிக உறவுகள் வரலாற்றுச் சிறப்புடையவை. தென்னிந்தியாவில் அரிக்கமேடு என்னுமிடத்தில் அக்காலத்திய பழம் பொருள் களும், உரோமை அரசு நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டுள் ளமை இதனை உறுதிப்படுத்தும். சங்க இலக்கியங்களிலும் இத்தாலிய வரலாற்றாசிரியர்களின் குறிப்புக்களிலும் இவ் வாணிகத் தொடர்பிற்குரிய பல சான்றுகள் உள்ளன.

பழங்கால வரலாற்றில், இந்தியாவைப் பற்றிய பூகோளச் செய்திகள் சரியாகப் புலப்படவில்லை. அதன்பின்னர், உரோ மைப் பேரரசின் வீழ்ச்சிக்கு நெடுங்காலத்திற்கு பின்னர், இத் தாலிய வணிகர்களும் சமய போதகர்களும், 13 முதல் 17ஆம் நூற்றாண்டுவரை கலாச்சார உறவு பூண்டு, புதியதொரு சகாப் தத்தினைத் தொடங்கி வைத்தனர். மார்க்கோபோலே (1254-1324), நிக்கோலோ டிகொண்டி (1395-1469), லுடோவிகோடி வர்த்தமா (1517), ஜியோவின்னிதா எம்போலி (1483-1517), பிலிப்போச செட்டி (1540-1588), சீசர்பெடரிக் (1530-1600), சுல்பாரோ பாப்பி (1550 முதல் 1621வரை), பிரான்சிஸ்கோ (1573 அல்லது 1574-1636), பியட்ரோ டெல்லா வாலி (1586-1652) முதலிய பயணிகள் மலபார், கர்னாடக மண்டலக் கடற் பகுதிகளுக்கு வருகை புரிந்துள்ளனர். அவர்களுடைய பயணக் குறிப்புக்களிலிருந்து, தென்னிந்தியப் பகுதி மக்களின் பழக்க

எழுதியவர் அந்தோனியோ சொரண்டினோ

வழக்கங்கள், விளைபொருள்கள், மாவிடை மரவிடை விவரங்கள், கண்ணனூர், கள்ளிக்கோட்டை, கொச்சி, கோவா முதலிய நகரங்களின் அமைப்பு முறைகள் ஆகிய பல செய்திகள் கிட்டியுள்ளன.

ஆனால், தென்னிந்தியாவைப் பற்றி அறிந்து கொள்ளுதற்குக் கிறித்தவ சமய போதகர்களின் குறிப்புக்களே ஐயமின்றிப் பெரிதும் உதவியுள்ளன. ஒடோறிகோ தெ போர்தெனோன் (1265 - 1331) மலபார்ப்பகுதி பற்றிப் பயனுள்ள விவரங்களையும் அங்கு நடைபெற்ற மிளகு வாணிபம் பற்றிய தெளிவான செய்திகளையும் எழுதிவைத்துள்ளார். ஜேசுப் பெனிசி, (1558 முதல் 1632) கொச்சியிலேயே பல ஆண்டுகள் வசித்த இவர், அங்குள்ள தோடாப் பழங்குடியினரைப் பற்றிய செய்திகளை முதன்முதலாக வெளியிட்டுள்ளார். ஜியோசப் செபாஸ்டியான் டி. எஸ். மரியா (1623 - 1663) வின்சென்சோ மரியா டி. எஸ். கத்தரீனா தி. சியன்னா (1656 - 1673) ஆகியோரின் நூல்களில், மலபார்க் கடற்கரையில் வாழ்ந்த மக்களினம் பற்றியும் அங்குள்ள புவியியல் வளம் பற்றியும் பயனுள்ள பல குறிப்புக்கள் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

திராவிடமொழிகளில் புலமை பெற்ற இத்தாலிய இயேசு சபை மதபோதகர்களில், தத்துவ போதக சுவாமி எனப் பெறும் இராபர்ட் தெ நொபிலியும் (1577-1656) கான்ஸ்டண்டைன் ஜோசப் பெஸ்கி என இயற்பெயர் கொண்ட வீரமாமுனிவரும் (1680-1747) முன்னோடிகளாவர். தத்துவ போதகரின் படைப்புக்களே இன்று தமிழில் கிட்டியுள்ள முதல் உரைநடை நூற்களாகும். இவர் வடுக மொழியினைக் கற்றுத் தெலுங்கிலும் நூலெழுதியுள்ளார். வீரமாமுனிவரின் இலக்கண நூற்களும் அகராதிகளும், தமிழியல் வரலாற்றில் மைல் கற்களாயிருக்கின்றன; அவருடைய கவிதைகளும் உரைநடை நூற்களும் அவருக்கு இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் அழியாப் புகழை ஈட்டித் தந்துள்ளன.

புகழ்பெற்ற இவ்வறிஞர்பெருமக்கள் தரவி, லெயோனார்டு சின்னமோ (1609 முதல் 1664 வரை) சின்னச் சவரியார் எனப் பெறும் ஜியாகமோ தொமகோ டி. ரோசி (1701 - ?) எனும் இரு இயேசுசபைத் துறவிகளும் நினைவிற் கொள்ளத் தக்க வர்கள். கரனாடகப் பகுதியிலேயே வாழ்ந்த சின்னமோ, கன்னட மொழி இலக்கணத்தையும் அகராதியையும் ஆக்கிய தோடு அம்மொழியில் பல சமய நூல்களையும் எழுதிவைத்தார். மதுரை வேதபோதகப் பகுதியில் பணியாற்றிய டி. ரோசி நிறைய எழுதியுள்ளார். அவருடைய படைப்புக்கள் சமயத் துறையைச் சார்ந்தே அமைந்தன.

கார்மேல் சபை வேத போதகராக வந்த பாலினஸ் பார்த்த லோமியோ (1748 - 1806) வின் நூல்களில், மலபார், தமிழ் நாட்டு மக்களின் சமூக சமய வழக்கங்கள், கலை, மொழியியல் போக்குகள் ஆகியன பற்றிய பயன்தரு செய்திகள் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

அவர் காலத்தவரான ஜியோவின்னி கிறிஸ்டோபர் அமாதுசி (1740 - 1792) மலபார் மொழியமைப்பை விளக்கி எழுதி வைத்திருப்பதோடு மலையாள மொழியில் செபங்களை யும் இயற்றியுள்ளார் (1772).

சென்ற நூற்றாண்டில், திராவிடமொழி ஆய்வுகள் இத் தாலியில் கைவிடப்பெறவில்லை. இவற்றில் கீழ்த்திசைக்கலை ஆர்வலர் பலர் நாட்டம் கொண்டேயிருந்தனர். ஆஞ்செலோ டி குபேர்னாட்டிஸ் (1840-1913) திருவள்ளுவர் பற்றிப் பல குறிப் புக்களை எழுதியதோடு (1867) உரோமை வேதபோதப் பல்க லைக்கழகத்தில் பேணப்பட்டுள்ள மலையாள, தமிழ்மொழிச் சுவடிகள்பற்றியும் விளக்கியுள்ளார் (1876). தென்னிந்தியா பற்றிய அவருடைய பயணநூலும் மிகப் பயன்தரவல்லது (1886). பெலிஸ் பின்சி (1847-1872) பிராகு மொழிபற்றி (1870) ஒரு நூலெழுதினார். வீரமாமுனிவரின் இலக்கண நூற் களை பர்னெல் என்பவர் (1876) பதிப்பித்திருந்ததை பிரான் சிக்கு லொரென்சோ புல்லே (1850–1934) திருத்தி வெளியிட்

டார். எமிலியோ தேஜா (1851-1912) கன்னடமொழிபற்றிய சிறு நூலையும் (1897) வீரமாமுனிவர், போய்ஸ் நூல்கள் பற்றிய கட்டுரையினையும் (1899) எழுதியுள்ளார்.

வெடிப்பொலியின ஆய்வாளர் சிராஸியாடோ இசையா அசோலி (1829-1907) மூலக்கூறுகள் பற்றிய தன்னுடைய ஆய்வில், வடமொழியில் திராவிடமொழிகளின் செல்வாக்கினை விளக்கி எழுதினார் (1870). மக்களியல் ஆய்வினரான பாலோ மாண்டிகாஜா (1831-1910) நீலகிரிப்பழங்குடியினரின் சமூகப் பழக்க வழக்கங்கள் பற்றிய பயனுள்ள கட்டுரைகளை எழுதினார். (1883), அவரது இந்தியப் பயணநூலில் இப்பழங்குடியினரைப் பற்றி மேலும் இவ்விவரங்கள் தரப்பட்டிருப்பட்டிருப்பதோடு, சென்னை மாநிலமக்களின் பலதிற வாழ்க்கை முறை பற்றிய செய்திகளும் சொல்லப்பட்டுள்ளன (1884).

இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில், ஜோவோ-துப்ரேலில் அடிப்படை ஆய்வு பற்றிய (1915) நீண்டதொரு மதிப்பீட்டினை கார்லோ போர்மிச்சி (1871-1943) ஆக்கித் தந்தார். திராவிட மொழிகளைப் பற்றி ஆராய்ந்தறியப் பல மொழியியலாளர்கள் முற்பட்டனர்: ஆல்பிரரோ ட்ரம்போட்டி (1866-1929) மொழியின் தோற்றங்கள் எனும் தனது நூலில், திராவிட மொழிகளுக்கும் இதர மொழிப்பிரிவுகளுக்கும் உள்ள தொடர்பினை ஆராய்ந்துள்ளார் (1905), ஆஞ்செலோ மரியா பிஜகல்லி (1883-1947) வடமொழி நுனிநா அண்ண மெய்களில் திராவிட மொழிச் செல்வாக்குப் பற்றிய ஆய்வுக் கட்டுரையினை (1929) எழுதியுள்ளார்.

இடையில் விட்டுப்போன ஆராய்ச்சிகள் இப்போது மீண்டும் தலையெடுத்துள்ளன. நேப்பிள்ஸ், கீழ்த்திசைக்கலை நிறுவனத்தின் பேராசிரியர் லூசி சாந்தா மரியா மலாய் மொழியில் போர்த்துக்கீசியர் கடன் சொற்கள் எனும் நூலில், திராவிட மொழிச் சொல்லாக்கவியல் பற்றி (1967) ஆராய்ந்துள்ளார். பேராசிரியர் டொமினிகோ சில்வெஸ்திரி, இந்தோ-மத்தியதரைப் பகுதி மொழிகளின் அடிப்படைக் கூறுகள் பற்றிய தமது ஆய்வில், (பிசானி, பெலார்டி) போன்ற இதர இத்

தாலிய மொழியியலாளர்களைப் பின்பற்றி அப்பகுதி மொழிகளில் உள்ள திராவிடமொழிக்கூறுகளின் (1974) சிறப்பிடம் பற்றி விளக்கியுள்ளார். ஈரானிய மொழி நூலாய்வில் ஈடுபட்டுள்ள பேராசிரியர் ஆதிரையானோ வலேரியோ ரோலிபிராகு மொழி பற்றிய இரு கட்டுரைகளை (1971, 1977) எழுதிய தோடு, பெரியதொரு நூலையும் (1979) வெளியிட்டுள்ளார். இறுதியாக, வீரமாமுனிவரின் படைப்புக்கள் பற்றி இரு ஆய்வுக் கட்டுரைகளை (1978, 1980) நான்எழுதி வெளியிட்டுள்ளேன்.

உரோமைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அலெக்சாண்ரோ பசானி தமிழில் பாரசீகச் சொற்கள் (1968) எனும் ஆய்வேட்டில், அம்மொழியில் இடம்பெற்றுள்ள ஒரே ஈரானியக் கூறுகள் பற்றிய பல சொற்களடங்கிய அரியதொரு பட்டியலைத் தந்துள்ளார். தூரின் பல்கலைக்கழகத்தின், இந்தியவியல் நிறுவன ஆய்வாளரான டாக்டர். எமானுவா பணத்தோணி 18ஆம் நூற்றாண்டுப் பயணியாக வந்த லாசரோ பாப்பி மலபார் பற்றி எழுதிவைத்த குறிப்புகளை ஆராய்ச்சி செய்து ஒரு கட்டுரையும் (1974), இரு மலையாளச் சிறுகதை மொழிபெயர்ப்புக்களை மற்றுமொரு கட்டுரையாகவும் (1975) வெளியிட்டுள்ளார். உரோமையில் சிறிது காலம் தமிழ் கற்பித்ததோடு மானிடவியல் ஆய்விலும் ஈடுபட்டிருந்த டாக்டர் கபிரியேல் எசிங்கர் பெர்ரோ-லூசி, ஜெயகாந்தன் புதினங்கள் பற்றிச் சிறந்ததொரு ஆய்வுக்கட்டுரையினை (1976) வெளியிட்டுள்ளார்.

கலை, தொல்பொருளியல் துறைகளைப் பொறுத்தவரை, உரோமைக் கீழ்த்திசை நிறுவனத்தவரான, டாக்டர் மறியா ரொசாரியோ சிமிளோ, உரோமை வத்திக்கான் அருள்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள தமிழ் வழிபாட்டு பீடம் (நகர்த்தக் கூடியது) பற்றிய ஆய்வேட்டினை அளித்துள்ளார் (1977). வெனிஸ் பல்கலைக்கழக ஆய்வாளர் டாக்டர், ஜியாவணி வெரார்டி மைசூர் மாநில ஹசன் மாவட்டத்தில் உள்ள தொல் பொருள் ஆய்விடம் பற்றியதொரு கட்டுரையினை (அச்சில் உள்ளது) எழுதித் தந்துள்ளார்.

# 14. போலந்தில்

போலந்துக்கும் இந்தியாவுக்கும் அரசியல் ரீதியில் ஏற்பட்ட இணக்கமும் உறவும் 30 ஆண்டு கால வரலாறு உடையன. ஆனால், போலந்தில் இந்திய இயல் படிப்பின் வரலாறு 160 ஆண்டு காலப் பழமை உடையது. வாலெந்தெ ஸ்கொரோகுத் மயேஸ்வ்கி என்பவர் 1809இல் சமஸ்கிருத நெடுங்கணக்கு, சமஸ்கிருத-போலிஷ் சொல் ஒப்புமை பற்றி ஆய்வு செய்து, தனது ஆய்வில் கண்ட செய்திகளை விரிவுரைகளாக்கினார். தமது சொந்தச் செலவில் சமஸ்கிருத அச்சுகளை வரவழைத்து, பிரஹ்ம வைவர்த்த புராணத்தை வெளியிட்டார்; இராமயணச் சுருக்கத்தைப் போலிஷ் மொழியில் வெளியிட்டார். மனோவ்ஸ்கி என்பார் 1892 தொடக்கம் 80 முடிய உள்ள கால கட்டத்தில் சமஸ்கிருத-சிலாவிக்-போலிஷ் மொழிகளை ஒப்பிட்டுப் பல ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். இந்தக் கன்னி முயற்சிகள் மெல்ல மெல்ல வளர்ந்து, உரம் பெற்று, இந்த நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் நற்பயன் கொடுத்தது. இதற்குக் காரண கர்த்தா ஆந்திரி க்வ்ரோன்ஸ்கி என்ற மிகு புலமையாளர் ஆவார். மிருச்ச கடிகா, அசுவகோஷின் படைப்புக்கள், காளிதாசனின் நாடகங்கள் ஆகியவற்றில் ஆய்வு செய்து பல புதிய செய்திகளை வெளிக்கொணர்ந்தார். சமஸ்கிருத நாடகங்களில் ஆய்வு நடத்தி, கிரேக்க நாடகச் செல்வாக்கு சமஸ்கிருத நாடகங்களில் காணப்படுகிறது என்கிற வாதத்தை வன்மையாக மறுத்தார். இவரது

எழுதியவர் இராம. சுந்தரம்

சமஸ்கிருதத் தொண்டில் தலைசிறந்தது, 1932ல் இவர் போலிஷ் மொழியில் வெளியிட்ட சமஸ்கிருத இலக்கண நூலே ஆகும். தாகூரின் 'சாதனா', உபநிடதங்களிலிருந்து சில சில பகுதிகள் இவரால் மொழியாக்கம் செய்யப்பெற்றன.

மற்றொரு பெரும்புலவர் ஸ்தான்ஸிவாவ் ஸ்ஹாயெர் என்பவராவார். இந்தியத் தத்துவம், சமயம் இவற்றில் மிகு ஆர்வம் காட்டியவர் இவர். 1930-இல் வார்சா பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் ஆனார். இவரது முயற்சியால் இப் பல்கலைக்கழகத்தில் கீழ்த்திசைப் படிப்புப் பிரிவு நிறுவப் பட்டது. போலந்து இந்திய நண்பர் கழகம், கீழ்திசைப் படிப்புப் பற்றிய ஆய்வுரைகளை வெளியிடும் 'The Polish Bulletin of Oriental Studies' என்ற இதழ்-இவற்றின் தொடக்கத்துக்கு ஆதிகர்த்தா இவரே. காளிதாசனின் சாகுந்தலத்தை 1924இல் மொழிபெயர்த்தார். இவரது அடிச்சுவட்டில், சமஸ்கிருத பாலி இலக்கியங்களில் ஆர்வம் செலுத்தி, இந்தியப் படிப்பை இன்னும் ஒருபடி மேலே கொண்டு சென்றவர், வார்சாப் பல்கலைக்கழக இந்தியப் பிரிவின் பேராசிரியராக 95 ஆண்டுகள் பணியாற்றி, அண்மையில் ஓய்வு பெற்ற Dr. இகேனியுஷ் ஸ்வுட்கியேவிச் என்ற சமஸ்கிருத உலகம் நன்கு அறிந்த பேரறிஞராவார். அர்த்த சாஸ்திரம், இராமாயணம் இவற்றில் சிறப்பான ஆய்வு நடத்தியவர். சொற்பிறப்பியல், நாட்டுப் பண்பாட்டியல் ஆகியவற்றிலும் ஆர்வத்தோடு உழைத்தவர்; பன்மொழிப் புலவர்.

1955 தொடக்கம் வார்சா பல்கலைக் கழகத்தில் இந்திய வியலில் M.A. பட்ட வகுப்பு தொடங்கப் பெற்றது. தமிழ்ப் படிப்பு 1972இல் தொடங்கியது. சமஸ்கிருதம், இந்தி, உருது, வங்காளி, தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் தற்போது இங்கு கற்றுத் தரப்படுகின்றன. இம் மொழிகள் மட்டுமின்றி, இவற்றின் இலக்கியமும் பாடத்திட்டத்தில் இடம்

பெற்றுள்ளது. 5 ஆண்டு நீளும் இப் படிப்பில், இந்திய வரலாறு, கலைகள், தத்துவம், பூகோளம், பொருளாதாரம் ஆகிய இந்தியாவோடு சம்பந்தப்பட்ட பாடங்களும் கற்றுத் தரப்படுகின்றன. 5-ஆம் ஆண்டின் இறுதியில் M.A. பட்டத்துக்காக ஆய்வுக் கட்டுரை ஒன்று (50 பக்க அளவில்) எழுதித்தர வேண்டும். இங்கு தரப்பட்ட சில ஆய்வுக் கட்டுரைகள் : ஹரப்பா நாகரிகம், இந்திய விடுதலை இயக்கத்தில் திலகரின் பங்கு, பிரேம் சந்திரன் சமூக-அரசியல் கோட்பாடுகள், இந்தியில் ஆங்கிலம், பழந்தமிழில் (காணப்படும்) சமஸ்கிருதச் சொற்களின் ஒலியியல் போக்குகள், தமிழில் புணர்ச்சி விதிகள், தமிழில் ஆக்கப் பெயர்கள், இந்தியக் கடவுளரின் வடிவமைப்பு. இங்கு போலிஷ்தான் பயிற்று மொழி.

1972 தொடக்கம் 1979 முடிய தமிழ் கற்ற மாணவர்களின் எண்ணிக்கை 16. இவர்களுள் சிறப்பார்வம் காட்டி, தமிழை விருப்பப்பாடமாக எடுத்துப் பயின்றவர்கள் அறுவர். இவர்கள் தமிழில் எழுத, படிக்க, மொழிபெயர்க்க நன்கு பயிற்சி பெற்றனர். பேச்சுத் தமிழிலும் போதிய பயிற்சி அடைந்தனர். ஒரு மாணவர் தாகூரின் கதையொன்றை முன்னறிவிப்பின்றி 15 நிமிடங்கள் தெளிவான தமிழில் சொல்லி, எல்லோரையும் வியப்புக்குள்ளாக்கினார். தமிழ்நாட்டுக்கு வந்து, சில காலம் தங்கி தமிழ் மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டால் இவர்களது தமிழ் பேச்சுப்பயிற்சி அறிவு கூடும். இந்த மாணர்கள் தமிழை நன்கு கற்று, தமிழுக்குத் தொண்டு செய்ய உண்மையான ஆர்வம் கொண்டிருக்கின்றனர். பழந்தமிழ் நாட்டில் முருக வழிபாடு, மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் பக்தி இயக்கமும், பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பாடல் அமைப்பும் பொருளும், நீலகிரி இருளப் பழங்குடி மக்கள் ஆகிய தலைப்புக்களில் இம்மாணவர்கள் தங்களது முதுகலை கட்டுரைகளைத் தயாரித்து அளித்தனர். இதன் பயனாக, திருமுருகாற்றுப்படை, திருவெம்பாவை, பாலை பாடிய பெருங்

கடுங்கோவின் பாடல்கள் போலிஷில் மொழிபெயர்க்கப்பட்டன. காலப்போக்கில் இவை நூலாகலாம். கடந்த இரண்டு ஆண்டுகளில் பட்டினப்பாலை, கம்பராமாயணத்தில் வாலி வதைப்படலம், பாரதியின் கண்ணன் பாட்டுக்கள் மாணவர்களால் படிக்கப்பெற்று, மொழி பெயர்க்கப்பட்டன. ஜெயகாந்தனின் யுகசந்தி சிறுகதைத் தொகுப்பு பாட்டி என்ற தலைப்பில் வெளிவந்தது. இன்னும் சில கதைகள், கவிதைகளை மொழிபெயர்த்து, எல்லாவற்றையும் தொகுத்து ஒரு நூலாக வெளியிடத் திட்டமிட்டுள்ளனர். 1958 வாக்கில் வந்தாதி னோவ்ஸ்கா என்கிற அம்மையார் ஆங்கிலம் வழி சில தமிழ்க் கவிதைகளைப் போலிஷில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இவரே திருக்குறளையும் உரைநடையில் வெளியிட்டிருந்தார். இம்மொழிபெயர்ப்புக்கள் சுமாராகவே உள்ளன. மாணவர்கள் நேரடியாகத் தமிழிலிருந்து, ஆசிரியர் மேற்பார்வையில் மொழி பெயர்ப்பதால் மூலத்தோடு மிக நெருங்கிய மொழிபெயர்ப்பாக மேலே பட்டியலிட்டுக் காட்டியவை அமைந்துள்ளன. எனக்குள்ள போலிஷ் அறிவும் இதற்குச் சிறிது உதவியது. எனது துணையோடு போஹ்நன் கெம்பார்கி என்பவர் திருக்குறள் முழுவதையும் அழகிய போலிஷ் கவிதையில் மொழிபெயர்த்து 1977 டிசம்பரில் வெளியிட்டார். 10,000 பிரதிகள் வெளிவந்தன. இங்கு மாணவர்கள் தேவைக்கென்று ஒரு தமிழ் வாசகம் தயாரித்து, பல்கலைக் கழகம் மூலம் வெளியிட்டேன். தமிழ் இலக்கியக் குறிப்புக்கள் பற்றிய ஒரு கட்டுரையும், வரிப்பாட்டு, பாவைப்பாட்டு பற்றிய சிறுகுறிப்புக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இந்திய இயல் துறையினரின் கூட்டு உழைப்பில் வெளிவர இருக்கும் இந்திய இலக்கிய வரலாறு என்ற தொகுப்பு நூலில் தமிழ், மலையாள இலக்கிய வரலாறு பற்றிய கட்டுரைகளும் இடம்பெறவிருக்கின்றன. தமிழுக்குத் தொண்டு செய்த கிறிஸ்தவர்கள் பற்றிய கட்டுரை ஒன்றும் தமிழ்நாட்டுத் 'தெருக்கூத்து' பற்றிய கட்டுரை ஒன்றும் விரைவில் வெளிவர உள்ளன.

தமிழ் பயிலும் மாணவர்கள் படிப்பதற்கென வாரந்தோறும் 'தினமணி' இதழ் இங்கு வருகிறது. இதே மாணவர்கள் மலையாளமும் படிக்கின்றனர். 'மாத்ரு பூமி' இதழ் அதற்குச் சிறிது உதவுகிறது லலிதாம்பிகை அந்தர்ஜனம் கதை ஒன்றும் மொழிபெயர்ப்பாகி உள்ளது. ஏற்கனவே, தகழியின் 'செம் மீன்' ஆங்கிலம் வழி போலிஷில் மொழிபெயர்ப்பாகி வெளி வந்துள்ளது. இன்னும் சில ஆண்டுகளில், இம்மாணவர்களது உழைப்பால் தமிழ், மலையாள இலக்கியச் சிறப்புக்கள் போலந்து மக்களுக்கு நல்ல முறையில் அறிமுகம் செய்யப்படும் என்று உறுதியாக நம்பலாம். வார்சா பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராகத் தற்போது பணியாற்றும் எனது மாணவர் ததேயுஷ் ஹெர்மன் இத்தொண்டாற்ற உறுதிபூண்டுள்ளார்.

போலந்தை அடுத்துள்ள நாடு செக்கோசுலேவேகியா. இந்நாட்டின் தலைநகரான பிரகாவில் (Praha) உள்ள சார்லஸ் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகளாகத் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. செக்கோசுலேவேகிய மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் இப்பணியில் ஆர்வம் காட்டி, நீண்டகாலம் தமிழ் ஆசிரியராகத் தொண்டாற்றியவர் தமிழறிஞருலகு நன்கு அறிந்த டாக்டர் கமில் சுவலபில் ஆவார். இவரது முயற்சியாலும் தூண்டுதலாலும் பல கட்டுரைகளும், நூல்களும் வெளிவந்தன. இவரே நிறைய கட்டுரைகளும் நூல்களும் வெளியிட்டு கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு முதலாயவற்றின் சிறப்பை எடுத்துக் காட்டினார். சங்க கால அகப்பாடல்கள் சிலவற்றையும் சிலப்பதிகாரத்தையும் அழகிய நடையில் செக் மொழியில் மொழியாக்கம் செய்து வெளியிட்டுள்ளார். தமிழ்ச் சிறுகதைகள் சிலவற்றையும் செக் மொழியில் வெளிக்கொணர்ந்தார். தமிழியல் சம்பந்தமான நூல்கள், அகராதிகள் பற்றிய மதிப்புரைகள் பலவற்றை எழுதினார். தற்போது ஹாலந்து நாட்டில் உள்ள உத்ரெஹ்த் (Utrecht) பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் சுவலபில் அண்

மையில் தமிழ் இலக்கிய வரலாறு பற்றி 3 நூற்கள் வெளியிட்டார். தொல்காப்பிய மொழிபெயர்ப்பு கந்தபுராண மொழிபெயர்ப்பு முதலிய மொழிபெயர்ப்புப் பணிகளையும் மேற்கொண்டுள்ளார்.

இவரது மாணவர் வாச்செக் (Vacek) என்பவர் தற்போது சார்லஸ் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கல்வியைக் கவனித்துக் கொள்கிறார். இவரும் பல ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். இந்தியாவிலிருந்து 'பண்பாட்டுப் பரிமாற்றம்' (Cultural exchange) திட்டத்தின் கீழ் சென்ற திருமதி டாக்டர் தே. தியாகராசன் சில மாதங்கள் இங்குத் தங்கித் தமிழ்ப்பணி புரிந்தார். ஒரு நல்ல நூலகம் இங்கே இருக்கிறது. பிராகாவிலிருந்து வெளிவருகிற Archiv Orientalni என்கிற இதழில் தமிழியல் பற்றிய பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. சோவியத் யூனியனுக்கு அடுத்த நிலையில் செக்கோசுலேவேகியா சிறப்பான தமிழ்த்தொண்டு ஆற்றியிருக்கிறது எனில் அது மிகையன்று.

வெளி நாடுகளில் தமிழ் படிக்கும் ஆர்வம் இப்போது அதிகமாகி உள்ளது. இந்த ஆர்வத்தின் காரணமாகச் சில தேவைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இதை நாம் வெகு விரைவில் சிறப்பான முறையில் செய்யத் தவறினால், உலகமெங்கும் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யும் பணியில் தோல்வியடைந்தவர்களாவோம். என்ன அந்தத் தேவைகள்?

ஒரு நல்ல, விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட தமிழ் ஆங்கில அகராதி தேவை. இதில், தற்கால வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்கள், சொற்றொடர்கள், மரபுத் தொடர்கள் தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் இடம்பெற வேண்டும். இப்படி ஒரு அகராதி இல்லாத குறையை வெளி நாடுகளில் தமிழ் கற்கும், கற்பிக்கும் நிலையில் உள்ளோர் நன்கு உணர்கின்றனர். இது உடனடியாகச் செய்யப்பட வேண்டிய ஒன்று.

தமிழக வரலாறு, பண்பாடு பற்றிக் கூறும் ஒரு நல்ல, தெளிவான கலைக் களஞ்சியம் ஆங்கிலத்தில் (அல்லது தமிழில்) வெளிவர வேண்டும். பல செய்திகளை மாணவர்களுக்கு விளக்கிச் சொல்ல இது பேருதவியாக இருக்கும்.

பேச்சுத் தமிழை உரிய விளக்கங்களோடு பதிவு செய்த தட்டுக்கள் அல்லது நாடாக்கள் தயாரிக்க வேண்டும். இந்தி, வங்காளி மொழிகளுக்கு இந்த 'Linguaphone' உண்டு.

# 15. வாசிங்டனில்

## ஆசிய மொழி, இலக்கியத்துறை

அமெரிக்காவில் இப்போது, தமிழ் தெலுங்கு எனும் இரு திராவிட மொழிகளில் மட்டுமே பாடங்கள் தொடர்ந்து கற்பிக்கப்பெற்று வருகின்றன; கன்னடமும் மலையாளமும் அவ்வப்பொழுது கற்பிக்கப்படுகின்றன (வாசிங்டனிலும், சிக்காகோ பல்கலைக் கழகத்திலும் கன்னடம் கற்பிக்கப்படுகிறது; பென்சில்வேனியாவில் மலையாளம் சொல்லித்தரப்படுகிறது). வாசிங்டன், பென்சில்வேனியா, விஸ்கோன்சின், மிச்சிகன், கலிபோர்னியப் பல்கலைக்கழகங்களில் தமிழ் வகுப்புக்கள் தொடர்ந்து நடக்கின்றன; டெக்சாஸ், கோர்னெல் பல்கலைக் கழகங்களில் வாய்ப்பு நேரும் போது நடக்கின்றன. விஸ்கோன்சின், டெக்சாஸ் பல்கலைக்கழகங்களில் தொடர்ந்தும், பென்சில் வேனியாவில் ஒழுங்காகக் கற்பிக்கப்பெறும் மொழிப் பாடங்கள் முழுமையான பாடத்திட்டத்துடன் நடத்தப்படுகின்றன; அதாவது, தெரிந்தெடுத்துக் கொள்ளப்பெற்ற மொழியின் இலக்கியம் அல்லது மொழியியலில் எம்.ஏயும் பிஎச்.டியும் பெறும் அளவுக்கு மூன்று அல்லது நான்காண்டுப் பயிற்சியும் தனித்துறை ஆய்வும் அளிக்கப்படுகின்றன.

பிற கல்வி நிறுவனங்கள் இலக்கிய ஆய்வுகளில் மிகுதியும் ஈடுபட்டிருப்பதால், பென்சில்வேனியா, வாஷிங்டன் பல்கலைக் கழகங்கள், திராவிட மொழியியலில் சிறப்புப் பயிற்சி

---

எழுதியவர் ஹரோல்டு ஷிப்மன்

களை அளிக்கின்றன. கோர்னல், டெக்சாஸ் பல்கலைக் கழக மாணவர்களுக்கு மொழியியலில் மிகு நாட்டம் உண்டு; ஆனால் விஸ்கோன்சின், கலிபோர்னியாப் பல்கலைக்கழகத் தவர்க்கு இலக்கிய ஆய்வுகளிலேயே ஆர்வம் மிகுதி. சிக்கா கோவில் இரண்டிற்குமே ஆக்கம் தரப்படுகிறது.

இயல்பாகக் பாடவகுப்புக்களை வழக்கமாக நடத்தி வரும் பல்கலைக்கழகங்களின் துவக்க நிலை வகுப்புக்களில் அரை டசன் மாணவர்கள் வரை சேருவர்; மேல்வகுப்புக்களில் இந்த எண்ணிக்கை குறைவதுண்டு. வாசிங்டன் பல்கலைக்கழகத் தமிழ்ப் பிரிவின் துவக்கநிலையில், 3 மாணவர்களும், இரண் டாமாண்டில் இருவரும், மூன்றாமாண்டில் ஒருவரும் உள் ளனர். மொழியியல், தொல்பொருள் ஆய்வு முதலிய இதர துறைகளில் மேனிலை ஆய்வு செய்யும் பட்டவகுப்பு மாணவர் களும் உள்ளனர். மொழியியல், இலக்கியம் மட்டுமின்றி, தென் னிந்திய வரலாறு, சமயம், இசை, நுண்கலை, அரசியல், திணை யியல் முதலிய இதரதுறைகளில் ஆர்வமுள்ளோரும் வாஷிங் டன் பல்கலைக்கழகத் தமிழ்ப்பிரிவில் சேர்ந்திருப்பர். இவர்கள், தமிழை ஓரளவு கற்றபின்னர், தமக்குப்பிடித்தமான இதர துறையில் பட்டம் பெறத் தகுதியுறுவர்.

# 16. கனடாவில்

கனடா நாட்டில் தமிழ் அவ்வப்போது கற்பிக்கப்படுகிறது கனடாநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழைப் பயிலும் ஆர்வம் மாணவரிடையே மிகுந்துள்ளது. வான்கூவர், பிரிட்டிஷ் கொலம்பியப்பல்கலைக் கழகத்தில் மானிடவியல், சமூகவியல் பேராசிரியராக உள்ள திருமதி பிரெண்டாபெக் தமிழ்நாட்டின் பண்பாடுபற்றி ஆய்வு செய்திருப்பகோடு, திரு. கே. சுந்தரத்தின் துணையுடன் மாணவர்க்கும் தமிழைக் கற்பித்து வருகிறார். 1980இல், கல்காரில் பல்கலைக் கழகத்தின் தமிழ்வகுப்பில் எட்டு மாணவர்கள் சேர்ந்தனர். 1980-81இல் பிரிட்டிஷ் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின் தமிழ் வகுப்பில் ஐவர் பயிலுகின்றனர்.

இந்தியாவில் நால்வர் தமிழ்மொழி கற்க அண்மையில் அனுப்பப்பட்டனர். திரு. ஸ்டீபன் இன்கிலிஸ், அலென்புரோசே, ஆண்மேரிலெங்கர், எரிக்கா கினாஸ்-எனுமிவர்கள் ஓராண்டுக்காலம் வரை மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்று, முடித்துத் தாயகம் திரும்பியுள்ளனர். தமிழ்நாடு பற்றியும் தமிழ்மக்கள் பற்றியும் பெரும்மதிப்புக் கொண்டுள்ள இவர்கள், தொடர்ந்து தமிழ்ப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

---

எழுதியவர் பிரெண்டா பெக் (தமிழாக்கம் சு. குழந்தைநாதன்)

டாக்டர் கத்லீன் அபெர்லீ, தமிழ்நாட்டுக் கிராமங்களின் சமூகவியல் வளர்ச்சிபற்றி இருபதாண்டுகளாக ஆய்வு செய்து இரு தொகுதி அடங்கிய பெரியதொரு ஆய்வு நூலை எழுதி வெளியிடப்போகிறார்.

தஞ்சை மாவட்டத்தில் இரு கிராமங்களைப் பற்றிய சமூக வளர்ச்சியின் போக்குகள் இந்த ஆய்வில் புலப்படுத்தப் படும்.

டாக்டர் பிரெண்டா பெக், கோவை மாவட்ட மக்களின் தமிழ்ப் பண்பாடு, சமூக வாழ்வு பற்றிய தம் ஆராய்ச்சியினை மேலும் தொடர்ந்துள்ளார். இப்பகுதி மக்கள் வாழ்வியல் பற்றிய தம் மூன்றாவது நூலை விரைவில் வெளியிட இருக்கிறார். தமிழக நாட்டுப் புறக்கதைகள் பற்றியும் இவர் ஈடுபாடு கொண்டுள்ளார்.

மக்மாஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் பால்யங்கர் தமிழ்நாட்டில் பல ஆண்டுகள் பணியாற்றியவர். தமிழ்ச் சமயக் கலை மரபுகளை ஆய்வதில் நாட்டங் கொண்ட இவர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள இரு பெரிய கோவில்களைப் பற்றி விரிவாக எழுதி வருகிறார்.

கவ்காரிப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் டாக்டர் ஆர். இராதாகிருஷ்ணன் தமிழ் மொழியியல் பற்றிப் பல ஆய்வுகளைச் செய்துள்ளதோடு, தமிழ் நாட்டுப் பக்தி இயக்க மரபு பற்றி இப்போது ஆய்வு செய்கிறார்.

பிரிட்டிஷ் கொலம்பியாப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவரான ஸ்டீபன் இங்கிலிஸ், மதுரை மாவட்டக் குயவர் சமூகத்தைப் பற்றி விரிவாக ஆய்வு செய்து உள்ளார்.

'தமிழ்மணம்' எனும் தமிழ் இதழ் அண்மையில் தொடங்கப் பட்டுள்ளது. கனடாவில் வாழும் தமிழ் மக்களது படைப் புக்கள் இதில் வெளியிடப்படுகின்றன. திரு. ஏ. சுந்தரம் இதன் ஆசிரியராக விளங்குகிறார்.

பாரதப்பிரதமராயிருந்த லால்பகதூர் சாஸ்திரியின் நினைவாக அமைக்கப்பட்ட சாஸ்திரி இந்திய - கனடா நிறுவனம், இரு நாட்டு அரசு உதவியுடன், இந்தியக்கலை, பண்பாடு முதலியவற்றைப் பரப்பும் பணியில் பொதுவாக ஈடுபட்டிருப்பினும், தமிழியல் ஆய்வுகட்கும் சிறப்பிடம் தந்துள்ளது. மொழிகளைக் கற்க இந்தியா செல்ல விரும்புவார்க்கு இந்நிறுவனம் உதவிசெய்கிறது. இந்திய அறிஞர்களையும் சொற்பொழிவு செய்யக் கனடாவுக்கு அழைக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியம் அண்மையில் வந்து சென்றார். தமிழ்மொழி ஆய்வுக்கு இந்நிறுவனம் தொடர்ந்து செய்துவரும் உதவி போற்றுதற்குரியதெனலாம்.

# கட்டுரையாளர்கள்

திரு. வெள்ளைவாரணன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலப்
பேராசிரியர்

டாக்டர் தி. முருகரத்தனம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகத் திருக்குறட் துறைத்
தலைவர்

திரு. தண்டபாணி தேசிகர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகத் திருக்குறட் துறைப்
பேராசிரியர்

திரு. சண்முகம் பிள்ளை
மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலப்
பேராசிரியர்

டாக்டர் நா. செயராமன்
மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழ்த்துறை
இணைப்பேராசிரியர்

டாக்டர் சு. வேங்கடராமன்
மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழ்த்துறைத்
துணைப்பேராசிரியர்

டாக்டர் இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்
துறைத் தலைவர்

திரு. சு. குழந்தைநாதன்
கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரித் தமிழ்த்துறைத்
தலைவர்

டாக்டர் அ. பாண்டுரங்கன்
புதுவை தாகூர் கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்

டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
கல்கத்தாப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்

டாக்டர் சாலை இளந்திரையன்
தில்லிப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர்

டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை
ஸ்ரீலங்கா, பரதேனியாப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்
தலைவர்

டாக்டர் இரா. தண்டாயுதம்
கோலாலம்பூர் மலேசியாப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர்

திரு ஏ. மணி
விஸ்கான்சின் பல்கலைக்கழகத்துச் சமூகவியற் துறையில் பணிபுரிகிறார்

டாக்டர் செ. வை. சண்முகம்
அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல்துறைப் பேராசிரியர்

திரு. அ. புட்பரதம்
மொரிசிய நாட்டுக் கல்வியமைச்சகத்தில் பணிபுரிகிறார்

டாக்டர் தாயம்மாள் அறவாணன்
தக்கார் பல்கலைக்கழகத் தமிழ் இணைப் பேராசிரியர்

டாக்டர் எப். குரோ
பாரீசில் சோர்யோன் பல்கலைக்கழகப் பேராசிரியர்

டாக்டர் ஆர். இ. ஆஷர்
எடின்பர்க் பல்கலைக்கழக மொழியியல் துறைத்தலைவர்

டாக்டர் அ. தாமோதரன்
ஜெர்மனி, ஹைடல்பர்க் பல்கலைக்கழகத் தமிழ்த்துணைப் பேராசிரியர்

டாக்டர் அன்டோனியோ சொரண்டினோ
நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்தில் பணிபுரிகிறார்

டாக்டர் இராம. சுந்தரம்
அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் இணைப் பேராசிரியர்

திரு. ஹரோல்டு ஷிப்மன்
வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியல் பேராசிரியர்

டாக்டர் திருமதி பிரண்டா பெக்
கனடாவில் வான்கூவரிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியப் பல்கலைக்கழகத்தில் மானிடவியல் துறையில் பணிபுரிகிறார்

Tamil is one of the most copious, refined and polished languages spoken by man

*– W. Taylor*

The Tamil language is extraordinary in its subtlety and sense of logic

*– Dr. G. Slater*

Tamil can readily dispense with the greater part or the whole of its Sanskrit, and by dispensing with it, rises to a purer and more refined style

*– Dr. Caldwell*

---

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625021